Arimaa Nokku

18 : 1 ஏப்பிரல் 2024

அரிமா நோக்கு

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE, HISTORY, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

ISSN 2320-4842

அரிமா நோக்கு

18 : 1 ஏப்ரில் 2024

ஆசிரியர்

ஈரோடு தமிழன்பன்

இணையாசிரியர்

வ. ஜெயதேவன்

ஆசிரியர் குழு

நா. கணேசன் (அமெரிக்கா)

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

ஒப்பிலா மதிவாணன்

சீதா லட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

மருதூர் அரங்கராசன்

பெ. இலக்குமிநாராயணன்

அறிவுரைக் குழு

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

அச்சீட்டாளர்

பொருளடக்கம் CONTENTS

ஞானபீட விருது 2023	வ. ஜெயதேவன்	03
கண்ணுக்குப் புலப்படாத வாயுப்பொருள்: the mixture of gases - தமிழ் மற்றும் ஆங்கில அகராதிகளில் சொற்பொருள் விளக்க ஒப்பீடு	அ. செந்தில்நாராயணன்	05
திருத்தொண்டர் புராணத்தில் நாயன்மார்களின் விருந்தோம்பல் நெறிகள்	ப. பிரபு	11
பக்திநெறி காட்டும் இறையருள் புலப்பாடு	வா. பாக்கியலெட்சுமி	14
Beyond the Bleats: Exploring Animal Agency and Ethical Dimensions through the Goat Metaphor in Perumal Murugan's Poonachi or The Story of a Black Goat	Sajna A & Suhail Abdul Rub P	16
மெக்கன்சி சுவடிகளின்வழி அறியலாகும் பாளையக்காரர்	த. ஆதித்தன்	20
தொல்காப்பிய அகத்திணை, புறத்திணை யியல்களின் இயைபுத் தன்மைகள்	சி. சுந்தரமூர்த்தி	22
Struggle for one's own space and identity; Scrutinizing Yashpal's Jhutha Sach	Afsal Jamal. P	30
உடைமைச் சமூகத்தை ஊடறுக்கும் புனிதவதியின் துறவும் கோதையின் காதலும்	மு. நளினி	33
மகாகவி காளிதாசன் கடன் வாங்கிய சங்க இலக்கியங்கள்	மு. அருணாசலம்	40
வாய்மொழி இலக்கியமும் எழுத்திலக்கிய விழுமியங்களும்	ஆ. இன்பவள்ளி	46
தொல்காப்பியப் பொருளதிகாரம் காட்டும் தமிழ்ச் சமுதாயம்	பா. மேகலா	49
ஆழ்வார் பாசுரங்களில் போர்க்கருவிகளும் அதன் அணிநலன்களும்	க. ரேவதி	51
திருமந்திரத்தில் உயிர்வளம்	ம. ராஜேஸ்	55
ஆண் தெய்வ வழிபாடுகள்	அ. அருளம்மை	58
உடல்நலம் காக்கும் உணவு வகைகள்	ப. மகேஸ்வரி	64
'மோடி' ஆவணங்களும் எழுத்துகளும்	த. கண்ணன்	66
தி.வெ. இராசேந்திரன் சிறுகதைகளில் சமுதாயச் சிந்தனைகள்	ப. கௌரி	71
கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியனின் 'அவளுக்கு வெயில் என்று பெயர்' கவிதைத் தொகுப்பில் பெண் கருத்தாக்கங்கள்	ஜெ. அரவிந்தன்	76
திருக்குறளில் அரசனும் ஆட்சி முறைமையும்	மு. ஐஸ்வர்யா	79
குறுந்தொகையில் தலைமை மாந்தர்களின் சிறப்பு	ஆ. கவிதா	82
குறிஞ்சி நில தினைப்புன வேளாண்மை	சு. கிருஷ்ணநந்தினி	86
நற்றிணையில் நீர்	சு. ரம்யா	89
சித்தர்களின் சமய நிலைப்பாடுகள்	ஜே. கௌரி ஆனந்த்	92
'கூத்தாயி' நாவலில் பண்பாடு	ச. தென்றல் ஜான்சி	96
திருப்புகழும் நிலையாமையும்	ந. மாமலைவாசன்	100
சிவராஜ் கவிதைகளில் இயற்கை	கோ. திருநாவுக்கரசு	103
திருக்குறளில் இல்லறவியல் – ஒரு பார்வை	பா. விஜயராமன்	106
A Review on National Education Policy 2020	R. Selvendiran	110
இரட்டைக் காப்பியத்தில் திருநங்கைகள்	இ. ஜெயஸ்ரீ	113
திருப்பணிமாலை என்னும் இலக்கிய வகை	செ. ஜகந்நாத்	116

ISSN 2320-4842

தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

இயற்கை உறவும் இன்றைய மனிதனும்

உலக வாழ்க்கை மக்களுக்கு உகந்ததாக இருக்க வேண்டும். விதிக்கப்பட்ட வாழ்க்கை யோடு பிறக்கும் பிற உயிரினங்கள் மாறுதல், வளர்ச்சி, முன்னற்றம், புகழ் என்றெல்லாம் பரிமாணங்களை அவாவுவதும் இல்லை; பெறுவதும் இல்லை. தம் உயிருக்கேற்ற இயல்பூக்கங்களைப் பயன்படுத்தி வாழ்வை நடத்தி முடிகின்றன. ஒரு விலங்கு தனக் குப் பிறந்த உறவின் தொடர்ச்சிகளோடு வாழ்வதுமில்லை. வாழ்ந்து முடிகின்றன. வாழ்க்கை என்ற சொல்லைப் பயன்படுத்திக் குதிரைகள் வாழ்கின்றன குருவிகள் வாழ்கின்றன என்றெல்லாம் சொல்லாமல், மரபை நாம் பேசுமொழிகூடக் கவனமாக எல்லைப்படுத்திக்கொள்கிறது.

மனிதன்தான், அறிவு, சிந்தனை, கல்வி, கண்டுபிடிப்புகள், கருவிகள் என்று ஆயிரம் முகத்தான் அகன்ற திறமைகளின் திறவுகோல்களைக் கையில் வைத்துக்கொண்டு உலகையும் தன்னையும் மேம்படுத்திக்கொள்கின்ற வாய்ப்புகளைப் பெற்றுள்ளான். இயற்கையின் படைப்புகளில் மனிதனே உச்சமானவன். அவனை விஞ்சியதாக எது வுமே இல்லை.

இப்பேரண்டமே இப்போது அவன் ஆதரவில், தயவில் வாழவேண்டிய நிலை வந்துவிட் டது. தன்னலத்துக்காக, தற்பெருமைக்காக மனித குலத்தை மனிதன் பகைமை வெறியோடு அழிப்பதுபோல இயற்கை மனித குலத்தோடு மாறுபட்டு மோதுவதில்லை. மனிதன் மனிதச் சமூக்கத்தை அழித்த அளவுக்கு, இயற்கை மனிதச் சமூகத்தை அழிக்க எண்ணியதில்லை; முற்பட்டதில்லை. ஆனால், மனிதன் இயற்கையோடு இசைவுகொண்டு அது தரும் நன்மைகளைப் பெற்று வாழ்வதில் நிறைவுகொள்ளாமல், அதை வெல்ல வேண்டும் என்னும் அறம்பிழைத்த போர்வெறியோடு எல்லை கடக்கிறான். இன்றும்கூட இயற்கையின் நீட்சியாகவே ஜப்பானிய மக்கள் தம்மைக் கருதி அதன் அழகில், ஆதரவில், அன்பில் திளைப்பதை அவர்கள் இயல்புகளும் படைப்புகளும் நமக்கு உணர்த்துகின்றன.

நம் சங்கப்பாடல்களிலும் இத்தகைய இயற்கை நேயம் இடம்பெற்றிருப்பதை நாம் காண முடியும். கொல்லைப் புன்னை மரத்தைத் தன் தாயின் வழிகாட்டுதலில் மகள் வளர்க்கும்போதே அதனைத் தன்னுடன் பிறந்த சகோதரியாக் கருதி அன்பு காட்டி வளர்த்ததை நற்றிணைப் பாடல் ஒன்று சொல்கிறது.

இயற்கையே உனக்கு ஆசான் என்று பாடிய வோரட்ஸ்வொர்த், பாடநூல்களை எறிந்துவிட்டு வெளியே இயற்கை உறவுக்கு வாருங்கள் என்று குழந்தைகளை உள்ளம் உருகி அழைக்கிறான். இயற்கையை வாழுந்தன்மை வாய்ந்த மனிதக் கூட்டாளி என்று தோளணைத்துக்கொண்டு நடக்க உலகம் கற்றுக்கொள்ளவேண்டும்.

இயற்கையை ஐந்திணைப்படுத்தி இலக்கியமும் இலக்கணமும் கண்ட தமிழன்

ISSN 2320-4842

இயற்கையைப் போற்றுவதற்காக, பாதுகாப்பதற்காக ஏன் ஐந்திணைவிழா நடத்தக் கூடாது? குறஞ்சிவிழா, முல்லைவிழா, மருதவிழா, நெய்தல்விழா, பாலைவிழா என இயற்கையை முதன்மைப்படுத்தும் விழாக்களை அறிமுகப்படுத்தி அரசுசார் நிகழ்ச்சிகள் பெருகும்போது மனிதன் இதயத்திலும் எண்ணத்திலும் இயற்கை உறவு செழித்துத் தழைக்கும். ■

கட்டண விவரம்

வாழ்நாள் உறுப்பினர்	ரூ. 4000/-	US $ 175
புரவலர்	ரூ. 6000/-	US $ 250
பெரும்புரவலர்	ரூ. 10,000/-	US $ 500
மீப்பெரும் புரவலர்	ரூ. 20,000	US $ 1000
நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership)	ரூ. 15,000/-	US $ 700

விளம்பரக் கட்டணம்

பின்னட்டை (பல வண்ணங்கள்)	ரூ. 15,000/-
உள்ளட்டை (பல வண்ணங்கள்)	ரூ. 10,000/-
முழுப்பக்கம் (கருமை & வெண்மை)	ரூ. 3, 000/-
அரைப்பக்கம் (கருமை & வெண்மை)	ரூ. 1, 500/-

கட்டணம் செலுத்த:

NEFT/ DD in favour of **ARIMAA NOKKU** payable at Chennai

HDFC Bank (IFSC Code: HDFC0000795}, Perungudi Branch, Chennai 600 096
Current Account No. 50200006240790

அரிமா நோக்கு, அன்பகம், # 1, 15ஆவது குறுக்குத்தெரு, குறிஞ்சி நகர், பெருங்குடி, சென்னை 600 096
ARIMAA NOKKU, Anbaham, # 1, 15th Cross Street, Kurinji Nagar, Perungudi, Chennai 600 096

மின்னஞ்சல்: nokku2007@gmail.com

செல்: 91-9444932320

ISSN 2320-4842

ஞானபீட விருது 2023

2023ஆம் ஆண்டுக்கான ஞானபீட விருது, 2024 பிப்ரவரி 18ஆம் நாள் அறிவிக்கப்பெற்றது. அந்த அறிவிப்பின்படி, குல்சார் (Gulzar), ஜகத்குரு இராம்பத்ராச்சார்யா (Jagadguru Rambhadracharya) ஆகிய இருவருக்கும் இவ்விருது வழங்கப்பெறுகிறது; விருதுக்குரிய தொகை இவ்விருவருக்கும் பகிர்ந்து அளிக்கப்பெறுகிறது. இப்படி இவ்விருது 1967, 1973, 1999, 2006, 2009 ஆகிய ஆண்டுகளில் இருவருக்குப் பகிர்ந்து வழங்கப்பெற்றுள்ளது.

பிரிட்டிஷ் இந்தியாவின் ஜீலம் மாவட்டத்தில் தினா என்னும் சிற்றூரில் மக்கன் சிங் கால்ரா—சூசன் கௌர் இணையருக்கு 1934 ஆகஸ்டு 18இல் பிறந்தவரும் சம்பூரண் சிங் கால்ரா எனும் இயற்பெயரினருமான குல்சார் (புனைபெயர்), கவிஞர், திரைப்பாடலாசிரியர், திரைக்கதை எழுத்தாளர், திரைப்பட உரையாடலாசிரியர், திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர், புதின ஆசிரியர் எனப் பன்முகம் கொண்டவர். 1947இல் இந்தியாவினின்றும் பாகிஸ்தான் பிரிந்தபோது தப்பிப் பிழைத்துக் குடும்பத்தைப் பிரிந்து குல்சார் முதலில் அமிர்தசரசு, பின்பு டில்லி, அதன்பின் மும்பை வந்து சேர்ந்தார். இப்போதும் அங்குதான் வசித்துவருகிறார். வறுமையில் வாடிய குல்சார் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமற்போனது. எனினும், தன்னை இலக்கியப் படைப்பிலும் திரைப்படத் துறையிலும் ஈடுபடுத்திக்கொண்டார். திரைப்படத் துறையில் மாபெரும் வெற்றிகளையும் புகழையும் அவர் ஈட்டியிருப்பினும் ஒருபோதும் தீவிர இலக்கியப் படைப்புப் பணியிலிருந்து தன்னை அவர் விலக்கிக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பஞ்சாபி, உருது, இந்தியின் பல்வேறு வட்டார மொழிகளில் எழுதிவருகிறார். சிறுவனாக இருந்த காலந்தொட்டே தாகூர், சரத் சந்த் படைப்புகளை அவர் விரும்பி வாசித்துவருபவர்.

சாகித்ய அகாதெமி விருது (2002), பத்ம பூஷண் விருது (2004), கிராமி விருது (2010), தாதா சாகேப் பால்கே விருது (2013), 22 முறை பிலிம்பேர் விருது, 5 முறை தேசியத் திரைப்பட விருது, தேசிய ஒற்றுமைக்கான இந்திரா காந்தி விருது உள்ளிட்ட 36 விருதுகள் பெற்றவர் அவர். 2013இல் அசாம் பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும் நியமிக்கப்பட்டார்.

மிகச் சிலருக்கு மட்டுமே அரிதாக வாய்க்கும் புகழையும் பெருமையையும் தனது வாழ்நாளிலேயே எய்தியவர் குல்சார் ஆவார்.

According to Gulzar, his trick to remain relevant over more than five decades is by being able to feel the pulse of the gully-mohalla, the nation, the globe that he lives in (Prabhat Shetty).

“Being master of Urdu doesn’t interest me, being part of the global society does, breathing hope into that society matters to me.”

- Kausar Munir’s interview with Gulzar (Courtesy: The Hindustan Times dated 18.03. 2024.

Poet, novelist, songwriter, film scriptwriter, playwright, producer, dialogue writer, director, intellectual, and famous for his uniqueness and innovation in every field, Gulzar has donned more hats than one. Whether in poetry or prose, his distinct expression has helped bring about ever new aspects and emotions in the journey of life.

Courtesy: https://www.rekhta.org/poets/gulzar/profile

வ. ஜெயதேவன் **பூந்துணர்**

ISSN 2320-4842

குல்சாருடன் ஞான பீட விருது பெறும் சுவாமி இராமபத்ரா சாரியர், உத்தரப் பிரதேசம், ஜௌன்பூர் மாவட்டத்திலுள்ள சாந்திகுர்ட் என்னும் ஊரில் 1950 சனவரி 14இல் பண்டிட் ராஜ் தேவ் மிஷ்ரா—சசிதேவி இணையருக்குப் பிறந்தவர்; பிறந்து இரு மாதங்களிலேயே பார்வை இழந்தவர்; கிரிதர் மிஷ்ரா என்னும் இயற்பெயரினர்; 17 வயதுவரை முறையாகப் படிக்காதவர்; பிறகு காசியிலுள்ள சம்பூரணானந்த் சமஸ்கிருதப் பல்கலைக்கழகத்தில் பயின்று சமஸ்கிருதத்தில் இளங்கலை, நிறைகலைப் பட்டங்கள், முனைவர் பட்டம், டி.லிட் பட்டம் பெற்றவர்; படிக்கும் காலத்தில் ஏராளமான தங்கப் பதக்கங்கள் வென்றவர்.

”Humanity is my temple, and I am its worshiper. The disabled are my supreme God, and I am their grace seeker.”

மத்திய பிரதேச மாநிலம் சித்ரகூடத்திலுள்ள துளசிபீடத்தின் நிறுவனத் தலைவர்; ஜகத்குரு இராமானாந்தாசாரியர் எனும் பட்டம் பெற்ற நால்வருள் ஒருவர்; தர்ம சக்ரவர்த்தி, மகாமகோபாத்யாய, ஸ்ரீசித்ரகூட துளசி பீடாதீச்வரர், மகாகவி, பிரஸ்தான த்ரவி பாஷ்யகாரர் உள்ளிட்ட சிறப்புப் பட்டங்கள் பல பெற்றவர்; ஸ்ரீபார்கவராகவீயம் என்னும் சமஸ்கிருதக் காப்பியப் படைப்புக்காக 2005இல் சாகித்ய அகாதெமி விருது பெற்றவர்; இந்தியக் குடியரசுத் தலைவரால் 2015இல் பத்ம விபூஷண் விருது வழங்கப்பெற்றுச் சிறப்பிக்கப்பட்டவர்; இராமானுசரின் வேதாந்தமான விசிட்டாத்துவைதம் எனும் மெய்யியலில் ஆழங்காற்பட்டவர்; சம்ஸ்கிருத இலக்கணங்களில், குறிப்பாகப் பாணினியில் புலமை மிக்கவர்; துளசிதாஸ் அறிஞர்களுள் தலைசிறந்தவராக மதிக்கப்படுபவர்; நூல்கள் பலவற்றிற்கு உரை எழுதியவர்.

22 மொழிகளில் பேச வல்லவர்; குறிப்பாக, வடமொழியில் பெரும்புலமை வாய்ந்தவர்; வரகவி; 14 மொழிகளில் புலமையுடையவர்; சமஸ்கிருதம், இந்தி, அவதி உள்ளிட்ட இந்திய மொழிகளில் கவிபாட வல்லவர்; தமது உரைநடை, கவிதை நூல்களை அவரே பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்துள்ளார். இந்தி, போஜ்புரி, குஜராத்தி உள்ளிட்ட மொழிகளில் இராமாயணம், பாரதம், பகவத் கீதை, பாகவதம் முதலியவை குறித்துக் கதாகாலட்சேபம் செய்துள்ளார்.

புகழ்பெற்ற இந்து ஆன்மீகத் தலைவர்; கல்வியாளர்; ஸ்ரீராகவ கிருபா பாஷ்யம், பிருங்காதூலம், கீதாராமாயணம், ஸ்ரீசீதாராமசுப்ரபாதம், ஸ்ரீசீதாராமகெலி கௌமுதி, அஷ்டாவர்கம் உள்ளிட்ட 240க்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியர்; ஜகத்குரு ராமபத்ராசார்ய ஊனமுற்றோர் பல்கலைக் கழகம், துளசி பார்வையற்றோர் பள்ளி, ஜகத்குரு ராமபத்ராசார்யா விக்லங் சேவா சங்கம், காஞ்ச் மந்திர், ஜகத்குரு ராமபத்ராசார்யா விக்லங் ஷிக்ஷன் சன்ஸ்தன் முதலியவற்றின் நிறுவனர்.

உலகப் புகழ்பெற்ற ஆன்மீகவாதியாகவும் அறிஞராகவும் சமூக நற்பணி புரிபவராகவும் ஒருங்கே திகழ்பவர் இராமபத்ராசாரியர் ஆவார்.

[Rambhadracharya is] immensely learned person well versed in Vedic and Puranic literature besides the grammar.

- Atal Bihari Vajpayee

Rambhadracharya is of a high-mind, has a stupendous grip on the Indian literature, and his soul feels the true pleasure in serving oppressed disabled people.

- Abhiraj Rajendra Mishra

Rewa Prasad Dwivedi writes in his Sanskrit poem dedicated to Rambhadracharya that he is an encyclopaedia of learning whose literature is like numerous Narmadā rivers flowing out simultaneously, and in whose literary works Shiva and Parvati delight while performing Tandava and Lasya.

- Courtesy: https://en.wikipedia.org/wiki/Rambhadracharya

ISSN 2320-4842

கண்ணுக்குப் புலப்படாத வாயுப்பொருள்: the mixture of gases - தமிழ் மற்றும் ஆங்கில அகராதிகளில் சொற்பொருள் விளக்க ஒப்பீடு

முனைவர் அ. செந்தில்நாராயணன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை 625 009

அறிமுகம்

அகராதிகளின் பொதுவான பணி சொல்லுக்குப் பொருள் தருதலாகும். தமிழில் உருவாக்கப்பட்ட தொடக்க கால அகராதிகள் இத்தன்மையினவே எனினும், மொழியியல் என்னும் அறிவுத்துறையின் ஒரு பகுதியான அகராதி யியல் எனும் பிரிவு வளர்ச்சியுற்றபின் உருவாக்கப்படும் அகராதிகள் சொற்களின் பொருளோடு அவற்றின் இலக்கண வகைப்பாடு, சொற்களின் மூலம், சொற்களை உச்சரிக்கும் முறை, குறிப்பிட்ட அந்தச் சொல் இடம்பெறும் உதாரண வாக்கியம் உள்ளிட்ட சில கூடுதல் தகவல்களையும் இணைத்தே தருகின்றன. மேலும், அச்சொல் குறிப் பிட்ட துறைசார்ந்த கலைச்சொல்லா, குறிப்பிட்ட பகுதி சார்ந்த வழக்குச் சொல்லா, குறிப்பிட்ட சமூகம் பயன்படுத் தும் சொல்லா, பேச்சுமொழியில் மட்டும் வழங்கும் சொல்லா என்பன போன்ற சொல் குறித்த இன்ன பிற குறிப்புகளையும் அகராதிகள் தருகின்றன. சுருங்கக் கூறின் ஒரு சொல்லின் பயன்பாட்டு வரலாற்றை அகராதி கள் நமக்கு வழங்குகின்றன. சொல்லின் இத்தகு வரலாற்றைத் தெரிந்துகொள்ளுதல் என்பது அச்சொல் வழங்கும் மொழியைப் பேசும் மக்கள் சமூகத்தின் மொழிசார் பண்பாட்டினை அறிந்துகொள்ளுதல் என்னும் பாதைக்கு நம்மை இட்டுச்செல்லும்.

வெவ்வேறு மொழிகளில் உருவாக்கப்பட்ட அகராதிகளில், குறிப்பிட்ட சொல் ஒன்றிற்குத் தரப்பட்டுள்ள பொருள் வரையறையை ஒப்பிடல், குறிப்பிட்ட அச்சொல்லிற்குத் தரப்பட்டுள்ள பொருள் வரையறையில் காணப்படும் பொருண்மைக் கூறுகளை ஒப்பிடல் ஆகிய ஒப்பீடுகளின்வழி அந்தந்த மொழி பேசும் சமூகங்களின் மொழிப் பயன்பாட்டுப் பரப்பை இனங்காண முடியும். இத்தகு ஒப்பீட்டை மையமாகக் கொண்டமைகிறது இக்கட்டுரை.

தரவுகள்

இந்த ஒப்பீட்டு ஆய்விற்குரிய தரவுகள் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (2020, மூன்றாம் பதிப்பு), Oxford Advanced Learner's Dictionary of Current English (2020, 10th edition) ஆகிய இரண்டு அகராதி களிலிருந்தும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆய்வின் பொருட்டு உணவு, தண்ணீர், காற்று, ஆடை, வீடு ஆகிய பெயர்ச்சொற்களும் (இவை மனித வாழ்விற்குரிய அடிப்படைத் தேவைகளை அடையாளப்படுத்துவன) அவற்றோடு இணையும் உண், சாப்பிடு, குடி, சுவாசி, அணி, உடுத்து, வசி ஆகிய வினைச்சொற்களும் இவற்றோடு தொடர்புடைய மக்கள், குடும்பம், சமுதாயம் ஆகிய பெயர்ச்சொற்களும் அவற்றிற்கு இணையான food, air, dress, clothes, home, house, eat, drink, breathe, wear, live, people, family, community, society என்னும் ஆங்கிலச் சொற் களும் தேர்வுசெய்யப்பட்டுள்ளன.

முதலில் அகராதிப் பதிவுகளும் அவற்றைத் தொடர்ந்து ஒப்பீடும் எனும் முறையில் இக்கட்டுரை அமைகிறது.

க்ரியா அகராதியில் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொருள் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. தமிழில் வழங்கப் பட்டுள்ள பொருள் வரையறை மட்டுமே இங்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

உணவு - (மனிதர்கள், விலங்குகள் போன்றவை) உயிர்வாழ்வதற்காக உட்கொள்வது / (தாவரங்கள்) உயிர் வாழ்வதற்காக எடுத்துக்கொள்ளும் சத்துகள்.[1]

food - things that people or animals eat.[2]

உண் - (உணவு) சாப்பிடுதல்; (நீர், கள்) குடித்தல்.[3]

சாப்பிடு - (உணவை) உட்கொள்ளுதல்; உண்ணுதல் (பானம்) குடித்தல் (மாத்திரை) விழுங்குதல்.[4]

eat - 1. to put food in your mouth, bite it and swallow it.
2. to have a meal.[5]

தண்ணீர் - மழையால் கிடைப்பதும் ஆறு முதலியவற்றில் காணப்படுவதும் குடிப்பதற்குப் பயன்படுத்துவதுமான

ISSN 2320-4842

திரவம்; நீர்.[6]

water - a liquid without colour, smell or taste that falls as rain, is in lakes, rivers and seas and is used for drinking, washing, etc.[7]

குடி - (பானத்தையோ திரவ உணவையோ வாய் வழியாக) உட்கொள்ளுதல்.[8]

Drink - to take liquid into your mouth and then down your throat into your stomach.[9]

காற்று - உலகில் உள்ள உயிரினங்கள் உயிர்வாழ சுவாசிக்கும், பூமியைச் சுற்றி நிறைந்திருக்கும், கண்ணுக்குப் புலப்படாத வாயுப்பொருள்.[10]

air - the mixture of gases that surrounds the earth and that we breath.[11]

சுவாசி - (விலங்கினங்கள் மூக்கு, வாய் போன்ற உறுப்புகள் வழியாகவும் தாவரங்கள் இலை தண்டு முதலியவற்றில் உள்ள நுண்ணிய துளைகள் வழியாக வும் உயிர்வாழ்வதற்குத் தேவையான) பிராண வாயுவை உள்ளிழுத்துவெளிவிடுதல்; மூச்சு விடுதல்.[12]

breathe - to take air into your lungs and send it out again through your nose or mouth.[13]

ஆடை- உடுத்திக்கொள்வதற்காகவே நெய்த அல்லது தைத்த துணி; சட்டை, வேட்டி, சேலை முதலியவற் றின் பொதுப்பெயர்.[14]

உடை - (உடலை மறைத்துக்கொள்ளும் விதத்தில் அணியும்) ஆடை, உடுப்பு.[15]

dress - 1. A piece of clothing that is made in one piece and covers the body down to the legs sometimes reaching to below the knees or to the ankles

2. Cloths of a particular type.[16]

Cloths - the things that you wear, such as trousers, dresses and jackets.[17]

அணி - (ஆடை, அணிகலன் முதலியவற்றை) உடலில் தரித்தல்; பொருத்துதல்; போடுதல்.[18]

உடுத்து - (பொதுவாக) ஆடை அணிதல்; (குறிப் பாகப் புடவை, வேட்டி முதலியன) கட்டுதல்.[19]

wear - to have something on your body as a piece of clothing, a decoration, etc.[20]

இல்லம் - வீடு[21]

வீடு - குடியிருப்பதற்காக (செங்கல், மண் முதலிய வற்றால்) அமைக்கப்பட்டது.[22]

home - the house or flat that you live in, especially with your family.

a house or flat, etc., when you think of it as property that can be bought and sold [23]

house - a building for people to live in, usually for one family[24]

வசி - (மனிதன் ஓர் இடத்தில்) தங்கி வாழ்தல் [25]

live - to have your home in a particular place[26]

குடும்பம் - கணவனும் மனைவியும் தம் குழந்தை யோடு (சில சமயம் தங்கள் பெற்றோரோடு அல்லது உடன்பிறந்தவரோடு) கூடி வாழும் சமூக ஏற்பாடு.[27]

family- a group consisting of one or two parents and their children.[28]

மக்கள் -(பொதுவாகக் கூறும் போது) மனித இனம்; (குறிப்பிட்டுக் கூறும் போது) குறிப்பிடப்படும் நாடு, பகுதி போன்றவற்றில் வாழ்பவர்கள்.[29]

people - human beings; men, women and children.[30]

சமூகம்- சமுதாயம் [31]

சமுதாயம்-பொதுவான பண்புகளையும் நியதிகளையும் கொண்டு, குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்கள் தொகுதி.

ஒரு குறிப்பிட்ட தொழில், துறை முதலியவற்றைச் சேர்ந்தவர்களின் தொகுதி, இனம். [32]

community - all the people who live in a particular area, country, etc. when talked about as a group.

A group of people who share the same religion, race, job, etc. [33]

society - people in general, living together in communities.[34]

ஒப்பீடு

இனி மேற்கண்ட தரவுகளின் ஒப்பீட்டுப் பகுதி இடம் பெறுகிறது.

உணவும் உண்ணுதலும்

உணவு என்ற சொல்லுக்குத் தமிழ் அகராதியில், 'தாவரங்கள் உயிர்வாழ்வதற்கு எடுத்துக்கொள்ளும் சத்துக்கள்' என்னும் குறிப்புத் தரப்பட்டுள்ளது. தாவரம் தொடர்பான இக்குறிப்பு ஆங்கில அகராதி விளக்கத் தில் இடம்பெறவில்லை. எனினும் Concise Oxford Dictionary-இல் உணவு என்னும் சொல்லுக்குத் தரப் பட்டுள்ள விளக்கத்தில் தாவரங்கள் எடுத்துக்கொள் ளும் சத்துக்கள் என்னும் பொருண்மைக் கூறு காணப் படுகிறது.

உணவுடன் தொடர்புடைய **உண், சாப்பிடு** ஆகிய வினைச்சொற்களுக்கான விளக்கங்களைப் பொருத்த மட்டில் தமிழில் அமையும் உண், சாப்பிடு என்னும் வினைகளில் திட உணவுகளுடன், திரவ உணவு களும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஆங்கிலத்தில் அமையும் eat என்னும் வினை திரவ உணவு உட் கொள்ளலை இணைத்துக்கொள்ளவில்லை. காபி சாப் பிடலாமா?எனக் கேட்கும் நண்பர்களுடன் இணைந்து நாம் காபி சாப்பிடுகிறோம். அவர்கள் காபி சாப் பிடுவதில்லை; குடிக்கிறார்கள் (drink).

தண்ணீரும் குடித்தலும்

தமிழ் அகராதியில் **தண்ணீர்** என்ற சொல்லுக்குரிய பொருள் வரையறையில் தண்ணீர் எங்கிருந்து கிடைக் கும், எங்கெல்லாம் காணப்படும், எதற்குப் பயன்படும்

என்னும் மூன்று கூறுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆங் கில அகராதியின் பொருள் வரையறையில் தண்ணீர் எவ்வாறு இருக்கும் என்னும் பொருண்மைக்கூறு முதலில் தரப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தமிழில் அமைந்த மேற்கண்ட மூன்று கூறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. தண்ணீர் எவ்வாறு இருக்கும் என்னும் பொருண்மைக் கூறு தமிழ் அகராதியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

தண்ணீரின் முதன்மைப் பயன்பாடான, 'குடிப்பதற் குப் பயன்படும்' என்னும் பொருண்மைக்கூறு இரு அகராதிகளிலும் காணப்படுகிறது. அங்கில அகராதி யில், தூய்மை செய்வதற்குப் பயன்படும் என்னும் கூறு கூடுதலாக இடம்பெற்றிருக்கிறது.

தமிழ்ச் சமூகம் வேளாண்மைக்கு முன்னுரிமை தரும் சமூகமாகும். மேலும், வாழ்வதற்குத் தேவையான உணவு உற்பத்தி நீரின்றி அமையாது. நீரின் முக்கிய மான பயன்பாட்டில் அது வேளாண்மைக்குப் பயன் படுவதும் அடங்குகிறது. இந்நிலையில் தமிழ் அகராதி களில் தண்ணீருக்கு வழங்கப்பட்ட பொருள் வரை யறையில், வேளாண்மைப் பயன்பாடும் தூய்மைப் பயன்பாடும் இணைக்கப்பட்டிருந்தால் வேளாண்மையை முக்கியமான தொழிலாகக் கொண்ட தமிழ்ச்சமூகத்தின் பண்பாட்டு அடையாளமாகவும் அவ்விளக்கம் அமைந் திருக்கும்.

ஆங்கில அகராதியின் வரையறையில் இடம்பெற் றுள்ள 'குடிப்பதற்கும் தூய்மையாக்குவதற்கும் பயன் படும்' (drinking and washing) என்னும் பொருண் மைக் கூறு நம்மை மேற்கண்டவாறு சிந்திக்கத் தூண் டுகிறது. 'புறந்தூய்மை நீரான் அமையும்' என்னும் வள்ளுவர் வாக்கை அந்த ஆங்கில அகராதியின் பொருள் விளக்கப் பகுதி நினைவூட்டுகிறது; உலகம் தழுவியதாகவும் அமைந்துவிடுகிறது.

எனினும் தண்ணீர் போன்ற மிகவும் தெரிந்த சொல் லுக்குரிய பொருள் விளக்கம் சுருக்கமாக இருப்பதே நல்லது. இது போன்ற இடங்களில் (அடையாளமாக) சிறப்பான ஒரு சில பொருண்மைக் கூறுகளைத்தான் இணைத்துக்கொள்ள முடியும். பொருண்மைக் கூறு களை அடுக்கிக்கொண்டேபோவது, அகராதிப் பதிவு களுக்கு இடையேயான சமமற்ற தன்மையை ஏற்படுத் தவும் வாய்ப்புள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

தண்ணீருடன் தொடர்புடைய குடி என்னும் வினைச் சொல்லிற்கான விளக்கத்தில் இரண்டு அகராதிகளி லும் பெரிய வேறுபாடு இல்லை.

காற்றும் சுவாசித்தலும்

காற்று என்னும் சொல்லை எடுத்துக்கொண்டால் இரு அகராதிகளிலும் ஒத்த தன்மை அமந்துள்ள போதி லும், 'கண்ணுக்குப் புலப்படாத வாயுப்பொருள்' என் னும் பொருண்மைக்கூறு தமிழ் அகராதியில் காணப் படுகிறது. ஆங்கில அகராதியைப் பொருத்தளவில் 'mixture of gases' என்னும் பொருண்மைக்கூறு இடம்பெற்றுள்ளது.

தமிழ் விளக்கத்தில் இடம்பெற்றுள்ள 'கண்ணுக்குப் புலப் படாத வாயுப்பொருள்' என்னும் குறிப்பு, மனிதர் களின் புலன் உணர்வுடன் தொடர்புபடுத்தி எழுதப் பட்டுள்ளது. ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள 'mixture of gases' என்னும் பொருண்மைக்கூறு, அறிவியலின் சாயல் பெற்ற விளக்கமாக அமைந்துள்ளது.

காற்றோடு தொடர்புடைய சுவாசி என்னும் வினைக் குரிய பொருள் விளக்கப் பகுதியில் இடம்பெற்றுள்ள 'பிராணவாயுவை உள்ளிழுத்து வெளிவிடுதல்' என்னும் பொருண்மைக்கூறு மாற்றியமைக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. ஏனெனில் நாம் சுவாசிக்கும்போது பிராணவாயுவை உள்ளிழுத்து மீண்டும் அதனையே வெளியிடுகிறோம் என்ற தன்மையில் இவ்விளக்கம் உள்ளது.

சுவாசித்தல் என்பது அக உயிர்ப்பு, புற உயிர்ப்பு என்னும் இரண்டையும் உள்ளடக்கியது. அக உயிர்ப் பின்போது உள்ளிளுக்கப்படும் காற்றில் பிராணவாயு, கரியமில வாயு என வாயுக்கள் கலந்திருக்கும். உள் ளிழுக்கப்பட்ட காற்றிலுள்ள பிராணவாயு மட்டும் நுரை யீரலால் தக்கவைத்துக்கொள்ளப்படுகிறது. புற உயிர்ப் பின்போது கரியமில வாயு வெளியேற்றப்படுகிறது.

அக உயிர்ப்பின்போது உள்ளிழுக்கப்படும் பிராண வாயு முழுதும் நுரையீரலால் தக்கவைக்கப்படுவ தில்லை, புற உயிர்ப்பின்போது கொஞ்சம் வெளி வரத்தான் செய்யும் என விவாதிக்கலாம். எனினும், அது விவாதத்திற்கு மட்டுமே பொருந்தும்.

தமிழ் அகராதியின் விளக்கத்தில் தாவரங்களும் இணைக்கப்பட்டுள்ளன. தாவரங்கள் ஒளிச்சேர்க்கை யின்போது கரியமில வாயுவை உட்கொண்டு, பிரா ணவாயுவை வெளியேற்றுகின்றன. இந்நிலையிலும் இவ்விளக்கம் மாற்றப்பட வேண்டியதாக உள்ளது.

காற்று என்னும் சொல்லுக்கு ஆங்கில அகராதியில் தரப்பட்டுள்ள 'mixture of gases' என்னும் விளக்கத்தைச் சரியாக உள்வாங்கியிருந்தால் இச்சிக் கல் வந்திருக்காதோ எனத் தோன்றுகிறது.

'பிராண வாயு' எனக் குறிப்பிட்டுச் சொல்லாமல் 'காற்றை உள்ளிழுத்து வெளியிடுதல்; மூச்சு விடு தல்'.[35] எனப் பொதுவாக அமைக்கப்பட்ட க்ரியா அகராதியின் முதற்பதிப்பில் உள்ள விளக்கமே பொருந்துவதாய் அமைகிறது.

ஆடையும் உடுத்தலும்

ஆடை எனும் சொல்லுக்குரிய வரையறை இரண்டு குறிப்புகளைத் தருகிறது. ஆடையைக் குறிக்க உடை என்னும் சொல்லும் புழக்கத்தில் இருக்கிறது. உடை என்னும் சொல்லுக்குத் தமிழ் அகராதியில் '(உடலை

ISSN 2320-4842

மறைத்துக் கொள்ளும் விதத்தில் அணியும்) ஆடை, உடுப்பு.' எனும் விளக்கம் தரப்பட்டுள்ளது. ஆங்கில அகராதியில் 'A piece of clothing that is made in one piece and covers the body down to the legs sometimes reaching to below the knees or to the ankles' என்னும் விளக்கம் இடம்பெற்றுள்ளது.

ஆடை உடுத்தப்படுவதன் பயன்பாடாகிய உடலை மறைத்தல் என்னும் பொருண்மைக் கூறு இவ்விரு விளக்கங்களிலும் காணப்படும் ஒற்றுமைப் பண்பாகும். மனிதர்களிடம் காணப்படும் ஆடை உடுத்தும் பழக்கம் என்பது அவர்களது 'மானம்' என்னும் உணர்வுடன் தொடர்புற்றிருக்கிறது. இதனை இவ்விரு விளக்கங்களின்வழி உணர முடிகிறது. அனேகமாக அனைத்து மொழி அகராதிகளிலும் ஆடை என்னும் சொல்லுக்குரிய பொருள் விளக்கத்தில் ஆடை அணிவதன் முதன்மைப் பயன்பாடான உடலை மறைத்தல் என்னும் பொருண்மைக் கூறு கட்டாயம் இடம்பெற்றிருக்கும் என்று நம்பலாம். தட்ப வெப்ப நிலையிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும் ஆடை பயன்படுகிறது எனினும் பொருள் வரையறையில் உள்ள 'மறைத்துக்கொள்ள', 'covers' என்னும் பதங்கள் இவ்வாறு சிந்திக்கத் தூண்டுகின்றன.

ஆடை என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல்லான 'dress' என்னும் சொல்லுக்கு OED எனப்படும் Oxford English Dictionary-இன் இணையதள பக்கத்தில் dress என்பதற்கு A one-piece garment designed for a woman or girl, typically covering the body and extending down over the legs in a skirt. Cf. gown,[36] என்னும் விளக்கம் தரப்பட்டுள்ளது (இந்த அகராதி ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குரியது).

இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட New Oxford Advanced Learner's Dictionary of Current English எனும் ஆங்கில அகராதியின் ஏழாம் பதிப்பில் தரப்பட்டுள்ள முதல் விளக்கத்திலும் dress என்பது பெண்களுக்குரிய ஒரு வகை ஆடையைச் சுட்டுகிறது. (a piece of women's clothing that is made in one piece and covers the body down to legs, sometime reaching to below the knees or to the ankles)[37] இச்சொல்லுக்குரிய இரண்டாவது விளக்கத்தில்தான் cloths for either men or women என்னும் விளக்கம் தரப்பட்டுள்ளது. (இதே அகராதியின் பத்தாம் பதிப்பில் பெண்களின் ஆடை என்னும் தன்மையில் அமைந்த அந்த முதல் விளக்கம் நீக்கப்பட்டுள்ளது.)

எனில் ஆங்கிலத்தில் உள்ள 'dress' என்னும் பதம் பெண்களுக்குரிய ஆடையை (ஆங்கிலேயப் பெண்மணிகள் concert / opera போகும்போது அணியும் ஆடம்பர ஆடை. அது முழுநீளத் துணியில் (in one piece) தைக்கப்படுவது.) முதல் பொருளாகச் சுட்டுவதன் பின்னணியில் ஏதேனும் ஒரு பண்பாட்டுக் குறிப்பு இருக்கலாம்.

வீடும் வசித்தலும்

தொடர்ந்து மனித வாழ்வின் அடிப்படையாக அமையும் உறைவிடம் தொடர்பான வீடு என்னும் சொல்லை எடுத்துக்கொண்டால், தமிழ் அகராதியில் தரப்பட்டுள்ள, 'குடியிருப்பதற்காக (செங்கல், மண் முதலியவற்றால்) அமைக்கப்பட்டது' என்னும் வரையறை வீடு உருவாக்கப்படும் பொருள்களை மையமிட்டதாக உள்ளது.

வீடு என்பதற்கு இணையாக ஆங்கிலத்தில் உள்ள home, house என்னும் இரண்டு சொற்களுக்கான விளக்கத்திலும் **home**- the house or flat that you live in, especially with your family. a house or flat, etc., when you think of it as property that can be bought and sold.

house - a building for people to live in, usually for one family. 'குடும்பத்துடன் வசிக்க' அல்லது 'குடும்பத்துடன் வசிப்பதற்காக' எனும் பொருண்மைக் கூறுகள் இடம்பெற்றுள்ளன. தனிநபர்களாக வாழும் வாழ்க்கை முறையையும் திருமணம் செய்துகொண்டு குடும்பமாக இணையாமல் ஆணால் சேர்ந்து வாழும் (living together) வாழ்க்கை முறையையும் இயல்பாக ஏற்றுக்கொண்ட ஐரோப்பிய வாழ்வியலைக் கருத்தில்கொண்டு பார்க்க, home, house என்னும் சொற்களின் வரையறையில் இடம்பெறும் 'குடும்பத்துடன் வசிக்க', 'குடும்பத்துக்காக' என்னும் பொருண்மைக் கூறுகள் சிந்திக்கத்தூண்டுவனவாய் உள்ளன. மேலும் வீடு என்பது குடும்பத்திற்குரிய சொத்தாகப் பார்க்கப்படுவதும் ஆங்கில அகராதியிலுள்ள விளக்கத்தின் கூறாக உள்ளது. இவை தமிழ் அகராதி வழங்கும் வரையரையில் இடம்பெறாதவை.

வீட்டுடன் இணைந்த வசி எனும் வினைச்சொல்லை எடுத்துக்கொண்டால் இரு அகராதிகளிலும் அது ஒரே தன்மையிலேயே விளக்கம் செய்யப்பட்டுள்ளது.

குடும்பம்

குடும்பம் என்னும் சொல்லை எடுத்துக்கொண்டால் இரு மொழிகளிலும் ஒரே தன்மையிலான விளக்கத்தைக்காணமுடிகிறது. எனினும் தமிழில் தரப்பட்டுள்ள, 'கணவனும் மனைவியும் தம் குழந்தையோடு (சில சமயம் தங்கள் பெற்றோரோடு அல்லது உடன்பிறந்தவரோடு) கூடிவாழும் சமூக ஏற்பாடு' எனும் விளக்கத்தில் இடம்பெறும் உடன்பிறந்தவரோடு என்னும் குறிப்பு ஆங்கில அகராதியின் விளக்கத்தில் இல்லை.

இந்தியச் சமூக அமைப்பில் குடும்பத்தலைவர் ஒருவரின் திருமணமாகாத சகோதரன் அல்லது சகோதரி அக்குடும்பத்தலைவரைச் சார்ந்து வாழ்க்கையில் அவரது குடும்ப உறுப்பினருள் ஒருவராகவே கருதப்படுகிறார். இது அச்சொல்லிற்குத் தரப்பட்டுள்ள தமிழ் விளக்கத்தில் பிரதிபலித்துள்ளது.

குடும்பம் என்னும் சொல்லுக்கான பொருள் விளக்கத்

தில், 'கணவனும் மனைவியும் கூடிவாழும்' என்னும் பொருண்மைக்கூறு, கணவனை இழந்த மனைவியோ அல்லது மனைவியை இழந்த கணவனோ தமது குழந்தைகளுடன் வாழ்வது குடும்பமாகக் கருதப்பட மாட்டாதா? என்ற வினாவையும், 'கணவனும் மனைவியும் தம் குழந்தையோடு' என்னும் பொருண்மைக் கூறு, குழந்தைகள் இல்லாத அல்லது குழந்தையைப் பெற்றுக்கொள்ளாத கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்வது குடும்பமாக அமையாதா? எனும் வினாவையும் எழுப்பக்கூடும்.

ஒரு பொது அகராதியில், குடும்பம் போன்ற சொற்களுக்குரிய பொருள் விளக்கப் பகுதியில் அச்சொற்களுக்குரிய பொதுவான கருத்து (General perception) என்ன என்பதை அறியத்தந்தால் போதுமானது என்னும் நிலைப்பாட்டைக் கொள்வோமேயானால் இவை போன்ற வினாக்களை எளிதாகத் தவிர்த்துவிடலாம். காரணம் குடும்பம் குறித்துச் சமூகவியல், மானிடவியல், சட்டம் போன்று குறிப்பிட்ட துறை சார்ந்தவர்களின் பார்வை வெவ்வேறாகவே இருக்கும். குடும்பம் போன்ற மக்களுக்கு நெருக்கமான சொற்களில் காலாவதியான கருத்தும் (outdated views), புரட்சிகரக் கருத்தும் (radical views) வெகுமக்களின் பொதுவான கருத்தாக இருக்க வாய்ப்பில்லை. எனவே இது போன்ற சொற்களில் பொதுவான கருத்தை விளக்கினால் போதுமானது.

மக்கள்

மக்கள் என்னும் சொல்லுக்கு, '(பொதுவாகக் கூறும் போது) மனித இனம்; (குறிப்பிட்டு கூறும் போது) குறிப்பிடப்படும் நாடு, பகுதி போன்றவற்றில் வாழ்பவர்கள்' என்பதான விளக்கம் தமிழ் அகராதியில் வழங்கப்பட்டுள்ளது. Human beings; men, women and children என்னும் விளக்கம் ஆங்கில அகராதியில் தரப்பட்டுள்ளது.

மனித இனம் என்பதும் human beings என்பதும் இரு அகராதிகளிலும் பொதுவாகக் காணப்படுகிறது. எனினும் ஆங்கில விளக்கத்தில் உள்ள men, women and children என்னும் மேலதிக விளக்கம் அவர்களது சமூகவியல் சார்ந்த கண்ணோட்டத்தைக் காட்டுவதாகக் தோன்றுகிறது. மனித இனம் என்னும் வரையறைக்குள் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகிய மூன்று பிரிவினருக்கும் சமபங்கு இடம் அல்லது உரிமை உள்ளது என்பதை நினைவூட்டுவதாக இவ்விளக்கக்கூறு அமைந்துள்ளதாகத் தோன்றுகிறது.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்னும் வரிசை முறை ஏன்? பெண்கள் ஆண்கள் குழந்தைகள் என்ற வரிசைமுறையில் அமைத்தால் ஆகாதா? என்னும் பெண்ணியத் திறனாய்வாளர் ஒருவரின் வினாவிற்கு இவ்விளக்கத்தை எழுதிய அகராதிக் குழுவினர் என்ன பதில் சொல்வர்கள்?

ஆணாதிக்கம், பெண்ணடிமைத்தனம் இவற்றை ஒத்துக் கொள்ளும் விதத்திலான வரையறைகளைத் தவிர்க்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. பெண்ணியம் என்னும் கருத்தியல் சார்ந்த கண்ணோட்டத்தில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்னும் வரிசைமுறையைப் பெண்கள், ஆண்கள், குழந்தைகள் என மாற்றலாம், பொருள் மாறிவிடப்போவதில்லை. அதேவேளை பெண்ணியம் போன்று மேலும் பல கருத்தியல்களுக்குச் சார்பாகவும் அனைவரையும் திருப்திப்படுத்தும்வகையிலும் அகராதியை உருவாக்கும் நடைமுறைச் சாத்தியங்கள் குறித்தும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சமுதாயம் / சமூகம்

சமுதாயம், சமூகம் எனும் சொற்களுக்கான பொருள் வரையறை இரு அகராதிகளிலும் பொதுவாகக் காணப்படுகிறது. தமிழ் அகராதியில் சமுதாயம் என்பதற்குப் 'பொதுவான பண்புகளையும் நியதிகளையும் கொண்டு, குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்கள்' என்று அமைந்த வரையறையில், 'பொதுவான பண்பு', 'பொதுவான நியதி' என்னும் பொருண்மைக் கூறுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளது. த்தன்மை ஆங்கில அகராதியில் இல்லை.

'குழு', 'குழுவாகச் சேர்ந்து வாழும் மக்கள்' என்னும் பொருண்மைக் கூறுகள் ஆங்கில அகராதியில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இது தமிழ் அகராதியில் 'மக்கள் தொகுதி' எனக் குறிக்கப்பட்டுள்ளது.

சமுதாயம் என்பதில் நாம், பொதுவான பண்புகளையும் நியதிகளையும் எதிர்பார்க்கிறோம். மேற்குலகப் பார்வையில் அது மக்கள் ஏதேனும் ஒரு வகையில் குழுவாக வாழும் தன்மையினதாக இருக்கிறது.

முடிவாக

ஆய்வுக்குட்பட்ட தரவுகளை மட்டும் கணக்கில் கொண்டால் தமிழ் அகராதியில் இடம்பெற்றுள்ள பொருள் வரையறைகள் சில இடங்களில் மறுபரிசீலனை செய்ய வேண்டியனவாய் உள்ளன. காட்டாக, சுவாசித்தல்.

தமிழில் பொருளுக்குத் தரப்பட்டுள்ள வரையறைகளில் அப்பொருள்களின் பயன்பாடு சார்ந்த விளக்கங்கள் வாய்ப்பிருக்கும் இடங்களில் இணைத்துக்கொள்ளப்படலாம். காட்டாக, நீர்.

ஆங்கில அகராதியில் உண், குடி, சுவாசி போன்ற வினைச்சொற்களின் வரையறையில் அவ்வினைகளின் பகுதிகளாக அமையும் செயல்கள் வரிசைப்படுத்தப் பட்ட தன்மையில் பொருண்மைக்கூறுகள் இடம்பெற்றுள்ளமையைக் கவனிக்க முடிகிறது. இது பின்பற்றப் படவேண்டிய ஒன்று.

மொழி நிலையான தன்மையுடயது அன்று. அது காலம்தோறும் தனது பொருட்பரப்பில் மாற்றங்களை இயல்பாகப் பெற்றுவருகிறது. இம்மாற்றங்களைப் பதிவு

செய்துவரும் ஆவணங்களாக அகராதிகள் திகழ்கின் றன. மாறிவரும் மொழிக்கு ஏற்ப அகராதிகளைப் புதுப்பிக்கும் வேலையும் இணையாக நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்பது இந்தச் சிறிய அள விலான ஒப்பீட்டிலேயே தெற்றெனப் புலப்படுகிறது.

வழக்கு மன்றங்களில் தொடரப்பட்ட சில வழக்கு களில் தொடர்புடைய மொழி சார்ந்த ஆவணங்கள், அகராதிகளின் துணையுடன் விளக்கப்பட்டுத் தீர்ப்பு கள் பெறப்பட்ட வரலாறுகளைக் கேள்விப்பட்டிருக் கிறோம். இந்நிலையில், அகராதி உருவாக்கத்தில் ஈடுபடுவோருக்கு இருக்கவேண்டிய பொறுப்புணர்ச்சி புறம்தள்ள இயலாதது. மொழியுணர்வும், ஈடுபாடும், பக்கச்சார்பின்மையும், அறிவியல் சார்ந்த அணுகுமுறை யும் அப்பணிக்குத் துணைசெய்யும்.

அடிக்குறிப்புகள்

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.178.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.614.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.175.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.539

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.491.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.644.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.1760.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.410.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.476.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.392.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.33.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.587.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.181.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.97.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.174.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.474.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.281

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.29.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.173.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.1766.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.145.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.1229.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.759 - 760.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.772.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.1144.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.919.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.414.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.563.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.1012.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.1144.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.522.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (மூன்றாம் பதிப்பு 2020) ப.522.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.305.

Oxford Advanced Learner's Dictionary of Current English (tenth edition 2020) p.1483.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (முதல் பதிப்பு 1992) ப. 458.

https://www.oed.com/search/dictionary/?scope=Entries&q=dress

Oxford Advanced Learner's Dictionary of current English (seventh edition 2005) (7th impression 2006) p. 466.

துணைநூற்பட்டியல்

ராமகிருஷ்ணன், எஸ் (ஆசிரியர்), 2020 - க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, விரிவாக்கித் திருத்திய மூன்றாம் பதிப்பு, க்ரியா, சென்னை.

சுப்பிரமணியன், பா.ரா. டாக்டர் (முதன்மை ஆசிரியர்) 1992 (முதல் பதிப்பு) - க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா, சென்னை.

Diana Lea & Jennifer Bradbery (Managing Editors) Tenth edition, 2020, Oxford advanced learner's Dictionary of current English, Oxford University press, Oxford, UK.

Sally Wehmeier (Chief Editor), seventh edition 2005 (7th impression 2006), New Oxford advanced learner's Dictionary of current English, Oxford University press, Oxford, UK.

I was reading the dictionary. I thought it was a poem about everything.

- Steven Wright

ISSN 2320-4842

திருத்தொண்டர் புராணத்தில் நாயன்மார்களின் விருந்தோம்பல் நெறிகள்

ப. பிரபு

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்) குமுளூர், லால்குடி 621 601

ஆய்வு நெறியாளர்: முனைவர் இரா. ஜெய்சங்கர்

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (CDOE), பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி

முன்னுரை

பன்னிரண்டாம் திருமுறையாம் சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் 63 நாயன்மார்கள், 9 தொகை யடியார்களின் வாழ்க்கை வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாயன்மாரும் தாம் வாழ்ந்த சூழலுக் கேற்பத் தொண்டுசெய்துள்ளனர். அவர்களுள் சிவனடியார்களுக்கு விருந்தளிப்பதையே தம் வாழ்நாளின் முக் கிய நோக்கமாகக் கொண்ட நாயன்மார்களே மிகுதி. விருந்தோம்பலுடன் திருவோடு, கோவணம் எனப் பல்வேறு பொருள்களைச் சிவனடியார்களுக்குக் கொடுத்துள்ளனர். அத்தகைய நாயன்மார்களின் பக்தியை இறைவன் சிவனடியார் வேடத்தில் சென்று சோதித்துள்ளார். சுருக்கம் கருதி 1. இளையான்குடி மாறநாயனார் 2. அமர்நீதி நாயனார் 3. திருகுறிப்புத் தொண்டர் நாயனார் 4. அப்பூதியடிகள் நாயனார் ஆகிய நான்கு நாயன்மார்தம் விருந்தோம்பல் நெறிகள் இக்கட்டுரையில் விளக்கமுறை, ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு நெறிகளைப் பின்பற்றி ஆராயப்பட்டுள்ளன.

விருந்தோம்பல் - பொருள் விளக்கம்

இல்லத்திற்குப் புதிதாக வருபவர்கள் விருந்தினர் எனப்படுவர். விருந்து என்பதன் பொருள், *விருந்து-அதிதி கட்கு இடும் உணவு, அதிதி, புதுமை, புதியவன், நூல் வனப்புகளுள் ஒன்று (ஐயம்பெருமாள் கோனார்-1972)* என விளக்குகிறது. அதிதி என்பதற்குப் புதியவர் என்று பொருள். புதியவர்களுக்கு உணவு அளிப்பதே விருந்தோம்பல் ஆகும்.

விருந்தோம்பல்

அன்பு, பண்பு, பாசம், மகிழ்வு, உபசரிப்பு எனப் பலவாறு மனதிற்கு மகிழ்ச்சி தந்து, பின்பு வயிற்றிற்கு உணவு கொடுப்பதே விருந்தோம்பல் என்கிறார் திருவள்ளுவர்,

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள்-81) எனும் இக்குறளில் மனைவியோடு குடும்பமாக இல்வாழ்க்கை நடத்துவது, இல்லத்திற்கு வரும் விருந்தினர்களை ஓம்பவே என்பதைப் புலப்படுத்தியுள்ளார்.

விருந்தோம்பலின் பண்புகள்

தமிழர் பண்பாட்டில் மிக முக்கியமான நெறி விருந்தோம்பல் ஆகும். தம்மை நாடி வரும் விருந்தினர் மனம், உடல் குறைவின்றிக் கவனிப்பது முக்கியமாகும். அவ்வகையில் சிவன் மீது பக்தி கொண்டு திருநீறு பூசி, சிவநாமம் கூறியபடி செல்லும் சிவனடியார்களுக்கு நாயன்மார்கள் விருந்தோம்பலைத் தமது வாழ்நாள் கடைமை யாகச் செய்துள்ளனர்.

சிவனடியார்களை உபசரிக்கும் முறை

சிவனடியார்களுக்கு விருந்தோம்புகையில் பின்வரும் 11 முறைகளை நாயன்மார்கள் பின்பற்றியுள்ளனர்: 1. விருந்தினரை வரவேற்றல், 2. தண்ணீர் கொடுத்தல், 3. உணவளித்தல், 4. கேட்டுப் பரிமாறுதல், 5. வற்புறுத்தி உண்ண வைத்தல், 6. இனிப்பில் தொடங்குதல், 7. இனிப்பில் முடித்தல், 8. கைகழுவ உதவுதல், 9. வெற்றிலை பாக்கு அளித்தல், 10. ஆசீர்வாதம் பெறுதல், 11. விடை தந்து அனுப்புதல். இவற்றோடு நல்ல சொற் களை இனிமையாகப் பேசுதல், விருந்தினர்களுடன் எந்த நேரமும் முகமலர்ச்சியோடு இருத்தல். விருந்தினர் சென்றவுடன் அடுத்துவரும் சிவனடியார்களை விருந்தினராக உபசரிக்கக் காத்திருத்தல் ஆகியவையும் உண்டு. இத்தகு சிறப்புமிக்க விருந்தோம்பல் நெறிகளை நாயன்மார்கள் பின்பற்றியுள்ளனர்.

இளையான்குடிமாறநாயனாரின் விருந்தோம்பல் நெறி

இளையான்குடி என்ற ஊரில் வேளாளர் மரபில் தோன்றியவர் மாறன் ஆவார். தன் ஊர்ப் பெயரையும் தன்னோடு இணைத்துக்கொண்ட நாயனார். உழவுத்தொழில் செய்து அதில் வரும் செல்வத்தை வைத்துச் சிவ

னடியார்களை நாளும் விருந்தோம்பிவந்துள்ளார். தன் தெரு வழியாக வரும் அடியவர்களை அழைத்து விருந் தளிப்பார். இதனை,

கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று
செவிப்புலத்து
ஈரம் மென்மது ரப்ப தம்பரி நெய்த முன்னுரை செய்தபின்.
(பெரியபுராணம், 442) என்பதனால் அறியலாம். சிவ னடியார்களின் முன்பு சென்று தம் கைகுவித்து அவர் களிடம் அன்பாய்ப் பேசித் தம் இல்லத்திற்கு மாற நாயனார் அழைத்து வருவார். சிவனடியார்களுக்குப் பாதபூஜை செய்து, மெத்தை விரித்து அமரவைப் பார். மேலும் நாலா விதத்தில் அறுசுவையோடு உண வளித்து மகிழ்வார். என்பதை,

உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தினில் ஒப்பிலா அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய அளித்து (பெரியபுராணம், 443) என்ற பாடல்வழி அறியமுடிகிறது. நான்குவித உணவு: உண்ணல், தின் னல், நக்கல், பருகல். அறுசுவை: இனிப்பு, துவர்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு. இளையான்குடி மாறநாயனார் தம்மிடத்தில் செல்வமுள்ள நாளிலும், வறுமையுற்ற நாளிலும் சிவனடியார்களுக்கு விருந் தோம்பல் செய்வதை விடாது செய்துவந்துள்ளதைச் சேக்கிழார்,

செல்வம் மேவிய நாளில் இச்செயல் செய்வ தன்றியும்
மெய்யினால்
அல்லல் நல்குரவான போதிலும் வள்ளர் என்றறி
விக்கவே (பெரியபுராணம், 445).

என்கிறார். ஒரு நாள் இரவு விடாது மழை பெய்தது. தனக்கும் மனைவிக்கும் உணவில்லாத வறிய நிலை யில் சிவனடியார் வேடம் பூண்டு இறைவனேஇளை யான்குடி மாறநாயனாரின் வீடு நோக்கிச் சென்றார். சிவனடியாரை வரவேற்றுத் தன் வீட்டில் பாதபூஜை செய்து மெத்தையில் அமரவைத்தார். சிவனடியாருக் குணவிடவேண்டும் எனஇளையான்குடி மாறனார் தன் மனைவியிடம் கேட்டார். நீங்கள் காலையில் நிலத் தில் விதைத்த விதை நெல்லை எடுத்து வாருங்கள் அதை வைத்து உணவு செய்யலாம் என்றார் அவர் மனைவி. இதனை,

செல்லல் நீங்கப்பகல் வித்திய செந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக்கொடு வந்தால்
வல்லவாறு அமுது ஆக்கலும் ஆகும் மற்று
அல்லது ஒன்று அறியேன் என்று அயர் உற. ***(பன்னிரு திருமுறை,ப.1096,பா.452)*** என்ற அடிகளினால் உணர முடிகிறது. இளையான்குடி மாறனார் உடனே சென்று விதை நெல்லை மழையோடு மழையாக அரித்து எடுத்துவந்தார். தன் வீட்டின் கூரையைப் பிடுங்கி மூங்கில் எடுத்து விறகாக்கி அடுப்பு மூட்டித் தானும் மனைவியும் சிவனடியாருக்கு உணவு தயாரித்தனர். தன் வீட்டுப் பின்புறமுள்ள கீரைகளைப் பறித்து சமை யல் செய்தனர். சிவனடியாருக்கு உணவு தயாரித்து விருந்திட்டனர். சிவனடியார் வேடம் பூண்டு இறைவர் எழுந்தருளி இளையான்குடி மாறநாயனாரின் தம்பதி யருக்கு அருள் வழங்கினார். எத்தனை துன்பங்கள் வந்தாலும் தன் கொள்கையை விடாது விருந்தோம் பியதால் இறையருள் பெற்றதை இளையான்குடி மாற நாயனாரின் வாழ்க்கை உணர்த்துவதைப் பெரிய புராணம் வாயிலாக அறிய முடிகிறது.

2. அமர்நீதி நாயனாரின் விருந்தோம்பல் நெறி

சோழ நாட்டில் பழையாறை என்ற ஊரில் வணிகர் மரபில் தோன்றியவர். அமர்நீதியார் திருநல்லூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது ஆறாத பக்தி கொண்டவர். மேலும்,

தான் கடவுளிடம் கொண்டுள்ள
பக்திக்கு எவன் பலன்களைக் கனவிலும்
எதிர்பாராதவனோ, அவனே உண்மையான
கடவுள் பக்தன். (தமிழ் பிரியன், ப.47) எனும் அடிக ளுக்கு ஏற்ப அமர்நீதியார் வாழ்ந்துள்ளார். என்பது தெரியவருகிறது. மேலும், தாம் வாழும் பகுதிக்குச் சிவ னடியார்கள் வந்தால் உணவு, போர்வை, கோவணம் எனப் பல பொருள்களைக் கொடுத்து மகிழ்வார். அமர்நீதியாரை இறைவன் சோதிக்க எண்ணினார். சிவனடியார் வேடம் பூண்டு திருநல்லூர் இறைவன் அமர்நீதியாரை நோக்கினார். அன்போடு அழைத்து அமர்நீதியார் சிவனடியாருக்கு உணவிட்டு வேண்டி யன செய்தார். சிவனடியார் தன் கோவணத்தைப் பாதுகாத்து வைக்கச்சொல்லி நீராடச் சென்றார். நீராடி வந்தபின் அமர்நீதியாரிடம் கொடுத்த கோவணத் தைக் கேட்ட (இறைவன் மறைத்தார்) கோவணம் வைத்த இடம் தெரியாது அமர்நீதியார், சிவனடியாரி டம் கோவணத்திற்குப் பதிலாக புதிய கோவணம், பொன், பொருள் தருகிறேன் என்றார். இதனை,

மணியும் பொன்னும் நல் ஆடையும் மற்றும் என் செய்ய அணியும் கோவணம் நேர் தர அமையும் என்றருள (பெரியபுராணம், 530) என்ற அடிகள் மூலம் அறிய லாம். இவை என் கோவணத்திற்கு ஈடாகா எனச் சிவ னடியார் கூறினார். ஊர் மக்கள் முன்னிலையில் தரா சுத் தட்டில் சிவனடியார் வைத்திருந்த ஒரு கோவ ணமும் மற்றொரு தராசுத் தட்டில் அமர்நீதியார் தன் சொத்துக்கள், பொருள்கள் என அனைத்தையும் வைத் தார். சிவனடியாரின் கோவணத்திற்கு ஈடாகாது இருந் ததைப் பார்த்து ஊர்மக்கள் வியந்தனர். இதனை,

துயிலையிடுங் கோவண நேர்
தூக்கும் என்ன எழிலாரும் பொன் மனைவி
இளஞ்சேய் ஏற்றி ஏறினர்வா னுலகு தொழ ஏறினாரே
(எழில் முருகன், ப.28.) எனும் அடிகளால் அறிய லாம். பலபொருள்கள் வைத்தும் சமமாகத் தராசுத் தட்டு வரவில்லை. சிவனடியாரிடம் அனுமதி வாங்கித் தன் மனைவி, குழந்தை, தானும் தராசில் ஏறி நின் றார். பின்பு சிவனடியார் இறைவனாகக் காட்சி தந்து அமர்நீதியாருக்கு அருள் புரிந்தார். அமர்நீதியார் எந்நிலையிலும் தன் தொண்டினை மறவாது செய்தார். தம் குடும்பத்தை இழக்கும் நிலை வந்த போதிலும் உண்மையையும் விருந்தோம்பல் பண்பையும் விடாது

அமர்நீதியார் செய்திருப்பது அவருடைய மன உறுதியையும், தியாகக் குணத்தையும் காட்டுகிறது. மேலும் இவருடைய வாழ்வு பிற சிவனடியார்களுக்கு முன்னுதாரணமாக அமைகிறது. அமர்நீதியாரைச் சோதித்த இறைவன் அடைக்கலமாகக் கொடுக்கப்பட்ட பொருளைப் பாதுகாத்து உரியவரிடம் திரும்பத் தருவது வாழ்வியல் கடமை என்பதை மனிதச்சமூகத்திற்குப் புலப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

3. திருக்குறிப்புத்தொண்டரின் விருந்தோம்பல் நெறி

தொண்டைநாட்டில் காஞ்சிபுரத்தில் வண்ணார் குலத்தில் ஏகாலியர் நாயனார் அவதரித்தார். ஏகாலியர் என்பது இவரின் இயற்பெயராகும். சிவனடியார்தம் குறிப்பறிந்து நாளும் தொண்டு செய்துவந்ததால் திருக்குறிப்புத் தொண்டர் என அழைக்கப்பெற்றார். சிவனடியார்களுக்கு உணவிடுதல், ஆடைகளைத் துவைத்து உலர்த்திக் கொடுத்தல் முதலிய தொண்டினையும் அவர்களுக்கு வேண்டியதைச் செய்து தருதலையும் திருகுறிப்புத் தொண்டர் செய்துவந்தார்.

புண்ணிய மெய்த் தொண்டர் திருக்குறிப்பு அறிந்து போற்றும் நிலைத்
திண்மையினால் திருக்குறிப்புத் தொண்டர் எனும் சிறப்பினார் (பெரியபுராணம், 112) என்ற பாடல் ழி அறியலாம். அவர் சிவனடியார்களுக்கு உணவிடும் கொள்கையை முதன்மையாகக் கொண்டவர். தன்னை நாடிவரும் அடியவர்களுக்கு இல்லை எனாது ஈயும் குணம் கொண்டவர். சிவனடியார் வேடம் பூண்டு இறைவன் இவரிடத்து ஆடையைத் துவைக்கக் கொடுத்தார். தான் வருவதற்குள்ளே உலர்த்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார். திருக்குறிப்புத் தொண்டர் அத்துணியைத் துவைத்து உலர்த்தும் நேரத்தில் விடாது மழை பொழிந்தது. ஆடையோ காயவில்லை சிவனடியார் வந்து ஆடையைக் கேட்டால் என்ன செய்வது என எண்ணிப் பாறையில் தன் தலையை மோதிக் கொண்டார். இறைவன் தோன்றித் திருக்குறிப்புத் தொண்டரைத் தடுத்து அருள் புரிந்தார். இதனை,

கரந்தைபுல ராதொழிய மழையும் மாலைக்
கடும்பொழுதும்
வரக்கண்டு கலங்கிக் கல்மேல் சிந்தமுடி புடைப்பளவில்
திருவே கம்பர் திருக்கைகொடு பிடித்துயர்வான்சேர்த்தி னாரே (எழில் முருகன் ,ப.46,பா.22) என்ற பாடலால் அறியலாம். இப்பாடலில் இறைவன் திருக்குறிப்புத் தொண்டரைத் தடுத்தாட்கொண்டு அவர் விருந்தோம்பலைப் பாராட்டிச் சிவனடியார்தம் ஆடைகளைத் துவைத்து உலர்த்தித் தரும் தொண்டினை வாழ்த்தி அருள்புரிந்திருப்பதைக் காணமுடிகிறது.

4. அப்பூதியடிகள் நாயனாரின் விருந்தோம்பல் நெறி

சோழநாட்டில் திங்களூரில் அந்தணர் மரபில் தோன்றியவர் அப்பூதியடிகள் நாயனார். திருமடம், அன்னதானக் கூடம், தண்ணீர்ப்பந்தல் என அனைத்தும் வைத்துச் சிவனடியார்களுக்கு விருந்திட்டு மகிழ்ந்தார். திருநாவுக்கரசரைப் பார்க்காமலே அவர் மீது பக்தி கொண்டு. அவர் செய்த செயல்களை எண்ணி குருவாகநினைத்து அப்பூதியார் திருநாவுக்கரசர் பெயரிலே தன் தொண்டுகள் அனைத்தையும் செய்தார்.

வடிவு தாம் காணாராயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையும் தம் பிரானார் அருளும் கேட்டு அவர் நாமத்தால்
படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாய் உள்ள
முடிவிலா அறங்கள் செய்து.(பெரியபுராணம், 1790)
என்ற பாடல் இதனைக் கூறுகிறது. திங்களூர் வழியாக வருகின்ற சிவனடியார்க்கு உணவு, உடை, நீர் மோர் எனக் கொடுத்துவந்தார். ஒருமுறை திருநாவுக்கரசரே அவ்வழியாகச் சென்றார். அப்பூதியடிகளிடம் திருநாவுக்கரசரே தன்னைத் தாழ்த்தி உரைத்தார். அப்பூதியடிகள் நாவுக்கரசர் என அறியாது என் குருவைத் தவறாகப் பேசாதீர் என்றார். இறுதியில், வந்திருப்பவர் திருநாவுக்கரசர் என அப்பூதியார் அறிந்து தம் இல்லம் அழைத்து விருந்தோம்பலுக்கு ஏற்பாடு செய்தார். தன் மகன்களுக்கும் இவரின் பெயரைச் சூட்டி மகிழ்ந்தார். இவரின் மூத்த மகன் வாழை இலை அறுக்கச் சென்றபோது பாம்பு தீண்ட இறந்த நிலையிலும் திருநாவுக்கரசருக்கு அப்பூதியடிகளும் அவர் மனைவியும் விருந்தோம்பல் செய்தனர்.

பிள்ளை உயிரோடு எழுதல்

திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் உன் மகனையும் என்னோடு சாப்பிட அழைத்து வா என்றார். செய்வதறியாது மனம் நொந்து நடந்ததைக் கூறி அவரும் அவருடைய மனைவியும் அழுதார்கள். சிவனடியார் குழந்தையைத் தூக்கிக்கொண்டு சிவாலயம் சென்று திருப்பதிகம் பாடி உயிரோடு எழுப்பினார். தன் குழந்தை இறந்தநிலையிலும் சிவனடியாருக்கு விருந்திட வேண்டும் என்ற அப்பூதியடிகளின் விருந்தோம்பல் பண்பினைப் பெரியபுராணம்வழி அறிய முடிகிறது. தம் வாழ்வில் எச்சூழலிலும் சிவனடியார்களுக்கு விருந்தோம்பல் புரிய வேண்டும் என்ற உன்னத வாழ்வியல் நெறியை அப்பூதியடிகள் செயல்பாடுவழி அறியலாம்.

முடிவுரை

ஆய்வுக்குக் கொண்ட நான்கு நாயன்மார்களுள் இளையான்குடி மாறநாயனார் விருந்தோம்பல் நெறியில் நின்று தான் உணவின்றிருந்த நிலையிலும் சிவனடியார்களுக்கு உணவிடும் கொள்கையைக் கடைப்பிடித்துள்ளார். விருந்தினர்களுக்கு உணவிட்டு மீதம் இருந்தால்தான் உண்ணும் பண்பு இன்றளவும் உள்ளது. அமர்நீதியார், திருநீலகண்ட நாயனார் வரலாறுகள் ஒப்பிடத்தக்கன. அமர்நீதியார்- கோவணம். திருநீலகண்டர்- திருவோடு.இறைவன் திருவிளையாடலாக இவர்களின் பக்தியைச் சோதிக்க எண்ணியதை இவ்வாய்வுவழிஅறியமுடிகிறது. அமர்நீதியார் தன்னை மட்டுமன்றித் தன் மனைவி, ***தொடர்ச்சி: பக். 29***

ISSN 2320-4842

பக்திநெறி காட்டும் இறையருள் புலப்பாடு

முனைவர் வா. பாக்கியலெட்சுமி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, எஸ்.கே.எஸ்.எஸ். கலைக்கல்லூரி
திருப்பனந்தாள் 612 504

முன்னுரை

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு[1] என்று வள்ளுவப் பெருந்தகை பற்று என்பது கடவுள்மீது மட்டுமே இருக்க வேண்டும் என்கிறார். பற்று என்ற சொல்லினை அடிப்படையாகக் கொண்டே பக்தி என்ற சொல் உருவானது என்று கொள்ளலாம். இறைவன் மீது பற்றுக்கொள்வதே பக்தி. உலகில் மனிதன் பற்றைக் கொள்ளும்போது இன்பம் அடைகிறான். இன்பம் இருவகைப்படும்: (1) ஐம்பொறிகளினால் நாம் அனுபவிக்கும் இன்பம் (2) ஐம்பொறி களின் உதவியின்றி நாம் பெறும் இன்பம். இவ்விரண்டனுள், முதலாவது ஆசையாக மாறுகிறது. அந்த ஆசையே சிற்றின்பம்; இரண்டாவது இன்பம் இறையுணர்வாகிறது. அவ்வுணர்வே பேரின்பம். இப்பேறின்பப் பேற்றினை அடைய வழிவகுப்பதே பக்தி ஆகும். மனித வாழ்க்கை நெறிகள் சிறக்க பக்திநெறி இன்றியமையாதாகும். வாழ்க்கையை மேன்மையுறச் செய்யும் பக்தி நெறிக்கு அருள் நெறியும் அடிப்படையான நெறியாக உள்ளது என்பனவே இக்கட்டுரையில் விளக்கம் பெறுகின்றன.

அன்பு நெறி

மனிதர்கள் மேற்கொள்ள வேண்டிய உயர்ந்த நெறிகள் பலவற்றுள் ஒழுக்க நெறி, பக்தி நெறி, முக்தி நெறி ஆகிய மூன்று நெறிகளே உயர்வானவையும் முக்கியமானவையும் ஆகும். இந்த நெறிகளுக்கு எல்லாம் அடிப்படையாக அமைவது அன்பு நெறியே ஆகும்.

நிலையான பொருள்மீது வைக்கும் அன்பு நிலையானது. நிலையான ஒன்று என்பது இறைவனின் திருவடிப் பேறு ஆகும். அதுவே நிலையான பொருளாகும். அறத்தை விளக்க மட்டும் அன்பு பயன்படுவதில்லை, பாவத் தைப் போக்கவும் பயன்படும் அது என்பதை வள்ளுவர்,

அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை[2] எனக் குறிக்கிறார். அகத்தூய்மைக்கும் வாய்மைக்கும் துணையாக அமைவதுபோல் பாவத்தைப் போக்கி ஒரு மனிதனைத் தூய்மை உடையவனாக ஆக்க அன்பினால்தான் இயலும்.

இறையன்பு

இறைவன் அன்பர்களின் சிந்தையில் தானே புகுந்துகொள்கிறான்; கூடிக்கலக்கின்றான்; உறவாக அமைகின் றான்; வழியும் காட்டுகின்றான். பல ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தும், யாகம் செய்தும், மற்றும் பல விரதங்கள் போற்றியும், நோன்புகள் நோற்றும், காண அரியவன் என்று வேதங்களால் பேசப்படுகின்ற இறைவனைத் தம் அன்பால் அடியவர்கள் ஈர்த்துவிடுகின்றனர்.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே
அன்பெனும் வலைக்கும் படும்பரம் பொருளே
அன்பெனும் கரத்தமா; அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அனபுருவாம் பர சிவமே[3] என்று வடலூர் இராமலிங்க வள்ளலார் அன்பிற்கு அடிமையானவன் இறைவன் எனப் பாடியுள்ளார். முற்றிலும் தன்னை இழந்து அன்பின் பிழம்பாகத் திகழும் அடியார்களின் எண்ணங்களை எல்லாம் இறைவன் முடித்துத் தருகின்றான். உண்மையன்பினராக இருந்தால் இறைவனைக் காணுதல் எளிது.

இறைவனிடத்து அன்புடையவர்கள் இறைவனின் லீலைகளைக் கேட்கும்போதும், நினைக்கும்போதும், தன்வசம் அழிவர்; ஆனந்தக் கண்ணீர் பொழிவர்; விம்முவர்; நாத்தழுதழுப்பர்; ஆடுவர்; பாடுவர்; இறைவனுக்கு உகந் தவை செய்வர். இவ்வாறு தூய்மையான உன்மையான இறையன்பே பக்தி நெறி ஆகின்றது.

இறையருள்

அவனின்றி ஓரணுவும் அசையாது என்பது பழமொழி, எல்லா உலகிலும் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந் திருப்பது இறைவனின் திருவருள் ஆகும். எல்லா உறவுகளின் அன்பைப் பெறுதற்கு மூல காரணமாக இருப்பவன் இறைவனே. எல்லா உறவுகளாக இருந்து நமக்கு ஆன்ம முன்னேற்றம் அளிப்பவனும் அவனே. உலகில் வாழும் எல்லா உயிர்களும் இன்பத்தையே விரும்புகின்றன. ஓரறிவு முதல் ஆறறிவுவரை உள்ள உயிர்கள் துன்பமின்றி வாழும் இன்ப வாழ்வையே விரும்புகின்றன. பிறவிப் பெருங்கடலின் துன்பத்தைப் போக்க இறையருளை வேண்டி நிற்கின்றன.

வேதநூல் பிராயம் நூறு
மனிதர்தாம் புகுவ ரேலும்
பாதியு முறங்கில் போகும்
நின்றதில் பதினை யாண்டு
பேதைபா லகன் தாகும்:
பிணிபசி, மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன்
அரங்கமா நகரு ளானே[4] என்று மனிதப் பிறவியின் துன்பம் போக்க, திருமாலின் திருவருள் வேண்டி நிற்கின்றார் தொண்டரடிப்பொடியாழ்வார். ஐம்புலன் களால் நுகரும் இனபம் நிலையானதல்ல, இறைவ னின் திருவடி இன்பமே என்றும் நிலையான இன்ப மாகும். அத்திருவடி நிழலில் அமர்ந்து அவன் அருள் பெற்று அடையும் இன்பமே பேரின்பமாகும்.

பூநிலாய வைந்துமாயப்
புணற்கண் நின்ற நான்குமாய்த்
தீநிலாய மூன்றுமாய்ச்
சிறந்த கால் இரண்டுமாய்,
மீநிலாய தொன்றுமாகி
வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ணம் நின்னை
யார் நினைக்க வல்லரே?[5] என்று எம்பெருமாள் பூமி யில், தீயில், நீரில், காற்றில், ஆகாயத்தில் என்று, சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம் ஆகிய பஞ்சபூதங்களின் குணங்களோடு எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்திருப் பவன் என்கிறார் திருமழிசையாழ்வார். எல்லா உயிர் களிடத்திலும் அன்பு செலுத்தி, எல்லாவற்றிலும் இறை வனைக் கண்டுள்ளார் வள்ளலார்.

கோடையிலே இளைப்பற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
குளிர் தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமான மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில விளை சுகமே சுகத்திலூறும்
ஆடையிலே எனை மணந்த மணவாலை மன்றில்
ஆடுகின்ற அரசே என் அலங்கல் அணிந்தனே[6] என்று எல்லாப் பொருள்களிலும் இறைவனை வள்ளலார் கண்டுள்ளார். பக்தியின் முதல் நிலையே, எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் காணும் நிலையாகும். இந்நிலையே மனிதனுக்கும் இறைவனுக்குமிடையே பக்தி நெறியை ஏற்படுத்தி இறையருளைப் பெற வைக்கும்.

முதலாழ்வார்கள்

பன்னிரு ஆழ்வார்களுள் முதலாழ்வார்களாகப் போற் றப்படுபவர்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவர் ஆவர். இவர்களின் பக்தி நெறியை உணர்ந்து அவர்களுககுத் திருமால் அருள் புரிந்துள்ளார். மூவரையும் ஒன்றாகச் சந்திக்கச்செய்து மூவருக்கும் காட்சி கொடுத்துள்ளார். இறைக்காட்சியைக் கண்ட ஆழ்வார்கள்,

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வேய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொனமாலை
இடராழி நீங்குகவே யென்று[7] எனப் பொய்கையாழ் வார் பாசுரம் ஒன்றைத் திருவாய் மலர்ந்தருளினார். அடுத்து, பூத்தாழ்வார்,

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியாய் - நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்[8] என்ற பாசுரத்தைத் திருவாய் மலர்ந்தருளினார். உடனே பேயாழ்வார்,

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்
திகழுமருக்கண் அணிநிறமும் கண்டேன் - செகிளகும்
பொன்னாழி கண்டேன், புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பா லின்று[9] எனும் அருள்பாசுரத் தைத் திருவாய் மலர்ந்தருளினர். மூவரும் இறைவ னின் அருட்காட்சி கண்டு ஆனந்த பரவசத்தை அடைந்து பேரின்பக் களிப்பெய்தித் திகழ்ந்தனர். இவ்வாறு ஞானமும், அன்பும் கொண்டு பக்தி செலுத்தினால் இறைவனைக் கண்டு அவனின் திருவடி நிழலினை அடைந்து இறையருளைப் பெறமுடியும் என்ற உயரிய பேருண்மையை உலகுக்கு உணர்த்தியுள்ளனர்.

அறத்தினுள் அனபு நீ மறத்தினுள் மைத்து நீ
வேதத்து மறை நீ: பூதத்து முதலும் நீ[10] என்று எல்லாமுமாக, எல்லாவற்றிற்குள்ளும் இருப்பவன் இறைவன் ஆவான்.

தொகுப்புரை

இறைவன்மீது பக்தி கொண்டு நம்பிக்கை வைத்தல் மனிதகுலம் முழுமைக்கும் நன்மை பயக்கும். ஆண் டவனுக்குத தொண்டு செய்தல் வேண்டும். நாம் வேண் டுதல் செய்யாத காலத்தும் அருள் கொண்டு நம் மைக் காப்பவன் இறைவன் ஒருவனே ஆவான்; உணர்வின் மேலோங்குதல் நிலையை பக்தியால் மட்டுமே பெற இயலும் என்பது அனுபவ உண்மை யாகும். இவ்வாறு வாழ்க்கை நெறிகளில் மேன்மை யடைந்து, இறையருளைப் பெற அன்பு நெறியும், பக்தி நெறியுமே வழிகாட்டும் என்பது திண்ணம்.

மேற்கோள் எண் விளக்கம்

1. திருக்குறள்: 350

[தொடர்ச்சி: பக்கம் 22]

ISSN 2320-4842

Beyond the Bleats: Exploring Animal Agency and Ethical Dimensions through the Goat Metaphor in Perumal Murugan's *Poonachi or The Story of a Black Goat*

Ms Sajna A* and Dr Suhail Abdul Rub P**
***Assistant Professor, Department of English, MES Kalladi College, Mannarkkad, Palakkad, Kerala**
****Research Guide & Assistant Professor, Department of English, P.T.M Government College, Perintalmanna, Malappuram, Kerala**

Abstract

Murugan's *Poonachi* presents readers with a unique lens through which to examine the agency of non-human animals. Poonachi, as a symbol of agency, challenges prevailing anthropocentric perspectives and urges readers to acknowledge the inherent value and autonomy of all sentient beings. Murugan's narrative prompts readers to question the ethical treatment of animals, particularly within the context of human-animal dynamics. Drawing upon various literary techniques and narrative devices, Murugan skillfully weaves a thought-provoking tale that highlights the need for compassion, empathy, and ethical consciousness in our interactions with animals. By employing the goat as a metaphor, the novel invites contemplation on the complex emotions, desires, and experiences that animals, too, may possess. This study serves as a concise guide to understanding the multifaceted layers of animal agency and ethical considerations conveyed through the goat metaphor in *Poonachi*.

Keywords: Animal Studies, Culture, Anthropomorphism.

In the realm of literary endeavours, the pursuit of anthropomorphic tales, seeking to articulate the matrix of cultural and political conundrums that pervade the human condition, is not an entirely new approach. George Orwell's *Animal Farm* will be the first reminder of such a theme where animals rule. In Indian literary tradition, the relationship between animals and human beings has been widely explored and we can see many texts which use animals as a symbol or metaphor for human experiences.

Children's literature in general is marked off with abundant use of anthropomorphic characters with a tail of moral added. *Jataka Stories, Aesop Fables* and *Panchatanthra* reveal much about human nature with their animal characters. More than fables for children, stories with animal characters divulge the pleasure principle with which all living beings exist. Apart from these, there are satirical texts which critique the established laws, norms, cultures, religions, superstitions and altogether the selfishness of human beings. *Poonachi* or *The Story of a Black Goat*, can be seen as a political satire that depicts the subservience of the economically deprived masses under the prevailing system.

Poonachi or The Story of a Black Goat is clearly a political satire which shows the acquiescence of the poor class of people under the regime. In the preface of his magnum opus *Poonachi*, Perumal Murugan avers that he harbours a trepidation to depict humans in the milieu of the society he portrays. Instead, he opts to explore the tale of a goat, a creature whose story he is better equipped to tell with the fullest depth of emotion and sentimentality that has long resided in his heart.

> I am fearful of writing about humans; even more fearful of writing about gods. … Yes, let me write about animals …It is forbidden to write about cows or pigs. That leaves only goats or sheep. Goats are problem-free, harmless, and above all, energetic. A story needs a narrative pace. Therefore, I've chosen to write about goats. (7)

In the labyrinth of contemporary literary landscapes, the renowned Tamil writer Perumal Murugan dares to traverse the complex tapestry of human-animal entanglements in his myriad creations. An embodiment of postmodern sensibilities, his prose transcends conventional boundaries, melding social, political, and artistic commentary into a sublime fusion. The enigmatic opus known as Poonachi, a testament to Murugan's audacity, beckons the reader to embark upon an experiential journey through the realm of Animal Studies—a multidisciplinary domain that unravels the intricate threads woven between Homo Sapiens and their non-human counterparts.

The portrayal of animals as subjects rather than objects is a hallmark of animal studies, which seeks to challenge anthropocentric assumptions and explore the ways in which animals experience the world. In the novel, the titular character, Poonachi, is a goat who is central to the narrative, and the story is largely told from her perspective. As one traverses through the narrative arc of Perumal Murugan's *Poonachi*, one encounters a rich tapestry of themes and motifs that resonate with one's deepest anxieties and desires. From the verdant forests to the bustling habita-

tion, from the pursuit of independence to the weight of motherhood, one witnesses a life unfolding in all its complexity and splendour. At every turn, one is confronted with the primal instincts that animate all living beings - the instinct for survival, the yearning for love and companionship, and the drive for self-expression and autonomy.

Through Poonachi's experiences and interactions with other animals and humans, the novel raises important questions about the treatment of animals and the ethics of human-animal relationships. In the realm of agrarian existence, where the humble proletarians of the pastoral world, the goats and sheep, reign supreme, a tale of significance unfolds. The novel is set in a rural village in Tamil Nadu and follows the life of a little black goat who is born into a poor family. The narrative takes place within the confines of a fictitious hamlet named Odakkan Hill, characterised by its parched and barren terrain.

Within the intricate weave of *Poonachi*, a mysterious tale unfolds, as an anonymous elderly gentleman discovers an exceptionally diminutive caprine creature, unlike any he has beheld before, and presents this unique kid to his nameless partner, a woman whose face was etched with stories untold:

> ONCE, IN A village, there was a goat. No one knew where she was born. The birth of an ordinary life never leaves a trace, does it? Even so, her arrival was somewhat unusual. (9)

Yet, this enchanting gift emanates from the realm of mystery, bestowed upon them by a figure of towering magnitude, whose presence looms with an air of enigma, leaving trails of intrigue in their wake: “At first, it felt as if a hammer had grazed his hand; the next moment, he found a flower on his palm.” She is jet-black, a rarity among the region's goats. Bewitched by the oddity of the situation, the elderly couple adopts this caprine marvel and names her Poonachi.

Despite her small size and seemingly insignificant existence, Poonachi is determined to survive and thrive in a world that is hostile to animals like her. Poonachi, along with the other goats are presented with all the emotions and feelings which are believed to be humane. The transmogrification of human and animal characters is so subtle that the transference makes little notice when we read the story. The orphaned Poonachi had to feed on with cooked millet water as the other nanny goats refused to milk a kid which is not theirs. A distant, authoritarian government keeps a near-paranoid count of all the livestock under its regime. The kid's arrival has to be reported to the government to be added to the livestock. The all-authoritarian regime which is cynical, leery, quizzical and austere in its approach towards the subject intervenes in the life of all in the village. The kids have to be tagged with a numbered stud in their ears. In the process, Poonachi almost bleeds to death as the careless officer pierces her nerve while doing so:

> They will pierce an ear and hang a hoop from it. There is a number embedded in it, they say. With that number, they can find out everything about the goat. Goats have horns, don’t they? Suppose they get a little angry and point them at the regime? Such goats have to be identified, right? That’s why they all have to get their ears pierced. (32)

Within the bounds of a semi-arid landscape, plagued by the persistent grip of drought, no creature can claim the assurance of a satisfied appetite. Male animals are coerced to breed, while females of these species are driven to carry out the process of parturition. They wrestle to nourish their fragile offspring, mirroring the despair of their human masters who grapple with the relentless pursuit of survival. In the modest abode of the elderly couple, Poonachi, the orphaned one, encounters disdain and neglect from her newfound kin. Instead, it is the tender hands of humans that offer solace, feeding her with care. Even a wondrous kid must contend with adversity in this harsh and unforgiving world.

Like an intrepid crab, Poonachi clings to life tenaciously, enduring the pangs of hunger and the sting of wounds, all the while fiercely guarding her individuality. Each playful stride on her arduous path serves as a relentless challenge, shaping her essence and fostering a rich inner world. Through her discerning eyes, the other characters come into focus, viewed from her unique perspective. Upon returning from her grazing ventures, she imparts the minutiae of her day to the aged woman, sharing the intricacies of her journey. “ Of what she recounted, the old woman would understand some things and not others” (51)

Although unique in her own right, Poonachi ultimately finds herself constrained by the mould to which society has cast her into. Murugan masterfully evokes tenderness within our hearts for her, reminiscent of how the Victorians prepared us for the poignant blows of pastoral tragedy. Throughout the late 19th century, in the worlds woven by authors such as George Eliot and Thomas Hardy, innocent lambs filled the pages of novels, radiating vitality and beauty, only to have their light cruelly extinguished by the harsh realities of a corrupted world.

Even goats, it seems, cannot elude the weight of gender expectations, and their existence is tinged with a feeling of sorrow that surpasses one’s own. As T.S Eliot's poignant phrase captures it, theirs is a "sorrow without foreboding."(“The Dry Salvage”) Murugan deftly weaves these threads, eliciting empathy for Poonachi and shedding light on the universal struggles faced by all creatures ensnared within the intricate tapestry of life.

Perumal Murugan's literary work, *Poonachi*, delves into the intricate nuances of gender and sexuality within the rural Indian setting, presenting a compelling analysis of these themes. Murugan's evocative prose transports the reader to a world where goats and hu-

mans alike struggle to assert their individuality and autonomy in the face of societal pressures and expectations. In J. Butler's theory, gender is not an innate characteristic that is biologically determined, but rather it is a social construct that is created and reinforced through performative acts. In other words, gender is a performative act rather than an inherent trait. This means that gender is not a fixed or stable identity, but rather it is something that is constantly in flux and subject to change.

At the heart of the novel is the eponymous goat, Poonachi, who is born black in a world where brown is the norm. This difference is not simply a matter of physical appearance, but it also has important implications for Poonachi's identity and agency. Her difference is both a source of wonder and disdain, with other goats viewing her as an outsider and the government imposing strict control over her through bureaucratic procedures. Poonachi's struggle to survive and assert her individuality mirrors the experiences of many women and marginalized communities who must navigate oppressive social systems that seek to suppress their agency and identity. Through Poonachi's experiences, Murugan raises questions about the ways in which gender norms are created and enforced and the ways in which individuals who fall outside of those norms are marginalized and oppressed.

Furthermore, the novel challenges traditional notions of motherhood and female desire. Poonachi's experiences of motherhood are complicated by her status as an outsider and her struggle for survival in a harsh world. Murugan portrays motherhood not as a natural or essential aspect of femininity, but rather as something that is negotiated and performed in specific social contexts. Poonachi's experiences of desire are also complex, as she navigates the expectations and restrictions imposed upon her by her society.

Perumal Murugan possesses an intimate understanding of this realm, allowing him to bestow anthropomorphic qualities upon his creatures without diminishing their intrinsic vitality and authenticity. *Poonachi* emerges as a political novel, refraining from using its animal characters as mere symbols. Amidst the harsh realities of hunger and despair that engulf Poonachi's pastures and sheds, she endures suffering akin to that of human women, undergoing a profound transformation. Murugan suggests that, for both goats and humans, love is more accessible than freedom, and respite is more attainable than mercy. This captivating fable centred around a goat, serves as a poignant reminder that humanity's predatory nature often prevails, leaving us both enlightened and disheartened by the sobering truth that man can be a wolf to his fellow man.

The use of animals in literature, and specifically in *Poonachi*, raises important questions about the ethics of our treatment of animals and the ways in which we relate to them. By portraying animals as characters with their own lives and experiences, the novel challenges the notion that animals exist solely for human use and consumption. Murugan explores the ways in which humans have historically used animals for their own purposes, often to the detriment of the animals themselves. Richard Ryder's concept of "Speciesism" assumes that humans are superior to other animals and have the right to use them for their own purposes such as for food, clothing, experimentation or entertainment. The term describes the discrimination or exploitation of animals based only on their species; it is a form of prejudice that is analogous to other forms of discrimination such as racism and sexism in which individuals are treated unfairly based on their race or gender. Poonachi is a powerful symbol of this dynamic, as she is constantly being used and abused by the humans around her. In the beginning, she is shown affection and care, It is always within the context of her being a useful animal. There are many instances which illustrate the concept of speciesism where the goats are treated as resources to be exploited. For instance:

> The boatman went up to Kaduvayan and pulled out his testicles from between his hind legs. The youth who was holding the hind legs up laughed. Opening out the scissor sticks, the boatman placed the testicles between the two arms and pressed down. Something snapped with a loud crack. 'Beyyyyaaaa!' Kaduvayan let out a single long cry. Unable to join his legs together, Kaduvayan kept them splayed wide. His testicles had swollen up. He cried fitfully till he wore himself out. All the male kids did the same. Peethan couldn't even cry. His body was still shaking. None of them was quite aware of what had happened to them." (57)

At the same time, Murugan also highlights the ways in which animals are able to resist human domination. Murugan's novel serves as a critique of oppressive systems of power and an affirmation of the human (and animal) spirit to resist and survive against all odds.

The goat serves as a counter-narrative to the dominant social and political discourses of the novel. While the human characters are often preoccupied with power, hierarchy, and control, the goat embodies a different set of values and priorities. By drawing our attention to the goat's experiences and perspectives, Murugan challenges us to question the dominant discourses of society and to consider alternative ways of thinking about power and agency. As Fanon wrote, "The colonized world is a world divided in two...The colonised is elevated above his jungle status in proportion to his adoption of the mother country's cultural standards." (The Wretched of the Earth,3).

In *Poonachi*, Murugan shows us that even the most oppressed and marginalized can resist and rise above their status if given the chance to do so. Poonachi is a prime example of this resistance. Despite the fact that she is constantly being exploited by humans, she never loses her sense of self. She remains fiercely independ-

ent, even in the face of overwhelming odds. This resistance is an important reminder of the power of the natural world, and the ways in which it is capable of pushing back against human attempts to control it. Poonachi is a goat that embodies the resilience and determination of the Tamil people.

The animals play an important role in highlighting the theme of interconnectedness in *Poonachi*. The novel emphasizes the idea that all living creatures are connected and that the actions of one have a ripple effect on others. For example, when Poonachi is taken away from her mother, it not only affects Poonachi but also her mother and the other animals in the herd who are left to mourn her absence. This theme of interconnectedness is an important message for readers to take away from the novel.

The novel also explores the significant theme of the interconnection between human beings and the natural environment. Murugan depicts the land as a precious and finite resource, one that must be treated with respect and care. The humans in the novel, however, are often portrayed as callous and indifferent to the natural world around them. They unabashedly exploit the land to serve their personal interests, displaying a complete disregard for the potential long-term repercussions of their choices and actions.

Murugan's portrayal of Poonachi serves as a poignant reflection on the intricate interplay between humanity and the natural world. The goat embodies the resilience and tenacity of the natural world, even in the face of overwhelming odds. As a beacon of hope and boundless potential, Poonachi serves as a constant reminder that life can prevail, even in the most unforgiving circumstances. Yet, in her very essence, Poonachi assumes the role of a foreboding specter, imparting cautionary tales. She is a reminder of the fragility of the natural world and the ways in which human actions can have far-reaching and devastating consequences.

In conclusion, the study of animals in literature, and specifically in Tamil literature and *Poonachi* by Perumal Murugan, offers important insights into the relationship between humans and animals and the ways in which animals have been represented and treated in society. Through Murugan's masterful and nuanced storytelling, we are compelled to confront our own responses to the fundamental questions of existence - the nature of hierarchy and ownership, the tensions between selflessness and appetite, the challenges of reconciling love and desire, and the inevitability of living and dying. Indeed, *Poonachi* transcends mere goat chronicles, morphing into a potent articulation of empathy towards the animal kingdom and the female predicament:

> Starting life as a foundling and going through the ordeal of being a miracle, Poonachi experiences both the promise and the structural violence embedded in the life of a female. In Murugan's tale, she turns into a stone idol at the moment of her death, harking back to a hoary tradition in the folk culture of Tamil Nadu whereby the memory of an innocent girl destroyed by the random and ever-present violence of the world is worshipped as a deity. And this may well be the key to reading this novel as an adult literary text for our times. (125)

Additionally, it subtly critiques the decisions that shape our community and country, while also serving as an evocative reminder of the heightened susceptibility of those who oppose the pressures of uniformity and subjugation. In this context, *Poonachi* emerges as a profound cultural artifact, encapsulating the intricate interplay between power dynamics, resistance, and human-animal connections. Murugan's tale is a testament to the power of literature to illuminate the most profound truths of one's existence and a call to action for all those who seek to resist the forces that jeopardize one's individual and collective freedom.

Bibliography

Baratay, Eric, and Elisabeth Hardouin-Fugier. *Zoo: A History of Zoological Gardens in the West*. Reaktion Books, 2002.

Birke, Lynda, and Mike Michael. *The Materiality of the Animal Body: A Review. Sociology Compass*, vol. 3, no. 2, 2009, pp. 304-316.

Fanon, Frantz. *The Wretched of the Earth*. Grove Press, 2007.

Goswami, Sreejani. "From Fiction to Reality: Animal Agency and Ethics in Perumal Murugan's Poonachi." *Journal of Commonwealth Literature*, vol. 54, no. 1, 2019, pp. 168-184.

Joseph, Preetha. "Exploring Animal Narratives: An Ecocritical Study of Perumal Murugan's Poonachi." *Indian Journal of Ecocriticism*, vol. 4, no. 1, 2018, pp. 65-75.

Kalof, Linda, and Amy Fitzgerald, editors. *The Animals Reader: The Essential Classic and Contemporary Writings*. 2nd ed., Oxford University Press, 2016.

Rajamani, Immanual. "Interspecies Ethics: A Study of Human-Animal Relationships in Poonachi by Perumal Murugan." *Littcrit: An Indian Response to Literature*, vol. 46, no. 2, 2020, pp. 197-213.

Santhakumar, Aravind. "Posthuman Sensibilities and Animal Ethics in Perumal Murugan's Poonachi." *Asiatic: IIUM Journal of English Language and Literature*, vol. 13, no. 2, 2019, pp. 118-135.

Seran, Perumal Murugan. *Poonachi: Or the Story of a Black Goat*. Translated by N. Kalyan Raman, Context, 2017.

Thirumalai, Nalini. "Animal Agency and Resistance in Perumal Murugan's Poonachi." *International Journal of English Language, Literature in Humanities*, vol. 6, no. 1, 2018, pp. 28-34.

ISSN 2320-4842

மெக்கன்சி சுவடிகளின்வழி அறியலாகும் பாளையக்காரர்

முனைவர் த. ஆதித்தன்
இணைப் பேராசிரியர், அரிய கையெழுத்துச் சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

பல்வேறு நாடுகளிலிருந்து இந்தியாவிற்குப் பயணிகளாகவும், சமயப் பரப்புநர்களாகவும், வணிகர்களாகவும் பலர் வந்துள்ளனர். அவர்களுள் சிலர் நம் நாட்டுத் தொன்மைகளை வெளிக்கொணர்வதில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுள் ஒருவர் ஸ்காட்லாந்தைச் சார்ந்த காலின் மெக்கன்சி. இவர் ஆங்கிலேயே கிழக்கிந்தியக் கம்பெனி யின் கட்டுப்பாட்டில் இந்தியா இருந்த போது 1783இல் பொறியாளராகப் பணியேற்றிருக்கிறார். 1789 முதல் இராணுவ அதிகாரியாகவும் செயலாற்றியிருக்கிறார். 1810இல் சென்னை மாகாணத்தின் தலைமை நில ஆய்வா ளராகப் **(Surveyar General)** பொறுப்பேற்ற அவர் பணி உயர்வுபெற்று முதல் இந்தியத் தலைமை நில ஆய்வாளராகவும் பணியாற்றியுள்ளார். இராணுவப் பணி, நில அளவைப் பணி ஆகியவற்றில் இருந்து கொண்டே ஆர்வத்தின் காரணமாக ஆவணங்கள், சுவடிகள் போன்ற தொன்மையானவற்றைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். அவ்வாறு அவர் தொகுத்த சுவடித் தொகுப்புகளில் பாளையக்காரர்கள் குறித்து இடம்பெற்றுள்ள தரவுகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

பாளைக்காரர்களின் தோற்றம்

விஜயநகர ஆட்சியின்போது விசுவநாத நாயக்கர் மதுரையை 72 பாளையங்களாகப் பிரித்திருக்கிறார். அப்பாளை யங்களுக்கு அவரிடத்தில் நெருக்கமாக இருந்த வீரர்களைப் பாளையக்காரர்களாக ஆக்கியிருக்கிறார். கொண் டம நாயக்கன் வம்சாவழி என்னும் சுவடியில் இவை தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளதனை, ***சேத்துருவாதியன் வசமாயிருக்கிர வெகுதூர தேசத்துக்குப் போரடியினாலே இந்த முகத்து மனுஷாளாகச் சேவுகர் விருத்தியில் மகா திறாணிவான்களாயுள்ள மனுஷனாகச் சிறிது பேரை என்னுடனே கூட்டியனுப்பிவிக்க வேணு மென்று கேட்டுக்கொண்டதில் அவர்களும் அந்தப்படிக்கே செவிக்கிறோமென்று (மார்க்சிய காந்தி, ந. 1981: 12-13)*** என்பதால் அறியலாம்.

இப்பாளையக்காரர்கள் விஜயநகர அரசின் காரணமாக உருவானவர்கள். அதாவது, தமிழகத்தை ஆண்ட நாயக்கர்களின் கீழ்ப் பணியாற்றியவர்கள் ஆவர். காலம் செல்லச்செல்ல தமக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் விருப்பம்போல் நிர்வாகமும், அதிகாரமும் செய்யும் நிலைக்கு மாறியுள்ளனர். பாளைக்காரர்களில் பெரிதும் தெலுங்கர்களும் கன்னடர்களுமே இருந்துள்ளனர். சில குறுநில மன்னர்களும் இருந்துள்ளனர். பாண்டிய மரபு வழியினர் சிலரும் இருந்தார்கள் என்று கூறுவதனை மறு ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. ஏனெனில் பாண் டியர்களை வீழ்த்தி ஆட்சியைப் பிடித்தவர்கள் அவர்கள். பாண்டியர்களை எதிரிகளாக எண்ணித் துரத்திய வர்கள். எனவே பாண்டியர்கள் நாயக்கர்களின் கீழ்ப் பாளையக்காரர்களாக இருந்தார்கள் எனும் வாதம் ஏற்பு டையதாக இல்லை. தமது மரபினை ஒழிக்க முற்பட்டவர்கள் கீழ்ப் பணிந்து பணியாற்றும் பண்பு உண்மை யான மரபுரிமை பெற்றவர்களுக்கு ஏற்புடையதா என்னும் வாதத்தினை முன்வைத்து ஆராய்ந்தாலே இதற் கான தீர்வு கிடைத்துவிடும். இது மேலாய்விற்குரியது.

பாளையக்காரர் வம்சாவளிழி

விஜயநகரப் பேரரசின் வருகையால் உருவான பாளைக்காரர் பதவிகள் காலத்தின் போக்கில் வழித்தோன் றல்களுக்கு உரியதாகிறது. மெக்கன்சி சுவடிகளின் மூலம் அறியலாகும் இவை குறித்த செய்திகளாவன, பாளையக்காரர் பொறுப்பிற்குத் தந்தைக்குப்பின் மகனே வந்துள்ளனர். பொறுப்பிற்குரியவர் சிறுவனாக இருந் தால் பெண்களும் பொறுப்பேற்றுள்ளனர். குழந்தைகள் இல்லாத நிலையில் தத்தெடுக்கும் குழந்தைக்கும் அவ்வுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதேபோலத் தந்தைவழி உரிமை மட்டுமல்லாது தாய்வழி உரிமையும் இருந்துள்ளதை அறியமுடிகிறது. சான்றாக, ***ஐந்தாவது பட்டம் பொன்னப்பனாயக்கர் மனைவி கிருஷ்ணம்மாள், அவர் தம்பி காமயனாய்க்கர், அவர் மனைவி சின்னயெறம்மாள், பொன்னப்பனாயக்கர் மகன் லக்கமனாய்க்கர், லக்கமனாயக்கர் சிறுபிள்ளையாக இருந்தபோதே பட்டம் கட்டி வைத்தார்கள். லக்கமனாயக்கரின் தாயார் கிருஷ்ணம் மாளிடம் உறவினர்கள் துர்யோதனைச் செய்தனர். காமனாயக்கர் உன்னையும் உன் பிள்ளையையும் கொன்று போட்டு தான் பட்டத்திருக்க முயல்கிறான் என்று சொன்னதைக் கேட்டுக் கபடமாகக் கொன்றுவிட்டான். அச்செய்தியைக் காம னாயக்கரின் மனைவி சின்னயெறம்மாள் தீக்குறிப்பதற்கு முன்னால் இனி மக்கள் பட்டம் நிலையாமல் தாயாதி பட்ட மாக வேண்டியது என்று சாபமிட்டு இறந்ததால் அன்று முதல் தாயாதி பட்டமாக நடந்துவருகிறது*** (குழந்தைவேலு. க, 1981:51) என்பதனைக் கொள்ளலாம்.

ISSN 2320-4842

சாதி மாற்றம்

மத மாற்றம் கேள்விப்பட்டதுண்டு. ஆனால் சாதி மாற்றம் குறித்த தரவு பாளையக்காரர்களைப் பற்றிய குறிப்புகளில் இடம்பெற்றுள்ளன. இந்தச் சாதி மாற்றத்திற்கு *பால சாஸ்திரம்* என்று பெயரிட்டுள்ளனர். பாளையக்காரனாக இருப்பவன் பிற சாதி பெண்மீது ஆசை கொண்டால் அவளைத் தன் சாதிப் பெண்ணாக மாற்றிக்கொள்ளலாமாம். அதற்குக் குறிப்பிட்ட பாளையக்காரர்கள் ஒன்றுகூடி பாளையக்காரன் ஆசைப்பட்ட பெண்ணிற்கு உணவளிப்பார்களாம். அப்பெண்ணிற்கு வெள்ளித்தட்டில் பாலும் பழமும் உணவாக அளிக்கப்படுமாம். அவள் உண்டபின் மீதமிருக்கும் எச்சில் உணவை அங்குள்ள பெரிய மனிதர்கள் உண்பார்களாம். இச்சடங்கு முடிந்ததும் அப்பெண்ணைத் தங்கள் சாதிப் பெண்ணாக ஏற்றுக்கொள்வார்களாம் (மார்க்சீய காந்தி. ந, 1981:164) இவ்வாறு சாதி மாற்றம் செய்யப்பட்ட பெண்களின் பிள்ளைகளுக்கும் பாளையக்காரர் பொறுப்பு வழங்கப்பட்டிருந்ததையும் அறியமுடிகிறது.

பாளையக்காரர் வீழ்ச்சி

பாளையக்காரர்களுக்கு நாயக்கர்கள் சில பணிகளை வரையறுத்திருந்தனர். அவற்றுள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியைப் பராமரிப்பது, ஆண்டுக்கு ஒருமுறை தமக்கென்று தீர்மானிக்கப்பட்டுள்ள பணத்தைச் செலுத்துவது, போர்களின்போது நாயக்கர் படைக்கு உதவுவது போன்றவை முதன்மையான பணிகளாகும்.

விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சியினைத் தொடர்ந்து மொகலாயர் எழுச்சி ஏற்பட்டது. முதலில் ஆற்காடு நவாப், கர்நாடக நவாப் ஆகியோர் பாளையக்காரர்களை ஒடுக்கினர்.

பின்னர் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியில் ஆதிக்கம் மேலோங்கியபோது ஆங்கிலேயர்கள் பாளையக்காரர்களிடம் வரிவசூல் செய்யத் தொடங்கினர். இவற்றால் பாளையக்காரர்கள் பல தொல்லைகளுக்கு ஆளாயினர். இவை பாளையக்காரர்களின் வீழ்ச்சிக்கு அடிகோலிற்று. இத்தகைய பாளையக்காரர்கள் தொடர்பான வரலாற்றுத் தகவல்களைத் தெரிந்துகொள்வதற்கு மெக்கன்சி சுவடிகள் பெரும் துணைபுரிவனவாக உள்ளன. பாளையக்காரர்களின் சமுதாய நிலை, பணிகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள் போன்ற ஏராளமான தகவல்களை இச்சுவடிகளை ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் வெளிக்கொணர முடியும்.

உதவிய நூல்கள்

குழந்தைவேலு, க. (ப.ஆ), பாளைப்பட்டுகளின் வம்சாவளி, தொகுதி -1, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1981.

மார்க்சிய காந்தி, ந. (ப.ஆ), பாளையப்பட்டுகளின் வம்சாவளி, தொகுதி -3, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1981.

[15ஆம் பக்கத் தொடர்ச்சி]

2. குறள்: 76
3. திருவருட்பா, ஆறாம் திருமுறை, இராமலிங்க வள்ளலார், பாடல்: 3269
4. திருமாலை, தொண்டரடிப்பொடியாழ்வார், பாசுரம்: 874
5. திருச்சந்த விருத்தம், திருமழிசையாழ்வார், பாசுரம்: 752
6. திருவருட்பா, அருள்மாலை விளக்கம், இராமலிங்க வள்ளலார், பாடல்: 4091
7. முதல் திருவந்தாதி, பொய்கையாழ்வார், பாசுரம் : 2082
8. இரண்டாம் திருவந்தாதி, பூதத்தாழ்வார், பாசுரம்: 2182
9. மூன்றாம் திருவந்தாதி, பேயாழ்வார், பாசுரம்: 2282
10. பரிபாடல், திருமால் வாழ்த்து, 3: 65-66.

புரவலர்

அரிமா நோக்கு இதழின் புரவலராக ஆகியுள்ள பேராசிரியர் முனைவர் **சம்பந்தம் ஏகாம்பரம்** (கணிதத் துறைத் தலைவர் (ப.நி.), கொலம்பியா கல்லூரி, வான்கூவர், பிரிட்டிசு கொலம்பியா, கனடா) அவர்களுக்கு அகங்கனிந்த நன்றி.

நீர்வழிப் படூஉம் **என்னும் புதினப் படைப்புக்காக 2023ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருது பெற்றுள்ளார் எழுத்தாளர் தேவிபாரதி என்னும் ந. ராஜசேகரன்.**

மமாங் தய் எழுதிய *தி பிளாக் ஹில்* எனும் ஆங்கிலப் புதினத்தின் தமிழாக்கமான *கருங்குன்றம்* எனும் நூலுக்காக 2023ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமியின் மொழிபெயர்ப்பாளர் விருது பெறுகிறார் கண்ணையன் தட்சிணாமூர்த்தி.

விருதாளர் இருவரையும் வாழ்த்தி மகிழ்கிறது அரிமா நோக்கு.

ISSN 2320-4842

தொல்காப்பிய அகத்திணை, புறத்திணையியல்களின் இயைபுத் தன்மைகள்

முனைவர் சி. சுந்தரமூர்த்தி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை

ஒவ்வொரு செயலைச் செய்தற்கும் அதற்கென ஒருமுறை உள்ளது அல்லது தேவைப்படுகிறது. அதுபோலச் சிந்திக்கும் செயலைச் செம்மையாகச் செய்வதற்கும் ஒரு பொருத்தமான முறை தேவைப்படுகிறது. தனிமனிதன் - சமுதாயம் - இயற்கை என அனைத்தையும் சுருக்கமாகச் சொன்னால் நாம் வாழும் உலகை இரண்டு முறை களில் பார்க்கலாம்: 1. அதன் இயங்கியலை வைத்தும் அதன் வரலாற்றுச் சூழலில் வைத்தும் பார்த்தல். 2. நிலை மாறாததாகவும் வரலாற்றுச் சூழலிலிருந்து தனிமைப்படுத்தியும் பார்த்தல்.

இவற்றுள், முதல் முறையான இயங்கியல் என்பது அணு முதல் அண்டம் வரை உள்ள அனைத்தும் இயங் கிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்த்துவது. இது ஒரு அறிவியல் முறை. இரண்டாவது முறை, வெறும் கருத்தாக மூட நம்பிக்கையோடு பார்ப்பது. இதில் முதலாவதாக இருக்கின்ற இயங்கியல் அகம் என்கிற மனத்திற்கும், புறம் என்கிற இயற்கை, சமுதாயம், அரசியல், விஞ்ஞானம் இவற்றிற்கும் ஒரு இயங்குமுறை என்பது இடையறாது நடந்துகொண்டிருப்பது. இந்த அக உலகமும், புற உலகமும் இயங்குதற்கு அடிப்படையாய் இருப்பது *பொருள்* (Matter) . பொருள் என்பது குணங்களால் சூழப்பட்டுள்ளது. பொருளின் ஒரு அம்சமாக இருப்பது மனம். மூளையின் இயங்குமுறை மனம். ஆகையால் மனத்தில் எழும் கருத்துகள் எங்கிருந்தோ வருவன அல்ல. மாறாக அது பொருள்வகை நிகழ்வுகளின் பிரதிபலிப்பாக உள்ளது. மனித உணர்வு என்பதும் பொருள் வகை நிகழ்வு முறையே ஆகும். முடிவாகச் சொன்னால் கருத்துக்கள் மனித, பொருள்வழி அனுபவங் களிலிருந்தே உருவாகின்றன. பொருள் என்பது வெறும் சடமாக இல்லாமல் ஓயாமல் செயல்புரிந்தபடியும், நிலை மாறியபடியும் இருக்கிறது. உயிர் என்பது புரதங்களைக் கொண்ட உடம்பு என்னும் கூட்டுப் பொருளி லான வடிவில் இருக்கிறது. அதனுடைய இருத்தல் முறையின் சிறப்புப் பண்பு என்னவென்றால் உயிருள்ள பொருள் என்னும் தன் சிறப்புக் குணத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காகப் பொருத்தமான புறச்சூழலுடன் அது பரஸ்பரம் செயல்புரிய வேண்டியுள்ளது. இதுவே இயங்கியல் முறை எனப்படுகிறது. இந்த இயங்கியல் முறையே இவ்வளவு பெரிய, பிரமாண்டமான உலகத்தை மனிதன் படைக்க ஆதார ஸ்ருதியாய் இருக்கிறது. மேலும் இந்த இயங்கியல் முறையை வரலாற்றுத் தொடர்ச்சியோடு சிந்திக்கும்போதுதான் ஒவ்வொரு காலச் சமூகத் தின் வளர்ச்சிப் போக்கை நுட்பமாய் அறிய முடியும். இந்த அகம், புறம் என்னும் இயங்கியல் முறையைத் தொல்காப்பியரின் அகம், புறம் என்னும் கொள்கையோடு இயைபுறுத்திப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களைக் கொண்ட இலக்கண நூல். இதில் எழுத்தும், சொல்லும் மொழிக்கு இலக்கணமாக அமைகின்றன. மூன்றாவதான பொருளதிகாரம் இலக்கியத்திற்காக எழுந்த வாழ்வியல் இலக்கண நூல். இவரது காலம் சங்க காலம். சங்க காலம் என்பது ஐராவதம் மகாதேவன் கல்வெட்டாராய்ச்சியின் அடிப் படையில் கி.மு.300இல் தொடங்கி கி.பி.250 என்பர் அறிஞர். இதில் சங்க நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு தொகுக்கப்பட்ட பின் அவற்றின் அடிப்படையில் தொல்காப்பியப் பொருளதிகார இலக்கணம் வகுக்கப்பட்டது. பொருளதிகாரத்தில் அகத்திணையியலையும், புறத்திணையியலையும் இயங்கியல் முறையில் இக்கட்டுரை அணுகுகிறது. அகத்திணையியலை ஏழு திணைகளாகவும் புறத்திணையியலை ஏழு திணைகளாக வும் அடுத்தடுத்த இயலில் வகுத்து வைக்கிறார் தொல்காப்பியர்.

அக உணர்வு என்பது அன்பையும் நேசிப்பையும் விரும்புவது. அதற்கு அடிப்படையாக இருப்பது ஆண், பெண் காதல் உறவு. உடைமைக் குணத்தால் எழுகின்ற ஆதிக்க உணர்வும் ஆதிக்க உணர்வால் எழுகின்ற புறத்தில் நடக்கும் போர்ச் செயல்களாலும் மகிழ்ச்சிக்குரிய காதல் வாழ்வு துயரமிகு வாழ்வாக மாறிப்போவ தைத் தொல்காப்பியர் அகப்புற திணைகளை இயைபுபடுத்தி விளக்குகிறார். ***கலை; மனித உணர்வின் வடிவம். அக உலகிற்கு வெளியே உள்ள புற உலகை அது அகத்தினுள் பிரதிபலிக்கிறது. அறியப்படும் பொருளும், அதன் அகப் பிரதிபலிப்பும் உற்பத்தி நிலைகளுக்கும் சமூக வரலாற்றிற்கும் கட்டுப்பட்டவை. ஆனால் கலை இக்கட்டுப் பாடுகளையும் விதிகளையும் மீறுவதற்கு முயலுகிறது. இம்மீறுதலே குறிக்கோள் அல்லது கனவு என்று சொல்கிறோம்*** என்கிறார் நா. வானமாமலை.

குறிஞ்சி என்பது உணவு சேகரிக்கும் சமூகம். வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் மட்டுமே கொண்டது. அதற்குப் புறனாக உள்ள வெட்சித்திணை (கரந்தை) ஆநிரை கவர்தல், மீட்டல். ஒழுக்கலாறு: புணர்தலும் புணர்தல் நிமித்தமும். புறத்திணை வாயிலாக இம்மக்களின் வாழ்வியலை இனக்குழுக்களின் செயல்பாடாய்

அறியமுடியும். இந்த இனக்குழுச் செயல்பாட்டில் புணர்தல், புணர்தல் நிமித்தம் சாத்தியம்தான். மற்ற திணைகள்போல மண்ணுக்கோ, பொருளுக்கோ, வலிமைக்கோ மனமொத்த காதலர் பிரியவேண்டிய தேவையில்லை. அதனால் குறிஞ்சியின் அகப்பாடல்கள் சேர்ந்திருத்தல் (புணர்ந்திருத்தல்) எனும் களவுப் பாடல்கள் வரைந்து கொள்ள வேண்டும் என்ற கனவோடு அமைகின்றன. அதாவது கருநிலைக் குடும்பமாக இருந்த சமூகம் குடும்ப அமைப்பிற்குத் தயாராவதை அறிய முடிகிறது.

முல்லை என்பது உடைமைச் சமூக அரசமைப்பு உருவாகிய காலம். கொல்லை செய்கை (விவசாயத் தொடக்கம்), மாடு மேய்த்தல், விலங்குகளைப் பாதுகாத்தல் போன்றவற்றோடு மண்ணாசை நிமித்தமாகப் போர் தொடங்கல். இதன் ஒழுக்கம்; இருத்தல், இருத்தல் நிமித்தம். மனமொத்த காதலர் உடைமை நிமித்தமாக வந்த மண்ணாசைப் போரால் பிரிந்திருக்க வேண்டிய தவிர்க்க முடியா அகவாழ்வுத் துயரம் தொடங்குகிறது. நிலைபெற்றுவிட்ட குடும்ப அமைப்பு பிரிவில்லாத வாழ்விற்கு ஏங்கும் கனவுகளாய் முல்லை நிலப் பாக்கள் அமைகின்றன. ஆனால் பிரிவு தவிர்க்கமுடியாததாகிறது. அதனால் வந்துவிடுவார் என்று தலைவி ஆற்றியிருக்க வேண்டியுள்ளது. குறு அரசமைப்பிற்கேற்ப தொழில் அடிப்படைப் பிரிவுகளும் அதிகார அரசமைப்பால் கட்டமைக்கப்படுகிறது.

மருதமென்பது குடும்பம், சொத்து, அரசு ஆகியவை வலுவாய் நிலைபெற்றுவிட்டதையும், களவு வாழ்க்கை மறைந்து கற்பு வாழ்க்கை விரிவுபடுத்தப்படுவதையும் விளக்குகிறது. உடமையாளன், உடமையற்ற உற்பத்தி செய்பவன் என்னும் மாபெரும் பிரிவு உருவாகியது. இப்பிரிவால் உருவான உபரி செல்வத்தை வைத்து காப்பதற்கு மதில்களும் கோட்டைகளும் அதிகார அரசமைப்பால் ஏற்படுத்தியிருக்கிறது. உபரிச் செல்வத்திற்காக நடக்கும் போராக மருதத்தின் புறனான உழிஞை விளக்குகிறது. உடைமைச் சமூகத்தில் சொத்துடைய பெண் மனைவியாகிறாள் சொத்தற்றவள் பரத்தையாகிறாள். சொத்தைப் பாதுகாக்கக் கணவனுக்கு வாரிசைப் பெற்றுக் கொடுப்பவளாக மனைவி இல்லத்திற்குள் முடக்கப்படுகிற இல்லாள் ஆகிறாள். சொத்தற்ற பெண்ணாகிய பரத்தை ஆணுக்கு நுகர்ச்சிப் ஆக்கப்படுகிறாள். பரத்தை வீட்டில் தங்காது பொருளால் தன் வீட்டிற்கே தலைவன் வருவதால் ஊடல், ஊடல் நிமித்தம் மருதத்தில் தவிர்க்க முடியாத பண்பாடாய் அமைந்துவிடுகிறது.

நெய்தலென்பது இரு பெரும் அரசுகளின் மோதலையும் மோதலுக்குமான ஒரு பொதுஇடமாக அமைகிறது. இதை மூவேந்தர்கள் காலம் எனலாம். விவசாயம் கடந்து கலம் கொண்டு கடல் செல்லும் வளர்ச்சிப் போக்கைக் காட்டுகிறது. மேலும் மூவேந்தரின் முற்றிய போரால் மூவருமே சிதைந்தழிந்துபோனதையும் அக்கொடிய போரால் நெய்தலின் பண்பாடு இரங்கல், இரங்கல் நிமித்தமாக அமைகிறது. அதாவது உயிருடன் வருவானோ மாட்டானோ எனும் ஐயப்பாடு பண்பாடாய் அமைந்துவிடுகிறது.

பாலையென்பது தமது இயல்புகளை மிகுதிப்படுத்திக் கூறுவதாக அமைகிறது. அரசுருவாக்கத்தின் பெரும் மோதலால் சிதைவுற்ற சமூகம் வறுமையாலும் போரற்ற மாற்றுச் சமூகம் உருவாவதற்கான அறிவுத் தேடல் முயற்சியாலும் பிரிவொழுக்கம் இதிலமைகிறது. பண்பட்ட சமூகத்தின் எண்ண வளர்ச்சிக்கான தேடலே இத்திணை. ஆரிய, சமண, பௌத்த மதச் சார்புகள் தக்க நேரத்தில் தமிழகத்தில் உட்புகுந்ததையும் அதனால் தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் இத்திணை விளக்குகிறது. தொழில் அடிப்படைப் பிரிவுகள் சாதிய அமைப்பாக இறுக்கமாகியதையும் இத்திணைவழி உணரலாம். பெருந்திணைக்குப் புறமாகக் காஞ்சித்திணை அமைந்து நிலையாமை பற்றி விளக்கம் அளித்தும், கைக்கிளைக்குப் புறனாகப் பாடாண்திணை மன்னனின் தனி மனிதத் துதிபாடும் திணைகளாக அமைகின்றன. இவ்விரு திணைகளின் மூலம் தமிழ்ச் சமூகம் ஒரு புதிய பண்பாட்டுப் பாதையில் நடைபோடத் தொடங்குவதை உணரமுடிகிறது. மேற்கூறிய கருத்துகளை நிரூபிக்கும் வகையிலும் தமிழகத்தில் இனக்குழு தொடங்கி அரசுருவாக்கம் உருவான முறையையும் அதனால் சமூகத்தில் ஏற்பட்ட விளைவுகளையும், விளைவுகளுக்குப் பின்னால் நடைபெற்ற நிகழ்வுகளையும் தொல்காப்பியர்வழிநின்றும், உரையாசிரியர்கள்வழிநின்றும் தமிழ்ச் சான்றோர்கள்வழிநின்றும் பின்வருவன அமைகின்றன.

புறத்திணைகளுக்கும், அகத்திணைகளுக்கும் இயைபு கூறும்போது உரையாசிரியர் ஒவ்வொருவரும் வெவ்வேறு காரணங்கள் கூறுகிறார்கள். காதற்களவும், ஆநிரைக்களவும் நிகழும் ஒப்புமைபற்றி வெட்சி, குறிஞ்சிக்குப் புறனென்கிறார் இளம்பூரனார். கருதிய பொருளை இரவின்கண் முடித்து மீண்டு வருதல் காரணமாக வெட்சி குறிஞ்சிக்குப் புறனென்கிறார் இளம்பூரனார். கருதியப் பொருளை இரவின்கண் முடித்து மீண்டுவருதல் காரணமாக வெட்சி குறிஞ்சிக்குப் புறமாயிற்று என்கிறார் நச்சினார்க்கினியர். குறிஞ்சியும் வெட்சியும் முறையே களவில் நிகழ்வதால் வெட்சி குறிஞ்சிக்கும் புறம் என்கிறார் சோமசுந்தர பாரதியார். இவ்வாறு உரையாசிரியர்கள் வேறு வேறு காரணம் கூறுவதற்கிடமாக அகப்புறத்திணைகளின் இயைபுகள் அமைகின்றன. ஆனால் இத்தினைகளின் இயைபு பற்றித் தொல்காப்பியர் எந்த இடத்திலும் விளக்கிச் சொல்லவில்லை. ஆனால் அவருடைய புறத்திணையியலின் முதல் நூற்பாவில்

அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே என்றும்,
உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே என்ற நூற்பாவழி உரிப்பொருளை விளக்கும் வகையிலும், அகத்திணையோடு தொடர்புடைய களவியல், கற்பி

யல், பொருளியல் போன்ற இயல்களை அகத்திணைக் குப்பின் வைக்காமல் அகத்திணை, புறத்திணைக்குப் பின் வைக்கும் முறையிலும் தொல்காப்பியர் அகப் புற இயைபுப் பற்றிக் கொள்கைகளை உணர்ந்துகொள முடியும். புறத்திணையியலின் முதற்நூற்பாவான ***அகத் திணை மருங்கின்*** என வருகிறபோது மருங்கின் என்ற சொல் மயக்கம்கெட என்ற பொருளோடு விளங்கிக் கொள்ள முடியும் என்று தொல்காப்பியர் உணர்த்துகி றார். அதற்கு ஆதாரமாய் அமைவதைக் காணலாம்.

மேலும் நச்சினார்க்கினியர் தும்பைத் திணை நெய்தல் திணைக்குப் புறனாக அமைவது பற்றி விளக்கும்போது முதல், கரு, உரி மூன்றினாலும் தும்பையும், நெய்த லும் இயைபுறுவதைக் காட்டுகின்றார். ஆனால் முதல், கரு, உரிப்பொருள்களின் அடிப்படையில் புறத்திணை களைச் சிந்தித்தல் பயனில்லாத முயற்சியென்கிறார் ப. அருணாசலம். ஆனால் நிலத்தின் இயல்பும், கருப் பொருள் வளத்தால் அமையும் பொருளாதார நிலையும் இவற்றின் அடிப்படையில் அமையும் வாழ்க்கைப் போக்குகளும், மன உணர்வுகளும் போருக்குரிய கார ணங்களாக அமைகின்றன என எண்ணும்போது அகப் புறத்திணைகளின் இயைபை உணர முடியும்.

தொல்காப்பியரின் வெட்சித்திணை

வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்

இந்நூற்பா வேற்று நாட்டினர் மீது படையெடுப்பதற்கு முன் வேந்தனால் விடப்பட்ட முனை ஊரகத்துள்ளார். அப்பகை நாட்டிற்குச் சென்று அந்நாட்டுப் பசுக்கூட் டங்களைப் பகைவர்கள் அறியாதபடி தம் ஊருக்கு ஓட்டிக்கொண்டு வந்து பாதுகாத்தலைக் கூறுகின்றது. ஆநிரைகளைக் கவர்வதும் மீட்பதுமாகிய இரு செயல் களையும்இரு பிரிவுகளாகப் பகுத்து வெட்சித் திணை யென வகுக்கிறார் தொல்காப்பியர். ஆநிரை கவர்தல் வெட்சியென்றும் மீட்டலைக் கரந்தையென்றும் பிரித் துக் காட்டுகிறார். இதில் அரசுகள் தோன்றுதற்கு முன் மக்கள் ஓர் ஊரில் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் மற்ற இனக்குழுவோடு அவர்கள் கொண்ட மாறுபாட்டையும் பூசலையும் விளக்குவதாகப் படையியங்கு அரவம் முதலான வெட்சித்திணையின் முதல் 14 துறைகள் அமைகின்றன. இந்த 14 துறைகளும் பெரும்போர்ச் செயல்களைக் கூறுவதாக அமையவில்லை.

'பூசல்மாற்று', 'ஊர்க்கொலை' எனும் துறைகள் இனக் குழுச் சண்டைகளை உறுதிப்படுத்துவதாக அமைகின் றன. மேலும் வெட்சித்துறைப் பகுதியில் தெய்வம் எத னையும் தொல்காப்பியர் சுட்டவில்லை என்பதையும் காணலாம். ஆனால் வெட்சித்துறைப் பிரிவு கூறி,

மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே என்னும் நூற்பாவின் மூலம் குடிநிலையில் உள்ள வீர மறவர் களின் சிறப்பும் கொற்றவையை வணங்குதலும் கூறப் படுகின்றன. தொல்காப்பியர் பாலை நிலத்திற்குரிய தெய்வமாகக் கொற்றவையை எங்கும் குறிக்கவில்லை. பழைய இனக்குழு மக்களின் தாய்த் தெய்வ வழிபாட் டின் அடையாளமாகவே குடிநிலை சிறந்த கொற்றவை எனத் தொல்காப்பியர் குறிக்கிறார். கருப்பொருளாகிய நிலத்தெய்வங்கள் தோன்றுவதற்கு முன் இனக்குழு மக்கள் இத்தாய்த் தெய்வத்தையே வழிபட்டனர் என் பதை இந்நூற்பாவின் மூலம் அறிய முடியும்.

புறநானூற்றில் வெட்சித்திணைப் பாடல்கள் நான்கிலும் பெரும்போர்ச் செய்திகளோ, வேந்தர் பற்றிய குறிப்போ, படைகளின் பெருக்கமோ பேசப்படவில்லையென்றும் அவற்றுக்கு மாறாகப் பெயர் அறியப்படாத வீரர்களைச் ***செவியிறந்து தாழ்தரும் கவுளன், புல்லணர்காளை, வில் லோன்*** என்ற பொதுப்பெயர்கள் குறிப்பதை நிறுவுகி றார் கு.வெ.பாலசுப்பிரமணியன்.

மாடுகளைப் பிடித்து வந்தபின் உண்டாட்டில் ஈடுபடு வது உண்டாட்டுத் துறையிலும், பிடித்து வந்ததைப் பிடித்துவந்தவர்க்குப் பிரித்துக் கொடுத்தலைப் பாதீடு துறையிலும் விளக்குதன் மூலம் குறிஞ்சிவெட்சி சமூ கம் கருநிலையில் இருக்கக் கூடிய இனக்குழுச் சமூ கம் என்றும் உண்மையில் இது உணவு சேகரிக்கும் சமூகம் என்றும் கா. சிவதம்பியின் பதிவும் வெட்சி - குறிஞ்சி குறித்த செய்திகள் பண்டைய இனக்குழு மக்களைக் குறித்தவை எனத் தெளியலாம். மேலும் பண்டைய இனக்குழு மக்களின் செல்வமாகிய ஆநிரை களைக் கவரும் முயற்சியே பிற்காலப் பெரும் போர் களுக்குத் தொடக்கமாக அமைந்தது என்பதை அறிய முடியும். அடுத்து, காந்தள் முதல் வாழ்த்தல் ஈறாக அமையும் 21 துறைகள் ஆநிரை மீட்பை மட்டும் கூறு வன அல்ல. நிரை மீட்கும் கரந்தைச் செயல்களைக் கூறும் புறநானூற்றுப் பாடல்களில் வேந்தரைப் பற்றிய குறிப்பும் படைகுறித்த செய்தியும் காணப்படுகின்றன.

வெட்சி, கரந்தைப் போர்களில் இறந்துபட்ட வீரர்களுக் குக் கல்நடுதலும், வாழ்த்துதலும் பற்றித் தொல்காப்பி யர் கூறுகிறார். வெட்சி கரந்தை பற்றிக் கூறுமிடத்தில் மட்டுமே தொல்காப்பியர் நடுகல் செய்திகளைக் கூறு வதைக்கொண்டுதொடக்க காலத்தில் ஆநிரைப் போர் களில் ஈடுபட்டோர்களுக்கே நடுகல் நடப்படும் வழக் கம் இருந்ததென்று க.ப. அறவாணன் நிறுவுகிறார். இவ்வாறு கல்லமைத்து வழிபடும் வழக்கம் பண்டைய தமிழரின் இறப்புச் செயல் பற்றிய நம்பிக்கையுடன் தொடர்புடையதென்றும் இவ்வாறு இறந்தோரைப் புதைத்த பெருங்கல் வடிவுப் புதைகுழிகளிலிருந்தே கோயிற் கட்டடக்கலை வளர்ந்திருக்கலாம் என்றும் க.கைலாசபதி அனுமானிக்கிறார். இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு ஒரு குறிப்பிட்ட மறக் குடியினரின் செயலால் அல்லது இனக்குழுவினரின் செயலால் ஒரு இலட்சிய அரசுருவாக்க நிலை ஏற்பட் டதை வெட்சி, கரந்தைத்துறைகளைக் கொண்டு தொல் காப்பியர் விளக்குகிறார்.

அடுத்து வஞ்சித்திணை முல்லைக்குப் புறனாகிறது.

வஞ்சிதானே முல்லையது புறனே

எஞ்சா மண்ணாசை வேந்தனை வேந்தன்
அஞ்சு தகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே

இந்நூற்பாவிற்கு உரைகள்பலவாறு வேறுபடினும் அவற்றையெல்லாம் விளக்கி ***மண்ணைக் கவர வேண்டும் என்ற எண்ணமுடையவன்மீது வஞ்சி வேந்தன் படையெடுத்துமேற்சென்றான் என்று உரைகொள்வது பொருத்தமாகும்*** என்ற கு.வெ. பாலசுப்பிரமணியனின் உரை விளக்கத்தைமுடிந்த முடிவாக எடுத்துக்கொள்ளலாம்.

இதில், இயங்கு படை அரவம் முதல் பொருளின்றுய்த்த பேராண் துறை வரை மண்ணாசை உடைய வேந்தனுக்கும் ஒருவன் தாங்கிய பெருமை முதல் தழிஞ்சி வரை உள்ள ஆறு துறைகளை மண்ணை விட்டுக்கொடாது காக்கிற வேந்தனுக்கும் உரிமையாக்கலாம். இத்துறைகளுக்குள்ளே வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும் எனும் துறைகள் வருகின்றன. இதனடிப்படையில் இனக்குழு அமைப்பு முடிவுற்று மண்ணை விரிவுபடுத்தும் அரசுருவாக்க அமைப்பு வஞ்சிக்குப் புறனாகிய முல்லை நிலத்திலே தொடங்குகிறது எனலாம். முல்லைநிலக் கவிதைகளைக் கவனிக்கும்போது விலங்குகள் கொல்லப்படாமல் வளர்க்கப் படலைக் காண முடிகிறது.

மாடு என்னும் சொல்லுக்குத் தமிழில் சொத்து என்றும் பொருள் உண்டு. ஆநிரை கவர்தலில் தொடங்கி அதைச் சொத்தாகப் பாவிக்கும் முறை முல்லையில் நிலவியதை நாம் உணரலாம். இவ்வாறேஏ உலகின் தொன்மையான நகரங்களில் மாடு என்பது செல்வமாகக் கொள்ளப்பட்டதைக் கிரேக்க நாணயத்தில் மாட்டின் உருவம் பொறிக்கப்பட்டதைக் கொண்டு மயிலை சீனி. வேங்கடசாமி விளக்குவார். சொத்தாக ஆகிவிட்ட ஆநிரைகளைக் காத்தல், வளர்த்தல், பராமரித்தல் என்பன முல்லைநிலத்தில் முக்கிய பொருளாதார அம்சமாக மாறிவிட்டதை முல்லைப் பாடல்கள்வழி அறியலாம். மாடுகளைப் பிடிப்பதும் வளர்ப்பதும் ஆண்களின் கடமை. மாடுகளைப் பிடிப்பதுதான் இன்று ஜல்லிக்கட்டு என்று அழைக்கப்படும் ஏறுதழுவுதல் ஒரு வீர விளையாட்டாக மாறிப்போனதை நாம் காண்கிறோம். அன்றியும், கொல்லை செய்கை (விவசாயத்தின் தொடக்க நிலை), அதனுடன் மாடு, மனை என்ற சொற்களும் முல்லையில் பேசப்படுவதைக் கொண்டு கூர்ந்து நோக்கினால் சொத்துடைமை சார்ந்த குடும்ப அமைப்பு முல்லையில் தொடங்குவதையும் கணவன் சொத்துஅவன் வாரிசுகளுக்குச் செல்வதற்கு மனைவியின் கற்பு முக்கியத்துவம் பெறுவதையும் அறியலாம். மண்ணை விரிவுபடுத்தும் நோக்கத்தாலும் மண்ணை விரிவுபடுத்த வருபவனிடமிருந்து தற்காத்துக்கொள்ளும் நிகழ்வாலும் முல்லையில் தலைவனும் தலைவியும் பிரிந்து எதிர்பார்த்து ஆற்றியிருக்கும் இருத்தல், இருத்தல் நிமித்தம் ஒழுக்கம் தவிர்க்கப்படமுடியாத பண்பாடாக அமைகிறது.

அடுத்த உழிஞைத் திணை மருதத்திற்குப் புறனாக அமைகிறது.

உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுதல் அரணம் முற்றலும்
அனை நெறி மரபிற்று ஆகும் என்ப

இதில் எயில் அழித்தலும் எயில் காத்தலும் என்னும் வேறுபாடு குறித்து உழிஞையெனவும், நொச்சியெனவும் இரண்டு குறிபெறும் என்கிறார் இளம்பூரணர். ***சென்ற வேந்தன் வளைத்தலும் இருந்த வேந்தன் காத்தலுமாகிய இருதிறத்தார் வினையென்பார்*** நச்சினார்க்கினியர். இத்திணைக்குரிய நூற்பாக்கள் இரண்டாக உள்ளன. ***கொள்ளார் தோங் குறித்த கொற்ற*** முதலாக, ***வருபகை பேணார் ஆரையில் உள்பட நாளரு வகைத்தே*** என்று முதற்நூற்பா அமைகிறது. இதில் தன்னை அரசனென ஏற்றுக்கொள்ளாதாரும், தன் ஆணைவழி நில்லாத வருமாகிய பகைவரது நாட்டைக் குறித்த வெற்றி எனும் துறைவழி முல்லையில் தொடங்கிய மண்ணாசைப் போர் மருதத்தில் தன்னைப் பேரரசர் என்று பிரகடனப்படுத்தும் போராக உருமாறுகிறது.

மேலும் இந்நூற்பாவினூடே வெட்சி, வஞ்சியில் சொல்லப்படாத பகைவர்கள் எறியும் அம்பு முதலியவற்றைத் தடுக்கும் கிடுகு, கேடயம் போன்ற போர்க் கருவிகள் மிகுதியாக வருவதைக் கொண்டு மருதத்தின் போர் முறை ஒரு வளர்ந்த போர்முறையெனலாம். அதுமட்டுமல்லாது, அடுத்த நூற்பா ***குடை, வாள், நாட்கோளில் தொடங்கி***, கைநிலைவரை 12 துறைகளாக அமைகிறது. இதில் வெட்சியிலும் வஞ்சியிலும் இல்லாத ***குடைநாட்கோள், வாள்நாட்கோள்***ஆகிய இரு துறைகள் இடம் பெறுகின்றன. இவ்வேந்தர்களும் போருக்குப் புறப்படவும், போர் புரிதற்குரிய நாளும் பொழுதும் தேர்ந்தெடுத்துக்கொள்ளவும் வாய்ப்புளதை முன்னர்க் கூறிய துறைமூலம் அறியமுடியும். வெட்சி இனக்குழு மக்களின் விரிச்சி எனும் நம்பிக்கையில் வளர்ந்து மருத-உழிஞையில் ஆரிய சோதிட நம்பிக்கையோடு கலந்து நாள், கோள் எனும் நம்பிக்கையின் அடிப்படையில் சகுனம் பார்ப்பது வளர்ந்துவந்த நிலையினைக் காணலாம். மேலும் வெட்சி, வஞ்சியில் இல்லாத மதிலை அழித்தல், மதிலைக் காத்தல் எனும் துறைகள் நிலைபெற்றுவிட்ட சொத்துடைமைச் சமூக அரசமைப்பு உருவாகிவிட்டதையும் காணலாம்.

மாடு வளர்த்தல், கொல்லை செய்தல் என்ற முல்லை நிலப் பண்பாட்டைத் தொடர்ந்து உழிஞைக்குப் புறனாக வருகிற மருதப் பண்பாடு வயலும், வயலைச் சார்ந்த வாழ்க்கையைக் குறிக்கிறது. ஆற்றுநீரை வழிமறித்து விவசாயம் செய்கிற விஞ்ஞானம் வளர்ந்துவிட்டதை இது குறிக்கிறது. நிலம் வயலாவதற்கும், வயலில் பிறர் பயிரிடுவதற்கும், அந்தப் பயிரை அறுவடை செய்வதற்கும் மருத நிலத்தில் சொத்துடைமைத் தொழில் அமைப்பு பலப்படுத்தப்பட்டிருக்கும். பெரும்பாலும் சிலர் நிலத்தின் சொந்தக்காரர்களாகவும், பலர் அந்நிலங்களிலே உழைக்கின்ற உழைப்பாளிகளாகவும் இருப்பர்.

நிலத்தின் சொந்தக்காரர்களிடம் எப்பொழுதும் செல்வம் உபரியாக இருக்கும். அதாவது வயலிலிருந்து கிடைக் கும் அறுவடை நெல் தேவைகளுக்கு அதிகப்படியாக அமையும்போது அந்த நெல் செல்வமாக மாறும். இதைத்தாள் உழிஞைத்திணையில் ***மதிற்குள் இருக்கும் செல்வம்*** என்னும் துறை விளங்கவைக்கிறது.

இச்செல்வத்தால் பெறவல்ல இன்பங்களையும் கேளிக் கைகளையும் நிலச்சொந்தக்காரர்களே அனுபவிக்கும் வாய்ப்பு அமையும். அச்சூழலில்தான் மனைவியை அடுத்துப் பரத்தை என்கிற காமக்கிழத்தியை வைத் திருத்தல் வழக்கமாகிறது. இதனடிப்படையிலே மருதத் தில் ஊடலும் ஊடல் நிமித்தமும் பண்பாடாய் அமை கிறது. மேலும் நிலவுடைமைச் சமூக அமைப்பு எவ் வளவு பலமானதாக அமைகிறதோ அந்த அளவிற்கு குடும்ப அமைப்பும் பலமாக அமைகிறது. ஏனெனில் பெண்ணும் சொத்துடன் குடும்ப அமைப்பிற்குள் வரு கிறாள்.

மனை என்பது அவளாலேயே தோற்றுவிக்கப்படுகிறது. அதனால்தான் அவள் மனைவியாகிறாள். சொத்துக்கு வாரிசை அவள் பெற்றுத் தருவதால் அவள் கண வனை மீறமுடியாத நிலைக்கும் கற்பு நெறி தவறாத நிலைக்கும் தன்னாலேயே தள்ளப்படுகிறாள். அதே போல் சொத்தற்ற பரத்தையிடம் செல்லும் தலைவன் அங்கேயே தங்கிவிடுவதில்லை. மறுபடியும் மனைவி யிடம் திரும்பி வருவதற்குச் சொத்துடைமையின் தொடர்ச்சிதான் காரணம். மேலும் இந்த மருதப் பண் பாட்டில்தான் காந்தர்வ மணமாகிய காதல் மணம் நிலை மாறி ஒப்பந்த மணமுறை உருவாகிறது.

பொருளதிகாரத்தின் கற்பியல் எனும் இயல் விரிந்து விளங்குதற்கு முக்கிய காரணம் இந்த மருதப் பண் பாடுதான் எனலாம். போரால் விதவையாக்கப்பட்ட, வேறு பொருளாதாரக் காரணங்களால் தனித்து விடப் பட்ட பெண்கள் சொத்துடைமைச் சமூகத்தில் தாமும் ஒரு நுகர்பொருளாய் ஆக்கப்படுவதையும் அது பின்பு பரத்தை எனும் புதுச் சமூகம் உருவாகக் காரணமாக அமைவதையும் மருதத்தின்வழிப் புரிந்துகொள்ளலாம். இது ஒவ்வொரு கட்டமாக வளர்ந்து இன்று பாலியல் தொழிலாளர் சமூக அமைப்பாக மாறியதைக் கண் கூடாய்க் காண்கிறோம்.

ஊடலும் ஊடல் நிமித்தமும் என்னும் மருதப் பண் பாட்டின் மூலம் குறிப்பிட்ட நிலத்தின் வாழ்க்கைப் பண்பாட்டுவட்டத்தினுள் குறிப்பிட்ட ஒழுக்கம் சமூகப் பொருளாதார முக்கியத்துவம் கொண்டதாக அமைகி றது. இதையே, மேலைநாட்டுத் திறனாய்வு அறிஞர் கிறிஸ்டோபர் கார்டுவெல்,

கவிதை என்பது பொருளாதாரத்தின் விளைபொருள் என்னும் விளக்கம் கொடுக்கிறார். இந்த மேற்கோள் எல்லாத் திணைகளுக்கும் பொருந்தும். அடுத்து, தும் பைத்திணை நெய்தல் எனும் அகத்திணைக்குப் புற னாக அமைகிறது.

தும்பைத் தானே நெய்தலது புறனே
மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்று தலை யழிக்கும் சிறப்பிற்று என்ப

தன் வலிமையை ஆதாரமாகக் கொண்டு, வந்த அர சனை எதிர்த்து அவன் வலிமையை அழித்த சிறப் பினை இது கூறும். காண்போர்க்கு அச்சம் தருகிற இப்போர்த் திணையின் செயலைத் தனிநூற்பாவில் தொல்காப்பியர் குறிக்கிறார்.

கணையும் வேலும் துணையற மொய்த்தலிற்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலத் தீண்டா அருநிலை வகையோடு
இருபாற்பட்ட ஒரு சிறப்பின்றே வகையோடு

அருநிலைவகை என்பதற்குத் துண்டிக்கப்பட்ட அட்டை ஆடுதல்போலும் நிலையென உரை செய்கிறார் இளம் பூரணர். இத்தும்பைப் போரே போரின் மிகக் கடுமை யான உச்சநிலை எனலாம். மேலும் பேரரசு உருவாக் கத்திற்கான மூவேந்தர்களின் இறுதிக்கட்டப் போரென் றும் வரையறுக்கலாம். களரும் மணலும் நிறைந்த பகுதி யில் வலிமை கொண்டுவரும் மன்னனைச் சென்று அழித்தலைக் கூறும் இத்திணை தானைநிலை முதல் 12 துறைகளை உடையது. இதில் தானை, யானை, குதிரைஎன்றநோனார் உட்கும் மூவகை நிலை என்ற துறை வெட்சி, வஞ்சி, உழிஞைத் திணைகளில் காணப் படாத காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை போன்ற வலிமையான படை அமைப்பு இத்திணை யில் காணப்படுகின்றன. மேலும் தனிமனிதனின் வீர ஆற்றலுக்குரிய துறைகளும் இதில் அமைக்கப்படுகின் றன. மேலும் ***இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும் ஒரு வரும் ஒழியாத் தொகைநிலை*** என்னும் துறை இரு பெரும் வேந்தர்களும் வீரர்களும் ஒருவருக்கொரு வர் மோதி இறந்தபின் களத்தில் போரிடுவதற்கு ஆளின்றி வெறிச்சோடிக் கிடக்கும் நிலையைக் கூறு வதின்மூலம் மூவேந்தர்களின் அரசுகள் எவ்வாறு சிதைவுற்றுப்போனது என்பதை ஊகிக்கலாம்.

சேரமன்னன் நெடுஞ்சேரலாதனுக்கும் சோழன் பெரு விறற்கிள்ளிக்கும் நடந்த போரில் இருவரும் களத்தில் மாய்ந்ததைப் புறநானூற்றின் 62, 63ஆம் பாடல்வழி அறியலாம். தும்பைக்குப் புறனான நெய்தலின் உரிப் பொருள் ஒழுக்கம் கவனிக்கத்தக்கது. இரங்கலும் இரங் கல் நிமித்தமும் என வருகிறபோது மீன்பிடிக்கக் கடலுக் குச் சென்ற தலைவன் வருவானோ, மாட்டானோ என்று கேள்விக்குறியோடு இருப்பதாக நாம் பொருள் கொள் கிறோம். அதேவேளை முல்லை ஒழுக்கத்தில் இருத் தல், இருத்தல் நிமித்தம் என்கிறபோது கண்டிப்பாக வருவான். அதுவரை ஆற்றியிருத்தல் எனும் பொரு ளில் அது வருகிறது. ஆனால் நெய்தலில் வருவானோ, மாட்டானோ என்ற ஐயப்பாடு கடலுக்குச் சென்று மீன்பிடித்தல் செயலை மட்டும் பொருள் கொள்ளா மல் இந்தத் தும்பைத்திணை போரையும் மனத்திற் கொண்டு அதில் வரும் இருபெரும் வேந்தர் ஒருவ ரும் ஒழியாத் தொகை நிலைத் துறையின் மூலம்

நெய்தலின் ஒழுக்கமாகிய இரங்கலும் இரங்கல் நிமித் தமும் என்பதின் ஆழ்ந்த பொருளை நாம் விளங் கிக்கொள்ள முடியும்.

அடுத்து வாகைத் திணை பாலைத் திணைக்குப் புற னாக அமைகிறது.

வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப

இது தத்தமக்குள்ள இயல்பை மிகுதிபடுத்திக் கூறுதல் இதற்கு இலக்கணமாகிறது. புறத்திணையியலில் இது வரை போர்குறித்த செய்திகள் அமைந்தன. ஆனால் இத்திணையில் அறத்துறையென்ற புதுத்துறை பேசப் படுகிறது. இனக்குழு மோதலில் தொடங்கி மூவேந் தர் மோதல்வரை இடையறாது நடந்த போர் நிகழ்வு களையும் அது வளர்ச்சியுற்ற புறத்திணைகளாக வகுத்து இப்போர் நிகழ்வுகளால் அச்சமூக மக்களின் அக வாழ் வில் ஏற்பட்ட துயரமிக்க மாற்றங்களையும் தொல்காப் பியர் அகத்தையும் புறத்தையும் இயைபுப்படுத்தித் தொகுத்தளித்துள்ளார். ஆனால் இவ்வாகைத் திணை யில் அறியும் போர்களும், வெற்றிகளும், பொறிபுலன் களை அடக்கி மேம்படுதலும், துறவுக் கோட்பாடும் பண்பட்ட சமூகத்தின் எண்ண வளர்ச்சிகளாக இத் திணை காட்டுகிறது. பெரும் போர்க்கருவிகள் கொண்டு மோதிக்கொண்ட வீரயுகக் காலம் சமயக் கருத்துகளின் தாக்குதலால் அறிவுநிலைகளைப் பயன்படுத்திப் பிழை யின்றிவாழ முயன்ற முயற்சிகளை மேற்கொள்ள இப் பாலைத் திணையில் தொடங்கிற்று. ஆரிய, சமண, பௌத்த சமயச் சார்புகளும் கொள்கைகளும் தொல் காப்பியர் காலத்திலேயே பரவி அவர் நூலிலும் ஊடுருவி நிற்பதை இத்திணை மூலம் அறியலாம்.

தமிழகத்தின் வீரயுகக் காலத்தை அதன் முரட்டுத்தன் மையிலிருந்து இளக வைத்து மென்மைப்படுத்தியது இச்சமய சிந்தனைகள்தாம் என்பதில் எவ்வித ஐயமு மில்லை. அதேவேளை ***அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்***முதல்***அனைநிலை***வரை உள்ள துறைகள் மூலம் வைதீக சமயத்தின் நால்வருண சாதீயத் திணிப்புத் தாக் கத்தைத் தெளிவாக அறியலாம். தொல்காப்பியர் வரு ணப் பாகுபாடுகளைக் கூறும் கருத்துடையவர் அல்லர். இவ்வருணப் பாகுபாடு புகுந்துவிட்ட ஒரு சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டியதே அவர் வேலையாயிருந்தது என்பது கற்றுணர்ந்தோர் அறிவர். முல்லைத் திணை யில் தொடங்கிய தொழில் அடிப்படைப் பிரிவுகளும் குறிஞ்சிமுதல் நெய்தல்வரை உள்ள குடிநிலைப் பிரிவு களும் அதிகாரம் குவிந்த அரசமைப்பிற்குள் இருந் தாலும் வைதீக சமயத்தோடு வந்த ஆரியக் கலப்பு நிகழ்ந்தபோதுதான்இறுக்கமான சாதீய அமைப்பு உரு வானது என்பதைத் தொல்காப்பியர்வழித் தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். எவ்வாறு வெட்சி யில் தொடங்கிய *விரிச்சி* நம்பிக்கை பின்னர் ஆரியக் கலப்பின்போது அவற்றோடு *நாள், கோள்*, சோதிட நம்பிக்கை இரண்டறக் கலந்ததோ அதுபோலவே சாதிப் பிரிவும் கலந்தது எனலாம். இவ்வாகைத் திணையின் பின்பகுதியில் கூறப்படும் மறத்துறைகள் ஒன்பதும் வெற்றி வீறு கொண்ட மன்னனின் ஒழுக்கலாறுகளை கூறுகிறது. முன்பகுதியிலுள்ள நூற்பா அரசர் முதற் கொண்டு அனைவரும் பேணத்தகும் வாழ்வியல் நெறி களை வகுத்துக் கூறுகிறது. அறநெறி பொருந்திய இல் லறம் புரிந்து, ஐம்புலன்களை அடக்கிச் சினம் நீக்கி, பொறையுடைமையோடு கூடிய வாழ்வின் உண்மை யுணர்ந்து அன்பு பூண்டு பற்று நீங்கியிருத்தல் வாகை என்று காட்டப்படுகிறது. இத்தும்பைக்குப் புறனான பாலையின் உரிப்பொருள் பிரிதலும் பிரிதல் நிமித்த மும் எனும் ஒழுக்கம். போரினால் சிதைவுற்றும் சீரழிந் தும் கிடந்த சமூகம் அறிவைத் தேடும் முயற்சியிலும் பொருள் தேடும் முயற்சியிலும் பிரிகின்ற பிரிவாக அமைகிறது. அவ்வாறு பிரிவது தத்தம் நாட்டு வளர்ச் சிக்கும், மறுகட்டமைப்பிற்குமான ஒரு தேடலாகவும், குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்து என்று கூறுவதால் வறட்சியின் காரணமாகவும் போரின் காரணமாகவும் ஏற்பட்ட வறுமையின் காரணமாகப் பிரியும் பிரிவாக பாலைப் பிரிவு அமைகிறது. குறிஞ் சித் திணையைத் தவிர மற்ற திணைகள் பிரிவையே உணர்த்தினாலும் பாலையின் பிரிவுக்கு ஒரு தனித் தன்மை உண்டு என்பது புலனாகும்.

அடுத்து,காஞ்சித் திணை பெருந்திணைக்குப் புறனாக அமைகிறது.

காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறியானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே

இது எந்நெறியிலும் நில்லாத உலகிற்குப் பொருந்து கின்ற நெறியைக் கூறுவது என்னும் இலக்கணத்தை யுடையதென்பர் அறிஞர். வெட்சி சிறுபோர்த் திணை யாகவும்,வஞ்சியும், உழிஞையும், தும்பையும் வளர்ச்சி யுறும்பெரும்போர்த் திணைகளாகவும், வாகை வெற்றி மேம்பாடுகளைப் பேசும் திணைகளாக அமையக் காஞ்சித்திணை இறப்புத் (இழவு) திணையாக அமை கிறது. இத்திணைக்குரிய 20 துறைகளில் வஞ்சினக் காஞ்சி, மகட்பாற் காஞ்சி ஆகிய இருதுறைகளைத் தவிர ஏனைய 18 துறைகளும் இறப்புக்குறித்தனவே. போரில் நிகழ்ந்த இறப்பையும், அடுத்த 10 துறை களில் உலகியல் இறப்பையும் தொல்காப்பியர் சுட்டு கிறார்.

புறநானூற்றில் 200 பாடல்களுக்குப் பிறகு வரும் பாடல்கள் பெரும்பாலும் கையறுநிலை சார்ந்தவை. அனைத்து வித வேட்கையாலும் இவ்வுலகு சீரழிந்து கிடக்கிறது என்பதை உணர்த்தி இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை ஆகிய பல்வகை நிலையாமைகளைப் பாடுவதே இத்திணை யின்நோக்கமாக அமைகிறது. பெருந்திணைக்கு உரிப் பொருள் ஒழுக்கம் இல்லை. ஏனெனில் நில அடிப் படையில் பண்பட்டு வளர்ந்துவந்த தமிழ்ச் சமூக வளர்ச்சிஎல்லா நிலங்களும் கலந்த ஒரு பொது வாழ்

வியல் சூழலுக்கும் ஒரு புதுப்பண்பாட்டுக் கலப்பிற்கும் தயாராகிவிட்ட படியால் அங்கு உரிப்பொருள் ஒழுக்கம் கூற அவசியமின்றிப் போகிறது. இதனைத் தெளிவாய் உணர்ந்த வள்ளுவர் நிலத்தின் அடிப்படையில் வாழ்வியலை வரையறுக்காமல் அறம், பொருள், இன்பம் என்று வகுத்தும், இன்பத்தில் களவியல், கற்பியல் என்னும் தமிழ் மரபின் தனித்துவத்தைப் பொதுச்சிந்தனையோடு புகுத்தி மாபெரும் ஒரு புதுப் பண்பாட்டுச் சூழலுக்குத் தமிழ் மக்களைத் தயார்ப் படுத்துகிறார். அது இந்தியப் பாரம்பரியத்தோடு சேரும் புது அத்தியாயம் ஆகும். இதற்கு வழிகாட்டி உதவியவர் தொல்காப்பியர் ஆவார்.

அடுத்து, பாடாண்திணை கைக்கிளைக்குப் புறனாகிறது.

பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங்காலை நாளிரண் டுடைத்தே

இத்திணை எண்வகை உடையது. விருப்பத்திற்குரிய தலைவரையும் தெய்வத்தையும் பல்வேறு வகை இலக்கிய உத்திகளால் புணைந்து போற்றுவதற்கு இத்திணை வாய்ப்பளிப்பதை உணரலாம். இந்நூற்பாவிற்குரிய முதல் பத்து துறைகள் ***கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்*** முதலாகக் கைக்கிளை வரை புகழ்ச்சியின் அடிப்படையிலும் பின்னர் வரும் பகுதியில் ***துயிலெலுபெடை*** முதலாகப் பத்துத் துறைகளைக் கூறுகிறார். இவற்றைத் தொல்காப்பியர் ***ஞாலத்து வரூஉம் நடக்கை*** என்கிறார். இதனால் தன்காலத்து நடப்பியல் நெறிகளையும் மரபுகளையும் துறையாக்கியுள்ளார் என்பதை உணரமுடிகிறது.

வெட்சி முதலான பல திணைகள் போர்ச் செயல்களைக் கூற, பாடாண் வேந்தனின் பெருமையையும் செல்வ வளத்தையும் அதிகம் பேசுகின்றன. வேந்தனை உறங்கச்செய்வதும் துயில் எழும்புவதும்கூடத் துறைப் பொருளாக அமைகின்றன. இதுவரையிலும் மக்களுக்கும் வேந்தனுக்கும் உள்ள நெருங்கிய உறவை முன்னைய திணைகள் மறைமுகமாக உணர்த்திவந்தன. இத்திணை மன்னனும் மக்களும் அந்நியப்பட்டுப்போவதை உணர்த்துவதாக அமைகிறது. ஏனெனில் பிற திணைகளில் வீர மறவர்களின் போர்ச்செயல்களைக் கூறியதுபோல இதில் கூறவில்லை. வேந்தனைத் துதி பாடுவதாகவே இத்துறை அமைகிறது. இதுவரையிலும் அகத் திணையிலுள்ள ஏழு திணைகளுக்கும் புறத்திணையிலுள்ள ஏழு திணைகளுக்கும் உள்ள இயைபு பற்றி விளக்கினோம்.

குடும்பம், அரசு, சொத்து உருவான முறையையும் அதனடிப்படையில் அன்றைய சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் இயங்கியல் முறையில் உணர்ந்தோம். குடிநிலைமுதல் தொடங்கி மூவேந்தர்வரை அரசுருவாக்கத்தைத் தமிழண்ணல் குறிப்பிடுவது இக்கட்டுரைக்கு அணி சேர்க்கிறது. அதைப்போலவே இறை, கோ, மன்னன், அரசன், வேந்தன் என்ற சொற்கள் குழுத் தலைவர் தொடங்கி வேந்தன் வரை அரசுருவாக்கப் போக்கை அவர்களுக்கு வழங்கிவந்த பெயர்களில் ஏற்பட்ட குடிநிலை வளர்ச்சி பற்றிய கா. சிவத்தம்பியின் கருத்து இக்கட்டுரைக்கு மேலும் வலுச் சேர்க்கிறது. புறநானூற்றில் 100 அல்லது 150 பாடல்கள் அரசுருவாக்க நிலையினை எடுத்துக்கூறுவதாக அமைவதாகத் தமிழறிஞர்கள் சுட்டுவது எண்ணத்தக்கது. உலகின் மிகத் தொன்மை நாகரிகம் கொண்ட இனங்களிலும் இதுபோன்றே இனக் குழு தொடங்கி அரசுருவாக்கம் நடந்துவந்ததை வரலாற்றின்வழி அறிகிறோம். அவ்வாறு வந்தவற்றில் தமிழக அரசுருவாக்கத்தில் ஏதாவது தனித்துவம் உடையதாக உள்ளதா என ஆராய வேண்டியிருக்கிறது. அப்படி நோக்கும் போது சங்க இலக்கியங்களின் வாயிலாகவும், தொல்காப்பியத்தின் வாயிலாகவும் சமயச் சார்பற்ற மரபு நம் தமிழ் மரபு என்பதைச் சொல்லலாம். இன்றுள்ள இயங்கியல் கோட்பாட்டைக் கொண்டு தொல்காப்பியத்தை ஆய்வு செய்யும் அளவிற்கு அறிவியல் பூர்வ சிந்தனை இருந்ததைக் கண்டு தெளியலாம். சங்க இலக்கியங்கள் தொகுக்கப்பட்ட பின்புதான் அதன் அடிப்படையில் தொல்காப்பிய இலக்கணம் தொகுக்கப்படுகிறது. சங்க இலக்கியங்கள் தொகுக்கப்படக் காரணம் என்ன? அவ்வாறு தொகுத்தவற்றிற்குத் தொல்காப்பியர் இலக்கணம் வகுக்க வேண்டிய கட்டாயம் என்ன என்று ஆராய்ந்து பார்க்கும்போது அது இன்றைய சூழல்வரை பதிலளிக்கக்கூடிய அம்சமாக விளங்குகிறது.

சங்க இலக்கியங்களைத் தொகுப்பித்தவர்கள் மன்னர்கள். அவர்கள் தொகுக்கக் காரணம் வளர்ந்துவரும் சமண, பௌத்தத் தாக்கத்திலிருந்து தமிழ் மரபைத் தற்காக்கும் ஒருவகை எதிர்வினையே என்கிறாற் கா. சிவத்தம்பி. இன்னும் ஆழமாகச் சொன்னால் தமிழ் மரபின் நிழலில் தமது அரசைப் பாதுகாக்கும் முயற்சி அது எனலாம். இது கிட்டத்தட்ட இன்றைக்குப் பேசப் படுகிற தமிழ்த் தேசியத்தோடு ஒத்துப்போவதை உணரலாம். தமிழ்த் தேசியம் என்பது எட்டுத்தொகை, பத்துப் பாட்டு தொகுக்கப்பட்ட காலத்துடன் முடிவடைகிறது. இன்றுள்ள தமிழ்த் தேசியம், மத்திய அரசோடு காரிய வெற்றிக்கானஒரு நிர்ப்பந்த அரசியலாக இருக்க முடியுமேயொழிய அது ஒரு தனித் தேசியமாக உருவெடுக்க எந்தவொரு சாத்தியமுமில்லை. அப்படிச் சொல்வது இயங்கியல் தன்மைக்கு முரண்பட்ட பின்நவீனத்துவச் செயல்பாடாகத்தான் இருக்க முடியும். மேலும் தொல்காப்பியர் தமிழ் மரபின் தனித்த பண்பாட்டை எவ்வகையிலும் சிதைவுபடுத்திவிடாது மிக இலகுவாக இந்தியத் தேசியத்தோடு கலக்கச் செய்யும் மாபெரும் வேலையைச் செய்து முடிக்கிறார்.

முடிவுரை

தொல்காப்பியரின் இப்பணி வள்ளுவரின் திருக்குறள் எனும் மாபெரும் தேசியப் படைப்பு உருவாகக் காரண

மாக அமைந்தது. தொல்காப்பியர் கோலிய தடத்தின் வழியாக வள்ளுவர் தமிழ் மரபின் தனித்துவமான கற்புநெறி வாழ்க்கையையும், சமயச் சார்பற்ற போக் கையும் கைவிளக்காய்க் கொண்டு அகம், புறம் என் பனவற்றிலிருந்து சிறிது மாறுபட்டு வைதீக, சமண, பௌத்த சமயங்களின் சிறப்பான அம்சங்களை மட்டும் எடுத்துக்கொண்டு ஒரு புதிய தேசிய ஒழுங்கமைப்பைத் திருக்குறள் மூலம் உருவாக்குகிறார். இந்தியத் தேசியத் திற்கு அது தமிழரின் மாபெரும் கொடையாக அமை கிறது. மேலும் தமிழ் மரபு என்பது இந்தியத் தேசியத் திற்குத் தவிர்க்கமுடியாத நிகழ்வாக வள்ளுவரால் உரு வாக்கப்படுகிறது. இந்நிலையில் இந்திய சுதந்திரப் போராட்டத்தைச் சிந்திக்க வேண்டியுள்ளது. இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே அனைத்துத் தரப் பும் ஏற்றுக்கொள்ளும் வகையில் வள்ளுவர் அளித்த தேசிய ஒருங்கிணைப்பை விட்டுவிட்டுச் சுதந்திரப் போராட்டக் காலத்தில் தேசிய ஒருங்கிணைப்பிற்குத் திலகர் விநாயகரையும், மகாத்மா காந்தி இராமராஜ் யத்தையும், பக்கிம் சந்திர சாட்டர்ஜி கண்ணனையும் தேசியத்தை ஒருங்கிணைக்கும் வடிவங்களாகக் கொண் டது இன்று எத்தகைய விளைவுகளை உண்டாக்கி யுள்ளது என்பதை வரலாற்றில் நாம் காண்கிறோம். வள்ளுவரின் தேசிய ஒருங்கிணைப்பு வடிவத்தை மையமாகக் கொண்டு சுதந்திரப் போராட்டம் நடந் திருந்தால் இந்தியா-பாகிஸ்தான் பிரிவினை நடந்திருக் காதோ என்று எண்ணத் தோன்றுகிறது. மேலும் பிராந்திய மொழிகளின் பிரிவினைவாதப் போக்கு இன்றுவரை நடப்பது ஒருவேளை இல்லாமல் போயிருக் கலாம்.

துணைநூற்பட்டியல்

கோசாம்பி, டி.டி., 2019, டி.டி. கோசாம்பி கட்டுரைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

வானமாமலை, ந., 2017, மார்க்சிய அழகியல், அலைகள் வெளியீட்டகம்.

சுண்முகம் பிள்ளை, மு., தொல்காப்பியம் பொருளதிகாரம், பாரி நிலையம்.

நச்சினார்க்கினியர், 1965, தொல்காப்பியம் பொருளதிகார உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

அருணாச்சலம், ப., தொல்பொருள் ஆய்வுக் கட்டுரைகள், பாரி நிலையம்.

சிவத்தம்பி, கா., 2009, கவிதையும் கருத்தும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

பாலசுப்பிரமணியன், கு.வெ., 2007, சங்க இலக்கியத்தில் புறப்பொருள், மெய்ப்பன் பதிப்பகம்.

இளம்பூரணர், 1966, தொல்காப்பிய பொருளதிகார உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

Chirstopher Caudwell, Illusion and Reality, p.200.

13ஆம் பக்கத் தொடர்ச்சி

குழந்தைகளையும் சிவ னடியாரின் கோவணத்திற்கு இணையாகக் கொடுத்து அருள் பெற்றிருப்பதை அறியமுடிகிறது. திருகுறிப் புத் தொண்டர் துணிகளை மட்டும்இன்றி தன் உள் ளத்தினாலும் (வெள்ளை) தூய்மை கொண்டவர். தன் உயிரையும் மாய்த்துக்கொள்ளத் துணிந்தவர் என்ப தைத் திருகுறிப்புத்தொண்டர் நாயனாரின் புராணம் வழி அறியமுடிகிறது. அப்பூதியடிகள் திருநாவுக்கரச ரின் பெயரால் பல தொண்டுகள் செய்திருப்பதையும் தன்குழந்தை இறந்த செய்தியை திருநாவுக்கரசருக் குத் தெரிவிக்காது விருந்தோம்பல் செய்திருப்பதை அப்பூதிஅடிகள் நாயனார் புராணம்வழி அறியமுடி கிறது. இளையான்குடி மாறநாயனார், அமர்நீதியார், திருகுறிப்புத் தொண்டர், .அப்பூதி அடிகள் ஆகிய நான்கு நாயன்மார்ளும் தம் மனைவி மக்களோடு இணைந்து விருந்தோம்பல் செய்திருப்பதை அறிய முடிகிறது. இச்சிவனடியார்களின் உள்ள உறுதியை இறைவன் சோதித்து அவர்களுக்கு அருள் பாலித் திருப்பதை இக்கட்டுரைச் சுட்டிக்காட்டியுள்ளது. மன உறுதியுடனும் கொள்கை உறுதியுடனும் ஆன்மீகத்தில் ஈடுபடுவோருக்கு இறையருள் கிட்டும் எனலாம்.

துணைநூற் பட்டியல்

1. எழில் முருகன் (உ.ஆ), திருத்தொண்டர்கள் வரலாற்றுச் சுருக்கம் (2001),சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

2.. ஐயம்பெருமாள் கோனார் பழனியப்பா பிரதர்ஸ், கோனார் தமிழ்க்கையகராதி(1972), வர்த்தமான பதிப்பகம், சென்னை.

3. பரிமேலழகர்(உ.ஆ), திருக்குறள்-(2008), சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.

4. தமிழ் பிரியன், சிந்தனைக் களஞ்சியம், (2013), சென்னை.

5. நடராசன், பி.ரா.(உ.ஆ), திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணம், உமா பதிப்பகம், சென்னை.

6. சுப்பிரமணியன் ச.வே. (ப.ஆ), பன்னிரு திருமுறை (2007), மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

7. மாணிக்கம். அ (உ.ஆ), சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணம் (2009), வர்த்தமான பதிப்பகம், சென்னை.

8. மாணிக்கம். அ (உ.ஆ), சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணம் (1998),

ISSN 2320-4842

Struggle for one's own space and identity; Scrutinizing Yashpal's *Jhutha Sach*

Dr Afsal Jamal. P
Assistant Professor, PTM Govt College, Perinthalmanna, Kerala. 679322

Abstract

15 August 1947 is one of the unforgettable days in all Indian's lives. India achieved freedom after a long period of colonial rule and also it is an epochal event in the history of the Indian people. But we couldn't enjoy freedom in a respectable manner because of the unpredictable violence and the dislocation of people, their tortures and the painful and insecure journey across the newly created borders. The people, screaming and begging for lives, created as a result of partition, was the most tragic event in living memories. The decision to part India in the year of freedom was the painful outcome of a particular kind of political mobilization from the late 1930's. Yaspal's *Jhutha Sach* in two volumes gives a picture of the stark realities of pre and post partitioned India which includes this work among the partition literature.

Key Words: Partition, ideology, emotional violence, patriarchy, renegotiate, fragmented.

Introduction

Yashpal, author of the evergreen classics of Hindi literature, is often considered to be the most gifted after Premchand. He is also a critic of the society and a keen observer who had a particular concern for the well being of the downtrodden and less deserved. He wrote extensively that covers genres like novel, prose, short stories, dramas and autobiography. His magnum opus *Jhutha Sach* is a beautiful portrayal of the conflict in the simplistic term of class warfare. The appeal of this novel has led to a comparison with Leo Tolstoy's *War and Peace*.

Yashpal's *Jhutha Sach* handles the concept of feminist politics. Feminist politics along with feminist theory has rooted deeply with the increasing position for women in the society and across disciplines as well. The slavery in a patriarchal society across the whole world, their suppression to become a secondary position and the myths behind the construction of feminine nature have been the vast areas that feminist engaged with in a sustained manner. In the feminist theory, Elaine Showalter distinguished between the Feminist critique and Gynocritique. The women's experience is historically, socially and ideologically constructed which differs from gender and other identities such as class, caste and religion. The place of women protagonists in the literature related to partition only understood when it became the context of the real position of women in the hierarchical Indian society during the colonial period. India in the 19th century reacted in an extremely complex way to the imposition of imperial hegemony. It was increasingly evident that the new political dispensation had clearly settled down to play a long innings and hence an engagement with it was necessary. This process took many forms from the revolt of 1857 to the formation of the Indian National Congress in 1885, from the social reform movements like Arya Samaj and Brahma Samaj. The public were more conscious about the western influence in Indian citizens' nationalist consciousness combined with a liberal attitude that was receptive to the new ideas of the West and made belief that India had much to learn from a modern scientific civilisation.

The question of female emancipation did not occupy a political space in the nationalist ideological framework and inner-outer realities. The women became symbolically linked to the inner things. They live in the nation, but not in the core of the nation. The formal education is reduced only for the respectable women in the society, but she hasn't any right to mingle with the society. The society made a four walled secure home for them and that is the only place of their own or a room of their own. In north India, women represented in Hindi and Urdu literature of the 19th century, underscored the age-old myths of femininity, women were the nurture of the family and her place was in the home, her destiny and achievements were to be seen in how she managed home and family. They have created a typical womanhood in their literature. They reject western liberal attitudes for women and the process of idealization done over them. In other words, they traditionalised the women in the name of patriarchal power and marginalized them from the large scale society. Most of the women protagonists in Hindi literature were engaged in typical roles like domestic, motherhood etc., but the writers were sensitively unveiled their suppressed feelings, dilemmas, thoughts and contradictions. The patriarchy was a dominant ideology and some of the earlier representations of women in literature conformed to the stereotypes that emphasized their frailties and their subordinate status. At the same time, Hindi literature witnessed the emergence of psychological realism. The role and status was issued that interested the creative writers, especially in the context of the national movement in which innumerable

women from different classes and religions participated. Again, the political participation of them is not necessarily precluding their domestic roles. Yet, a slow, imperceptible shift of the power education between men and women was inevitable.

The partition of the subcontinent in 1947 caused a sharp and sudden upheaval in society. The large-scale displacement of people, the loss of family and total isolation pushed many women into crucial situations they were all ill equipped to handle. The creative writers and writings on partition focussed on individuals, men, women and children. According to them, they were forced to suffer pain, humiliation and even death at that time. Most of the women-centered stories were related to true stories that were widely reported in 1946 and 1947. While the partition narratives say that women are the worst sufferers and affected the partition more, it is important to consider that they were accidentally represented as victims of this bad process. Popular writers of partition literature have explored their peripheral status as victims to the central focus, particularly in the period after their dislocation. Then , the writers changed their style of writing and gave more importance to women attempting to rebuild their lives after losing family, home, property etc. The type of women as merely the helpless victims of a patriarchal society was clearly inadequate and unsuitable for the issues that the women were confronted with in the aftermath of partition.

Yashpal in *Jhutha Sach* obviously shows the simple contextualisation of women as a victim of male oriented society and as limited by their class identities. This process of elaborating and exploring women’s experience and her own rendering of them constitute a feminist awareness that one associates with the modernist narrative mode. Yashpal’s work is also one of the foremost fictional works on partition which recorded the struggle and experience of women victims. This is different from other texts, the novel ends with violence, brutality, vengeance and destruction of a social order. *Jhutha Sach* reveals the life of refugees in the post partition period, especially from the point of view of women. This novel’s two principal characters are women whose lives undergo a radical progressive transformation as a result of partition itself. Tara is the main protagonist of the novel who is a victim of the violated sexuality and subsequently rejected by her family. The next character Kanak and her family are uprooted and virtually destitute after crossing the border.

The partition not only affected and destroyed the people financially, but also created a new and unexpected situation in which work became a matter of necessity rather than choice. Women in refugee families would be wishing to contribute financially in some way or other. The wealth and economic power had major implications in the context of man-woman relationship. Women’s personal choice in marriage or dual standards of sexual morality for men and women cropped up in the refugee community. These issues were not clearly resolved in a radical manner; the new situation did enable women to establish a more equitable relationship with men. Most of Yashpal's novels show the pre-partition of Lahore and a few North Indian cities and also some refugee towns, between the period of 1945 and 1955. Tara and Kanak take some broad diction and start off from a stifling and coercive and patriarchal environment in Lahore, end up as personally satisfied. Kanak was the daughter of a publisher and she fought for her father and other members of the family, successfully marrying the man she loved named Puri. Tara, sister to Puri, was married off to Somraj against her clearly articulated opposition. Yashpal sees a larger patriarchal structure that goes over the wall of the discrimination of class and religion. Tara's mental, physical and moral humiliation on the night of marriage is conducted by emotional violence inflicted by her own family. It emerges into the sexual violation that follows her that leads to her running away from her in-laws’ house when the mob attacks the house. Her rape by Nabhu and the attempt by her protector are both extensions of the patriarchal violence that is rampant in society.

Yashpal blurs the distinction between socially sanctioned patriarchal violence directed against women. The whole aggressors see Tara as ‘property’. Somraj wants to make her as a domesticated one and Nabhu considers her as asexual property. In this novel, domestic violence leads to women trying to cut across the religion’s divide, as is clearly shown from Nabbu’s treatment of his wife. Tara has a strong decision to become financially independent. So, she demanded and expected the state support. She is able to get a reasonably senior position on account of her education and this gives her not only financial independence but also social prestige and power. Tara’s social and economic emancipation is not matched by a corresponding intellectual and emotional maturity in her relationship with men. After the separation from her husband, she could understand lots of things that are related to one’s own personal life. An unexpected meeting with Dr Premnath paves the way for a relationship, based on mutual trust, faith, concern and more importantly a healthy respect for each other.

Like Jane Austen’s typical heroine, who begins with adolescent romantic notions of life, Kanak starts with idealized notions of love. Most of her mature decisions are motivated and related with her self respect and individual choice. Her divorce actually takes her away from financial and social security. The relative impoverishment of her family and her independent spirit motivate her to take the first step in her life, is also her real first step taken by her towards self reliant identity. She becomes an active agent in her own life , so she has to take the decisions about her marriage and financial independence. Her father’s opposition to Puri on grounds of his class has hardened her to resolve and like anyone asserting oneself for the first time. She becomes blind to the obvious shortcoming of her life and choice.

The novel draws attention to the whole patriarchy's underlying similarity and assumptions through the uneducated Somraj and the self-confessed and progressive

Puri for Yashpal's concern that the patriarchy is not restricted to any class or religious community. But its strong influence spreads everywhere and every other creature in the world. Both Tara and Kanak's examples show that it is possible to reformulate the dynamics of the man-woman relationship in fluid contexts like the aftermath of partition. The rejection of abducted women by their families was often a decision made by both the men and the women of the family as in the case of Banto. The voice of women and her experience have traditionally been disregarded in patriarchal societies. There are lots of stories that show the weak and helpless nature of women, that notions are constructed by the dominant society over a long period of time. Her nurturing, caring, gentle nature, her predominantly emotional make-up, her secondary and dependent status when compared with men, these are the myths that were created and imbibed by both men and women. Feminism as the political movement attempts to demolish many of these myths and empower women through as assertion of their fundamental equality with men. These types of creative works of literature show women's experience itself.

This work of Yashpal exhibits a broader vision of society and History. While partition was materialised, no one imagined its aftermath that it would be going beyond a mere territorial division. The ultimate impact was,it totally upset even the very base of cultural existence. Many people lost their family, home and mother land. Still they expected a return to their home land. The pathetic vision of partition was the pain experienced by the refugees in leaving their home and birth place behind and moving to an entirely strange land, the trauma that they underwent and memories that they carry along with them.

The self or individual, that can no longer be defined within the traditional context of the community, is also a major consequence of partition. Partition marks a breakdown of that community which had defined the individual, himself and his identity. Isolated and alienated, the individual may nostalgically hearken back towards the now idyllically constructed harmonious synergic pass. The confrontation resulted in a fragmented self or opened up the possibility of relocating the self within this new reality. Puri and Tara overcome so many difficulties in their life because of partition. But after it, they try to believe in their own individual identity. The complex relationship between past and the present and its separateness as well as its co-mingling are explored through the perspectives of Puri and Tara. There is a freshness and innocence associated with the past that stands in contrast to the present. In the first part of the novel, everything is controlled by the high class and colonial powers. They rule over others and make them a refugee in their own country. But in the second part of the novel, everything has changed. The poor refugees recognize their potential in their world and make themselves strong and powerful individuals among others. After the partition, everything was solved but the war led to the loss of the most valuable things of the nation and people.

References

Desai, Neera., and Usha Thakkar. *Women in Indian Society.* National Book Trust, 2008.

Gauhar, Taniya., and Ashish Gautam. *A Historical Study of the Women in India*.Notion Press, 2012.

Showalter, Elaine. *Sexual Anarchy, Gender and Culture.* Thrift Books,1990.

\- - - *Towards a Feminist Poetics*.Croom Helm, 1979.

Yashpal. *Jhutha Sach*.Modern Classics,2010.

45ஆம் பக்கத் தொடர்ச்சி

காளிதாசன் தனக்கேற்றபடி உள்வாங்கி ஆள்கின் றான். 'உவமேய காளிதாசன்' எனும் புகழ்ப் பெயர் சங்க அகப்பாடல்கள்வழி அவனுக்குக் கிட்டியுள்ளது என லாம். சங்க அகப்பாடல் உவமைகளை அவன் பல அகப்பைகளில் முகந்துகொண்டு தனது படைப்பு களை மிளிரச் செய்துள்ளான் என்பதே ஒப்பீட்டுச் சான்றுகள் காட்டும் உண்மையாகும்.

பயன்பட்ட நூல்கள்

1.அ. மா. பரிமணம், கு.வெ. பாலசுப்பிரமணியன், நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு (இரண்டு தொகுதிகள்), புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004.

2. காளிதாசன் (மொழிபெயர்ப்பு: சேஷாசலம்), ரகுவம்சம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2008.

3. காளிதாசன் (தமிழில்: பாலசுப்ரமணியம்), மேக சந்தேகம் (கண்ட காவியம்), உன்னதம் வெளியீடு, சென்னை, 2018.

4. காளிதாசன் (தமிழில்: டாக்டர் ராஜலட்சுமி சினிவாசன்), முகில்விடு தூது, பருவங்களின் வருணனை, குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 2002.

5. மறைமலை அடிகள், சாகுந்தல நாடக மொழிபெயர்ப்பும் அதன் ஆராய்ச்சியும், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2003.

6. கே. கிருஷ்ணமூர்த்தி (தமிழில்: சரசுவதி வேணுகோபால்), காளிதாசர், சாகித்ய அகெதெமி, புதுதில்லி, 1999.

7. ப. மருதநாயகம், தமிழின் செவ்வியல் தகுதி, இராசகுணா பதிப்பகம், திருச்சி, 2012.

8. பெ. மாதையன், சங்கக் கவிதையியல், இராசகுணா பதிப்பகம், திருச்சி, 2013.

ISSN 2320-4842

உடைமைச் சமூகத்தை ஊடறுக்கும் புனிதவதியின் துறவும் கோதையின் காதலும்

முனைவர் மு. நளினி
தலைவர், தமிழ்த்துறை, எஸ். ஐ.வி.இ.டி.கல்லூரி, கௌரிவாக்கம். சென்னை 73

ஆய்வுச்சுருக்கம்

தாய்வழிச் சமூகத்தை நயவஞ்சகமாக முடிவுக்கு கொண்டுவந்த உடைமைச் சமூகம், பெண்ணுக்கான இயங்கு வெளியை வரையறுத்து, சுயத்தை மரத்துப்போகச்செய்து, இருப்பைத் தகர்த்து, ஆண்மையச் சமூகமாகக் காலந் தோறும் படிப்படியாக வலிமையாகக் கட்டமைத்துவந்துள்ளது. பெண்ணை அடிமைப்படுத்திப் பெண்ணின் சுயம் பற்றி ஒரு சிறிதும் இலட்சியம்கொள்ளாது பெண் உடலை, ஆண்மையச் சமூகத்தின் பிரதான அடித்தளமாக்கிக் காலந்தோறும் காத்துவந்துள்ளது. இந்த அடித்தளத்தைத் தகர்த்துத் தன்னுடல் தனக்கானது என்ற பிரகடனத்தைப் பக்திமார்க்கத்தைக் கைக்கொள்வதன்மூலம் முன்வைத்தனர் புனிதவதியும் கோதையும். இவர்கள் தம் சுயம் காக்க, இருப்பை நிலைநாட்டக் குடும்பம் என்ற நிறுவனத்தைப் புறக்கணித்தனர். ஆண்மையச் சமூகத்தை - உடைமைச் சமூகத்தைக் கேலிசெய்யும் வகையில் இவ் இருவரின் துறவும் காதலும் அமைந்துள்ளது என்ற தெளிவோடு இவர்களை வாசிக்கும் ஆற்றலை இந்தச் சமூகத்திற்கு இக்கட்டுரை வழங்கும்.

கடவுச்சொற்கள்: உடைமைச் சமூகம், பெண்ணியம் ,சுயம், துறவு, காதல்.

முன்னுரை

ஆண்மையச் சமூகமாகவே நில உடைமைச் சமூகம் கட்டமைக்கப்பட்டு, அதற்கான திட்டங்கள் காலந்தோறும் மிகக் கவனமாக வகுக்கப்பட்டு, அதன் கட்டமைப்பு பாதுகாக்கப்பட்டுவந்துள்ளது. பெண் தன் சுயம் மறந்து, தன்னியல்பு இழந்து, தனக்கென வஞ்சகமாகச் செய்யப்பட்டுள்ள வரையறைக்குள் தன்னைப் பொருத்திக்கொள்ள வேண்டியிருந்துள்ளது. ஒரு சட்டகதிற்குள் யுகம்யுகமாகப் பெண் தன்னை எல்லா வழிகளிலும் பொருத்திக் கொண்டு தனக்கான விசாலம் விஸ்வரூபம் என்பதற்கு இடமே இல்லாத மிகக் குறுகிய வட்டத்தில் இயங்க நிர் பந்திக்கப்பட்டுவந்துள்ளாள். பெண் தன் சுயம் உணர்தல், இருப்பை உணர்தல், உணர்த்துதல், தன்னியல்பாய் இயங்குதல், சுதந்தரம், சமத்துவம் உணர்தல், உணர்த்துதல் தனக்காகத் தான் குரல் கொடுத்தல், தனக்கான உரிமைப் போராட்டத்தைத் தான் முன்னெடுத்தல், தன் கட்டுப்பாட்டில் தான் இயங்குதல், தனக்கான உரிமை கடமைகளின் எல்லைகளைத் தான் அறிந்து செயல்படுதல், அவற்றுக்கு எதிரான சமூக, பொருளாதார, அரசியல் கொள்கைகள், வன்முறைகள், நடைமுறைகளுக்கு எதிராகக் கலகக் குரல் எழுப்புதல் யாவுமே ஒவ்வொரு பெண் ணுக்குமே இருக்க வேண்டிய சூடு, சுரணை என்பதை இந்தச் சமூகம் ஏற்க மறுத்துவருகிறது. பெண்ணுக்குரிய குணங்களாக அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற சூடு, சுரணையற்ற மனநிலையைப் பெண்களுக்குள் நய வஞ்சகமாகப் பதிவுசெய்து அவற்றை ஒருசிறிதும் பிசகாமல் கடைப்பிடிக்கும் கீழ்த்தரமான வாழ்வைத்தான் நில உடைமைச் சமூகம் தொடக்கம் முதல் பெண்களுக்கு வற்புறுத்திவந்திருக்கிறது. இதன் பிடியிலிருந்து யாரும் இன்றுவரை முற்றமுடிய விடுதலையாக முடியவில்லை என்பதுதான் யதார்த்தம். இதற்கான முன்னெடுப்புகள் தொடர்ந்து படிப்படியாக வெற்றி கண்டாலும் அடைவு வெகுதொலைவில்தான் இருக்கிறது.

முகவரியற்ற பெண் முகங்கள்

தாய்வழிச் சமூகத்தில் பிள்ளைகள் பெண்ணுக்கே உரியவாகவும் அவளே தலைமை தாங்குபவளாகவும் வீரத் தோடும் விவேகத்தோடும் திகழ்ந்துள்ளாள். நிலவுடைமைச் சமூகம் ஆணைத் தலைமைத்துவப்படுத்தும் நோக் கோடு குடும்பம் என்ற நிறுவனத்தைக் கட்டமைத்துப் பெண்ணை இரண்டாம் தரத்தில் எல்லைகட்டி நிறுத்தியது. நிலவுடைமைச் சமூகத்தின் தலைமையிடத்தைப் பிடித்துகொண்ட ஆண், பரந்துபட்ட நிலத்தை வளைத்து விவசா யம் செய்யவும் கால்நடைகளைப் பெருக்கவும் மனித ஆற்றல் மிகுதியாகத் தேவை என்பதற்காகப் பல பெண் களை மனைவியாக்கிக்கொண்டு நிறைய பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டான். தன்னுடைய உடைமைகளைத் தனக்குப்பிறகு தான்பெற்ற பிள்ளைகளே அடையவேண்டும் என்ற நோக்கில் பெண் வேறுயாருடனும் புணர்ந்து பிள்ளை பெற்றுவிடக்கூடாது என்பதற்காகப் பெண்ணை அடிமைப்படுத்தி, கற்பைக் கற்பித்து, புனிதப்படுத் திச் சிறைவைத்தான். பெண்ணின் இயங்குவெளி வரையறுக்கப்பட்டிருந்ததால் பெண், உலகம் அறியாதவளாக இருந்ததோடு குறிப்பிட்ட அந்தப் பெண்ணை உலகமும் அறிந்திருக்கவில்லை. அவள் பெற்ற பிள்ளைகளே தன் தாயின் பெயரைச் சொல்லிச் சமூக அறிமுகம் பெறுவதோ தன்னை அடையாளப்படுத்திக்கொள்வதோ

முடியாமல் போனதற்கு ஆண்மையச் சமூகம் செய்த இந்தச்சூழ்ச்சிதான் காரணம். ஆண் தன்னைச் சமூகத்தில் தொடர்ச்சியான உறுப்பினனாக, பங்காளனாக ஆக்கிக்கொண்டதும் இத்தகைய சமூகத்தை ஆணுக்கானதாக ஆக்கிக்கொண்டு தன்னை முதல் தரமாகவும் குடும்பத்தின் அனைத்துக் கடமைகளையும் புரிபவள் பெண்தான் என்றாலும் பெண்ணைப் புனிதங்களாலும் மரபுகளாலும் சிறைவைத்து இரண்டாம் தரப்படுத்தியதும் உணரத்தக்கது. இது காலம்காலமாகத் தொடர்ந்தது. இவ்வாறான காரணங்களால் பெண்ணுக்கானதலைமையும் அடையாளமும் இருப்பும் தரைமட்டமானது, அவற்றையும் மீறி அறுபத்துமூன்று நாயன்மார்களின் தாயார் பெயர்களையும் அறிந்து பதிவுசெய்துள்ள சேக்கிழாரின் முயற்சி பாராட்டத்தக்கது.

சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தில் காரைக்கால் அம்மையார் புராணம் என வாசிக்கப்படுகின்ற கணவனால் கைவிடப்பட்டு இச்சமூகத்தால் வஞ்சிக்கப்பட்ட புனிதவதி என்ற பெண்ணின் வரலாற்றைப் பார்க்க முடிகிறது. காரைக்கால் அம்மையார் புராணம் முழுவதும் பெண்ணிய நோக்கிலும் பதிவுசெய்துள்ளதை உய்த்துணர முடிகிறது.

புனைவு அடையாளத் துறப்பும் சுயம் கட்டமைத்தலும்

பெண்களுக்குக் காலந்தோறும் புனைவு அடையாளம் இருந்துள்ளது. கன்னகியைப்போல, நாளாயினியைப்போல, மகாலட்சுமியைப்போல, பூமாதேவியைப்போல என்று பெண்கள் தம் அடையாளங்களைக் கற்பனைக் கதாபாத்திரங்களோடு புனைந்துகொள்ள காவியங்கள் கதைகள் இயற்றி இச்சமுகம் வற்புறுத்தியுள்ளது. பெண்ணின் இருப்பு மறுக்கப்பட்டு பெண்ணுக்கான தனித்த அடையாளத்தை இச்சமூகம் அழித்தும் இருட்டடிப்பு செய்தும் வந்துள்ளது. புனைவை அழித்து அதே இடத்தில் பெண் தன் சுயத்தை-தன் சுய பிம்பத்தை எழுத வேண்டியது சவாலான கடமை. ***வீடுறை தேவதையைக் கொலைசெய்வது எல்லாப் பெண் எழுத்தாளர்களுக்கும் உண்டான வேலையில் ஒரு பகுதி. தேவதை இறந்தபின் மிஞ்சி இருப்பது என்ன? மை ஜாடி கொண்ட இளம் பெண் படுக்கையறையில் உட்கார்ந்திருப்பது மட்டும்தான் மிச்சம் என்று நீங்கள் நினைப்பீர்கள். பொய்களிலிருந்து விடுவித்துக்கொண்டு 'அவள்' என்ற சுயத்தில் வாழும் பெண் என்று சிலர் சொல்லலாம். ஆனால் 'அவள்' என்ற சுயத்தில் அடையாளம் என்ன? அதாவது 'பெண்' என்றால் என்ன? அனைத்துவித கலைப் புலங்களிலும் தொழில் முறைகளிலும் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு தன் சுயத்தை வெளிப்படுத்தும்வரை எந்த ஒரு பெண்ணாலும் அதற்கான பதிலை அடையமுடியாது என்று நான் நம்புகிறேன்*** (வர்ஜினியா உல்ஃப், கட். பெண்களுக்கான தொழில்கள், காலத்தின் குரல். ப. 191) என்ற கருத்தும்,

Dying is an art
Like everything else
I do it
Exceptionally well (சில்வியா பிளாத், தற்கொலைக்குப் பறக்கும் பனித்துளி) என்ற கவிதையும் இங்குக் குறிப்பிடத்தக்கது. தன் தனித்திறமைகளைக் கண்டறிந்து வளர்ப்பதன்மூலம் தனக்கான ஆளுமையை உருவாக்கிக்கொள்ள முடியும் என்பதை நிறுவியவர்கள் புனிதவதியாரும் கோதையும்.

கணவனை நீங்கியபின் கவியளுமையாகத் தன்னைக் கட்டி எழுப்புகிறார். புதிய படைப்பாக்க-வடிவ உத்திகளைக் கையாண்டு அதில் சிறப்புக் கவனமும் பெறுகிறார். தமிழ்இசையைப் பக்திவழிப் பரவலாக்கம் செய்கிறார். தென்னாட்டிலிருந்து வடக்கே கைலாயம்வரை பக்திப் பயணம் மேற்கொள்கிறார். இப்படியான இயங்குவெளி தகர்த்து, கொள்கைப் பிடிப்போடு ஒரு பெரும் பயணம் மேற்கொண்ட பெண் இவருக்குமுன் இருந்ததாகத் தெரியவில்லை பக்தி இலக்கிய காலம் என்ற வரலாற்றின் ஒரு காலக்கட்டத்தைத் தொடங்கிவைத்த பெருமை காரைக்கால் அம்மையார் என்னும் புனிதவதியைச் சாரும்.

தன்னைக் கவியாளுமையாக அடையாளப்படுத்திக் கொண்டதோடு காதலும் காமமும் ததும்பும் கவிதைகளைக் கோதையும் எழுதினார். பக்தி மார்க்கத்தில் இல்லாதவர்களைக்கூட கோதையின் தமிழ் ஈர்த்தது; கோதையின் காதல் சிலிர்ப்பூட்டியது. மொழி அறியாதவர்கள்கூடக் கோதையின் பாடல்களைக் கோயில்களில் மந்திரம்போல் இசையோடு பாடுவதை மொரிசியஸ், தாய்லாந்து, கம்போடியா போன்ற நாடுகளில் இன்றும் காணலாம். அப்படியொரு தனித்த அடையாளத்தை ஏற்படுத்திகொண்டுள்ளார் கோதை.

பெண் உடலும் சமூகத்தின் அழகியல் நோக்கும்

இச்சமூகம் பெண் உடலைக் கொண்டாடுகிறது. பெண்ணின் உடலழகு, பூப்பெய்தும் பருவம் போன்றவை சமூகத்தால் கவனம் பெறுகின்றன. காரைக்கால் அம்மையார் புராணத்தில் புனிதவதியின் பேரழகு சிலாகித்துப் பேசப்படுகிறது.

…திருமடந்தை அவதரித்தாள் என வந்து
பொங்கிய பேர் அழகு மிகப் புனிதவதியார் பிறந்தார்(2)
… அழகின் கொழுந்து எழுவதென வளர்வார் (4)
நல்லவென உறுப்பு நூலவர் உரைக்கும் நலம் நிரம்பி
மல்குபெரு வனப்பு மீக்கூர வருமாட்சி… (5)

போன்றன சான்று. அவரது அறிவு வளர்ச்சி குறித்த எந்தச் செய்தியும் பேசப்படவில்லை.

பெண் குழந்தை மணம் - மரணம்

பெண்ணுக்குக் கற்பு என்ற ஒன்று இல்லை என்றால் ஆணுக்கு ஆதிக்கம் செலுத்த எதுவும் இருக்காது. சமுகம் பெண்ணுக்கானதாய் இல்லாது ஆணுக்கானதாக ஆக்கித்தர மேற்கொள்ளப்பட்ட வஞ்சகமே கற்புத் திணிப்பு. அதற்குக் கட்டுக்காவலாய்ச் சமூகம் விளங்கியதற்கு ஆதாரமே திருமணம். பெண்ணை வஞ்சித்து ஆணுக்கு ஆதாயம்செய ஏற்படுத்தப்பட்டவை இவை. பெண்ணுக்கான சுயத்தை அழிப்பதே திருமணம். திருமணத்திற்குப்பிறகு பெண் அடியோடு மாற்றப்படுவது மரணத்தின் சாயல் அல்ல; மரணமேதான்.

பெண்ணின் உடல், மன வளர்ச்சி குறித்த அக்கறை ஆண்மையச் சமூகத்திற்கு இல்லை. பூப்பெய்தலே திருமணத்திற்குப்பின் நிகழவேண்டியதாக ஆண்மையச் சமூகம் விரும்பியது. கற்பு-உடற்புனிதம் அந்த அளவுக்குக் கவனத்தில் கொள்ளப்பட்டது.

புனிதவதியின் உடல் பேரழகானபடியால் ***இல்லிகவாப் பருவத்தே*** மகட்பேசுதற்குப் பலரும் ஆர்வம் காட்டினர். இல்லிகவாப் பருவம் என்பதற்குப் பலரும் மணப் பருவம் என்று தவறாகப் பொருள் கூறுகின்றனர். 'இகவா' என்ற சொல்லுக்கு 'நீங்காத' என்று பொருள். பெண்ணின் மாதவிலக்கை, வீட்டு விலக்கு - வீட்டுக்குத் தூரம் போன்ற சொற்களால் இன்றும் கிராமத்தில் வழங்குகின்றனர். இல்லிகவாப் பருவம் என்பது பூப்பெய்தாத குழந்தைப் பருவம் அல்லது சிறார் பருவம் என்பதே பொருந்தும். சிறுமியாக இருந்தபொழுதே பலரும் பெண்கேட்கத் தொடங்கினர். புனிதவதிக்கு நடந்த திருமணம் குழந்தைத் திருமணம் என்பதைத் தெள்ளத் தெளிவாகப் பெரியபுராணம் விளக்குகிறது. ஆனால் பரமதத்தன் கடல்மேல் சென்று பொருளீட்டும் அளவு வயதும் திறனும் பெற்றிருந்துள்ளான்.

மாறுபட்ட மனப்பாங்கு

இல்லறத்தில் இணைவோர் ஒத்த சிந்தனை உடையவர்களாக இருத்தல் நீண்ட நெடிய மகழ்வான இல்வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையும். மாறுபட்ட சிந்தனை உள்ளவர்கள் சகித்துக்கொண்டு வாழ்தல் நிறைவளிக்காது.

புனிதவதி போதிய உடல் வளர்ச்சியும் மன வளர்ச்சியும் அடையாத நிலையிலேயே திருமணம் முடிக்கப்பட்டது மட்டுமன்றி மனப்பாங்கு அடிப்படையிலும் பொருத்தமற்ற திருமணம் என்பதைச் சேக்கிழாரே பதிவுசெய்துள்ளார். ***தெளிதரு நூல் விதிவழியே செயல் முறைமை செய்தமைத்தார்களே*** ஒழிய இவர்களின் மனப் பொருத்தம் குறித்து அக்கறைகொள்ளவில்லை.

தளிர்அடி மென் நகை மயிலைத்
தாதுஅவிழ் தார்க் காளைக்குக்
களி மகிழ் சுற்றம் போற்றக்
கலியாணம் செய்தார்கள் (10)

மயிலைக் காளைக்குக் கலியாணம் செய்தார்கள்; சுற்றத்தார் அனைவரும் மிகவும் மகிழ்ந்தார்கள் என்று குறிப்பிடுகின்றார். மணமக்கள் மகிழ்ந்தார்களா என்பதற்கு அங்கே குறிப்பு இல்லை. கம்பராமாயணத்தில், ***அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்*** என்று கம்பர் குறிப்பிடுகிறார். இங்கு இவர்களின் விருப்பம் பற்றிய பதிவு ஏதும் இல்லை.

புதிதாகத் மணம் செய்துகொண்ட கணவனும் மனைவியும் தனிக்குடித்தனம் வைக்கப்படுகின்ற பொழுதும், ***ஓங்கிய அன்புறுகாதல் ஒழிவின்றி மிகப்பெருக*** என்று சேக்கிழார் புனிதவதியின் அன்பு பக்தி மார்க்கத்தில் பெருகியதாகக் குறிப்பிடுகின்றார். இந்த இடத்தில் சேக்கிழார் 'காதல்' என்ற சொல்லை வினையமாக-கலகப் பதிவாகவே வைத்துள்ளார் என்று தோன்றுகிறது. அவர் வெறுமனே பக்திக் காப்பியம் மட்டும் எழுதும் நோக்கில் அல்லாது சமூக அக்கறையோடும் குழந்தைத் திருமணம் செய்து வைக்கப்பட்டதன் சீற்றத்தோடும், தான் புனிதவதியாகவே இருந்து காதல் என்ற சொல்லைப் பதிவுசெய்து இச்சமூகத்தை எள்ளி நகையாடுகிற வகையில் - ஓங்கி அறையும் குரலில் அதைக் கணவனுக்காக இல்லாமல் செய்கிறார்.

புனிதவதியின் எண்ணம், சொல், செயல் யாவும் பக்தி மார்க்கம் சார்ந்ததாகவும் பக்திஅறம் செய்வதாகவும், பரமதத்தின் மனப்பான்மை பொருளீட்டும் ஆர்வமுடையதாகவும் நுகர்வு அடிப்படையிலானதாகவும் இருப்பதை உய்த்துணரமுடிகிறது. ***பொற்புறமுன் நீராடி புகுந்து அடிசில் புரிந்து அயில*** என்று சேக்கிழார் அவனது நுகர்வுமனதைப் பதிவுசெய்கிறார். இருவருடைய மன நிலையும் இருவேறு துருவங்களாக நிலைபெற்றுள.

பெண்ணை வீழ்த்தும் வாள்

பெரியபுராணம் குறிப்பிடுகிற வகையில், நண்பகல் உணவுக்கு வந்த பரமதத்தனுக்குப் புனிதவதி முறைப்படி பரிமாறுகிறார். கணவன் ***இல்லின்கண் வைக்க*** என்று கொடுத்தனுப்பிய மாங்கனிகளில் இரண்டில் ஒன்றை முன்னமே சிவனடியாருக்குப் படைத்துவிட்டபடியால் இருந்த ஒன்றனைக் கணவனுக்குப் பரிமாறுகிறார். அதன் சுவையில் லயித்து ***இனிய சுவை ஆறாமைத் தார்வணிகன்*** இன்னொரு கனியும் கேட்கிறான். மாறாக அவன் கனியின் சுவையுணர்ந்து 'நீயும் உண்' என்று மனைவிக்கு ஊட்டியிருக்கலாம் அல்லது இன்னொரு கனியை அவர் சாப்பிட எண்ணமாவது கொண்டிருக்கலாம். கனியின் இன்பத்தில் மனைவிக்குப் பங்குள்ளதைப் பொருட்படுத்தாது தானே அனுபவிக்கும் நோக்குடையவன், வாழ்வின் இன்பங்களையும் தன் மனைவியோடு சேர்ந்து நுகரும் எண்ணம் உடையவன் அல்ல என்பது தெளிவாகிறது. இதில் சினமுற்ற சேக்கிழார் கணவன் என்று குறிப்பிடாமல், ***இனிய சுவை ஆறாமைத்தார் வணிகன்*** என்று குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட கணவன்மேல் ஓங்கிய அன்புறு காதல் ஒழிவின்றி மிகப்பெருகவில்லை என யாரும் புனிதவதியைக் குறைகூறவும் முடியாது. உலகின்பங்களையெல்லாம் முற்ற முடிய அனுபவித்துவிட வேண்டும் என்ற குதூகலமான பரமதத்தனின் வாழ்வுக்குப் புனிதவதியின் பக்தி மார்க்கம் பொருத்தமற்றதாக இருந்துள்ளது என்பது வெளிப்படை.

புனிதவதியார் இறைவனிடம் வேண்ட, இன்னும் ஒரு கனி வந்ததாகவும் அவன் கையில் பெற்றபின் மறைந்ததாகவும் அதனால் அவர்கள் மானிடப்பிறவி அல்ல, தெய்வப்பெண் என்பதெல்லாம் ஊருக்கும் உறவுக்கும் புனிதவதியைப் பிரிதற்குக் காரணமாகப் பரமதத்தன் சொன்னது. புனிதவதி பாடிய பாடல்களில் எங்காவது கனி கொடுத்து இறைவன் தன்னை ஆட்கொண்

ISSN 2320-4842

டதாகப் பாடியிருக்கிறாரா? கனி பெற்றது உண்மை யானால் அவரின் பாடலில் பதிவு இருக்க வேண் டும் அல்லவா? பல இடங்களில் விதந்து பாடியிருப் பார் அல்லவா? புனிதவதியார் துறவுபூண்டதும் பாடிய முதல் படைப்பான அற்புதத் திருவந்தாதி, பின் திரு விரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப் பதிகம் ஒன்று, இரண்டு ஆகிய எங்கும் கனி தந்து இறைவன் ஆட்கொண்டதாகக் குறிப்பு இல்லை. அவரது முதல் பாடல்,

பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பது இடர் (அற்புதத்திருவாதி 1) எனத் தொடங்கி 'நான் பிறந்த நாள் முதல் உம்மையே நினைத்திருந்தேன் என் இடர் எப்போது தீர்ப்பாய்?' என்று கேட்பதாக அமைந்திருக்கிறது. கனி வந்த தாகச் சொன்னதெல்லாம் பரமதத்தனின் கட்டுக்கதை. கனி வரவே இல்லை என்பது கணவன் மனைவிக்கு மட்டும்தான் தெரியும். ***இவன் குறித்த கொள்கை ஈது*** என்று புனிதவதியார் கூறுவதிலிருந்து இந்த உண்மை விளங்கும். இவன் பொய் கூறுகிறான் என்பதைத்தான் அவ்வாறு குறிப்பிடுகிறார். இங்குதான் பரமதத்தனின் குரூர ஆண்மனம் சமயோஜிதமாக வேலை செய்வது விளங்கும். எந்த ஒரு பெண்ணையும் குணக்கேடு டைய ஆண், அவளை விலக்கி வேறு பாதையில் செல்ல முடிவெடுக்கையில் அப்பெண்ணின் குறுக்கீடு இல்லாமல் அவளைத் தகர்த்தெறிய 'நீ பெண்ணா' என்று கற்படிப்படையிலான வாளினும் கொடிய குத்தல் கேள்வியை வீசி அவளைத் தரைமட்டமாக வீழ்த்து வான்; பிறகு முதுகெலும்பு முறியப்பட்ட வேதனை யோடு அவள் துன்புற முடியுமே தவிர மீண்டும் அவன்முன் நின்று கேள்வி கேட்கவோ போராடவோ இயலாது; பெண் தனக்குள்ளேயே குமைய வேண்டும். இத்தாக்குதலைப் பொருட்படுத்தாத மனவலிமையை இன்றும்கூடப் பெண்கள் பெறவில்லை. இப்படி ஒரு கொலை பாதகச் செயலை வஞ்சக ஆண்கள் துணிச்ச லாகச் செய்கிறார்கள். ஆனால் இப்படி ஒரு வாளைப் பரமதத்தன் கையிலெடுக்கமுடியாது. புனிதவதி பெரிய இடத்துப் பெண். இவன் சிக்கலைத் தேடிக்கொண்டு பிறகு தீர்வுக்கு அலைபவன் அல்லன். புனிதவதியை இழிவுபடுத்துவது பொருத்தப்படாது. எனவே 'இவர் மானிடப் பிறவியே அல்ல; வேறோர் தெய்வம் அதனால் அகன்றேன்' எனப் புகழ்ந்து புறக்கணிக்கிறான். இதற் காக அவன் முன்னெடுத்த திட்டம் ஆண்மையச் சமூக உளவியலை இழைத்துச் செய்தது. புனிதவதி யைப் பிரிவதே எண்ணமாக, எவர்க்கும் தன் எண் ணத்தைக் கூறாது அதை மிகச் சிறப்பாகச் செயல் படுத்துகிறான். வணிகம் செய்வதாய்ச் சென்று பொருள் ஈட்டி, பாண்டிநாட்டில் தங்கி, வணிகம் மேற்கொண்டு, அங்கேயே மறுமணம் புரிந்து பெண்பிள்ளை ஒன்றைப் பெற்று ஏற்கனவே அவன் திட்டமிட்டபடி அப்பெண் குழந்தைக்குப் புனிதவதி என்று பெயரும் இடுகிறான். (ஒருவேளை ஆண்பிள்ளையாகப் பிறந்து இருந்தால் புனிதன் என்று பெயர் வைத்திருப்பான்). புனிதவதி யைத் தான் தெய்வமாக நினைப்பதற்கு அக்குழந்தை யின் பெயரைச் சாட்சியாக நிறுத்துகிறான்.

சுழலைத் தன்மையப்படுத்தும் ஆணதிகாரம்

குடும்பத்தின், சமூகத்தின் தலைமைப் பாத்திரமாகத் தன்னை நிலைநிறுத்தும் ஆண், பெண்ணுக்கேயான எந்தச் சூழ்நிலையையும் தன்வயப்படுத்தித் தன்னை மையமிட்டு அமையுமாறு செய்து ஆதாயப்படுத்திக் கொள்ள அஞ்சுவதில்லை. இந்தப் போக்கை இச்சமூக மும் தவறாகவோ நியாயமற்றதாகவோ பார்த்ததில்லை.

பாண்டிநாட்டுத் தலைநகரில் பரமதத்தன் மறுமணம் புரிந்து வாழ்வது அறிந்து புனிதவதியும் அவருடைய சுற்றத்தாரும் அங்கு வந்து சேர்ந்ததை உறவினர்வழி அறிந்த பரமதத்தன் பிசிறே இலாத தன் நேர்மையை ஏற்கனவே திட்டமிட்டபடி நிரூபிக்கவேண்டிய நேரம் வந்ததை உணர்ந்து மிக நிதானமாகச் செயல்படுகிறான். அச்ச உணர்வை முகத்தில் தேக்கிக்கொள்கிறான். ஒரு கையில் மனைவியையும் மறுகையில் மகளையும் பிடித் துக்கொண்டு விரைந்து சென்று சுற்றத்தாருடன் நின்ற புனிதவதிமுன் தலைவணங்கி நான் உமது அருளால் வாழ்வேன்' என்று புனிதவதியைத் தான் தெய்வமாக வழிபடுவதாகவும் ***இவ் இளம் குழவி தானும் பான்மை யால் உமது நாமம்*** என்று தன் பிள்ளையைச் சான்று காட்டிக் கூட்டத்தார் உளநிலையைச் சிதறடித்து, குழப் பத்தில் ஆழ்த்தி, தன் பக்கம் திருப்ப முயல்கிறான். பிறகு புனிதவதியின் காலில் நெடுஞ்சாண்கிடையாகக் குடும்பத்தோடு விழுகிறான். இப்படியாகக் கூட்ட மனத் தாக்குதல் (mass emotional attack) செய்கிறான்.

ஒரு பெண்ணுக்கான நியாயத்தை மீட்டெடுக்க மறந்து -திராணியற்று, ஆணின் அதிகாரத்தை நிலைநாட்ட வேண்டிய இடத்திற்கு ஆண்மையச் சமூகத்தின் தன் முனைப்பை (mass ego) முடுக்கிவிடுகிறான். 'மனைவிக் குத் துரோகம் செய்தவனே! காலில் வீழ்ந்தா மழுப்பப் பார்க்கிறாய்?' என்று கோபப்படத் துப்புக்கெட்ட அந்தச் சமூகம் 'மனைவியின் கால்களில் கணவன் விழலாமா? என்று கொந்தளிக்கிறது. மீண்டும் தன் களவாணித் தனத்தை நாகரிகமாக-தெய்வீகமாக நியாயப்படுத்துகி றான். ஆன்மீகத்தில் ஆர்வம் கொண்ட புனிதவதியை ஆன்மீகத்தையே ஆயுதமாக்கி வீழ்த்துகிறான் பரம தத்தன்.

மற்றவர் தம்மை நோக்கி மானுடம் இவர்தாம் அல்லர்
நற்பெரும் தெய்வம் ஆதல் நானறிந்து அகன்ற பின்பு;
பெற்ற இம்மகவு தன்னைப் பேரிட்டேன் ஆதலாலே
பொற்பதம் பணிந்தேன்; நீரும் போற்றுதல் செய்மின் (பா.46) என்று புனிதவதிக்காகப் போராட வந்தவர் களையே தன்தரப்பு ஆதரவாளர்களாக மாற்ற உத்தி மேற்கொள்கிறான் பரமதத்தன். சுற்றாத்தாரும் ***இது என்கொல்*** எனக் குழப்பத்தில் தடுமாறுகிறார்கள். தனக்கு எதிரான கூட்ட மனநிலையைச் சிதறடித்து வெற்றி காண்

கிறான் பரமதத்தன். சுற்றத்தாரும் தொழுதகன்று போயினர்.சுழலைத் தன்வயப்படுத்தும்- தன்மையப்படுத்தும் ஆற்றாலால் மிகச் சிறப்பான வெற்றி காண்கிறான்.

உடலைக் கடக்கும் பெண் துணிவு

பெண் உடலைப் பெண்ணுக்கு எதிரியாக இச்சமூகம் ஆக்கிவைத்துள்ளது. பெண் உடல் பாதுகாப்பற்றதாக, அபகரிக்கத்தக்கதாகப் பெண்ணை அச்சுறுத்துகிறது.

கணவனால் கைவிடப்பட்ட பெண்ணாக-ஆண்மையச் சமூகத்தால் வஞ்சிக்கப்பட்ட பெண்ணாகத் துறவறம் மேற்கொள்ளும்புனிதவதி, உடல் இளைத்துப் பேரழகு விடுத்து எலும்புக்கூடாய்ப் பேய் வடிவம் கொண்டு, கண்டார் அஞ்சி ஒதுங்கும் தோற்றத்தைத் திட்டமிட்டே தனக்கு ஆக்கிக்கொண்டு உடலைக் கடக்கிறார். பெண் உடல் அழகைப் போற்றிக் காக்கும்-புனிதப்படுத்தும் ஆண்மையச் சமூகத்தின் பொதுபுத்தியை அச்சுறுத்திக் கேலி செய்கிறார்.பேய் வடிவை விமர்சிக்கும் பேச்சை அலட்சியம் செய்கிறார்.

கண்டவர் வியப்புற்று அஞ்சிக் கையகன்று ஓடுவார்கள்
கொண்டது ஓர் வேடத் தன்மை உள்ளவாறு கூறக் கேட்டே
அண்டர் நாயகனாரென்னை அறிவரேல் அறியாவாய்மை
எண் திசை மாக்களுக்கு யான் எவ்வுருவாயின்என் (54)

என்று தன் பேரழகைக் கொண்டாடிய தன் நியாயங்களைப் புரிந்துகொள்ள-மீட்டெடுக்கக் கையாலாகாத ஆண்மையச்சமூகத்தை வெறுத்துச் சாடுகிறார். அண்மையச் சமுகத்திற்கான அடையாளங்களைத் துறந்து தன் சுயத்தைப் பிரகடனப்படுத்தும் உடல் அரசியலை முன்னெடுக்கிறார் புனிதவதியார்.

கோதை காதலும் சமூகக் கட்டுமானத் தகர்ப்பும்

பெண்,காதல்கொள்வதை இந்தச் சமூகம் இயல்பாய்ப் பார்க்கவில்லை; பெண் தன் காதலை வெளிப்படுத்துவதையும்தன் காதலுக்காகப் போராடுவதையும் இந்தச் சமூகம் பண்பாட்டுக் குறைவாக, பண்பாட்டுச் சீர்கேடாகப் பார்த்துள்ளது. இதனைத் தொல்காப்பியரின் மடல் பற்றிய கருத்துக்களாலும் அறிய முடியும்.

எத்திணை மருங்கினும் மகடூஉ மடல் மேல்
பொற்புடை நெறிமை இன்மையான (தொல். பொருள். 35)
கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க தில் (1173) என்கிறார் வள்ளுவரும்.

ஒரு பெண்ணின் பெற்றோர் விரும்பாதபோதும் அந்த ஆடவனை ஏற்க அந்தப் பெண்ணே விரும்பாதபோதும் 'மடலேறுவேன்' என்று மிரட்டி அவன் அவளை வாழ்க்கைத்துணையாக அடைய முடியும். ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் இப்படியான போரட்டத்தைப் பெண் தன் காதலுக்காக முன்னெடுக்கக்கூடாது .

நாட்டுப்புறப் பெண் தெய்வங்கள் ஏதோ ஒரு வகையில் புரட்சிக்காரர்களாகச் சமூகக் கட்டுகளை மீறுபவர்களாகச் செயல்பட்டதன் விளைவாகக் கொலை செய்யப்பட்டவர்களாக உள்ளனர். காலப்போக்கில் இவர்களது பழிவாங்கலுக்கு அஞ்சிக் கடவுளாக்கப்பட்டுள்ளனர் (த. விஜயலட்சுமி, பெண் நிலை நோக்கு, ப. 128).

பெண்ணை உயிரோடு எரிக்கும் கொடுரச்செயல் இச்சமூகத்துக்குப் புதிதல்ல. கணவன் இறந்தால் மனைவியும் உயிர்விடவேண்டும் என்ற இச்சமூகத்தின் கொடிய மனப்பான்மை விலங்குகளில்கூட ஏற்றி இலக்கியம் செய்யப்பட்டுளதைக் குறுந்தொகைப் பாடலால் அறியலாம்.

கருங்கட் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர்செகுக்கும்
சாரல் நாட! நடு நாள்
வாரல்; வாழியோ! வருந்துதும் யாமே! (குறுந். 69)

இப்பாடலை இயற்றிய புலவன் 'கருங்கட்கர வீரன்' என்ற பெயரையும் பாடலோடு ஒப்பிட்டு ஆண் மன நிலையை மதிப்பிட வேண்டியுள்ளது.

கணவன் இறந்துவிட்டால் மனைவி உடன்கட்டை ஏறும் போதுதான் அவள் 'சதி' அதாவது மனைவி என்ற பெருமையைப்பெறுவதாகப் பெண்ணுக்கான பெருமைகளையும், ஆணுக்குச் சாதகமாக வகுத்துச் செயல்படுத்த வழிவகை செய்துள்ளது உடைமைச் சமூகம்.

ஓர் ஆண் இறந்துவிட்டால் பெண்ணையும் கூடவே சேர்த்துக் கட்டிச் சுடுகாட்டிற்குக் கொண்டு செல்வார்கள். பெரிய கொம்போடு ஒரு பலமான ஆள் கூடவே செல்வான். கைகால்களைத் திமிரினால் தன் கையில் கொண்டுள்ள பெரிய கழியால் அப்பெண்ணை அடிப்பான். சுடுகாட்டில் கால்களைக் கட்டி அப்பெண்ணை அவனோடு சேர்த்துத் தீயிட்டு எரிப்பார்கள். தப்பித்து ஓட முயற்சி செய்தால் ஓடிப்பிடித்துத் தீயில் போட்டு எரிப்பார்கள்... (பெரியார் பேச்சு-வலைஒளிSelf Respect, Thanthai Peryar Speech, Marriage. https://youtu.be/2rQJ4eLXxnl) என இச் சமூகத்தின்அவலநிலையைப் பெரியார் சுட்டிக் காட்டுகின்றார்.

புறநானுற்றில் மகளிர் தீப்பாய்தல் குறித்த பாடல்கள், போரில் இறந்துபட்ட விரர்களின் மனைவியர் தீப்பாய்ந்ததைப் பதிவுசெய்துள்ளது. கைம்மைநோன்பு உடன்கட்டையைவிடக் கொடியதாக இருந்துள்ளதைப் புறநானூற்றில் பெருங்கோப்பெண்டின் பாடலால் அறியலாம். தன் கணவன் பூதப்பாண்டியன் இறந்தபொழுது உடன் கட்டையைத்தடுக்க முயன்றோரைப் பார்த்து இவ்வாறு பதில் உரைக்கிறார்.

பல்சான்றீரே! பல்சான்றீரே!
செல்க எனச் சொல்லாது, ஒழிக என விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே!
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந்திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடைஇடைக் கிடந்த கைபிழிப் பிண்டம்
வெள்எள் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளைவெந்தை வல்சி ஆக
பரல்பெய் பள்ளிப்பாய் இன்றுவதியும்
பெண்டிரேம் அல்லேம் மாதேர்

பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கு அரிதாகுக தில்ல் எமக்கு எம்
பெருந்தோள் கணவன் மாய்ந்தென, அரும்பு அற
வள்இதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயும் ஓரற்றே! (புறநா. 246)

உடன்கட்டையைவிடக் கைம்மை நோன்பு கொடியது மட்டுமல்ல அவமானகரமானது; பெண்ணின் சுயத்தைச் சிதைப்பது என்பதை இப்பாடல் பதிவுசெய்துள்ளது. பல்வேறு சடங்குகளோடு பெருங்கோப்பெண்டின் உடன்கட்டையேறல் நடந்ததை மதுரைப் பேராலவாயார் பதிவு செய்துள்ளார்.

யானை தந்த முளிமர விறகின்
கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து
மடமான் பெருநிரை வைகுதுயில் எடுப்பி
மந்திசீக்கும் அணங்குடை மூன்றிலில்
நீர்வார் கூந்தல் இரும்புறம் தாழப்
பேரஞர்கண்ணள் பெருங்காடு நோக்கி
தெருமரும் அம்ம தானே - தன் கொழுநன்
முழுவுகண் துயிலாக் கடியுடை வியனகர்ச்
சிறுநனி தமியள் ஆயினும்
இன்னுயிர் நடுங்குந்தன் இளமைபுறங் கொடுத்தே!
(புறநானூறு 247)

ஒரு அரசிக்கே கைம்மை நோன்பு தவிர்க்க முடியாதது,தப்பிக்க முடியாதது என்றால் சராசரி குடிமகளின் அவலநிலையைச் சிந்திக்க வேண்டியதுள்ளது. இலையின் மேலிட்ட கைப்பிடி அளவு பழைய சோற்றை, நீரை நீக்கிவிட்டு வெள்ளெருக்குத் துவையலைத் தொட்டுக்கொண்டு சிறிது புளியைச் சேர்த்துக்கொண்டு வெந்ததும் வேகாததுமான உணவை உண்ண வேண்டும்; பரற்கற்கள் நிறைந்த கட்டாந்தரையில் படுக்க வேண்டும்;இப்படிப்பட்ட கொடுமையான வாழ்வை விரும்பி ஏற்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டனர். இதில் அரசியும்கூட விதிவிலக்கல்ல. ***இத்தகைய இழிவான வாழ்க்கையை விரும்பி ஏற்கும் பெண் அல்ல நான்*** என்று அவள் உடன்கட்டையைத் தேர்ந்தெடுக்கிறாள். இவ்வாறாகத்தான் உடன்கட்டை ஏறியதையும் அதற்கான காரணத்தையும் எழுதிவைத்தவள் இவள் ஒருத்தியே. இது உடைமைச் சமூகத்திற்கு எதிரான மரண வாக்குமூலம். இந்த உலகிற்கு இறுதியாக அவள் சொல்ல நினைத்ததை-ஆதங்கத்தைத் தமிழ் உள்ளவரை உலகம் அறியவேண்டும் என்பதற்காகப் பெண்ணின் சுயத்தை சீர்குலைக்கும் இச்சமூகக் கட்டமைப்பைக் கருப்பு எழுத்துக்களால் வைராக்கியத்தோடு பதிவுசெய்திருக்கிறாள். தமிழர் வரலாற்றில் மன்னன் இறந்தபின் அவன் மனைவி நாடாண்டதுபிற்காலத்தில்தான்; அதுவும் வேலு நாச்சியார், ராணி மங்கம்மாள் போன்ற மிகச்சிலரே.

புருஷன் இறந்துவிட்டால் பெண் விதவை என்று அழைக்கப்படுவாள். புருஷன் இறக்கும்போது அவள் எவ்வளவு செல்வத்துடன் மேன்மையாக இருந்தாலும் கணவன் இறந்தவுடன் அவள் ஒரு 'அபசகுன உருவமாக' ஆகி விடுவாள். நகை அணியக்கூடாது; புஷ்பம், வாசனை, நல்ல உடுப்பு ஆகியவை அணியக்கூடாது. ஒரே வேளை - சத்தற்ற ஆகாரம்தான் சாப்பிடவேண்டும்; சில வகுப்புகளில் தலை மொட்டை அடித்து, வெள்ளை உடுப்பு அணிந்து கொண்டு வீட்டிற்குள்ளாகவே வீட்டு வேலைகள் செய்து கொண்டு இருக்க வேண்டும். விதவையைக் காணுவது அபசகுனமாகப் பாவிக்கப்பட்டது. விதவைக்குக் குடும்ப காரியங்களில் அல்லது சடங்குகளில் எவ்வித பாத்தியமும் கிடையாது. சாப்பாட்டுக்கு மட்டும் பெற பாத்தியம் உண்டு. வேறு கலியாணம் செய்துகொள்ளக்கூடாது. (பெரியார் இன்றும் என்றும், ப. 296).

இவ்வாறாகப் பெண்கள் கணவனுக்காக வாழ்ந்து அவன் இறந்தபோது உடன்கட்டை ஏறிச்சாக வேண்டும் அல்லது கைம்மை நோன்பு நோற்று உணர்வுகளைக் கொன்று உயிர் வாழவேண்டும்என்ற குரூரம் வேரோடிக் கிடந்த காலக்கட்டத்தில்தான்-பெண் உடலின்மீது, உணர்ச்சிகளின்மீது கொடூரத்தாக்குதல் நிகழ்த்திய ஆண்மையச் சமூகத்தில்தான் கோதை தன் உடல், மனம் மானிடர்க் கானவை இல்லை என்று பிரகடனம் செய்தாள். அவள் உடலைக் கடக்கவில்லை, உணர்வைத் துறக்கவில்லை. அவற்றைக் கவி செய்து கொண்டாடுவதன் மூலம் ஆணாதிக்கச் சாதியச் சமூகத்தை வெறுப்பேற்றிக் களி கொண்டாள். மரபுகளைக் கட்டுடைத்து, மீறி ஆண் மையச் சமூகத்திற்குஅதிர்ச்சியூட்டினாள். உடலை முன் வைத்துக் கோதை செய்த கலக அரசியல் உடல்புனிதத் தைக் கட்டுடைக்காமல் சமூகத்தைப் புறக்கணிப்பதாக அமைந்தது.

வானிடை வாழுமவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திரிவதோர் நரி புகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப ...
. . . .
*மானிட வர்க்கென்று பேச்சுப்படில் (நாச்சியார் திருமொழி 5)*என்று கோதை பாடுவதால் இக்கருத்து விளங்கும்.

பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தையான கோதைக்குக் கணவன் மனைவியாக வாழ வேண்டும் என்று இல்வாழ்க்கையில் நாட்டமிருந்திருக்கிறது; மனிதர்கள் மீது நம்பிக்கை இல்லை, குலம் கோத்திரம் தலைவிரித்தாடிய அக்காலக்கட்டத்தில் குழந்தை கோதையோடு அக்கம்பக்கத்து வீட்டுச் சிறுபிள்ளைகள் விளையாட அனுமதிக்கப்பட்டார்களா என்பது கேள்விக்குறிதான். ஆயர்பாடியில் ஆயர்குடிப் பெண்பிள்ளைகளோடு தான்பாவைநோன்புநோற்பதாகவும் கற்பனை செய்து கொள்கிறாள். சிறுவயதில் கண்ணன் தன்னோடு விளையாட வருவான் என்று நம்ப வைக்கப்பட்ட கோதை தன் இளமைப் பருவத்தில் கண்ணன் காதல் கொள்ள வருவான் என்று ஏங்கும் வரைக்கும்கூட அவளுக்கு சாதியச் சமூகத்தால் வெற்றிடம் நிர்பந்திக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக,

உனிடை யாழி சங்கு உத்தமர்கென்று
உண்ணித்தெழுந்த என் தடமுலைகள்
மானிடவர்க்கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே (நாச்சியார் திருமொழி 5) என்று கோதை தன் உணர்ச்சிக்கு

அணைகட்டிக்கொண்டதும் கண்ணனோடு திருமணம் நடந்ததாகக் கனவியதும் வியப்பில்லை.

சோலோகமி (sologamy wedding) என்ற தன்னைத் தானே திருமணம் செய்துகொள்ளும் முறை இப்போது ஆங்காங்கே தலைதூக்கி உள்ளது. குஜராத் மாநிலம் பஜோராவில் வசிக்கும் 24 வயது ஷியாமா பிந்து 11. 6. 2022 அன்று தன்னைத்தானே மணந்துகொள்ளப் போவதாக அறிவித்து, சமூகம் எதிர்ப்பு தெரிவிக்கவே முன்கூட்டியே 8.6.2022 அன்று திருமணம் செய்து கொண்டார். மணப்பெண்ணாகத் திருமணம் செய்து கொள்ளத் தனக்கு ஆர்வம் இருந்தும் குடும்பம் என்ற நிறுவனத்தில் ஆர்வம் இல்லை என்பதே இதற்குக் காரணம் என்கிறார் ஷியாமா பிந்து. ***கண்ணாடியில் என்னைத் தனியளாக, தனித்துவமானவளாக முகம்பார்க்க விரும்புகிறேன்*** என்கிறார் அவர்.பெற்றோர் உறவினர் சம்மதத்துடன் அனைவரும் வாழ்த்த இந்து திருமணச் சட்டத்தின்படி இத்திருமணம் நடந்துள்ளது. **(”WILL NEVER LEAVE MY OWN HAND,” SAYS GUJARAT WOMEN COMMITTING TO SOLOGAMY / THE QUINT YOUTUBE)** இது இன்றளவும் ஆண்மையச் சமூகத்தின்மேல் உள்ள நம்பிக்கையின் மையை வெளிக்காட்டுகிறது.

உத்திரபிரதேசம் லக்னோவைச் சார்ந்த ஹர்மேந்தர் கவுர் என்ற 28 வயது பெண், தான் பார்வதி என்றும், சிவனைத் திருமணம் செய்துகொள்ளப் போவதாகவும் இமயமலையின் ஓம் பருவத் பகுதியில் காத்திருந் தார். அவர் தாயாரும் தன் மகளுக்கும் சிவனுக்கும் திருமணம் செய்துவைக்க உடன் வந்திருந்தார். இந் தியா, நேபாளம், சீனா ஆகிய மூன்று நாடுகளை அச்சத்தோடு கூர்ந்து கவனிக்கவைத்த இச்செய்தியை உலகம் அறியும். இவர் கனவில் சிவன் வந்ததாவும், 2022 ஜூன் 28ஆம் தேதி ஓம்பர்வத் மலைக்குச் சிவன் வந்து தன்னை மணந்துகொள்ளப்போவதாகவும் கூறி ஏப்ரல் 23முதல் 15 நாட்கள் பிடிவாதம் செய்த அவர் எல்லைப் பாதுகாப்புப் படையால் தீவிர விசா ரணைக்கு உட்படுத்தப்பட்டுப் பின் அங்கிருந்து அப் புறப் படுத்தப்பட்டார் **(Madan Gowri, https://youtu.be/wxc2aIyumQs)**. கோதைக்கு நேர்ந்தது கவுர்க்கு நேரவில்லை; அடிப்படைவாதிகள் அங்கு இல்லை என்பது ஆறுதல்.

வித்தகன் வேங்கடவாணன் என்னும்
விளக்கினில் புக வென்னெய்
விதிக்கிற்றியே (நாச்சியார் திருமொழி 1..3)

திருவேங்கடமுடையான் என்று சொல்லப்படும் விளக்கினில் நான் சேருமாறு என்னை நீ நியமிக்க வேண்டும் என்று காமனை வேணடுகிறாள். சாதியச் சமூகம் அதையே ஆயுதமாகக் கையிலெடுத்ததுதான் நயவஞ்சகம். தன் ஒரு மகளை யசோதை மைந்தன் கொண்டு சென்ற தாகவே பெரியாழ்வாரும் நம்புகிறார் (பெரியாழ்வார் திருமொழி 4). திருவரங்கப்பெருமான்சன்னதியில் தன் வாழ்வு முடியுமென்று கோதை நினைத்திருக்கமாட் டாள். கோயிலுக்குள்ளும் பெண்களுக்கு, பெண்குழந் தைகளுக்கு எது நடந்தாலும் தெய்வம் கேட்காது என்பது உலகம் அறிந்தது.

பெண் தன் உணர்வுகளைக் கொன்றுவிட்டால் கணவன் கைவிட்டாலும் இறந்துபட்டாலும் துறவியாகவோ கைம் பெண்ணாகவோ உயிர்வாழலாம். தன் காதல், காமம் கொண்டு அதை வெளிப்படுத்தவோ, வாழ்வதற்கோ இச்சமூகம் இடம் தரவில்லை.

புனிதவதியும் கோதையும் சமத்ததுவமற்ற இந்த உடை மைச்சமூகத்தின்மீது நம்பிக்கையற்றவர்களாகக் காணப் படுகின்றனர். கணவனால் கைவிடப்பட்டபிறகு நியாயம் கேட்டு நாகப்பட்டினம் போகாது தஞ்சம் வேண்டிக் காரைக்காலுக்கும் போகாது மனிதர்கள்மீது நம்பிக்கை யற்றவராகப் புனிதவதி இறைவனைத் தேடி இமயம் செல்கிறார். ***எண்டிசை மாக்களுக்கு யான் எவ்வுருவாயின் என்*** என்று கோபப்படும் குரலும் மக்கள் என்று குறிப் பிடாது மாக்கள் எனக் குறிப்பிடுவதும் அவர்கள் மனிதத் தன்மையற்றவர்கள் என்று புலப்படுத்துவதாக உள்ளது. ***மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்*** என்று கோதையும் சமூக வெறுப்பைப் பதிவுசெய்கிறார்.

புனிதவதி தன் கணவன் கைவிட்டபின் தான் மறுமணம் செய்துகொள்ள வேண்டுமென முடிவெடுத்திருந்தால் தன் சுற்றத்தாரால் ஆணவக்கொலை செய்யப்பட்டிருப் பார்.

கோதை கண்ணன்மீது கொண்ட காதலால் காமம் பாடாது பக்திகொண்டு துறவைப் பாடியிருந்தால் - துறவை முன்னெடுத்திருந்தால் கோதை கொல்லப்பட் டிருக்கமாட்டாள்.

புனிதவதியின் துறவும் கோதையின் காதலும் தம் உயிர் காக்க-அண்டிப்பிழைக்க எடுத்த முடிவல்ல. உடைமைச் சமூகத்தின் குரூர முகத்தின்மீது வீசப்பட்ட வாள். தன் உறவினர்களால் கொண்டாடப்பட்ட பேரழகோடு விளங்கிய புனிதவதியார், தம் உடலைக் கடந்ததன் மூலமும், சாதியச் சமூகத்தால் கேள்விக்குட்படுத்தப் பட்ட பிறப்பைஉடைய கோதை, தன் உடலைக் கொண் டாடுவதன் மூலமும் *என் உடல் எனக்கானது* என்ற பிரகடனத்தை முன்வைத்த பெண்களாக உடைமைச் சமூகத்தை வஞ்சம் தீர்த்தனர்.

தம் இருப்பை நிலைநாட்டிப் புரையோடிப்போன ஆண் மையச் சமூகத்தின் ஆதிக்க மனநிலையை வேரறுக் கச் சுயம் காக்கும் உத்தி மேற்கொண்டனர்.

துணை நூல்கள்

1. பெரியார் இன்றும் என்றும், விடியல் பதிப்பகம், கோயம் புத்தூர், 8 ஆம் பதிப்பு, 2021.
2. த. விஜயலட்சுமி, பெண் நிலை நோக்கு, சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2021-
3. இஸ்க்ரா (மொ.பெ.ஆ), காலத்தின் குரல், கிழக்குப் பதிப் பகம், சென்னை, மு.ப., 2022.
4. கீதா சுகுமாரன் (மொ.பெ.ஆ), தற்கொலைக்குப் பறக்கும் பனித்துளி, காலச்சுவடு பதிப்பகம், சென்னை, மு.ப., 2023.

ISSN 2320-4842

மகாகவி காளிதாசன் கடன் வாங்கிய சங்க இலக்கியங்கள்

முனைவர் மு. அருணாசலம்
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சி

மகாகவி காளிதாசன் இந்தியத் துணைக்கண்டத்தில் **'கவிக்குல குரு' 'கவிகளின் ஆசான்' 'உபமான வித்தகர்', 'உபமான கவிஞர்'** என்று போற்றப்படுபவர். பாரத துணைக்கண்டத்தின் நீள அகலங்களை நன்கு அறிந்தவர். வடமேரு மலையிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை பயணம் மேற்கொண்டதால் அவரது படைப்புகள் செழுமையும் வளமையும் பெற்றுத் திகழ்கின்றன. ***காளிதாசர் மனிதனிலும், இயற்கையிலும் இருக்கும் அழகுகளை ரசிக்கத் தவறாத கண்களை உடையவர். சுருங்கச் சொன்னால், அவர் அசைகின்ற தேர் அல்லது ஓடுகின்ற மான், பறக்கும் முனிவர் அல்லது அழும் தேவதை, ஒரு மலரும் மலர் அல்லது எழுகின்ற நிலவு ஆகிய எதன் வாழும் உருவத்தையும் உள்ளதை உள்ளவாறே (தத்ரூபமாக) சிறைபிடிக்க வல்லவர்*** என்று புகழப்படுகிறார்.

தமிழின் சங்க அக இலக்கியங்களின் செல்வாக்கு மகாராஷ்ட்ரி பிராகிருதத்தில் உண்டு. சான்றாக ஹால தொகுத்த 'காஹா சத்தசஈ' ஆந்திரா நாட்டின் அகநானூறு என்றழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இதன் தொடர்பாலும் தாக்கத்தாலும் வடமொழிக் கவிதைகள்மீது சங்கப்பாடல்கள் குறிப்பாக அகப்பாடல்கள் ஆளுமையும் தாக்கமும் செய்துள்ளன. காளிதாசன்மீதும் சங்க அகப்பாடல்கள் செல்வாக்கு செலுத்தி அவன் படைப்புகளுக்குச் செழுமை கூட்டியுள்ளன. ***சங்கச் சான்றோர்கள் செய்த செய்யுட்களின் சிறப்பை முதலில் தெரிந்துகொண்ட வேற்றுமொழி அறிஞர் காளிதாசனாக இருக்க வேண்டும்.*** கி.பி. 3 அல்லது 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவனாகக் கருதப்பெறும் நவரத்தினக்கவிஞர் காளிதாசன் சங்க இலக்கியங்களிலிருந்தும் சிலப்பதிகாரத்திலிருந்தும் *மொண்டுகொண்ட அகப்பைகள்* மிகப்பல என்று சிகாகோ பல்கலைக்கழக வடமொழிப்பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட் சான்றோர் கவிதைகளுக்குக் காளிதாசன் கடன்பட்டிருக்கும் நிலையினைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சங்க இலக்கியங்களில் வருகின்ற உவமைகள் இயற்கையிலிருந்து பெறப்பட்டவை; செயற்கைத்தன்மை அற்றவை; சங்கக் கவிஞர்களின் இயற்கை பற்றிய வியத்தகு அறிவை பறைசாற்றுபவை. ஐந்திணைக்குரிய கருப்பொருளிலிருந்து உரிப்பொருளுக்கேற்றவாறு உவமைகளைக் கையாள்வதில் சங்கச் சான்றோர்கள் வல்லவர்கள். இவர்களிடமிருந்து காளிதாசன் கற்றுக்கொண்ட பாடத்தால் உவமைக்குக் காளிதாசன் (உபமான காளிதாசா) என்ற பட்டத்தைப் பெற முடிந்தது. இல்பொருள் உவமைகளைக் குறைவாகவே கையாளுவதும் அவன் தமிழ்க் கவிஞர்களிடமிருந்து கற்றுக்கொண்டதே என்கிறார் பேராசிரியர் மருதநாயகம்.

காளிதாசன் சங்க அகப்புறப்பாடல்களிலிருந்து கடனாகப் பெற்றுக்கொண்ட கருத்துக்களையும், உவமைகளையும், தாக்கத்தினையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

முருகன் ஒப்பீடு

தமிழின் குறிஞ்சித்திணைக்குரிய கடவுள் சேயோன் என்றழைக்கப்படும் முருகன். போர்க் கடவுள். களவுக் காதலின் கடவுளாகவும் சங்க இலக்கியங்களில் போற்றப்படுபவன். காளிதாசன் படைத்த 'குமாரசம்பவம்' என்னும் காவியத்தில் சங்கப்பாடல்களான பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகியவற்றின் தாக்கம் உண்டு. சங்க அகப்பாடல்களில் முருகனை **இளமை, அழகு, வீரம்** ஆகியவற்றோடு சித்திரிப்பதுபோன்று காளிதாசனும் முருகனை இம்மூன்றின் உருவகமாகக் காண்கின்றான். சங்ககால மன்னர்களை முருகனோடு ஒப்பிடுவது சங்கப் புலவர் மரபாகும். காளிதாசன் ரகுவம்ச காவியத்தில் ரகுவம்ச மன்னர்களை எல்லாம் குமரனோடு ஒப்பிட்டுப் புகழ்கின்றான். சான்றாக, ரகு இந்திரனைத் தாக்கும்போது போர்க்கடவுள் முருகனின் ஆற்றல் செயலோடு இணைத்து அவன் வீரத்தைப் புகழ்கின்றான்.

தோளெல்லாம் சித்திரங்கள், இந்திராணி இந்திரன்மேல்
நாளும் முகம் சாய்த்தே ஒட்டியதோ? மேலுமேலும்
தேவரின் சேனைத்தலைவன் முருகன்போல்
யாவும் எண்ணிப் போட்டானே அம்பு என்று அசுவமேத யாகத்தினைத் தடுக்க வந்த இந்திரன்மீது ரகு எய்த அம்புகள் இந்திரன்மீது இந்திராணி வரைந்த சித்திரங்கள்போன்று அம்பினால் வரையப்பட்ட ஓவியமாக இருப்பதாக ரகுவின் போராற்றல் முருகனோடு இணைத்துச் சிறப்பிக்கப்படுகின்றது. முருகன் வீரத்தை ரகுவம்ச மன்னர்களோடு இணைத்துக் காளிதாசன் பாடுவதற்குச் சங்கப் புறப்பாடல்கள் துணைபுரிந்துள்ளன. முருகனின்

ISSN 2320-4842

சீற்றம்போன்று போர்க்களத்தில் சீற்றம் மிக்கவனாகச் **சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி போற்றப்படு கின்றான்.** குதிரைப்படை, யானைப்படைமூலம் பகைவர் நாட்டை எரியூட்டி அழிப்பவன்.

துணை வேண்டாச் செரு வென்றிப்,
புலவு வாள் புலர் சாந்தின்
முருகன் சீற்றத்து, உருகெழு குரிசில் (புறம்.16) என்று பாண்டரங்கண்ணனார் துணை வேண்டாது, தனித்தே போரிடும் பெரிய படை வலுவும், புலால் நாற்றம் நாறும் கொலை வாளும், பூசிப் புலர்ந்த சந்தனமும், **முருகனைப் போன்ற வெஞ்சினமும் பெற்று அச்சம் ஊட்டும் தலைவனாக** இருப்பவனாகக் கூறுகின்றார். பொருநராற்றுப்படையில் கரிகால் பெருவளத்தானின் போர்ச்சீற்ற ஆற்றலை முடத்தாமக்கண்ணியார் முருக னோடு, ஒப்பிடுகின்றார். ***முருகற் சீற்றத்து உருகெழு குரிசில் (பொருந. 135)*** என்று வளவனின் போர்கள ஆற்றல் எடுத்துரைக்கப்படுகின்றது.

காளிதாசன் ரகுவம்ச மன்னர்களை எல்லாம் முருக னோடு ஒப்பிட்டு பேசுவது போன்று பாண்டியர் குல மன்னர்களான தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன் மாறன், அவனது மக்கள், ஏறைக்கோன் ஆகியோரை முருகனோடு ஒப்பிட்டுப் புறப்பாடல்கள் பேசுகின்றன. நன்மாறனை மதுரை நக்கீரர்,

கூற்றுஒத் தீயே; மாற்றுருஞ் சீற்றம்
வலிஒத் தீயே; வாலி யோனைப்;
புகழ்ஒத் தீயே; இகழுநர் அடுநனை
முருகுஒத் தீயே; முன்னியது முடித்தலின் (புறம்-56) என்று சினத்தால் கூற்றத்தையும், வலிமையால் பலரா மனையும், எண்ணியது முடித்தலால் முருகவேலினை யும் ஒப்பவனாய் என்று போற்றுகின்றார்.

மன்னர்களை முருகனோடு ஒப்பிடும் சங்கப் புலவர் மரபைக் காளிதாசன் சங்கப் புறப்பாடல்களிலிருந்து பெற்றிருத்தல் வேண்டுமென்பது உறுதிபடுத்தப்படுகின் றது.

நீர்நிலைகளைப்பெருக்கிவேளாண்மைக்கு வழிகோலல்

விவசாயத்தையும் காடுகளை அழித்துச் சாகுபடிக்கா கப் புதிய நிலங்களை உருவாக்குவதை இரும்பு சாத் தியப்படுத்தியது. எந்தக் கல்லும் அப்போது அறியப்பட் டிருந்த எந்த உலோகமும் எதிர்நிற்க முடியாத அளவு கடினமும் கூர்மையும் பெற்ற கருவிகளை அது தொழில் செய்பவனுக்குத் தந்தது என்கிறார் எங்கெல்ஸ். அரச னுக்குரிய முக்கிய கடமைகளுள் ஒன்றாக நீர்வாழிடங் களை உருவாக்குதல் அமைகிறது. நீர்நிலைகள்வழி யாக வேளாண்மையைப் பெருக்கி நாட்டை வளப் படுத்துகின்றனர். இதனால் நாடும் மக்களும் நலமும், வளமும் பெற்றுச் சிறக்கின்றனர். நாடும் செல்வநிலை யில் செழித்துப் பொருள் வல்லமையுடையதாக உயர் கின்றது. புறநானூற்றில் **குடபுலவியனார்** நீர்நிலைகளைப் பெருக்கிட **பாண்டியன் நெடுஞ்செழியனை** வலியுறுத்துகி றார்.

அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண் தட்டோரே
தள்ளா தோர் இவண் தள்ளா தோரே (புறம்.18) என்று நீர்தடிந்து குளம் தொட்டு வளத்தினைப் பெருக்குவா யாக. இது செய்தோர் மூவகை இன்பமும் பெற்றுப் புகழடைவர். அல்லாதோர் புகழ் பெறாது மடிவர். ***வேளாண் பெருக்கமே மன்னர்களுக்கு வலுவும் புகழும் சேர்த்திடும்*** என்கின்றார். பட்டினப்பாலையில் **கடியலூர் உருத்திரங்கண்ணனார் கரிகால்பெருவளத்தானை *ஆய் புனல் நீர்நாடன்*** என வாழ்த்துகின்றார். சோழ மண்ட லத்தில் நீர்வாழிடங்களை உருவாக்கி **நிலைத்த புகழ் பெற்றவன்** எனப் பதிவுசெய்கின்றார். காடழித்து மக்கள் குடியேறும் நாடாக மாற்றியும், குளம் வெட்டி வளம் பெருக்கியவனாகவும், வேளாண்மையினால் சோழ நாட்டை நீர்புனல் வளநாடாக மாற்றிய புகழுக்குரிய வனாகப் போற்றுகின்றார்.

காடு கொன்று நாடு ஆக்கி,
குளம் தொட்டு வளம் பெருக்கி,
பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கி (பட்டினப். 285) என்று சோழநாட்டை நீர்வாழிட நாடாகவும், காடுதிருத்தி மக்கள் வாழிடமாக மாற்றிய பெருமைக் குரியவனாக கரிகால் பெருவளத்தானைச் சிறப்பிக்கி றார். சமூக வரலாற்றில் வேளாண்மைக்குரிய நிலங் களை உருவாக்குவதும் நீர் வாழிடங்களைப் பெருக்கு வதும் மாற்றங்களை உண்டாக்குகின்றன.

புறநானூற்றிலும் பட்டினப்பாலையிலும் கூறப்பட்டவாறு காளிதாசன் ரகுவம்சத்தில் இந்திரனை வென்ற பெரு வீரனான **ரகு** பாலை நிலங்களை நீர் பெருகுமாறு நிலைநிறுத்துவதாகக் காட்டுகின்றார். காடுகள் திருத்தி ஊர்களுக்குச் செல்லும் சாலைகளைக் கட்டமைப்பதா கக் கூறுகின்றார்.

பேர் பெருகும் மன்னன், பெரும் பெயர் பாலையும்
நீர் பெருகும் வண்ணம் நிலைநிறுத்தி, ஊர் பெருகும்
வெள்ளத்தின் மேற்பாலம் கட்டினான்; காடழித்து
உள்ளேயும் சாலை யமைத்தான்' (ரகுவம்சம், சருக்கம் 4, பாடல்-31) என்று காளிதாசன் எடுத்துரைப்பது புற நானூற்றுப் பாடலையும் பட்டினப்பாலை அடிகளை யும் நினைவுறுத்துகின்றன.

மன்னனும் வரிதிறையும்

மன்னர்கள் அறத்தோடு பட்ட நெறியின்படி மக்களை ஆட்சி செய்திடல் வேண்டுமென்று புறப்பாடல்களில் வலியுறுத்தப்படுகிறது. மன்னனுக்குரிய வருவாய்களில் மக்களிடமிருந்து பெறப்படும் வரிதிறையும் முக்கியமா னது. மக்களைக் கசக்கிப் பிழியாது மலரிலிருந்து தேனீக் கள் தேனை உறிஞ்சுவது போன்று வதைக்காது திறை வசூலிக்கவேண்டும். மக்களிடமிருந்து பெறப்பட்ட வரி மக்கள்நலன்களுக்கே மீண்டும் செலவிடப்பட வேண் டும். புறப்பாடலில் பாண்டியன் அறிவுடைநம்பிக்குப் பிசிராந்தையார் அறநெறிப்படி குடிமக்களிடம் இறை

கொண்டால் மன்னன் இன்பம் பெற்று வாழ்வதுடன், நாடும் செழிக்கும் என்கிறார். ஒரு மாவுக்கும் குறைந்த நிலமாயினும் அதனுள் விளைந்த நெல்லை அறுத்துக் கவளம்கவளமாக ஊட்டினால் யானைக்குப் பல நாள் வரும். யானையின் போக்கில் தின்னப் புகுந்தால் அது உண்பதைவிடக் காலடிபட்டு அழிவுறுவதே அதிகமாகும். குடிமக்களை வருத்தி அறமற்ற வகையில் பெருந் தொகையான இறையைப் பெற விரும்பினாற் நாடு கேடுறும் என்று எச்சரிக்கை விடுகின்றார்.

காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே,
மாநிறைவு இல்லதும், பன்நாட்கு ஆகும்,
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகு வதனினும், கால்பெரிது கெடுக்கும்,
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே,
யானை புக்க புலம்போலத்,
தானும் உண்ணான், உலகமும் கெடுமே (புறம். 184)

என இறை வரியினை மக்களை வருத்தாமற் பெற்று மக்களுக்குப் பயன்படுத்திட அறிவுறுத்துகின்றார்.

காளிதாசன் ரகுவம்சக் காவியத்தில் திலீபனின் அறம் சார்ந்து இறை கொள்ளும் முறையை மேற்சுட்டிய புறநானூற்றுப் பாடல் உவமை மூலம் எடுத்துக்கொள்கின்றான். பிசிராந்தையார் ***யானை புக்க புலம்*** போல மக்களின் நிலையறிந்து இறை கொள்ள வேண்டுவது போலக் காளிதாசன் சூரியன் கடல்நீரை ஆவியாக அள்ளிக்குடிப்பது எதற்கு என்னும் கேள்வியெழுப்பி அதற்கு விடையும் தருகின்றான். மழையாக ஆயிரம் மடங்கு திருப்பித் தருவதற்கே என்கின்றான். குடிமக்களுக்குத் திரும்பக் கொடுப்பதற்காகவே, அவர்கள் நன்மைக்காகவே திறை கொள்வதாகக் கூறுகின்றான்.

அள்ளிக் குடிப்பது ஏன் ஆதவன் பூமிநீரைப்?
பல்லாயிரமாய்ப் பொழியத்தான் - இல்லையா
மன்னனும் மக்களிடம் வாங்கும் வரியெல்லாம்
இன்னல் தராது இனிது (ரகுவம்சம்-8) என்று தர்ம மோட்சத்துடன் வரி வசூல் செய்திடக் காளிதாசன் உரைப்பதற்குப் பிசிராந்தையாரின் அறநெறிப்பட்ட புறநானூற்றுப்பாடலின் செல்வாக்கே ஆகும்.

கையறுநிலைப்பாடல்கள்

சங்கப் புறப்பாடல்களில் கையறுநிலைப் பாடல்கள் உலகப் புகழ்மிக்கவை. தன்னுணர்ச்சிப் பாடல்களின் உச்சம் அவை எனலாம். ஔவையார் அதியமான் நெடுமான் அஞ்சியின் இழப்பிற்காக இரங்கிப் பாடிய கையறுநிலைப்பாடல்கள், பாரிமகளிர் தம் தந்தையின் இறப்பிற்காகப் பாடிய கையறுநிலைப்பாடல் உலகக் கவிதை பேரிலக்கியங்களில் இடம்பெறக்கூடியவை. காளிதாசனுக்கு கையறுநிலைப்பாடல்கள் இயற்றுவதற்குப் புறப்பாடல்கள் பெரிதும் துணைபுரிந்துள்ளன. புறப்பாடலில் **குடவாயிற்கீரத்தனார், ஒல்லையூர்கிழார் மகன் பெருஞ்சாத்தன்** மறைந்தபோது பாடிய கையறுநிலைப் பாடல் உலகப் புகழ்பெற்றது.

இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்;
நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்,
பாணன் சூடான்; பாடினி அணியாள்;
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ! ஒல்லையூர் நாடே (புறம். 242)

என்று முல்லை மலரைக் குறியீடாக்கிப் பெருஞ்சாத்தனின் மறைவிற்காகக் கையறு நிலையில் கலங்கித் தவிக்கின்றார். இந்தக் கையறுநிலைப்பாடலின் தாக்கம் காளிதாசன் ரகுவம்சக் காவியத்தில், அஜன் தன் மனைவி இந்துமதி இறப்பிற்காகப் புலம்பும்போது பயன்படுத்திக்கொள்கின்றான். அஜனும் இந்துமதியும் அரண்மனைப் பொழிலில் இருக்கும்போது, வானத்திலிருந்து விழுந்திடும் மந்தாரமாலையால் மென்மையான இந்துமதி இறப்பினைத் தழுவுகின்றாள். அவள் மேல் பேரன்புடைய அஜன் இந்நிலை கண்டு கையற்றுப் புலம்புகின்றான். இந்துமதியோடு உடன்கட்டை ஏறிடவும் துணிகின்றான். இந்துமதி இறப்பினால் தன் வாழ்வில் சூனியம் படர்ந்துவிட்டதாகக் கையறுநிலையில் புலம்பி மொழிகின்றான்.

ஆடலும் இனிமேல் - இல்லை
அரிவை நீ இலாத தாலே!
பாடலும் இனிமேல் இல்லை
பாவை நீ பறந்த தாலே!
சூடலும் நகை எதற்கோ
அணிக்கெலாம் அணிநீ இன்றி
கூடலும் இனிமேல் இல்லை
கட்டிலும் பாழே அம்மா!
....
வல்லதோர் எமனும் ஈரம்
வற்றியே இங்கு வந்தான்
எல்லாமே கவர்ந்து சென்றான்
எமனுமே உனைக் கவர்ந்து என்று முல்லை மலரை முன்நிறுத்திக் கூறப்பட்ட புறப்பாடலின் கையறுநிலையின்எதிரொலிப்பைக் காளிதாசன் இந்துமதியை முன்னிறுத்தி அஜன் சொற்களில் சோககீதம் இசைத்துக் காட்டுகின்றார்.

காளிதாசனிடம் சங்கப் புறப்பாடல்கள் தாக்கம் செலுத்தியிருப்பது போன்று அகப்பாடல்களும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. புறப்பாடல்களைவிட அகப்பாடல்களே அவனிடம் அதிகம் தாக்கத்தினை ஏற்படுத்தியுள. காளிதாசனின் *ருதுசம்ஹாரம்* என்ற பருவ கால வருணனை, *மேகதூதம்* எனும் தூது இலக்கியம் *சாகுந்தலம்* எனும் அகக்காதல் நாடகம் அனைத்திலும் சங்க அகப் பாடல்களின் நேரடித் தாக்கத்தினைக் காணமுடிகிறது. *உவமான காளிதாச* எனும் பெரும்புகழைப் பெறச் சங்க அகப்பாடல்களின் இயற்கை உவமைகளே பெருந் துணைபுரிந்துள்ளன. இதனைப் பின்வரும் சான்றுகள் அரண் செய்கின்றன.

மூங்கிலில் நுழைந்த காற்றின் இசை

தமிழ், வடமொழி இரண்டிலும் பொதுவாகக் காணப் படும். உவமை மூங்கிலில் நுழைந்த காற்றின் இசையாகும். தமிழ் அகப்பாடல்களில் சுட்டப்படும் இந்த உவமையினைக் காளிதாசன் மேகதூதம், ரகுவம்சம்

(11,12) ஆகிய படைப்புகளில் எடுத்தாண்டுள்ளமை சுட்டத்தக்கது. சங்க அகக் கவிதையின் உவமை மர பினைக் காளிதாசன் தனக்கேற்ற வகையிலும் பயன் படுத்திக்கொள்கின்றான். புதுக்கியும் படைப்பாக்கம் செய்கின்றான்.

புதர்கள் நிறைந்த இடத்தில் அடர்ந்து பரந்துள்ள அசை யும் மூங்கிலிடத்தில் வண்டுகள் துளைத்த அழகிய குறுகிய துளைகளின்வழி மேல்காற்று புகுந்து வருகி றது. இவ்ஓசை, நீர் பருகச் செல்லும் பசுக்கூட்டத்திற் குப் பின்னே வரும் நீண்ட கோலினை உடைய ஆயர் கூட்டத்தார் ஊதிடும் குழல் இசை போன்ற இனிமை யாக ஒலிப்பதாக அகநானூறு 225இல் எயினந்தை மகனார் இளங்கீரனார் உவமை செய்கின்றார்.

புதல் இவர் ஆடுஅமை, தும்பி குயின்ற
அகலா அம்துளை, கோடை முகத்தலின்
நீர்க்கு இயங்கு இனநீரைப் பின்றை வார்கோல்
ஆய்க்குழல் பாணியின் ஐது வந்து இசைக்கும் என்று மூங்கிலில் நுழைந்த காற்றின் இசை ஆம்பல் இசை போன்று ஒலிப்பதாக உவமிக்கப்படுகின்றது. கபிலர் அகநானூறு 82இலில் மூங்கிலில் நுழைந்த காற்றின் இசையினைக் கீழ்வருமாறு உவமை செய்கின்றார்.

ஆடு அமைக்குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை ஆக (அகம். 82) என்று குறிஞ்சித்திணைப்பாடலில் அசைந்தாடும் மூங்கிலில் வண்டுகளால் துளைக்கப்பட்ட துளையிடத்து நுழைந்து வரும் மேல்காற்றின் ஒலி அழகிய குழல் இசைபோல இருப்பதாகக் கூறப்படுகிறது. நற்றிணையில் பாலைத் திணைப்பாடலில் வேர்கள் பிணித்துக் கிடக்கும் மூங் கில்களின் துளைகளில் காற்று மோதுவதால் எழும் பிடும் ஓசையானது தூணிலே கட்டப்பட்ட யானை வருந்திப் பெருமூச்சு விட்டாற்போல இருப்பதாக உவமை செய்யப்படுகின்றது.

வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நரல்இசை
கந்துபிணி யானை அயர் உயிர்த்து அன்ன (நற். 62) என்று மூங்கில்கள் விளங்கும் பாலை வழியில் அதன் ஒலிப்பு ஓசை யானையின் பெருமூச்சோடு ஒப்பிடப் படுகின்றது.

காளிதாசன் அகப்பாடல்களில் வரும் இவ்வுவமையை உள்வாங்கித் தன் படைப்புகளில் கையாண்டுள்ளான். மூங்கில்களில் நுழைந்த காற்றின் உவமையினை மேக தூதத்தில் இரு இடங்களில் கையாள்கின்றார். தேவ கிரி மலையினை அடைய விரும்பும் குளிர்காற்றைப் பற்றிச் சொல்ல வரும்போது இவ் உவமை பயன்படுத் தப்படுகின்றது.

காற்றை உள்ளிழுக்கும்பொது மூங்கிலின்
துவாரத்திலிருந்தும் எழுகின்ற ஒலியினால்
கேட்க இனிதாக இருக்கும் (மேகதூதம்-57) என்று உவமிக்கின்றார். மற்றொரு பாடலில்,
மேகமே, காற்றினாலே நிரப்பப்படுகின்ற
மூங்கில்கள் இனிமையாக ஒலிக்கின்றன (மேகதூதம்-71) என்று மூங்கில் துளையின் வழியாக நுழைந்து வெளி யேறும் காற்று இனிய இசை தருவதாகச் சித்திரிக் கின்றார்.

ரகுவம்சத்தில் பசுவினை இரையாக உண்ண வரும் சிங்கத்திடம் திலீபன் தன்னை உண்ணுமாறு வேண்டிக் கொள்கின்றான். இத்தகு கருணை மறவனாகிய திலீப னின் புகழை மூங்கில் துளைக்குள் நுழைந்த காற்று மூர்க்கமாய்க் குழலிசைபோன்று பாடுவதாகக் கற்பனை செய்கின்றான்.

வாய்ப்பாட்டுப் பாடும் வனதேவதை இசையானே!
'ஏயப்பா' என்றே இவன் வியந்தான் - பாய் காற்றோ
மூங்கில் துளை புகுந்து மூர்க்கமாய் பாடுவது
ஆங்கே அரசன் புகழ் (ரகு வம்சம் II-12) என்று பசுவினை மேய்க்கும் ஆயர்குலத்தார் ஊதும் குழல் இசை போன்று, பாய்ந்து செல்லும் காற்றின் மூங்கில் இசை திலீபன் புகழ்பாடி இசைப்பதாகக் காளிதாசன் உவமிக்கின்றான்.

சங்க அகப்பாடல்களில் இடம்பெற்றிருக்கும் மூங்கில் துளைவழி நுழையும் காற்று குழலிசைபோல இனிமை யாக இருப்பதாகக் கூறப்படும் உவமையினைக் காளி தாசன் உள்வாங்கித் தனது படைப்புச்சூழலுக்கேற்பப் பயன்படுத்திக்கொள்வது ஒப்பிடத்தக்கது.

கண்ணாடியில் ஊதப்பட்ட ஆவியாகத் தலைவி

அகநானூற்றுப் பாலைத்திணைப்பாடலில் அந்தியிளங் கீரனார் பொருள்வயிற் பிரிந்த தலைவனால் வாடி நிற்கும் தலைவியைக் காட்டுகின்றார். தனிமைத் துயர் அரிய மார்பினைக் குறி வைத்து எறிந்திடும் கூரிய வேலினைப் போன்று மாலைக்காலம் தாக்கி வருத் தத்தை நல்குவதாகத் தலைவி மெலிந்து உருகுகின் றாள். பிரிவாற்றாமையாற் மெலிந்த தலைவி யாரும் இகழாத வகையில் செய்யப்பட்ட உருவம் பார்க்கும் கண்ணாடியில் ஊதிய ஆவி முன் பரந்து பின் சிறிது சிறிதாகச் சுருங்கிடுதல்போலத் தலைவியின் இளமை யும், வளமையும் குறைந்திடுவதாக உவமை செய்யப் படுகின்றது.

எள் அற இயற்றிய நிழல் காண் மண்டிலத்து
உள் ஊது ஆவியின் பையப்பய நுணுகி,
மதுகை மாய்தல் வேண்டும்-பெரிது அழிந்து (அகம். 71) என்று தலைவனின் பிரிவினால் மிகக் கடுமையாகச் சூறைக் காற்று அசைத்திட அசையும் மரத்திலுள்ள பறவைபோல என் உயிரும் உடலைவிட்டுப் பிரிந் தோடும் காலம் இதுதான் எனக் கலங்குகின்றாள்.

காளிதாசனும் அகநானூற்றுப் பாடலில் சுட்டப்பட்ட கண்ணாடி முன் ஊதிய ஆவியாகத் தலைவி மெலிந்து போய்விடும் உவமையை ரகுவம்சத்தில் அப்படியே கையாள்வதுடன் புதுமையும் சேர்க்கின்றான். அஜன் போர்க்களம் சென்றபோது இந்துமதியின் முகம் கண் ணாடியில் படும் மூச்சுக்காற்று போன்று ஒளி குன்றி இருப்பதாகக் கூறுகின்றான். அஜன் போர்க்களத்தில்

வெற்றி பெற்று வீரத்திருமகனாகத் திரும்புகிறான் எனும் செய்தியறிந்து நீராவி எல்லாம் நீங்கிய பிறகு பிரகாசம் பெற்ற கண்ணாடி போன்று இந்துமதியின் முகம் மலர்ந்து ஒளிவீசுவதாக உவமைப்படுத்துகின்றான்.

முகத்தைக் கண்ணாடி பார்க்கும்பொழுது
மூச்சுக்காற்றின் நீராவியினால்
ஆடி ஒளியே குன்றும் அல்லவா?
நீராவியெல்லாம் நீங்கிய பின்னால்
பிரகாசத்தைப் பெற்றிடும் இல்லையா?
இந்துமதி முகமும் இதுபோல் ஆனதே (ரகுவம்சம் சருக்கம், 7:68) என்று சங்க அகப்பாடலில் பிரிவின் மெலிவால் வாடிய தலைவி ஆடியில் ஊதப்பெற்ற ஆவிபோன்று மெலிந்து பொலிவிழந்து இருப்பதாக உவமிக்கப்படுகின்றது. காளிதாசனும் அகநானூற்றுப் பாடலின் உவமையை எடுத்துக்கொண்டு அஜன் போர்க்களம் சென்றபோது மூச்சுக்காற்று பட்ட ஆடி மங்கலாகத் தெரிவதுபோல இந்துமதியின் முகம் இருப்பதாகக் காட்டுகிறான். அஜனைப் பெற்ற பிறகு நீராவி நீங்கிய கண்ணாடி பிரகாசிப்பதுபோன்று இந்துமதியின் மலர்முகம் ஒளிவீசுவதாக உவமிக்கின்றான். கண்ணாடியில் ஊதப்பெற்ற ஆவி உவமையினை அகப்பாடலிலிருந்தே காளிதாசன் பெற்றிருக்க வேண்டுமென்பதை மேற்சுட்டிய சான்று நிரூபிக்கின்றது.

கண்ணீர்த் துளிகளுக்கு முத்துகள், நூல் உவமை

தலைவனைப் பிரிந்த தலைவியின் கண்களிலிருந்து பெருகியோடும் கண்ணீர்த் துளிகள் நூலறுந்து விழும் முத்துக்கள்போல மார்பகத்தில் பட்டுச் சிதறித் தெறிப்பதாகப் பொருந்தில் இளங்கீரனார் அகநானூற்றுப் பாடலில் தெரிவிக்கின்றார்.

கண்பனி
நெகிழ்நூல் முத்தின் முகிழ்முலைத் தெறிப்ப (அகம். 289) என்று பிரிவாற்றாமையால் நீளநினைந்து சிந்திடும் தலைவியின் கண்ணீர்த் துளிகள் நூலறுந்து விழுந்திடும் முத்துக்களாக உவமை செய்யப்படுகின்றது. அகநானூறுபாலைத்திணைப் பாடலில் பெருங்கண்ணனார் கழுவப்படாத முத்துக்களாகத் தலைவியின் கண்ணீர்த் துளிகள் இருப்பதாகவும் உவமை கூறுகின்றார்.

மண்ணாமுத்தம் ஒழுக்கிய வனமுலை

நல்மாண் ஆகம் புலம்பத் துறந்தோர் (அகம்.247) என்று நம்மைவிட்டு நீங்கிச் சென்ற தலைவர் அருள் இல்லாதவரே என வருந்திப் புலம்புகின்றாள்.

காளிதாசன், ரகுவம்சத்தில் பெண்களின் கண்ணீர்த்துளிகளை முத்துகளாகக் கூறிடும் அகப்பாடல் உவமையைச் சிறிது மாற்றிப் பயன்படுத்துகின்றான். அஜனால் கொன்று குவிக்கப்பட்ட பகைவீரர்களின் மனைவியர் கழுத்தில் அணிந்திருக்கும் முத்துமாலையை அறுக்கின்றனர். இதற்குப் பதிலாகக் கண்ணீர் முத்து மாலையைச் சூடிக் கொள்வதாகக் கற்பனை செய்கின்றார். மேலும், கண்ணீர் முத்துக்களைக் கோப்பதற்கு நூல்தான் இல்லையென்று அகப்பாடல் உவமையைச் சிறிது மாற்றிப் புதிய உவமையும் செய்கின்றான்.

கொத்தாய் எதிரியைக் கொன்று குவிப்பதால்
முத்துமாலையை மனைவியர் அறுப்பர்!
அழுகின்றபோது விழுகிற கண்ணீர்
முத்துமாலையை மீண்டும் அணிவர்!
ஆனால், நூலோ அதிலிருக்காதே (ரகுவம்சம் சருக்கம் 8, பாடல் 28) என்று கணவனைப் பிரிந்த மனைவியர் அழும் கண்ணீர் முத்து மாலை உவமையினைக் காளிதாசன் அகநானூற்றின் மேற்சுட்டிய இரு பாடல்களிலிருந்தே கடன் பெற்றிருத்தல் வேண்டும்.

மகளிர் கைவிரல்கள்: காந்தளும் பிரியங்குக் கொடியும்

சங்கப்பாடல்களில் செங்காந்தள், வெண்காந்தள் என இருவகைக் காந்தள் மலர்கள் இடம்பெறுகின்றன. செங்காந்தள் முருகனுக்குரிய குருதி மலராகவும், பெண்கள் கூந்தலில் சூடிடும் மலராகவும் பதிவுசெய்யப்பட்டுள. மகளிரின் நுனி சிவந்த விரல் காந்தள்மலர் போன்று இருப்பதாக ***காந்தள் முனை புரைவிரல்*** (புறம். 144) என்று தெரிவிக்கப்படுகின்றது.

செங்காந்தள் கொத்துக்கொத்தாக மலர்பவை. இம்மலர்களைப் பெண்களின் உள்ளங்கைகளுக்கும் நீண்ட மெல்விரல்களுக்கும் உவமை கூறுவது சங்க இலக்கிய மரபு. மகளிரின் கைபோல் காந்தள் பூத்துள்ளப் பரிபாடல், ***கைபோற் பூத்த கமழ்குலைக் காந்தள் (பரி. 19:79)*** என உவமை செய்கிறது. பொருநராற்றுப்படையில் பாடினியின் கேசாதிபாத வருணனையில் அவள் கைகளைக் காந்தள் மலர்களோடு முடதாமக்கண்ணியார் ஒப்பிடுகிறார்.

ஆடுஅமைப் பணைத்தோள், அரிமயிர் முன்கை,
நெடுவரை மிசைய காந்தள் மெல்விரல் (பொருந. 32-33) என்று காந்தள்மலர் போன்று பாடினியின் மெல்லிய விரல்கள் இருப்பதாக உவமிக்கப்படுகின்றது. காந்தள் மலர்கள் செழிப்புடன் இருக்கும்போது மகளிரின் கைவிரல்கள் போன்று இருப்பதாகச் சிறுபாணாற்றுப்படை, ***செழுங்குலை காந்தள் கைவிரல் பூப்பவும் (சிறுபாண். 166)*** என்று தெரிவிக்கின்றது.

உறை ஊற்றப்பட்ட தயிரினைப் பிசைந்த தலைவியின் விரல்களைக் காந்தள்மலரோடு குறுந்தொகை ஒப்பிடுகிறது. ***முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல் (குறுந். 167)*** என்று தலைவியின் மென்மையான விரல்கள் காந்தள்மலர்களோடு இணைத்து உவமிக்கப்படுகிறது.

காந்தள்மலர்கள் முதிர்ந்த பருவத்தில் இதழ்கள் செங்குத்தாக மேல்நோக்கித் தோன்றும். அப்போது மகளிர் கைகூப்பித் தொழுவதுபோலுள்ளதைக் கலித்தொகை காட்டுகின்றது. ***கொடிச்சியர் கூப்பி உரைதொழு கைபோல் எடுத்த நறவின் குலையலங் காந்தள்*** (கலி.40) என்று சித்திரிக்கப்படுகின்றது.

காளிதாசன் மென்மையான பிரியாங்குக்கொடிகளைப் பெண்களின் கைகளுக்கு உவமைப்படுத்தும் மரபைச் சங்கக் கவிதை மரபிலிருந்தே பெற்றிருத்தல் வேண்டும்.

ருதுசம்ஹார சரக்கால வருணனையில் மலர்ச்சுமை யாற் சாய்ந்த பிரியாங்குக்கொடிகள் நகையணிந்த மங் கையரின் கையழகை வென்றுவிட்டதாக உவமிக்கிறார்.

மலர்ச்சுமையினால் சாய்ந்த பிரியாங்கு கொடிகள்
நகையணிந்த மங்கையர் கையழகை பெற்றன (சரத்கால வருணனை-பாடல்-16) என்று பிரியாங்குக் கொடிகள் வளையல்கள் மற்றும் அணிகலன்களால் அலங்கரிக் கப்பட்ட மாதர்களின் கைகளின் அழகுடன் காட்சியளிப் பதாக உவமிக்கின்றார். மேலும், ரகுவம்சத்தில் இந்து மதியின் கைவிரல்களுக்கு அசோகத் தளிரினையும் உவமை செய்கின்றான்.

அவளின் கைவிரல் அசோகத் தளிர்போல்
ஆவலுடனே அஜன் அதைப் பிடித்தான்
மாமரத் தளிரோ மன்னன் கை விரல்களோ (ரகுவம்சம், சருக்கம் 7, பாடல்-21) என மென்மையான அசோகத் தளிர்களோடு இந்துமதியின் கைவிரல்களை உவமைப் படுத்துகின்றான்.

சங்க இலக்கியங்களில் காந்தள்மலரைப் பெண்களின் கைகளுக்கும் விரல்களுக்கும் உவமைப்படுத்தும் மரபு காளிதாசனுக்குப் பிரியாங்குக்கொடிகளையும் அசோ கின் தளிர்களையும் பெண்களின் கைகளுக்கும் விரல் களுக்கும் உவமைப்படுத்தப் பெரிதும் துணைபுரிந்துள.

இம்மை மாறி மறுமையிலும் தலைவன்

குறுந்தொகையில் தலைவியின் அன்புடைமை பிறவி தோறும் தொடரும் என்பதை அம்மூவனார் எடுத்துக் காட்டுகின்றார். இப்பிறப்பு மாறி மறுபிறப்பு வருவதா யினும், நீ என் கணவன் ஆகுக. நின் மனம் நேர் பவள் யான் ஆவேன் என நம்பிக்கை உறுதியுடன் தலைவி உரைக்கின்றாள்.

இம்மை மாறி மறுமை ஆயினும்
நீ ஆகியர் எம் கணவனை
யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே (குறுந். 49) என மறுபிறவியிலும் தலைவனைக் கணவனாக அடைய விரும்பும் தலைவியின் அன்புறுநிலை எடுத்துரைக்கப் படுகிறது. நற்றிணையில் தலைவி இறப்பதற்கு அஞ் சேன்.ஆனால், இறந்தபின் பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின் என் காதலனை மறக்க நேரிடும். எனவே, காதலனை ***மறக்குவென் கொல்*** என அஞ்சுகின்றாள்.

சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவிற்
பிறப்புப்பிறி தாகுவது ஆயின்
மறக்குவென் கொல்என் காதலன் எனவே (நற். 397) என்று இம்மையில் மட்டுமன்று. மறுமையிலும் யான் தலைவனையே மனத்தில் நினைத்திருப்பேன். மறக்க மாட்டேன் என்று தலைவனோடு கொண்ட காதலின் அன்புறு உறுதிப் பிணைப்பைத் தலைவி எடுத்துக் காட்டுகின்றாள்.

சங்க அகத்தலைவி போன்றே இராமனால் வான்மீகி முனிவரின் ஆசிரமத்திற்கு அனுப்பப்படும் சீதையின் மொழிகள் கையறுநிலையில் அமைகின்றன. சீதை இராமனையே மறுபிறப்பிலும் கணவனாக அடைய விரும்பும் விருப்பத்தினைத் தெரிவிப்பது சங்க அக மரபை அடியொற்றியே ஆகும்.

இறந்தாலும் உண்மை; உம்மை
எண்ணியே இறந்து போவேன்!
பிறந்தாலும் மறுஜென்மத்துப்
புருஷனால் உமையடைவேன்!
இறந்தாலும் பிரசவித்துப்
பஞ்சாக்னி தவத்தைச் செய்வேன்!
இருந்தாலும் பிரிந்திடாத
வரத்தினை வாங்கிக் கொள்வேன் (ரகுவம்சம்-சருக்கம்-14, பாடல்-66) என்று இம்மை மாறி மறுமையிலும் தலைவனையே அடைய விழையும் தலைவியின் அன் புறு பிணைப்புச் செயலைக் காளிதாசன் சீதையின் மொழிகள்வழி வெளிப்படுத்தியிருப்பது சங்க இலக்கி யங்களுக்கு அவன் கடன்பட்டிருப்பதை உறுதி செய் கின்றன.

தென்னிந்தியக் கவிதை மரபான சங்க இலக்கியப் பாடல்களை வடமரபில் தன் படைப்புகளில் முதன் முதலில் பயன்படுத்திக்கொண்டவன் காளிதாசன். சங்கப் பாடல்களின் தாக்கம் காளிதாசனுக்கு மகா ராஷ்டிரா பிருகிருதத்தின் வழியாக நிகழ்ந்துள்ளது. காளிதாசனின் குமார சம்பவத்தில் பரிபாடல், திரு முருகாற்றுப்படையின் தாக்கத்தினைக் காணமுடியும். காளிதாசனின் ‘மேகதூதம்’ படைப்பிற்குச் சங்கத் தூதுப்பாடல்கள் (புறநானூறு, நற்றிணை, அகநானூறு) பெரிதும் உதவி செய்துள்ளன. தூது எனும் இலக்கிய மரபு தொல்காப்பியம். சங்க அகப்பாடல்களின் வழி யாகவே இந்திய மொழி இலக்கியப் படைப்புகளில் செல்வாக்கினைச் செலுத்தியுள்ளன. இதனால், வடமர பில் நூற்றுக்கும் மேற்பட்ட தூது இலக்கியங்கள் உரு வெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காளிதாசனின் ‘ருதுசம்ஹாரம்’ (ஆறு பருவங்களின் வருணனை) காவியத்தில் சிலப்பதிகாரத் தாக்கம் உண்டு. சிலம்பின் ஊர்காண்காதையில் வரும் ஆறு பருவ வருணனைகள் கோடையில் தொடங்கி இளவே னிலில் முடிகின்றன. காளிதாசனும் முதுவேனிலில் தொடங்கி இளவேனிலில் தனது காவியத்தை முடிப் பது ஒப்பிடத்தக்கது.

காளிதாசனிடம் சங்க அகம், புறப்பாடல்களின் தாக்கம் மிகுதியாக உள்ளது. *ரகுவம்சம்* காவியத்தில் புறப் பாடல்களின் சிந்தனைகள் எதிரொலிப்பதைக் காண முடிகிறது. மன்னர்களை முருகனோடு ஒப்பிடும் சங்கப் பாடலின் மரபைக் காளிதாசனும், ரகுவம்சத்தில் பின் பற்றுகிறான். சங்கப்புறப்பாடலின் அறநெறிக் கருத்து களும், கையறுநிலை, தன்னுணர்ச்சிப் பாடல்களும் ரகு வம்சத்தில் பரக்க இடம்பெறுகின்றன.

காளிதாசன் படைப்புகளில் சங்கப் புறப்பாடல்களை விட அகப்பாடல்களின் செல்வாக்கு மிகுதியாக உள் ளது. அகப்பாடலின் இயற்கை உவமைகளைக்

தொடர்ச்சி: 32ஆம் பக்கம்

ISSN 2320-4842

வாய்மொழி இலக்கியமும் எழுத்திலக்கிய விழுமியங்களும் (சிலப்பதிகாரம்)

முனைவர் ஆ. இன்பவள்ளி
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பளையம், திருச்செங்கோடு

முன்னுரை

தமிழ் இலக்கிய வடிவங்களுக்கு அடிப்படையாக விளங்கியவை வாய்மொழி இலக்கியங்களே என மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர். எழுத்து மொழிக்கு முன்பே வாய்மொழி தோற்றம் பெற்றது என்பது மொழியியலின் தத்துவம். தமிழ் இலக்கியம் இன்று செழித்து வளர்ந்திருக்கிறது என்றால் அதற்கு அடிப்படையாக விளங்குவது வாய்மொழி இலக்கியமே எனலாம். ஆனால் இன்றைய இலக்கிய உலகம் வாய்மொழி இலக்கியத்தை ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை. தரத்தின் அடிப்படையில் எழுத்திலக்கியம் உயர்வானது, வாய்மொழி இலக்கியம் தாழ்வானது என்ற கருத்து நிலவுகிறது. எனினும், தமிழ் வாய்மொழி இலக்கியங்களே எழுத்திலக்கியங்களுக்கு முன்னோடி என்பதை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வாய்மொழி இலக்கியம்

வாய்மொழி இலக்கியம் என்பது நாட்டுப்புறவியல் தொடர்பான ஒன்று, அதற்கும் இலக்கியத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது போன்ற சூழல்தான் நிலவுகிறது. எழுத்தியலக்கியப் படைப்பாளி தனியாளாகத் தன் படைப்பை வெளியிடுகிறார். வாய்மொழி இலக்கியத்தைப் படைத்தவர் இன்னார் என அடையாளம் காட்ட இயலாது. அது கூட்டுப்படைப்பாகத் திகழ்வது. இந்த நிலைதான் வாய்மொழி இலக்கியத்திற்குப் பலமாகவும், பலவீனமாகவும் அமைந்துவிடுகிறது. தொடக்க நிலையில் மனிதனால் படைக்கப்பட்ட இலக்கியங்கள் ஓலைச் சுவடியில் பதிவுபெறுவதற்குமுன் வாய்மொழியாக ஒவ்வொருவருடைய உள்ளத்திலும்தான் பதிவுபெற்றன. பின்பு மனிதனின் அறிவியல் கண்டுபிடிப்பான அச்சுப்பொறியால் இத்தகு வாய்மொழி இலக்கியங்கள் எழுத்து இலக்கியங்களாகப் பதிவாயின. எனவே இலக்கியத்தின் தோற்றம் வாய்மொழியினதாக விளங்கியது. அதன் வளர்ச்சி நிலை எழுத்து இலக்கியமமெனும் நிலைப்பாட்டினைப் பெற்றது என்று கூற இயலும்.

வாய்மொழி இலக்கியங்களுக்கும் எழுத்து இலக்கியங்களுக்கும் இடையே கருத்து, கற்பனை, எதுகை, மோனை, உவமை, உருவகம், அந்தாதி என்று யாப்புக் கூறுகளில் ஒற்றுமைகள் உண்டு. ஆனால் வாய்மொழி இலக்கியத்திற்கு ஒரு குறிப்பிட்ட படைப்பாளன் இல்லை. மரபு ரீதியாகப் பாரம்பரியமாகப் பயிற்றுவிக்கப்பட்டு, பழக்கத்தால் நிலைப்பாட்டினைப் பெறுவது. எழுத்திலக்கியமோ படைப்பாளனின் பெயரோடு இலக்கணக் கட்டமைப்புக்கு உட்பட்டு எழுதிப் பாதுகாக்கப்படுவது. படித்த-கண்ணுக்குத் தெரியாத வாசகர்கள் பொருட்டு, செந்நெறி வாழ்வுக்காகப் படைக்கப்படுவது எழுத்திலக்கியத்தில் நாட்டுப்புறக் கூறுகளின் தாக்கம் இடம் பெறுவதுண்டு.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு படைப்பாளி இருப்பதை வெளிப்படுத்துவது வாய்மொழி இலக்கியம். ஒரு சில இலக்கியவாதிகள் தம் தலைக்குப்பின்னே ஒளிவட்டம் இருப்பதாகக் கருதிக்கொள்வதுபோல் வாய்மொழி இலக்கியவாதிகள் கருதுவதில்லை. சிற்றூர்ப்பண்பாட்டில் தாலாட்டு, ஒப்பாரி, பழமொழிகள், விடுகதைகள், கதைகள், வரலாற்றுப் பழமரபுக்கதைகள், கதைப்பாடல்கள், கூத்து, பிற பாடல்கள் எனப் பல வடிவங்களில், வாழ்வோடு கலந்த ஒன்றாக வாய்மொழி இலக்கியம் விளங்குகிறது.

மனித வாழ்க்கை நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் இன்றைய சூழல், மனிதர்களைப் பல்வேறு காரணங்களால் இடம் பெயரச்செய்துள்ளது. நகரமயமாதல் காரணமாகவும் வாய்மொழி இலக்கிய வடிவங்கள் மாற்றத்தையும், சிதைவுகளையும் பெற்றுள்ளன. இது குறித்து ஆய்வுகள் பல்கலைகழகங்களைத்தாண்டி இன்னும் வரவில்லை. தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறை மேலாள் தலைவர் முனைவர் ஆறு. இராமநாதன் வாய்மொழி இலக்கியங்கள் எவ்வாறு தோற்றம் பெற்று எப்படிப் பரவுகின்றன என்பதை வரலாற்று நிலவியல் கோட்பாட்டு அடிப்படையில் நிட்டூரிகதை, சின்னண்ணன் கதை ஆகியவற்றை எடுத்துக்காட்டாகக் கொண்டு ஆய்வு செய்துள்ளார். அவர் தமிழகம் முழுவதும் வழக்கிலுள்ள கதைகளையும் பாடல்களையும் பத்துத் தொகுதிகளாகத் தொகுத்துள்ளார். அதில் காணப்படும் பல கதைகள் இன்றைய சிறுகதைகளோடு ஒப்பிடுகையில் அத்தனை இலக்கியத்தகுதிகளையும் பெற்றதாகவே உள்ளன என்பதைக் கண்டுணரமுடிகிறது.

நாட்டார் வழக்காறு

நாகரீகம் வாய்ந்த மக்களின் மரபுவழி வந்த படைப்புகளும், நாகரீகமற்ற பழங்குடி மக்களின் மரபுவழிப்

படைப்புகளும் நாட்டார் வழக்காற்றியலாகும். ***எழுத்து வழக்கற்ற வாய்மொழி சார்ந்த பண்பாட்டில் எல்லாமே நாட்டார் வழக்காற்றியலாகும்*** என்கிறார் பி.ஏ. போட்கின். (நாட்.வழக்காற். ப. 31) நாட்டார்வழக்காற்றியல் ஒரு சமூக அறிவியலாகவும் இலக்கியப் புலமாகவும் கருதப் படுகிறது. நாட்டார் வழக்காற்றியல் நாட்டாரைப் பற்றிய சமூக அறிவியலாகும். நாட்டார் வழக்காறுகள் மொழி சார்ந்த சமூக நடத்தைகளின் வாய்மொழி வெளிப்பா டுகள் என்ற முறையில், சமுதாய மொழியியல் சார் பொருண்மையியல், பேச்சுவினையியல், பயன்வழியி யல் கோட்பாடுகளுடன் நெருங்கிய தொடர்புடைய தாகக் கருதப்படுகிறது.

விழுமியங்கள்

விழுமியம் என்பதற்கு ***மதிப்பீடு*** என்று பொருள் தரு கிறது தமிழ் அகராதி. மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத் தின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியம் எனப் படுகிறது. விழுமியம் என்பது மனிதர் எதை அடிப் படையாகக் கொண்டு செயற்படுகிறார்களோ அதைக் கூறுகிறது. தனி மனித விழுமியங்கள் தனி மனிதர் வாழ்வை ஒருங்கமைப்பதை நோக்கமாகக் கொண் டவை. ஒரு சமூகத்தில் பொதுவான விழுமியங்கள் பண்பாட்டு விழுமியங்கள் எனப்படுகின்றன. மனிதர்கள் சேர்ந்து வாழ்வதற்கு எந்தெந்த விழுமியங்கள் சிறப் பாகத் தேவைப்படுகின்றனவோ, அவை பண்பாட்டு விழுமியங்கள் எனலாம். ஒரு சமுதாயத்தில் விழுமி யங்கள் கதைகள், பழமொழிகள், சமயம் என்பவற்றி னூடாக வெளிப்படுகின்றன.

நாட்டார் வழக்காறும் இலக்கிய விழுமியமும்

நாட்டார் வழக்காற்றில் சிலப்பதிகாரம் சங்க இலக்கியத் திற்கு அடுத்த நிலையில் இசை பரந்து காணப்படும் காப்பியமாகும். நாட்டார் வழக்காற்றிலுள்ள கதைப் பாடலை மையமாகக் கொண்டே இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை எழுதியிருக்கவேண்டும் என்னும் கருத்து தமிழறிஞர்களிடம் காணப்படுகிறது. நாட்டுப் புறப்பாடல்களில் முதன்மை பெறுகிற காதல் கருப் பொருளே சங்க இலக்கிய ஐந்திணை அகப்பொரு ளும் அமையப்பெறுகிறது. இக்கருத்து சிலப்பதிகாரத் தில் வரும் ***கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை*** ஆகிய காதைகள் நாட்டார் மரபில் வரும் இசையோடு மக்களின் வாழ்வியல் வழக்காறு களை மையப்படுத்துபவையாகக் காணப்படுகிறன.

தெய்வத்தின் தொழில் என உயர்வாகக் கூறப்படுவது உழவுத்தொழிலாகும். தமிழர்களின் அடையாளமாக விளங்குவது உழவுத்தொழிலாகும். அதன் சிறப்பைச் சிலப்பதிகாரம் கானல்வரியில் விளக்கியுள்ளது. உழவுத் தொழிலின்போது உழவர் ஏரின் ஓசையும், வயல் வரப்புகளை உடைத்து ஓடுகின்ற நீரின் ஓசையும், புதுப்புனல் விழாக்கொண்டாடும் மக்களின் மகிழ்ச்சி யால் ஏற்படும் ஓசையும் காணப்படுகின்றன. வீரமறவர் களின் போர்முழக்கத்தினை உடையது சோழனது சிறப்பாகும். நாட்டாரின் முக்கிய தொழில்களில் ஒன் றான உழவுத்தொழில் பற்றிக் கூறப்பட்டுள்ளது. உழ வர் ஏரின் சிறப்பும், நீர் வரத்து மிகுதியால் ஏற்படும் வரப்புகளின் நிலையும் கானல்வரியில் பேசப்பட்டுள. இதற்குச் சான்று:

உழவ ரோதை மதமோதை
ஊடை நீரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழிகாவேரி
மழவ ரோதை வளவன்றன்
வளனே வாழி காவேரி (சிலம்பு, 7:17-24)

எழுதப்படாத இலக்கியங்களாக மக்கள் மனதில் இருந்த பாடலடிகளின் ஆழத்தைப் புரிந்துகொண்ட புலவர் கள் அதை ஏடுகளில் ஏற்றப் பல முயற்சிகள் செய் துள்ளனர் என்பதை இதுபோன்ற பாடலடிகள் வாயி லாக அறிய முடிகிறது.

கதையும் கதைப்பாடலும்

சிலப்பதிகாரம் வேட்டுவவரியில் கூத்துக் கலையின் சிறப்பைக் கூறும்போது கொன்றையும் துளவமும் சேரத் தொடுத்த மாலையைத் தோளின்மேல் போட்டு அமர ரின் பொருட்டாக குமரிக் கோலத்தோடு கொற்றவை *மரக்கால் கூத்து* ஆடுவதிலும் சிறந்து விளங்கினாள் என்று அறிய முடிகிறது. நாட்டாரின் பொழுதுபோக் குக் கலையான கூத்து இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது. கூத்து வகைகளில் ஒன்றான மரக்கால் கூத்து பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதனை,

ஆங்கு,
கொன்றையுந் துளவமுங் குழுமத் தொடுத்த
துன்று மலர்ப்பிணையல் தோள்மேல் இட்டாங்கு
அசுரர் வாட அமரர்க்கு ஆடிய
குமரிக் கோலத்துக் கூத்துள் படுமே (சிலம்பு.12:10) என்ற

அடிகள் இதுபோன்ற கூத்து வடிவங்கள் இன்றளவும் மக்கள் மத்தியில் வாய்மொழிக் கதைகளாகவே காணக் கிடக்கின்றன. அதற்கு உதாரணமாகக் கின்னாரம் எனும் பழங்கால இசைக் கருவியை வாசிக்கும் கடைசி நபராக இருப்பவர், திருப்பூர் மாவட்டம் குன்னத்தூ ரைச் சேர்ந்த அருணாசலம். தன் தந்தையிடமிருந்து இக்கலையைக் கற்றுக்கொண்ட அவர், கிராமங்களில் கோவலன் கூத்து பாடிவருகிறார். பாணர் மரபில் கின்னாரம் வாசிக்கும் கடைசி நபர் அவர்தான் என்று நிறுவுகிறார் தமிழ் ஆய்வாளர் பொன்னுச்சாமி.

முதலில் நாட்டுப்புற மக்களால் எளிய வடிவில் பாடப் பட்டுவரும் பல கதைப்பாடல் வடிவங்கள் பின்பு இலக் கியமாக மாறுகின்றன. இளங்கோவடிகள் பாடிய சிலப் பதிகாரமும் இலக்கிய வடிவில் காப்பியமாய் மாறுவ தற்குமுன் எளிய மக்களால் பாடப்பட்டதே என்பர் நாட்டுபுறவியல் அறிஞர்கள். தமிழ்நாடு, கேரளம் மற்றும் இலங்கையில் கண்ணகி தொடர்பான பல நாட்டுப்புற வரலாற்றுப் பாடல்கள் உண்டு என்பதை

நாம் அறிவோம். அப்படி ஒரு வடிவம்தான் கின்னா ரத்தின் துணையுடன் பாடப்படும் கண்ணகி-கோவலன் கதைப்பாடல். இதை அருணாசலம் தெளிவுறப் பாடி வருகின்றார்.

பத்தினியா வீடு தேடி........
பார்வனத்தில் வழி நடந்து.....
கண்ணகியா வீடு தேடி......
கட்டழகா வழி நடந்து....
தங்க தலை வாசலுக்கு........
தயவுடனே ஓடி வந்து......
வெள்ளி தலை வாசலுக்கு.......
வெகு சுடியா ஓடி வந்து......
ஆயிரம் தான் நானு கப்பலுக்கு தானு.......
அதிகாரம் நாங்க ஏவாரி நானு........
முன்னூறு நானு கப்பலுக்கு சாமி......
முதலாளி நானு ஏவாரி நாங்க......
தாய்பேரு வர்ணமாலை தகப்பன் பேரு மாசாட்டன் செட்டி
மணிவரசன் கோவிலன் செட்டியம்மா... என்ற பாடலடி கள் கோவலன்-கண்ணகி வாழ்வியலைத் திறம்பட விளக்கிக் காட்டுவது சிறப்பிற்குரியதாகும்.

தான் கின்னாரம் வாசித்து கோவலன் கதை பாடலைப் பாடி பல ஊர்களுக்குச் சென்றுகொடை பெறுபவன் என்றும் எங்களின் பாரம்பரிய தொழிலே இதுதான் என்கிறார். இதுபோன்ற பல வாய்மொழி பாடல்களைப் பாடுவ தைத் தொழிலாக வைத்திருந்த பாணர் சமூகம் இன்று வரலாற்றில் தெரு யாசகர்களாக மாறிய பண்பாடும் நம் தமிழ்ப் பண்பாடும்தான் என்பது வருந்தத்தக்கது.

சிலம்பில் கொற்றவை வழிபாடு

கொற்றவை எனும் வேட்டைத் தெய்வ வழிபாடு சங்க காலத்திலிருந்து நிகழ்ந்துவருகிறது. கொல் + தவ்வை =கொற்றவை; கொல்லுதலை அதாவது வேட்டையாடு தலைத் தொழிலாகக் கொண்டவள். காட்டு விலங்கு களையும் வேட்டுவர்களையும் காக்கும் தெய்வம் கொற றவையாகும். சிலப்பதிகார வேட்டுவ வரியில் கொற் றவை குறித்த செய்திகள் கூறப்பட்டுள்ளன.

கொற்றவைக்குப் பலிக்கொடை கொடுத்துவிட்டு, பலி யினை ஏற்றுக்கொள்ளும்படி எயினர் கொற்றவையை வேண்டுகின்றனர். நாட்டாரின் தெய்வ வழிபாடுகளில் கொற்றவை வழிபாடும் ஒன்றாகும். கொற்றவை வழி பாட்டையும், கொற்றவைக்குப் பலிகொடுக்கும் நிகழ் வினையும் பலியினை ஏற்க வேண்டும் என்பதையும் வேட்டுவவரி சிறப்பாக எடுத்துரைக்கிறது.

பொருள்கொண்டு புண்செயின் அல்லதை யார்க்கும்
அருள் இல் எயினர் இடுகடன் உண்குவாய்
உருளுஞ் சகடம் உதைத்தருள் செய்குவாய் (சிலம்பு- 12:22-24)

பெண்தெய்வ வழிபாடு என்பது சிறப்புப் பெற்ற வழி பாட்டு முறையாகும். சிலப்பதிகாரம் குன்றக் குரவை யிலும் இது இடம்பெற்றுள்ளது; குறவர் குடியினர், கண்ணகியைத் தெய்வமாக வழிபடும் நிகழ்வும் இடம் பெற்றுள்ளது.

என்றலும் இறைஞ்சி அஞ்சி
இணை வளைக்கை எதிர்கூப்பி
நின்ற எல்லையுள் வானவரும்
நெடுமாரி மலர் பொழிந்து
இவள் போலும் நல்குலக்கோர்
இருந் தெய்வம் இல்லை ஆதலின் (சிலம்பு- 24:2-5)

குறவர் குடியினர் கண்ணகியைப் பணிந்து கைகூப்பித் தொழுதனர். அந்நேரத்தில் வானவர்கள் மலர் வாரிச் சொரிந்து கண்ணகியைக் கணவரோடு தேவர்கள் வானு லகம் கொண்டு சென்றனர். குறவர் மகளிர் வியப் பிலே ஆழ்ந்தனர். 'இவள் போன்ற பெரிய தெய்வம் யாதும் இதுவரை நம் குலத்துக்குக் கிடையாது' என்று கண்ணகித் தெய்வத்திற்கு வழிபாடு செய்ய ஊராரை அழைத்தனர். நாட்டார் வழக்காற்றில் சிறுதெய்வ வழி பாடு முக்கியத்துவம் வாய்ந்த வழிபாட்டு முறையாகும். இதற்குச்சான்று கண்ணகித் தெய்வ வழிபாடு ஆகும்.

முடிவுரை

சிலப்பதிகாரம் கானல்வரியில் உழவுத் தொழில், வேட் டுவ வரியில் கூத்துக்கலை, கொற்றவைக்குப் பலிக் கொடை அளித்தல் ஆகியவை நாட்டார் வழக்காற்று விழுமியங்களுடன் ஒத்துப்போவதை இதன்வழி அறிய முடிகிறது. தமிழ்இலக்கியப் பரப்பில் வாய்மொழி இலக் கியங்களுக்கு ஏற்ற இடம் கிடைக்காமலிருந்தாலும் சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தில் வாய்மொழி இலக்கியமாகப் பாடப்பட்டுவந்த பாடல்களை வைத் துக்கொண்டு எழுத்திலக்கிய விழுமியங்களின் வாயி லாக ஒரு மாபெரும் இலக்கிய வடிவமாகக் காலப்போக் கில் மாற்றமடைவதற்கு வாய்மொழி இலக்கியங்களே முன்னோடியாக அமைந்துள்ளன என்பது குறிக்கத் தக்கதாகும்.

பயன்பட்ட நூல்கள்

தே.லூர்து,நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், 1997.

புலியூர்க்கேசிகள், சிலப்பதிகாரம், ம1958.

ஜெ. ஸ்ரீசந்திரன், சிலப்பதிகாரம், 1987.

க்ரியா, க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, 1992.

இரா.முருகவேள் - மீளிர் கல் (நாவல்), 2014

கின்னாரம் பற்றிய முழுத் தகவல் தந்தவர் - க.பொன்னுசாமி, வரலாற்று ஆய்வாளர், பல்லடம்

Korravai is the goddess of war and victory in the Tamil tradition. She is also the mother goddess and the goddess of fertility, agriculture, and hunters. In the latter form, she is sometimes referred to by other names and epithets in the Tamil tradition of South India and Sri Lanka, such as Atha, Mari, Suli, and Neeli. She is the other form of the primordial Hindu goddess Parvati.

ISSN 2320-4842

தொல்காப்பியப் பொருளதிகாரம் காட்டும் தமிழ்ச் சமுதாயம்

பா. மேகலா

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர் (பதிவு எண் : 24389/Ph.D K6/ Tamil / Full Time / January 2018/ Date 01.04.2018)

தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம் (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

நெறியாளர்: **முனைவர் கோ. ஜெயஸ்ரீ**

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம் (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச்சுருக்கம்

தொல்காப்பியம் காட்டும் தமிழ்ச் சமுதாயம்எத்தகையது, அன்றைய வாழ்க்கைமுறை எப்படி இருந்தது, பெண் களும்ஆண்களும் எங்ஙனம் வாழ்ந்தனர், அவர்களின் உறவுமுறைகள், நட்பு எவ்வாறு இருந்ததுஎன்பவை குறித்துஇக்கட்டுரை ஆய்கிறது. கட்டுரையின் முடிவில் தொகுப்புரையும் முடிவுரையும் அதன்பின் கட்டுரையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் ஆதாரங்கள் அடிக்குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

முன்னுரை

அகம், புறம் எனும் இருதிணை வடிவமைந்த பொருளிலக்கணம் இன்றும் அறிவுலகிற்குப் புதியது, தமிழில் மட்டுமே இக்கூறு காணப்படுகிறது என்பர் பன்மொழி அறிஞர்கள். தொல்காப்பியம் கூறும் மாந்தர்களான தலைவன், தலைவி, தோழி, செவிலி, தாய், தந்தை, பாங்கன், உற்றார் உறவினர், கண்டோர், கேட்டோர் ஆகியோர் பங்கு, எந்த இடத்தில் எவ்வாறு இவர்கள் செயல்படுவர், இவர்களின் நிலைப்பாடு அச்சமுதாயத் தில் எவ்வாறிருந்தது என்பது குறித்து இக்கட்டுரை பேசுகிறது.

எல்லா உயிர்க்கும் இன்பம்

தமிழர் இலக்கண வடிவு கொடுத்த இருதிணையுள்ளும் சிறந்து நிற்பது அகத்திணை எனலாம். புறத்திணைப் பொருளான வீரம் மக்களுள்ளும் சிலர்க்கே தகுவது. ***நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே***[1] ***(தொல்.1169)*** என்றபடி, படைப்பயிற்சியால் வருவது. அகத்திணைப் பொருளான காமமோ இருதிணை உயிர்க்கெல்லாம் பொது.

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது

தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்[2] ***(தொல்.1169)*** என்று பாலியலறிஞன் சுட்டி, உடம்போடு ஒட்டிய இயற் கைத்து ஆதலால், அகப்பாடல் உயிர்கள் பிறந்ததற்கும் பிறப்பிப்பதற்கும் அடிப்படையான இன்பவுணர்வை உலகின் மருங்கறாது வழிமுறை காக்கும் காமத்துடிப்பைப் பொருளாகக் கொண்ட தலைமையுடையது என அறியத்தகும். ***புலவனுக்கு மதம் எனப்படுவது ஆண் பெண் காதலே. அக்காதல் இலக்கியத்தின் வற்றா ஊற்றிடங் களுள் ஒன்று. கவிதை எண்ணத்தை உருவாக்கும் சார்புகளுள் ஒன்று*** எனக் கவிஞனுக்கும் காதலுக்கும் அமைந்த நட்பினை எடுத்து மொழிவர்[3] ஆங்கிலப் பேராசிரியர் ஆர்போர்டு.

தொல்காப்பியர் நுவலும் தலைமாந்தர்கள்

அகம் என்பது உள்ளம். தலைவன் தலைவியரின் உள்ளங்கள் இணைந்தஒழுக்கத்தைக் கூறுவது. இல்லற வாழ்வை எடுத்தியம்புவது. இல்லற வாழ்வில் தலைமை மாந்தர்களாகப் போற்றப்படுபவர்கள் தலைவனும் தலைவியுமே. அகத்திணையின் உயிர்நாடி காதலோரின் உள்ளப் புணர்ச்சியல்லது பிறிதில்லை. ஒன்றுபடுத்தும் ஊழ்நிலை யாலும், வேறுபடுத்தும் ஊழ்நிலையானும், அமையும் வாழ்க்கையில் ஒன்று தலைச்செய்யும் உயர்ந்த ஊழின் ஆணையால், ஒத்த தலைவனும், தலைவியும் காண்பர் எனத் தொல்காப்பியர்,

ஒன்றேவேறேஎன்றிருபால்வயின்
ஒன்றிஉயர்ந்தபாலது ஆணையின்
ஒத்தகிழவனும்கிழத்தியும்காண்ப.[4] ***(தொல்.1039)*** என்கிறார். மேலும் பழந்தமிழ்ச் சமுதாயம் பெண்ணினத்தை நல் லினமாகக் கொண்டாயிற்று. காதற் செய்கையிலும் இல்லறத்திலும் உரிமையளித்த பெற்றி இதற்கு ஒரு சான்று. அகமாந்தர்களுள் தலைமை தலைவிக்கே என்றும், பிற மாந்தர்கள் தலைவி வழிப்பட்டவர்களே என்றும், தலைவியின் பண்புகள் கற்பினைச் சார்ந்து பொலிவனவே என்றும் நாம் தெளியலாம்.

கரணம் தோன்றக் காரணம்

சமுதாயத்தில் பொய் கூறலும், பிழைபட நடத்தலும் மக்களிடையே தோன்றிய பின்னர், ஆன்றோர் ஏற்படுத் தியது வதுவைச் சடங்காகும். இதுவே கரணம் தோன்றக்காரணமாகஇருந்தது. இதைத் தொல்காப்பியர்,

ISSN 2320-4842

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப*[23] *(தொல்.1091) என விளக்குகிறார். உள்ளது கூறல் எனும் பண்பின்வழி நடைமுறை வாழ்வியலையும் தொல்காப்பியர் உணர்த்துகிறார்.

தோழியின் தூது

புதிய மலர்கள் கட்டி என்னுடைய உறவினர்கள் எனக்குத் திருமண ஏற்பாடு செய்வதைக் கண்டும் ஒன்றும் செய்யாத அறிவற்றவனே என்று தலைவனை எள்ளி நகைத்துவிட்டு வருக தோழி எனத் தலைவி தோழியைத் தூது விடுக்கிறாள்.தோழி, தலைவனிடம் சென்று நம் நிலையைக் கூறிவிட்டு வா என்கிறாள். நீ கூறும் சொற்களை அவன் ஏற்கும்படி உறுதியுடன் கூறு.

புதுவ மலர் தைஇ எமர் என் பெயரால்
வதுவை அயர்வரை கண்டு மதி அறியா ஏழையை*[16]*(கலி. 114)

திட்டுத் திட்டாக உள்ள மணலையுடைய துறையில் சிற்றில் கட்டி விளையாடிய அழகிய நெற்றியுடைய தோழியருடன் விளையாடியபொழுது அவர்கள் அறியாதபடி என்னுடன் தான் புணர்ந்ததை அவன் அறிவான். அவ்வாறிருக்க நான் உள்ளம் வருந்தி இருக்க வேண்டுமா? நீர் சூழ்ந்த பெரிய உலகத்தையே பெற்றாலும், ஒழுக்க நெறியையுடைய ஆயர் பெண்களுக்கு, இரு மணம் நிகழ்வது இயல்பு இல்லையே எனப் பகர்கிறாள் தலைவி.

விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்
அரு நெறி ஆயர் மகளிர்க்கு
இருமணம் கூடுதல் இல் இயல்பு அன்றே!*[17] *(கலி.114)

எனச்சோழன் நல்லுருத்திரன் பாடியுள்ளார். இதுவரை தோழியின் உன்னத நட்பின் திறமும் உறவு நிலையும் குறித்துப் பரக்கக் கண்டோம்.

தொல்காப்பியத்தில் பெண்

மனித இனத்துள் தாய்வழித் தலைமையும் தந்தைவழித் தலைமையும் இடம்பெற்றன. தனிச் சொத்துடைமை, உழைப்பு விலக்கு, குழந்தைப்பேறு, மாத விலக்கு ஆகிய தாய்வழித்தலைமையை மாற்றின. தன்னால்தான் பிள்ளைப்பேறு ஏற்படுகிறது என்ற ஆணாதிக்க உணர்வு தலைதூக்கியபின் தந்தைவழிச் சமூகங்கள் பெருகின. மேலும் மகளிர் தம் குடிப்பெருமை காப்பதை,

அவன் சோர்பு காத்தல் கடன் எனப்படுதலின்
மகன் தாய் உயர்பும் தன்னுயர்பாகும்
செல்வன் பணிமொழி இயல்பாகலான்*[24]*(தொல்.1120)

என்றவாறு தொல்காப்பியர் வெளிப்படுத்தியுள்ளார்.

மன வலிமை

தொல்காப்பியர் கால மகளிர் எதையும் தாங்கும் இதயம் பெற்றிருந்ததைப் புறப்பாடல்கள் புலப்படுத்துகின்றன. போர்க்களத்தில் எல்லாக் காட்சிகளையும் கண்டு இடிதாங்கிகளாக இருந்துள்ளனர். உடன்கட்டையேறிய பெண், கணவன் இறந்தபின் விதவைக் கோலம் பூண்ட பெண், போர்க்களத்தில் இறந்த தனது கணவனின் உடலைத் தேடி மடியில் வைத்து அழும் பெண், விழுப்புண் பட்டு இறந்த தன் மகனைக் கண்டு மகிழ்ந்த தாய், புறமுதுகிட்ட மகனைக் கண்டால் உயிர்விடுவேன் எனக் கூறும் தாய் என்று பல்வேறு தரப்பட்ட வீர மகளிரைத் தொல்காப்பியம் காட்டுகிறது.

நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபாலையும்*[37] *(தொல்.1025)

தாய், மனைவி, மகள், தலைமகள், தோழி, பொது மகளிர் என்று பல வேடங்களில் செயலாற்றினாலும் அனைத்திலும் செம்மையானவளாக, தடுமாற்றம் இலாதவளாகப் பெண் வாழ்ந்திருக்கிறாள்.

தொகுப்புரை

இன்றைக்குப் பெண்ணியம் பெரிதும் வளர்ந்துள்ளது. பெண்ணியக் கோட்பாடுகள் பல உருவாக்கப்பட்டுள. இந்நிலையை ஈராயிரமாண்டுகட்கு முற்பட்ட நூலில் எதிர்பார்க்க இயலாது. ஆனால் தன் காலத்திற்குக் கட்டுப்பட்ட பெண் பற்றிய சில சிறப்பான கருத்துகள் தொல்காப்பியம்வழி வெளிப்பட்டுள்ளது என்பதை மறுக்கவியலாது. இப்பின்னணியில் தொன்மைக் காலத் தமிழ்ப் பெண்மையை அறிந்துகொள்ள உதவும் அரிய சமூகவியல் ஆவணம் தொல்காப்பியம் எனலாம்.

முடிவுரை

இதுகாறும் தொல்காப்பியம் காட்டிய சமுதாயத்தைக் கண்டோம். தலைமாந்தர், துணை மாந்தர், பாங்கி, பாங்கனின் ஒத்துழைப்பு, செவிலித்தாயின் புரிதல், நற்றாயின் பண்பு என அனைத்து உறவுகளையும் ஆய்வு நோக்கில் காண இயன்றது தொல்காப்பி யர் சுட்டிய சமூகம் செம்மாந்த சீரான சமூகம் என்பது தெளிவு.

சான்றெண் குறிப்புகள்

புறநானூறு, 312
தொல்காப்பியம், 1169
தமிழ்க்காதல், ப.2
தொல்காப்பியம், 1039
கலித்தொகை, 114
மேலது.,
தொல்காப்பியம், 1120
தொல்காப்பியம், 1025

பயன்பட்ட நூல்கள்

தொல்காப்பியம் தெளிவுரை, ச. வே. சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

தமிழ்க்காதல், வ.சுப. மாணிக்கனார், சாரதா பதிப்பகம், சென்னை.

கலித்தொகை (மூலமும், உரையும்), உரையாசிரியர் முனைவர் அ. விஸ்வநாதன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், சென்னை.

புறநானூறு (மூலமும், உரையும்), புலியூர்க்கேசிகன், சாரதா

Ignite the mind's spark to rise the sun in you.

— Florence Nightingale

ISSN 2320-4842

ஆழ்வார் பாசுரங்களில் போர்க்கருவிகளும் அதன் அணிநலன்களும்

க. ரேவதி
முனைவர் பட்ட ஆய்வாளர் (Ref. NO.20359/Ph.D.K6/Tamil//Full Time/October2016)
முதுகலைத் தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

நெறியாளர்: **முனைவர் மு. ஜோதிலெட்சுமி**
இணைப்பேராசிரியர், முதுகலைத் தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச்சுருக்கம்

ஆழ்வார் காலத்தில் பேரரசர்களும் குறுநிலமன்னர்களும் பல்வேறு காரணங்களால் ஒருவரோடு ஒருவர் போரிட்டு வந்தனர்.அப்போர்களின்போது ஈடுபடுத்தப்பட்ட நால்வகைப் படைகளுக்கேற்பப் போர்க்கருவிகளைப் பயன்படுத்தித் திருமால் அசுரர்களை அழித்துள்ளார். இப்போர்க்கருவிகளின்வழி ஆழ்வார் பாசுரங்களில் இடம்பெற்றுள்ள அணிநலன்களைக் கண்டறிந்து விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்: வார்குழல்-நீண்ட கூந்தல், பரவை-கடல், அவனி-உலகம், உரம்-வலிமை, களிறு-ஆண் யானை, குன்று-மலை, இமையவர்-தேவர், விசிறும்-வீசும், வேழம்-யானை, தோமரம்-தண்டாயுதம், புள்ளூர் கடவுள்-கருடன் மேல் ஏறிச் செல்லும் தெய்வமாகிய திருமால், குந்தம்-எறிகோல்.

முன்னுரை

திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களின் தொகுப்பு நாலாயிர திவ்ய பிரபந்தமாகும். இவ்வாழ்வார்கள் அகச்சுவையும், புறச்சுவையும் நன்கு உணர்ந்து அகத்துறை பற்றியும், புறத்துறை பற்றியும் தம் பாசுரங்களின்வழி வெளிப்படுத்தியுள்ளனர். அவ்வகையில் திருமால் அசுரர்களை அழிப்பதற்கு வில், அம்பு, வாள், வேல், கேடயம், பஞ்சாயுதம், ஈட்டி, கலப்பை, கோடரி, பாஞ்சசன்னியம் போன்ற பல்வேறு படைக்கருவிகளைப் போரில் பயன்படுத்தியுள்ளார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது இக்கட்டுரை.

கருவி - விளக்கம்

எந்த ஒரு செயலையும் செய்வதற்குப் பாதுகாப்பாக இருக்கும் சாதனம் கருவியாகும். கருவி என்பதற்கு ***ஆயுதம், சாதனம், கேடகம், குதிரை மேலிடும், தவிசு, குதிரைச் சம்மட்டி, உடை, துணைக்காரணம், இசை உண்டாகும் யாழ் கருவி***[1] எனச் செந்தமிழ் அகராதியும், ***ஆயுதம், சாதனம், கவசம், கேடகம், குதிரைக்கலணை, குதிரைச் சம்மட்டி, தொகுதி, மேகம், தொடர்பு, ஆடை, ஓவியம், அணிகலன், துணைக்காரணம், இசையுண்டாதற்குரிய யாழ் முதலிய கருவிகள்***[2] எனத் தமிழ்-தமிழ் அகரமுதலியும் குறிப்பிடுகின்றன. எனவே கருவி என்ற சொல்லுக்கு ஆயுதப் பொதுப்பெயர் என்ற பொருளையே அனைத்து அகராதிகளும் குறிப்பிடுவதைக் காணலாம்.

போர்க்கருவிகள்

வேட்டையாடி வாழ்ந்த மக்கள் குழுவாக வாழ முற்பட்டனர். மற்ற குழுவிடமிருந்து தம் குழுவைப் பாதுகாக்கப் போர்க்கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். போருக்குச் செல்லும் நாலுவகை படைகளுக்குத் தகுந்தாற் போன்று போர்க்கருவிகளைப் படைவீரர்கள் பயன்படுத்தினர். மேலும், பகைவர்களைத் தாக்குவதற்கும், தாக்கும்பொழுது அவற்றை தடுக்கவும் சில கருவிகளைப் பயன்படுத்தினர்.

வேல்

போர்க்கருவிகளில் முதன்மையானது வேலாகும். வீரர்கள் வேல் வைத்து போரிடும் முறைக்கு *வேற்படை வீரர்கள்* எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதனை, ***கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்***[3], ***வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்***[4] என்னும் நூற்பாக்களில் வேலினைச் சிறப்பித்துள்ளார். ***வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லருக்கு கடனே***[5] எனப் புறநானூறும் விளக்குகிறது. திருமங்கையாழ்வாரும்,

ஏடொத்தேந்தும் நீளிலைவேல் எங்களிராவணனார்
ஓடிப்போனார் நாங்கள் எய்த்தோம்; உய்வதோர் காரணத்தால்
சூடிப் போந்தோம் உங்கள் கோமான் ஆணை தொடரேல்மின்
கூடிக்கூடி ஆடுகின்றோம் குழமணி தூரமே (நா.தி.பி.பா.1876) எனப் பனை ஓலை போல் அகன்று நீண்டுள்ள வேலாயுதத்தைக் கையில் ஏந்திய எங்கள் அரசன் இராவணன் போர்க்களத்திலிருந்து ஓடிப்போய்விட்டார். நாங்கள்

போர்செய்து களைத்துவிட்டோம். எதிர்த்துப் போரிட இனி வலிமையில்லை. உயிர் பிழைக்க இராமபிரானின் அருள் வேண்டும். தங்களை அழிக்க யுத்தத்தைத் தொடர வேண்டாம். நாங்கள் குழமணி தூரம் எனும் கூத்தினை ஆடுகின்றோம் என அரக்கர் படைவீரர் கள் வானரக் கூட்டத்திடம் கெஞ்சி உயிர்ப் பிச்சைக் கேட்பதனால் இழிவுச்சுவை அணி இப்பாசுரத்தில் இடம் பெற்றுள்ளதெனலாம்.

வென்றதொல்சீர்த்தென்னிலங்கைவெஞ்சமத்துஅன்றரக்கர்
குன்ற மன்னர் ஆடியுய்ந்த குழமணி தூரத்தை
கன்றி நெய்ந்நீர் நின்ற வேற்கைக் கலியன் ஒலி மாலை
ஒன்றுமொன்று மைந்தும் மூன்றும் பாடி நின்றாடுமினே

(நா.தி.பி.பா.1877) என நீண்ட காலமாக வெற்றியையே கண்ட இலங்கை நகரின் கொடிய போர்க்களத்தில் மலை போன்ற அரக்கர்கள் குழமணி தூரம் எனும் கூத்தினை ஆடி உயிர் பிழைத்ததை, நெய் பூசிய வேலினைக் கையில் கொண்ட திருமங்கையாழ்வார் பாடிய பத்துப் பாடலையும் வாழ்த்திப் பாடினால் யாவ ரும் உய்யலாம் எனும் பொருளில் இப்பாசுரம் அமைந் துள்ளது. எனவே இதில் இராமனை வாழ்த்திக் கூறப் பட்டுள்ளதால் வாழ்த்தணி அமைந்துள்ளதெனலாம்.

அம்பு

பழங்காலத்தில் மக்கள் விலங்குகளை வேட்டையாட வும் பகைவர்களைத் தாக்கவும் பலவகையான ஆயு தங்களை பயன்படுத்தினர். அவற்றுள் ஒன்று அம்பா கும். அம்பு என்பதற்கு *அப்பிக்கொள்ளுதல்* என்பது பொருள். தொலைவில் உள்ளவர்களை வீழ்த்த அது பயன்படுத்தப்பட்டுள்ளது. ***பகழி, வாளி, பாணம், சரம், பத்திரி, சிலீமுகம், பல்லம், புங்கம், கணை, குதை, கங்கபத்திரம், அத்திரம், தோணி, கோல், விசிகம், அம்பு***[6] எனச் சேந்தன் திவாகரமும், ***பகழி, வாளி, தோணி, பாணம், கதிரம், பல்லம், கணை, கோல், சரம், வண்டு, பத்திரம், சிலீமுகம், விசிகம், உடு, அம்பு***[7] எனப் பிங்கல நிகண்டும் விளக்குகின்றன. திருமங்கையாழ்வாரும்,

மணங்கள் நாறும் வார் குழலார் மாதர்களா தரத்தை
புணர்ந்த சிந்தைப் புன்மையாளன் பொன்ற
வரிசிலையால்கணங்களுண்ண வாளியாண்ட காவலனுக்
கிளையோன்
குணங்கள் பாடி ஆடுகின்றோம் குழமணி தூரமே

(நா.தி.பி.பா.1871) என மணமுடைய நீண்ட கூந்தலை யுடைய பெண்களிடம் ஆசையை வளர்த்துக்கொண்ட நீசனான இராவணன் அழியும்படியும் அவன் உடலைப் பேய்கள் உண்ணும்படியும் வில்லை வளைத்து அம்பு களைச் செலுத்திக் கொன்றான். அனைவரையும் காக் கும் இராமனின் தம்பியான இலக்குவனின் உயர்ந்த குணங்களைப் பாடி வாழ்த்திக் குழமணி தூரம் ஆடு கிறோம் என்கின்றனர் அரக்கர்கள். இங்கு இலக்கு வனை வாழ்த்திப் பாடுவதால் இப்பாசுரத்தில் வாழ்த் தணி அமையப்பெற்றுள்ளது.

செம்பொன் மதில்சூழ் தென்னிலங்கைக்கு
இறைவன் சிரங்கள் ஐயிரண்டும்
உம்பர் வாளிக்கு இலக்காக
உதித்த உரவோன் ஊர்போலும் (நா.தி.பி.பா.1590)

எனச் சிவந்த பொன்னாலான மதில்களைக் கொண்டு வலிமையுடன் உள்ள தென்னிலங்கைக்கு இறைவனா கப் போற்றப்படும் இலங்கை மன்னன் இராவணனின் தலைகள் பத்தையும் இராமனின் வலிமை கொண்ட பிரம்மாஸ்திரம் தாக்கி அழித்தது. இதனால் அரக்கர் கூட்டமும் அழிந்தது எனப் புறக்கருத்துப் பெற்று தன்மை அணி கொண்டு இப்பாசுரம் விளக்குகிறது.

வாள்

இரும்பாலான ஒரு போர்க்கருவி வாள் ஆகும். அரு கிலுள்ள பகைவர்களை வெட்டி வீழ்த்தவும் குத்திக் கொல்லவும் வாள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை, ***உவணி, ஏதி, கடுத்தலை, துவட்டி, நவிர், (மட்டாயுதம், தூவத்தி), நாட்டம், வஞ்சம், வாள் (கட்கம், கரவாளம்) அவரிவாள் கத்தி, கூர்வாள் (சிறுவாள்), கொடுவாள் (குயம்,புள்ளம்),ஈர்வாள் (கரபத்திரம்), உடைவாள் (சுரிக, பத்திரம்), குத்துவாள், புல்லரிவாள்***[8] என வாழ்வியற் களஞ்சியமும் ***வாளின் பிடி என்பது திண்மையாக இருக் கும். பழங்காலத்தில் வட்டக் கைப்பிடிவாள், நுனியில் வட்டத் தகடு வலிவு கொண்ட நேர்வாள், மிகக் கூரிய நீண்ட வாள் பழங்காலத்திலிருந்தன என்றும், வாளின் பிடிகள் காண்டாமிருகம், எருமைக் கொம்புகள், யானைத் தந்தம், மரம், மூங்கில், வேர் ஆகியவற்றால் உருவாக்கப் பெற்றிருக்கும்***[9] என அர்த்தசாஸ்திரமும், ***முற்காலத்தில் போர்வீரர்கள்வைத்திருந்தகைப்பிடியுடன் கூடிய உலோகப் பகுதியின் இரு ஓரங்களும் கூர்முனை கொண்ட நீண்ட கத்தி***[10] எனக் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும் விளக்கம் தரும். பெரியாழ்வாரும்,

இமையவர் இறுமாந்து இருந்து அரசாள
ஏற்று வந்து எதிர்பொருசேனை
நமபுரம் நணுக நாந்தகம் விசிறும்
நம் புருடோத்தமன் நகர்தான் (நா.தி.பி.பா.394)

எனத் தர்மத்திற்குக் கட்டுப்பட்டு உயரிய நெறி நின்று அறத்தோடு சிறப்பாக தேவர்கள் ஆட்சிபுரிந்துவந்தனர். இதைக்கண்ட அசுரர்கள் பொறாமையுற்று தேவர்தம் நல்லாட்சியைச் சிதைத்து வெற்றி கொள்ளப் போர் தொடுத்தனர். இப்போரில் *நாந்தகம்* எனும் வாளால் அசுரர்களை அழித்து வானுலகை மீட்டு தேவர்கள் மகிழ்வுடன் வாழ வழிசெய்தார் என்கிறது இப்பாடல். இப்பாசுரத்தில் தேவர்களைக் காக்கும் பொருட்டுத் திருமால் அசுரர்கள்மீது போரிட்ட நிகழ்வை உள்ள வாறே கூறுவதால் தன்மையணி அமைந்துள்ளது.

பவ்வ நீருடை ஆடையாகச் சுற்றிப்
பாரகலம் திருவடியாப்பவனம் மெய்யா
செவ்வி மாதிர மெட்டும் தோளா அண்டம்
திருமுடியா நின்றான்பால் செல்லகிற்பீர்
கவ்வை மாகளிறுந்தி வெண்ணி யேற்ற
கழல மன்னர் மணிமுடிமேல் காகமேற
தெய்வவாள் வலங்கொண்ட சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே(நா.தி.பி.பா.1500)

எனக்கடல்நீர் ஆடையாகவும் உலகப் பரப்பு பாதங்களாகவும், காற்று திருமேனியாகவும், எட்டுத்

திசைகள் தோள்களாகவும், அண்டம் திருமுடியாகியும் நிற்கும் திருமாலின் திருவடி சேர்ந்து நற்கதி அடைக. ஏனெனில் கோச்செங்கட்சோழன் திருநறையூர் நம்பி யிடம் தெய்வவாள் பெற்று வெண்ணி எனும் இடத் தில் யானைகளை வழிநடத்தி வந்த பகைவர்களை வென்றானென இப்பாசுரம் கூறுகிறது. இதில் பகவா னின் ஆடைக்கு கடல்நீரையும், உலகப் பரப்பைப் பாதத்திற்கும், திருமேனிக்குக் காற்றையும், தோள் களுக்கு எட்டுத்திசைகளையும், திருமுடிக்குப் பேரண் டத்தையும் உருவகம் செய்வதால் உருவக அணி இதில் இடம்பெற்றுள்ளதெனலாம்.

கதை

இது முற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஒரு போர்க் கருவி. இதன் முன்பகுதி கனத்தும் பருத்தும் இருக் கும். அத்துடன் நீண்ட கைப்பிடியும் இணைந்திருக் கும். பெரியாழ்வாரும்,

அளந்திட்ட தூணை அவன் தட்ட ஆங்கே
வளர்ந்திட்டு வாணுகிர்ச் சிங்க உருவாய்
உளந்தொட்டு இரணியன் ஒண்மார்வ கலம்
பிளந்திட்ட கைகளால் சப்பாணி,
பேய் முலையுண்டானே சப்பாணி (நா.தி.பி.பா.83) எனத் தானே அளவு சொல்லி இரணியன் அமைத்த தூணைத் தானே சினத்துடன் கதையால் அடித்தான். தூண் பிளந்து கூர்மையான நகங்களை உடைய நர சிம்மராய் பகவான் தோன்றினார். அப்போதாவது இரணியன் அஞ்சுகிறானாவெனப் பார்த்தார். அவன் ஆணவம் அறிவை மறைத்தது. அதனால் பகவான் அவன் மார்பைத் தன் கூரிய நகத்தால் குத்திக் கிழித் தார். அந்தத் திருக்கரங்களால் சப்பாணி கொட்டுக. பேய்ப்பெண் பூதனையின் முலைப்பால் குடித்தவனே, சப்பாணி கொட்டுக என்று பாடியுள்ளார் ஆழ்வார். இங்கு, குழந்தை பருவத்தில் சப்பாணி கொட்டி ஆடும் செய்தியைக் கூறியுள்ளதால் உவகை எனும் மெய்ப்பாட்டுச் சுவையணி அமைந்துள்ளதெனலாம்.

பள்ளியிலோதிவந்த தன் சிறுவன் வாயில் ஓராயிர நாமம்
ஒள்ளியவாகிப்போத ஆங்கு அதனுக்கு ஒன்றுமோர்
பொறுப்பிலனாகி
பிள்ளையைச்சீறி வெகுண்டு தூண்புடைப்ப, பிறையெயிற்
றினன் விழிபேழ்வாய்
தெள்ளிய சிங்கமாகிய தேவைத் திருவல்லிக்கேணிக்
கண்டேனே (நா.தி.பி.பா.1075) என அரக்கனின் புதல்வனான பிரகலாதன் வாயிலிருந்து விஷ்ணு வின் ஆயிரம் நாமம் வெளிவர, அதனால் கோபம் கொண்ட இரணியன் தன் கையில் இருந்த கதையால் தூணை அடிக்க, அத்தூணிலிருந்து வெளிவந்த நர சிம்மன் பிறை போன்று வளைந்த பற்களுடன், தீப் பொறி பறக்கும் கண்களையும், அகன்ற வாயையும் கொண்டு அரக்கனைக் கொன்றான். இத்தகு சிறப்பு மிகு நரசிம்ம மூர்த்தியைத் திருவல்லிக்கேணியில் வணங்கினேன் என்கிறார் ஆழ்வார். இப்பாசுரத்தில் பிறை போன்ற வளைந்த பற்கள் என உவமிக்கப்பட் டுள்ளமையால் உவமையணி வந்துள்ளது.

பஞ்சாயுதம்

திருமால் அசுரர்களை அழிக்கப் பஞ்சாயுதங்களைக் கொண்டு போர்புரிந்துள்ளனர். பஞ்சாயுதம் என்னும் ஆயுதத்திற்கு, ***சங்கம், சக்கரம், வில், வாள், தண்டம்***[11] எனச் செந்தமிழ் அகராதி விளக்கம் தருகிறது.

கைய கனலாழி கார்கடல்வாய் வெண்சங்கம்
வெய்யகதை சார்ங்கம் வெஞ்சுடர்வாள் - செய்ய
படைபரவை பாழி பனிநீ ருலகம்
அடியளந்த மாயன் அவற்கு (நா.தி.பி.பா.2317)
கடல் சூழ்ந்த உலகங்களைத் தன் திருப்பாதத்தால் அளந்து வியப்படையச் செய்த பகவான் திருமாலின் திருக்கரங்களில் தீயுமிழும் சக்கரமும், கருங்கடலில் தோன்றிய பாஞ்சசன்னியமும், வெண்மையான கௌ மோதியும், ஒளிவீசும் நாந்தகமும், சார்ங்க வில்லும் ஆயுதங்களாகத் தாங்கியுள்ளான் என இப்பாசுரம் கூறுகிறது. எனவே திருமாலின் கையிலுள்ள சக்கரத் தின் ஆற்றலுக்கு நெருப்புக்கனலை உருவகமாகக் கூறப்பட்டுள்ளதால் உருவக அணி பயின்றுள்ளது.

சுதர்சனச் சக்கரம்

திருமாலின் ஆயுதங்களில் ஒன்று சுதர்சன சக்கரம். சக்கரத்தின் வேறு பெயர்களாக, ***திகிரி, நேமி, ஆழி, வளை, எஃகம், சுதர்சனம், பரிதி***[12] எனச் சேந்தன்திவா கரமும் குறிப்பிட்டுள்ளது. இச்சக்கரத்தின் அம்சமாக அவதரித்தவர் திருமங்கையாழ்வார்.

மீன்கள் நிறைந்த குளத்தில் உள்ள தாமரைமலரை வழிபாட்டிற்காக யானை ஒன்று பறித்தது. அப்போது முதலை யானையின் காலைப் பற்றியது. வலியால் துடித்த யானை தன் துதிக்கையைத் தூக்கி இறை வனை நினைத்துப் பிளிறியது. யானையின் துன்பம் தீர்க்கக் கருடவாகனத்தில் வந்த பகவான் தன் சுதர் சனச் சக்கரத்தை ஏவி யானையின் துன்பத்தை நீக்கி னான். இதனை,

மீனமர் பொய்கை நாள்மலர் கொய்வான்
வேட்கை யினோடு சென்றிழிந்த
கானமர் வேழம் கையெடுத்தலறக்
கரா அதன் காலினைக் கதுவ
ஆனையின் துயரம் தீரப்புள்ளூர்ந்து
சென்று நின்று ஆழி தொட்டானை (நா.தி.பி.
பா.1076) எனத் திருமங்கையாழ்வார் குறிப்பிடுகிறார். இதில் பகவான் சுதர்சனச் சக்கரம் ஏவி முதலையை அழித்த நிகழ்வை உள்ளவாறே கூறுவதால் தன்மை யணி வந்துள்ளது எனலாம்.

பிற ஆயுதங்கள்

பஞ்சாயுதங்கள் மட்டுமன்றிக் கலப்பை, கோடரி போன்ற பிற ஆயுதங்களையும் திருமால் பயன்படுத்திப் போரிட் டுள்ளதை,

குந்தமோடு சூலம்வேல்கள் தோமரங்கள் தண்டுவாள்
பந்தமான தேவர்கள் பரந்து வானகம் உற
வந்தவாணன் ஈரைந்நூறு தோள்களைத் துணித்த நாள்

அந்தவந்த ஆகுலம் அமரரே அறிவரே(நா.தி.பி.பா.821) எனத் திருமங்கையாழ்வார் குறிப்பிடுகிறார். ஈட்டி, சூலம், வேல், கேடயம், கதாயுதம், வாள் ஆகியவற்றைத் தாங்கிக் கூட்டமாகப் போர்க்களத்திற்கு வந்த தேவர்கள், வாணாசுரனுடன் போரிட்டு நாற்புறமும் சிதறி ஓடினர். அந்த வாணாசுரனின் ஆயிரம் தோள்களையும் அறுத்தவன் திருமால். இப்பாசுரத்தின் திருமால் பெருமைகளை ஆழ்வார் எடுத்துரைத்துள்ளார்.

உழுவதோர் படையும் உலக்கையும்
வில்லும் ஒண்சுடர் ஆழியும் சங்கும்
மழுவொடு வாளும் படைக்கலமுடைய
மால்புருடோத்தமன் வாழ்வு(நா.தி.பி.பா.395)

இங்கு நிலத்தை உழுகிற கலப்பை, உலக்கை, வில், சுதர்சனச்சக்கரம், சங்கு, கோடரி, வாள், போன்ற ஆயுதங்களைத் தாங்கி தருமத்தை காக்க பலராமன், பரசுராமன், இராமன், திருமால், கிருஷ்ணன் போன்ற அவதாரங்களை எடுத்தார். தேவர்களுக்கும், மானுடர்களுக்கும் பகைவர்களால் இன்னல் ஏற்படும்போது மேற்கண்ட ஆயுதங்களின் மூலம் தாக்கித் தீயவர்களைஅழித்து தர்மத்தைக் காத்தார். மேற்கண்ட இரு பாசுரங்களிலும் பலவகையான ஆயுதங்களின் பெயரை உள்ளவாறே கூறுவதால் இது பொருள் தன்மையணி.

மழு

பழுக்க காய்ச்சிய இரும்பால் செய்யப்பட்ட ஒரு போர்க்கருவியாகும். கோடரியின் சாயல் கொண்ட இதற்குக் 'கணிச்சி' என்ற பெயரும் உண்டு. ***சிவாயுதம், இது பிரளய காலாக்னியால் புருஷரூப மடைந்துள்ளது. இதனைப் பரசுராமர் தவத்தாற் பெற்று பல அரச வம்சங்களைக் கருவறுத்தனர்***[13] என அபிதான சிந்தாமணியும், ***பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட சிறிய கைப்பிடியின் முனையில் கோடாலியில் இருப்பது போன்ற பட்டையான வெட்டும் பகுதி இணைக்கப்பட்ட ஓர் ஆயுதம்***[14] எனக்க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும் விளக்குகிறது. இதைப்போலவே திருமங்கையாழ்வாரும்,

கோமங்க வங்கக் கடல் வையம் உய்யக்
குலமன்னரங்கம் மழுவில் துணிய
தாம் அங்கு அமருள்படை தொட்ட வென்றித்
தவமாமுனியைத் தமக்காக்க கிற்பீர் (நா.தி.பி.பா.1162)

கடல் சூழ்ந்த உலக மக்கள் எப்பயனும் இன்றி வாழ அரசர்கள் கொடுமை செய்தனர். இதைக் கண்ட பெருமான் பரசுராமராக அவதரித்தார். மக்களுக்கு இன்னல் தந்த அரசர்களை எல்லாம் தன் மழுவால் அடித்துக் கொன்று தர்மத்தை நிலைநாட்டினார். அத்தகு இறைவனைத் தமதாக்கிக் கொள்வீர் என இப்பாசுரம் கூறுகிறது. இதில் பரசுராமனாக அவதரித்த திருமால் தீங்கு செய்யும் அரசர்களைக் கொன்ற நிகழ்வுகளை உள்ளவாறே கூறுவதால் தன்மையணி வந்துள்ளதை அறியமுடிகிறது.

கோடரி

கொல்லர்கள் கோடரியை இரும்பால் வடித்தனர். அவ்வாறு மிக நேர்த்தியாக வடித்த கோடரி, போரின் போது அசுரர்களை வெட்டி வீழ்த்தப் பயன்படுத்தப் பட்டன. திருமங்கையாழ்வாரும்,

மன்னஞ்ச ஆயிரந்தோள் மழுவில் துணித்தமைந்தா!
என்னெஞ்சத்துள்ளிருந்து இங்கு இனிப்போய்ப்
பிறரொருவர்
வன்னெஞ்சம் புக்கிருக்க வொட்டேன், வளைத்து
வைத்தேன்
நன்னெஞ்ச அன்னன்மன்னும் நறையூர் நின்ற நம்பீயோ! (நா.தி.பி.பா.1564)

மன்னர்களெல்லாம் அஞ்சி நடுங்கும்படி கார்த்தவீரயார்ஜுனனுடைய ஆயிரம் தோள்களையும் கோடரியால் வெட்டி வீழ்த்திய ஜமதக்கினியின் மகன் திருநறையூரில் குடிகொண்டுள்ளான். மேலும்,

மழுவினால் அவனியரசை மூவெழுகால்
மணிமுடி பொடிபடுத்து உதிரக்
குழுவு வார்புனலுள் குளித்து வெங்கோபம்
தவிர்ந்தவன்குலைமலி கதலி (நா.தி.பி.பா. 1753)

உலகிலுள்ள இருபத்தியொரு தலைமுறை மன்னர்தம் மணிமுடி மண்ணில் விழுந்து பொடிப்பொடியாகும்படிக் கோடரியால் வெட்டி வீசி அவர்களது இரத்தத்தில் குளித்துச் சினம் தணித்தவன் பரசுராமன். மேற்கூறிய இரு பாசுரத்தில் பரசுராமனின் வீரத்தை உள்ளவாறே கூறுவதால் தன்மை அணி வந்துள்ளது.

தொகுப்புரை

மேற்சுட்டியவற்றான், அருகிலோ தொலைவிலோ உள்ள எதிரிகளைத் தாக்க வேலும், தொலைவிலுள்ளலிருக்கும் அரக்கரை அழிக்க அம்பும், அருகிலுள்ள வீரர்களை வீழ்த்த வாளும், தூணை உடைக்க கதையும், எதிரிகளின் பலத்தைக் குறைக்கப் பாஞ்சசன்னியமும், முதலையை அழிக்க சுதர்சன சக்கரமும், பகைவர்களை அடித்துக் கொல்ல மழுவும், அசுரரை வெட்டி வீழ்த்தக் கோடரியும் பயன்படுத்தப்பட்டுள.

முடிவுரை

மேற்கூறியவற்றினின்றும், நால்வகைப் படைவீரர்களும் பயன்படுத்திய கருவிகள் பற்றி ஆழ்வார் பாசுரங்களில் பரவலாக இடம்பெற்றுள்ளன; இவை பெரும்பாலும் இரும்பாலாகிய கருவிகளாதலால் ஆழ்வார் காலத்திற்குமுன்பே கருவிகள் பயன்பாடு இருந்துள்ளது; இக்கருவிகளின்வழி ஆழ்வார் பாசுரங்களில் அணி நலன்கள் அமைகின்றன என்பன தெளிவாகும்.

துணைநூற்பட்டியல்

ந.சி. கந்தையா, செந்தமிழ் அகராதி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப.2009.

மு. சண்முகம்பிள்ளை, தமிழ் தமிழ் அகரமுதலி, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, மு.ப. ஜூன் 1985.

இளம்பூரணர் (முதல் பகுதி) தொல்காப்பியம், தமிழ் மண் பதிப்பகம், சென்னை, மு.ப.2003, இ.ப.2009.

மேலது.

தொடர்ச்சி: 57ஆம் பக்கம்

ISSN 2320-4842

திருமந்திரத்தில் உயிர்வளம்

ம. ராஜேஸ்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), சேலம் 636 007

முனைவர் ஜா. பிரேமலதா
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), சேலம் 636 007

முன்னுரை

மனிதனுக்கு உடல் நலமாகவும் உயிர் வளமாகவும் இருத்தல் வேண்டும். மனித உடல் பஞ்ச பூதங்களால் ஆனது. கண்ணுக்குத் தெரியாதது உயிர். அது மிக நுண்ணியது. இத்தகு உயிரின் அளவினைப் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே கண்டுரைத்த பெருமை தவராஜயோகி திருமூலர் பெருமானையே சாரும். உயிரின் இயக்க மையம் மூலாதாரமாகும். இவ்வுண்மைக்குத் திருமூலரின் பாடல்கள் சான்றாக உள்ளமையை இக்கட்டுரையில் காணலாம்.

உடல் - உள்ளம் - உயிர்

தனிமனித வாழ்க்கையிலும் தனிமனித மேம்பாட்டிலும் உடல் - உள்ளம் - உயிர் ஆகிய மூன்றும் மிக முக்கி யமானவை. இவற்றை நலம், வளம், ஓம்பல், பயிற்சி என்னும் சொற்களால் விளக்குவது பொருத்தமாகும். உடலுக்கு உடற்பயிற்சி, உள்ளத்திற்கு யோகப் பயிற்சி, உயிர் வளம் காக்கக் காயகல்பப் பயிற்சி ஆகியவை உள. இப்பயிற்சிகளை மேற்கொண்டால் சமுதாயம் வளம் பெறும். நாடும் வீடும் நலம் பெறும். தனி மனித வாழ்வில் மன அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாகும். உலக சமாதானமும் உலக அமைதியும் உண்டாகும். மனித உலகம் உய்வடையும்; அரிதினும் அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது எனும் கோட்பாட்டில் மனித வாழ் வின் மாண்பு மேன்மை அடையும். சான்றோர்களது கனவுகள் நனவாகும். சித்தர்களின் சிந்தனைகள் நிறை வேறும். தனிமனித வாழ்வில் மனவலிமை ஓங்கும். தனிமனித வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும். இவை ஒவ்வொன் றும் வெற்றிப் படிக்கட்டுகளாய் அமையும். இத்தனைக்கும் முழுமுதற் காரணமாய் அமைவது திருமூலரின் உடல், உள்ளம், உயிர் வளர்ச்சி பற்றிய சிந்தனைகளே ஆகும்.

தொல்காப்பியத்தில் உயிர்

தொல்காப்பியர் உயிர்களை ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நான்கறிவுயிர், ஐந்தறிவுயிர், ஆறறிவுயிர் என ஆறு வகைப்படுத்துகின்றார்.

மக்கள் தாமே ஆறறிவுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே[2]
ஒரு சார் விலங்கும் உளவென மொழிப[3]

'ஓரறிவுயிர்' முதல் 'ஆறறிவுயிர்' என்பதில் 'உயிர்' என வந்தாலும் அவை உயிரினங்களைச் சுட்டி உரைக்கின்றன.

சாத்திரங்ளில் உயிர்

சித்தாந்தம் என்பதற்கு முடிந்த முடிவு என்பது பொருள். இறை, உயிர், உலகு என்னும் முப்பொருள் பற்றிய ஆராய்ச்சிகளாலும் அனுபூதி கண்ட முடிவுகளே சைவ சித்தாந்தமாக உருவெடுத்திருக்கிறது.[4] அனுபூதி என்பது பட்டறிவாகும். சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களையும் உண்மைப் பொருள் என்கிறது. இறைவன் பசு என்றும் கூறி மனித இன வாழ்வின் முடிவான நோக்கம் முழுமுதற் பொருளை அறிந்து உணர்தலே ஆகும் என விளக்கிக் கூறும் நிலையில் சைவ சித்தாந்தம் ஒரு தத்துவக் கோட்பாடாக விளங்குகிறது. எல்லா உயிர்களும் சிவத்தோடு தொடர்புடையவையே, உயிர்கள் சிவத்தொடர்பை உணர்ந்து சிவத்தை நேரே அறிந்து நன்மையடைவதற்கு வேண்டிய ஆராய்ச்சியளவும் செய்முறைகளையும் வகுத்துக் கூறும் நெறியே சைவ சித்தாந்த நெறியாகும்.[5]

உயிர்க் கோட்பாடு

ஆன்மா என்பது இறையைப் போல உண்மைப் பொருள் என்கிறது சைவம். ஆன்மா என்பது வட சொல். உயிர் என்பது தமிழ்ச் சொல். பசு என்பது பாசத்தால் கட்டப்பட்டதாகும். பசு, ஆன்மா, உயிர் மூன்றுமே ஒன்றாகும். இவ்வுண்மையை உணர்ந்துகொண்டால் நன்றாகும்.

உயிர் என்பது என்றும் உள்ளது. உயிர் என்பது உடம் பல்ல. சிலர் ஐம்பொறிகள்தாம் உயிர் என்பர். உறக்க நிலையில் இருக்கும் சூக்கும உடலுக்கும் வேறாக அறியப்படும் பொருள் உயிர் என்று அழைக்கப்படு கிறது. பிராணனை விழித்திருக்கும்போதும் உறக்க நிலை யிலும் ஆதாரமாய் இருந்து இயங்கச்செய்வது எதுவோ அதுவே உயிர் எனப்படும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் நான்கு அந்தக் கரணங்களையும் அறியும் ஒன்றே உயிர் எனப்படும்.

உடலும் - உள்ளமும் - உயிரும்

திருமந்திரத்தில் எத்தகைய சூழலில் உடல், உள்ளம், உயிர் பற்றித் திருமூலர் கூறுகின்றார் என்பதை முதற் கண் குறிப்பிடவேண்டும். திருமூலர் அருளிய மூவா யிரம் பாடல்களைக் கொண்ட நூல் திருமந்திரம். உள்ளடக்கம் விளக்கும் இயல்களோ ஒன்பது தந்திரம்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே[6]

உள்ளமாகிய மனமண்டலம் சிவன் உறையும் கருவறை யாகும். ஊனாலாகிய உடம்பு ஆன்மாவின் ஆற்ற லைக் குறைத்துவைத்துள்ள இடமாகும். வள்ளலாகிய இறைவனை (தலைவனை)ச் சென்று வழிபடுதற்குரிய வாய் கோபுர வாசலாகும். நன்றாக அறிந்து தெளிவு பெற்றவர்க்குச் சிவனே சிவலிங்கமாகும். இங்ஙனம் அறிந்து வழிபடுவோர்க்கு வஞ்சனை செய்யும் ஞானேந் திரியங்கள் ஐந்தும் ஒளி பொருந்திய விளக்கு என்பது பாடலின் பொருளாகும்.

உடலும் உயிரும்

உடலையும் உயிரையும் பேணிப் பாதுகாக்க வேண் டும் என்று கூறுமுகத்தான் பின்வரும் இரு பாடல் களும் உள்ளன.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே[7]
உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின் றேனே[8]

உடல் பற்றியும் உயிர் பற்றியும் உடல் நலம் குறித்தும் கூறமுற்படும் மேற்கண்ட இரு பாடல்களையும் கை யாள்வர்.

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்

உயிரை மட்டும் வளர்க்க இயலாது. உடலுக்குள்ளே உயிர் இருப்பதால் உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த் தேனே எனக் கூறுகின்றார்.

உடம்பு அழியுமாயின் அதனைப் பெற்றுள்ள உயிரும் அழிந்து போகச் செயலின்றி நிற்கும். உடம்பு அழிந்த பின் அவ்வுடம்பைத் துணைக்கொண்டு உயிர் தவமாகிய துணையைப்பெறவும், அதனால் இறையுணர்வை அடைய வும் இயலாததாய் ஆகிவிடும். எனவே உடம்பை நிலை நிறுத்தும் வழியை அறிந்து அதனை நிலைபெறச் செய்து யான் உயிரை நலம் பெறச் செய்தவன் ஆயினேன்[9] என்பது ***உடம்பாற் அழியிற்*** . எனத் தொடங்கும் பாட லின் பொருளாகும்.

உடம்பை நிலைநிறுத்தி உயிரை நலம் பெறச்செய்தேன் என்பது கூர்ந்து நோக்கத்தக்கதாகும். உயிரை நலம் பெறச்செய்யவும் வளம் பெறச் செய்யவும் உடலை நிலைநிறுத்த வேண்டியதன் தேவை உணரத்தக்கது.

திருமந்திரத்தில் உயிர் நலம்

நீர்மேல் குமிழிபோல் நிலையற்ற வாழ்க்கை என்பது நிலையாமையை அறிவுறுத்துகின்றது.

உடல் என்னும் நிலப் பரப்பில் வாழ்ந்து கொண்டிருக் கும், உயிரென்னும் மக்களை மனம் என்றும் மன்னன் ஆட்சி செய்துகொண்டிருக்கும் களமே வாழ்க்கையாகும்[10] எனும் வாழ்வியல் சிந்தனையாளர் கூற்றும் நோக்கத் தக்கதாகும்.

வாழ்க்கையில் மன அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க விரும்பினால் உடல் நலத்திலும் கருத்தூன்ற வேண் டும்[11] வாழ்க்கையின் வெற்றி என்பது மன அமைதி யும் மகிழ்ச்சியுமாகும்.

உடல், உள்ளம், உயிர் என்னும் மூன்றும் தனிமனித வாழ்க்கையின் முக்கியக்கூறு. இம் மூன்றும் வளமாக இருந்தால் நீ அடைவாய் பெரும்பேறு[72] எனும் வாழ் வியல் சிந்தனையும் ஈண்டு சுட்டத்தக்கதாகும். உயிர் என்பது தனிமனித வாழ்வியல் கூறுகளுள் ஒன்றா கும். இப்பெருமை மிகு உயிரைப் பேணிக் காக்க வேண்டியது ஒவ்வொருடைய கடமையாகும்.

நிலையாமை

திருமூலர் பெருமான் நிலையாமை பற்றிப் பெரிதும் பேசுகிறார். இளமை நிலையாமை, உயிர் நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை எனப் பலவாகும்.

திருமந்திரம் உடம்பையும் உயிரையும் இணைத்தே பேசுகின்றது. உடம்பால் அழியின் உயிரால் அழிவர். எனவே உடம்பைப் பாதுகாக்க வேண்டும் என்பார் திருமூலர். இங்கு உயிரையும் பாதுகாக்க வேண்டும் என்பதே கருத்தாகும். உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் எனுமிடத்தும் உயிரின் மேன்மையைத் திருமூலர் உணர்த்துகின்றார் என்பது குறிப்பிடத்தக்க தாகும். உடல் வேறு உயிர் வேறு எனக் கருத வேண் டாம் என்பது திருமூலரின் கருத்தாகும்.

தனிமனித வாழ்க்கையில் உடல்,உள்ளம், உயிர் ஆகிய மூன்றும் மிக முக்கியமானவை.அன்றியும், இவை மூன் றும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. உடல் இன் றேல் உயிரில்லை. உடலும் உயிரும் இணைந்தால் தான் உள்ளமே உருவாகும். இவ்வுயரிய கோட்பாடு

நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

உடல்நலம் காக்க உடற்பயிற்சி, மனவளம் காக்கக யோகப் பயிற்சி, உயிர் வளம் காக்கக் காயகல்பப் பயிற்சிகள் உள்ளன. இப்பயிற்சிகளை முறையாகச் செய்துவரவேண்டும். இங்ஙனம் செய்துவர தனிமனித வாழ்க்கையில் மட்டுமல்ல சமுதாய நிலையிலும் வளர்ச்சி உண்டாகும். சான்றோர் பெருமக்கள் கண்ட கனவு நிறைவேறும். சித்தர்களின் சிந்தனைகளும் நிறை வேறும். இத்தனைக்கும் முழுமுதல் காரணமாய் அமை வன திருமூலர் பெருமானின் உடல், உள, உயிர் வளர்ச்சிச் சிந்தனைகள் ஆகும்.

உயிர் என்னும் சக்தி உணர்ச்சி நிலையில் மனமாய் விளங்கும். அதுவே ஒடுங்கித் தன் மூலம் உணர்ந் திடப் பரம்பொருளாகும். இவ்வாறு உயிரும் பரம் பொருளும் அறிவும் ஒன்றே என்பதைத் திருமூலர் பாடல்கள்வழி அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்

இலக்கியவரலாற்றுக்களஞ்சியம், மது.ச.விமலானந்தம், ப.41.

மேலது, ப.522, (பொ.நூ.577).

மேலது, ப.522, (பொ.நூ.578).

திருமந்திரம், 7,8,9 ஆம் தந்திரம் திருநின்றவர் நிலம், 1974, நூன்முகம், ப. 3.

மேலது, ப.55.

மேலது. பா.7, ப.5

வேதாத்திரியச் சிந்தனைகள், தொ.1, ப.218

திருமந்திரம், காசித்திருமட பதிப்பு, மு.கா.நூ., பா.724, ப.98.

மேலது, பா.724, ப.98.

வாழநினைத்தால் வாழலாம், சி. இலட்சுமணன், தமிழியல், ஆய்வுகள் பதிவு மையம், தஞ்சாவூர், 2010, முகவுரை ப. XIV.

மேலது, ப.98.

54ஆம் பக்கத் தொடர்ச்சி

புலியூர்க்கேசிகன், புறநானூறு, பாரி நிலையம், சென்னை, மு.ப. 1958, மறு.ப.2012.

வித்துவான் வீ. சொக்கலிங்கம், ஆசிரிய நிகண்டு, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், மு.ப.1997.

மேலது.

வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 1-10, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

கௌடில்யர், அர்த்த சாஸ்திரம், நர்மதா பதிப்பகம், சென்னை, மு.ப.2004.

க்ரியா, தற்காலத் தமிழ் அகராதி, சென்னை, மு.ப.1997, இ.ப. மே 2008.

ந.சி. கந்தையா, செந்தமிழ் அகராதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப.2009.

ஆ. தாண்டவராய முதலியார், சேந்தன் திவாகரம், கழக வெளியீடு, சென்னை, 1958.

ஆ. சிங்கார வேலு முதலியார், அபிதான சிந்தாமணி, சீதை பதிப்பகம், சென்னை-600 005, மு.ப.பி.2004.

க்ரியா, தற்காலத் தமிழ் அகராதி, சென்னை, மு.ப.1997, இ.ப. மே 2008.

பரமஹம்ச ஸ்ரீமத் பரத்வாஜ் சுவாமிகள், ஸ்ரீ நாலாயிர திவ்ய பிரபந்தம், வனிதா பதிப்பகம், சென்னை, மு.ப.2013.



செவ்வியல் இலக்கண ஆய்வு: இடைச்சொற்கள் பதினெண் கீழ்க்கணக்கு, முனைவர் ஜா. கிரிஜா, சாரதா பதிப்பகம், சென்னை 600 014.

இந்நூல் இரு பகுதிகளை உடையது. முதல் பகுதி இடைச்சொல் இலக்கணத்தைத் தொகுத்து நோக்குதல் என்னும் தன்மையில் இலக்கண ஆசிரியர்கள், உரையாசிரியர்கள், மொழியியல் அறிஞர்கள், ஆய்வாளர்கள் போன்றோரின் கருத்துகளை ஆய்வுக்குட்படுத்தி, அவற்றின் அடிப்படையில் பதினெண் கீழ்க்கணக்குள் இடம்பெற்றுள்ள இடைச்சொற்களை இனங்கண்டு தொகுத்தும் பகுத்தும் ஆய்கிறது. மொழிமுதல் இடைச்சொற்கள், மொழியிடை இடைச்சொற் கள், மொழியிறுதி இடைச்சொற்கள் எனப் வகைப்படுத்தி நூலாசிரியர் ஜா. கிரிஜா தனது ஆய்வை இடைச்சொல் வகை, வருகை, பயன்பாடுகள் குறித்து மிகத் தெளிவாக ஆய்ந்துள்ளார். குறிப்பா கத் தொல்காப்பியர் கூறாத அற்று, அ,கு, ஐ, அல், உ, ஆகிய சாரியைகள் இடைச்சொற்களாகப் பதினெண் கீழ்க்கணக்குள் பயின்றுவந்துள்ளதை ஆய்வு முடிவாக முன்வைத்துள்ளார். இதுபோன்று பல்வேறு புதிய கருத்துகள் ஆய்வின் முடிவாக வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதி பதினெண்கீழ்க்கணக்குள் இடம்பெற் றுள்ள இடைச்சொற்களின் அகராதி, கால இடைநிலைகளின் அட்டவணை ஆகியவை கொண்டது. இவை இரண்டும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் சொல் வளத்தை அறிந்துகொள்ள மிகவும் துணை நிற்கும். நூலாசிரியரின் ஆய்வுத் திறத்திற்குச் சான்று முதற்பகுதி; அவரது கடின உழைப்பிற்குச் சான்று இரண்டாம் பகுதி எனலாம். தமிழ்ச் சொல்லாய்வு மேற்கோள்வோருக்கு இந்நூல் ஒரு கலங்கரை விளக்கமாக அமையும்.

– இரமேஷ் அர்ஜுன்

ISSN 2320-4842

ஆண் தெய்வ வழிபாடுகள்

அ. அருளம்மை
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம் (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

முனைவர் கோ. ஜெயஸ்ரீ
நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அரசினர்மகளிர் கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணம் (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச் சுருக்கம்

சிதம்பரம் வட்டத்திலுள்ள கிராமங்களில் ஆண் தெய்வ வழிபாடு, அத்தெய்வங்கள் அமைந்துள்ள இடம், கோயில் அமைப்புமுறை, பலி கொடுத்தல், நேர்த்திக்கடன் ஆகியவை இக்கட்டுரையில் இடம்பெறுகின்றன.

ஆய்வு எல்லை

பூங்குடி, கொடியாலம், கணக்காரப்பட்டு, ஆயிப்பேட்டை, வால்கரைமேடு, நெடுஞ்சேரி போன்ற கிராமங்கள் ஆய்வுக் களங்களாக உள்ளன.

முன்னுரை

இக்கட்டுரையில் சிறுதெய்வங்களில் முதன்மைத் தெய்வங்களாக மதுரைவீரன், மன்மதன், ஆஞ்சநேயர், துணை மைத்தெய்வங்களாகப்பதினெட்டாம்படிகருப்பு,பொறையனார், பாவாடைராயன் ஆகியவை இடம்பெறுகின்றன.

மதுரைவீரன்

இவன் காசிராஜன் மகன். பிறக்கும்போதே மாலையுடன் பிறந்ததால் சோதிடர் சொல்படி அரசன் இவனைக் காட் டில் விட்டார். இவனை ஒரு சக்கிலி எடுத்து வளர்க்க, வளர்ந்து நாகராசனால் பல சக்திகள் பெற்றும் பொம்ம நாய்க்கண் மகள் பொம்மியை மணந்து விசையாங்கனிடம் சேவகத்திற் அமர்ந்து திருமலை நாயக்கன் பட்ட ணத்திற் களவுபிடிக்க வந்து கள்ளரை வெறுத்து வெள்ளச்சியை மணந்து செல்லுகையில் அரசனால் கைகால் வெட்டப்பட்டு மனைவியர் தீக்குளிக்க மீனாட்சியம்மன் சந்நிதியில் தெய்வமாக அமர்ந்தவன். இவன் வீரனாகை யால் வீரர்க்குக் கல்நாட்டுவதுபோல் இவனையும் கல்லில் செதுக்கியுள்ளனர் என்று அபிதான சிந்தாமணி குறிப்பிடுகிறது (பக்.1255).

பூங்குடி மதுரைவீரன் மற்றும் வெள்ளையம்மன், பொம்மியம்மன்

சிதம்பரம் வட்டம் பூங்குடியில் மதுரைவீரன் ஆலயம் உள்ளது. ஊருக்கு அருகிலுள்ள களத்துமேட்டில் வயல் வெளிகளுக்கு நடுவில் சீமைக்கருவேல மரங்களுக்கு இடையே எட்டு கால்கள் தாங்கிய மண்டபம் போன்ற அமைப்பில் இம்மதுரைவீரன் பொம்மியம்மன் மற்றும் வெள்ளையம்மனுடன் அமைந்துள்ளார். இங்கு இவரது பரிவார தெய்வங்களான வீரனின் அனைத்து அம்சங்களான பம்பை வீரன் நொண்டி வீரன், அக்னி வீரன் சிலைகள் உள்ளன.

பூங்குடி பெயர்க்காரணம்-

பூக்கள் நிறைந்த பகுதியாக இவ்வூர் விளங்கியது. இங்கு மக்கள் குடியேறிப் பூங்குடி என்று வழங்கலாயினர் எனத் திருச்சிற்றம்பலம் தெரிவித்தார்.

மதுரைவீரன் வந்த வரலாறு

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு அவ்வூரில் வசித்த திருச்சிற்றம்பலத்தின் முன்னோர்கள் இக்கோயிலைக் கட்டியதாகவும் இத்தெய்வமே இவர்களுக்குக் குல தெய்வம் என்றும் அவர் கூறினார்.

வழிபாடு

இம்மதுரை வீரன் பல குடும்பங்களுக்குக் குல தெய்வமாக விளங்குவதால் அக்குடும்பத்தினர் இங்கு வந்து பொங்கல் வைத்தும் உயிரினங்களைப் பலி கொடுத்தும் வழிபாடு செய்கின்றனர்.

திருவிழா

இவ்வீரனுக்கு ஆவணி மாதத்தில் ஊர் மக்களும் இவ்வீரனை குலதெய்வமாகக் கொண்டவர்களும் ஒன்றாக இணைந்து பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். நேர்ந்துவிட்ட ஆடு, கோழி போன்றவற்றைப் பரிவார தெய்வங்க

ளுக்குப் பலியிட்டுச் செல்கின்றனர். அவ்வாறு பலி கொடுக்கும்போது மதுரைவீரன் தேவியரோடு இருப்பதால் ஒரு திரை போட்டு மறைத்து விடுகின்றனர் என்றும் ஆறு மணிக்குமேல் யாரும் செல்லமாட்டார்கள் என்றும் திருச்சிற்றம்பலம்(50) (தக.பூ.ம.வீ.. 2019) தெரிவித்தார்.

மன்மதன்

விஷ்ணுமூர்த்தியின் மனதில் பிறந்தவன். இவன் ஆன்மாக்களுக்குக் காமத்தை விளைத்துப் பிரசாவிருத்தி (சனப்பெருக்கம்) செய்விப்பவன். இவன் தேவி ரதி ஆவாள். இவனுக்குக் கரும்பு, வில், வண்டு, நாண், அரவிந்தம், அசோகம், மாம்பூ, முல்லை, நீலம், பாணங்கன், மச்சம், கொடி, இலஞ்சி, மாலை, சோலை, படைவீடு, மங்கையர் சேனைகள், கவரி, தென்னம்பாளை, மல்லிகை, காளாஞ்சி தாழைமடல், வாள், கிளி, குதிரை, தென்றல், தேர்,இருள், யானை, கடல், முரசம், குயில், எக்காளம், சந்திரன் குடை. இவன் இவற்றைக் கொண்டு உலகத்தவரைத் தனக்குள் அடக்கியிருக்கையில் பிரமாதி தேவர்கள் குமாரக்கடவுள் உற்பத்தியின் பொருட்டுச் சிவபிரான்மீது படையை ஏவினர். இவன் தேவரின் சாபத்திற்கு அஞ்சி உமது சாபத்தால் கெடுதலினும் சிவகோபத்திற்குள்ளாயின் மீட்சியுண்டாமென எண்ணிச் சிவமூர்த்தி கண்விழித்துப் பார்க்கவும் இவன் சாம்பலாயினன். இதனையறிந்த இரதி சிவமூர்த்தியைப் பணிந்து புருஷபிட்சை கேட்கச் சிவமூர்த்தி கருணை கூர்ந்து இரதியை நோக்கி இவன் உனக்கு மாத்திரம் உருவத்துடனும் மற்ற தேவராதியர்க்கு அருவமாயிருக்க என அனுக்கிரகித்தனர். அதனால் இவனுக்கு அநங்கன் எனப்பெயர்.

இவன் கிருஷ்ணாவதாரத்தில் பிரத்யும்னனாகப் பிறந்தனன். பிரத்தியும்னன் தம்பி சாமன். இவன் மன்மதனாகப் பிறக்குமுன் பிறப்பில் ஒரு அரசன் தன் மனைவியுடன் வேட்டைக்குச் சென்று ஆண்டு ஒரு இருடி வளர்த்த மானைக் கொன்று அவரால் சாம்பராகச் சாபம் பெற்றவன் என்று பூவாளூர் புராணம் கூறுகிறது. நெற்றி விழியாலிறத்தற்குக் காரணம். கட்டியங்காரனுக்கு மைத்துனனாகிய மதனன் தம்பி.

மன்மதன் கணை-

வனசம், சூதம், அசோகு, முல்லை, நீலம் முறையே உன்மத்தம், மதனம், சம்போகம், சந்தாபம், வசீகரணம் எனவும் பெயர் பெறும். இவற்றின் அவத்தைகளான சுப்பிரயோகம் சொல்லும் நினைவும், விப்பிரயோகம் துயிர்த்திறங்கல், சோகம் வெதுப்பும் துய்ப்பன தெவிட்டலும், மோகம் அழுங்கலும், மொழிபல பிதற்றலும், மரணம் அயர்ப்பும், மரணமும் தருவன.

மன்மதன் விழா

இவ்விழாவுடைய காலவரையறை ஏழு தினம் ஆகும். பெரிய நகரங்களில் நடைபெறுவதுண்டு. உத்தமனான தலைமகனை மணஞ்செய்துகொள்ள எண்ணிய கன்னியர்கள் இவ்விழா நாட்களில் தானதருமங்களைச் செய்வர். மன்மதனுடைய ஆலயத்தில் சென்று அவர்கள் வழிபடுவதுண்டு. இராசகிரிய நகரத்தில் இவ்விழா நடந்தபொழுது வழிபாடு செய்ததற்குக் காமன் கோட்டம் அடைந்த பதுமாபதி அங்கே உதயணனைக் கண்டு விரும்புவாளாயினள். மாசிமாதத்தன்று காமன் பண்டிகை நடைபெறுகிறது. (அபி.சிந்.பக்.1280)

சிதம்பரம் வட்டம் கொடியாலம் கிராமத்தில் அமைந்துள்ளது. கிழக்குப் பார்த்த அமைப்பில் உள்ள ஒரு குடிசையில் மன்மதனின் வரைபடம் ஒன்று சுவரில் மாட்டியுள்ளது. குடிசையின் மேற்கூரை ஓலைகளால் வேயப்பட்டுள்ளது. சுற்றுச்சுவர் சுதைக்கல்லால் ஆனது. உருவப்படம் வைத்து வழிபடுகின்றனர். இம்மன்மதன் கோயில் ஊருக்கு நடுவில் வீடுகளுக்கு மத்தியில் அமைந்துள்ளது. இக்கோயிலுக்கு அருகில் தென்னை மரங்கள், குளம், புளியமரம், வேப்பமரம் போன்றவை அமைந்துள்ளன. .அருகில் பசுமையான வயல்வெளிகளும் அமைந்துள்ளது.

மன்மதன் வந்த வரலாறு

கொடியாலம் கிராமத்தில் வாழும் குறிப்பிட்ட சமூகத்தினர் ஒன்றிணைந்து அக்கோயிலைக் கட்டி வழிபடுவதாகச் சுதா என்பவர் கூறுகிறார். சுதா என்பவரின் கணவனான பரமசிவம் என்பவரின் முன்னோர்கள் ஒன்றிணைந்து அக்கோயிலைக் கட்டிப் பராமரித்துப் பூசை செய்து வந்ததாக அவர் கூறுகிறார்.

வழிபாடு

இக்கோயிலைச்சுற்றி சுமார் 20 குடும்பங்கள் உள்ளன. இக்குடும்பங்கள் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் விளக்கேற்றி இக்கோயிலில் வழிபாடு செய்கின்றனர்.

திருவிழா

இம்மன்மதனுக்கு மாசிமாதம் விழா எடுக்கப்படுகிறது. விழாவின் தொடக்கமாகச் சொக்கப்பனை கொளுத்தப்படுகிறது. 10 நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பத்தாம் நாள் மன்மதனை எரிக்கும் நிகழ்வு நிகழ்கிறது. இதில் மணமாகாத பெண்கள் திருமணம் விரைவில்ம் நடக்க வேண்டிக் கலந்துகொள்கின்றனர் என்று அவ்வூரில் வசிக்கும் சுதா (40) (தக.கொ.கி. ம.ம.2020,கோ.உ) கூறுகிறார்.

ஆஞ்சநேயர்

புஞ்சிகஸ் தலை எனும் அப்சரஸ் சாபத்தால் அஞ்சனை என்னும் வானர ஸ்திரீயாகிக் கேசரி என்பவனைக் மணந்துகொள்கிறாள். ஒருநாள் வாயு தசரதனுக்குப்புத்திரன் பிறப்பதற்காக ரிஷிகள் கொடுத்த பாயாசத்தில் சிறிது மிச்சம் இருக்க அதை எடுத்து வந்து வாயுபகவான் அஞ்சனையிடம் கொடுத்தார் அதனால் சிவன் அம்சமாக அநுமன் பிறந்தார். இவர் பிறந்து வளர்கையில் சூரியனை இராகு ஒருபுறம் பற்றுதற்கு வர, ஒருபுறம் அநுமன் பசியால் சூரியனைப் பழமென

எண்ணிக் கவரப்போகையில் இராகு இந்திரனை அடையஇந்திரன் தன் வச்சிராயுதத்தால்அடிக்க அநு முறியப்பெற்றவர். இதனால் இந்திரன்மீது வாயு சின முற்றார்.பிரமன் முதலிய தேவர்கள் வந்து அநுமுரிந் ததால் *அநுமன்* எனப் பெயரிட்டுப் பிரமாத்திரத்தா லும் தேவாத்திரத்தாலும் சாகா வரம் தந்தனர். இளமை யில் சூரியன் இரதத்திற்கு முன்சென்று நவலியாகர ணம் கற்றவர். வீமனுடன் நட்புடையவர். அருச்சுனன் தேருக்குக் கொடியாய் இருந்தவர். இவர் சுக்கிரீவன் என்னும் வானரனுக்கு நண்பனாகத் திரிந்துகொண்டு இருடிகள் ஆசிரமத்திற்குச் சென்று அவர்களுக்கு மன வருத்தம் தரும் செயல் புரிந்துகொண்டிருந்தனர். அத னால் இருடிகள் சினந்து, உனக்கு உன்னைப் புகழுங் காலந்தவிர மற்ற காலங்களில் இராமன் உன்னைக் காணுமளவும் உன் பவம் உனக்குத் தோன்றாதிருக்க வெனச் சபித்தனர்.இவ்வாறு தன் பலம் தோன்ற திரிந் துகொண்டிருக்கையில் இராமன் வனவாசம் வந்தபோது மரத்தின் மீதிருந்து இராமலக்குவரைக் கண்டு தந்தை சொற்படி திருமாலவதாரமெனத் தேறி பிராமண உருக் கொண்டு வந்து பணிந்தனர்.

இராம, இலக்குமணர் இவரைப் புகழ அவர்களைத் தம் நண்பன் சுக்கிரீவனுக்கு நட்புசெய்வித்து இராமன் சொற்படி திருவாய்மொழி பெற்று ஜானகியைத் தேடச் சென்று ஒரு பாலைவனத்தின் அழலுக்குச் சகிக்காது சாம்பனுடன் ஒரு பிலத்தில் வழிதெரியாது திகைக்கையில் பின்தொடர்ந்த வானரர்களைத் தம் வாலைப் பிடித்துக்கொள்ள ஆணை யிட்டுப் பிலத்தினுள் புகுந்து சுவயம்பிரபையைக் கண்டு அவள் சாபத்தைப் போக்கி அவளைச் சுவர்க்கம் அனுப் பியவர். அங்கிருந்து நீங்கிச் சம்பாதியைக்கண்டு வழி யறிந்து மகேந்திரமேறித் தாவி வழிமறித்த நாகத்தைத் தலை கீழாகத் தள்ளி அநுக்கிரகித்து சுரசை வாயுட்புகுந்து வெளி வந்து வழிமறித்த அங்காரதாரை, சாயாக்கிரகி அரக்கிய ரைக் கொன்று இலங்கையிலுள்ள பவளமலை சென்று தேடுகையில் கும்பகர்ணன் உறங்கும் பெருமூச்சிற்பட்டுத் திரும்பி அசோகவனஞ்சென்று சீதையைக் கண்டு பணிந்து திருவாழி தந்து தேற்றித் தன் குறு உருவத்தை விட்டுப் பேருருவத்தைக் காட்டிச் சில அடையாளங்களையும் சூடாமணியையும் சிரஞ்சீவத்துவமும் அவளிடம் பெற்று அசோகவனத்தை அழிக்கையில் எதிர்த்த கிங்கரரை வதைத்துச் சம்புமாலி, பஞ்சசேநாதிபதிகள் அக்ஷகுமாரன் முதலியோரைக் கொன்று இந்திரசித்தாற் பிரம்மாத்திரத் தாற் கட்டுண்டு இராவணன் எதிரில் தன் வாலை ஆசனமாகக் கொண்டிருந்து அவன் வாலில் தீயிடுவிக்க அத்தீயைக் கண்டு விடைபெற்று மைநாகமடைந்து நீங்கிக் கடல் கடந்து மகேந்திரஞ் சென்று வரவுபார்த்திருந்த அங்கதன் முதலானோருடன் சீதையைக் கண்ட செய்தி கூறி மகிழ்ந்து களித்து இராமனைக் கண்டு சுபசெய்தியை அறிவித்து, சீதை தந்தஅடையாளங்களையும் சூடாமணியையும் கொடுத் தவர். சீராமமூர்த்தியுடன் இலங்கைக்கு யுத்தத்திற்கு வந்து துன்முகனைக் கொன்று இலக்குமணருக்கு அஷயத்தூணி அறுந்தகாலத்து இராவணன் மத்தியிலிருந்து தன்னை ஒரு குத்துக்குத்தென இராவணனைக் கேட்டு அவன் குத்த அதனால் சற்றுச் சலித்துச் சகித்து அவனைத் தாம் குத்தி முன் திக்குயானைகளால் அவன் தேகத்திற் புதையுண்ட தந்தங்கள் உதிர்ந்துஇராவணன் வேலினால் மூர்ச்சித்த இலக்குமண ரைக் குட்டிபோல் தூக்கிச்சென்றவர். இராமனுக்கு வாகன மாய் இருந்தவர். கும்பகர்ணன்மீது மலைகளையெறிந்து அவனது அஞ்சாமை கண்டு சலித்தவர். சுக்கிரீவன்மீது கும்பகர்ணன் எறிந்த வேலைத் துண்டுகளாக்கி அதிகாயன் யுத்தத்தில் தேவாந்தகனையும் கிரிசரனையும் கொன்று, பின் நிகும்பன், தூமாக்ஷன், வச்சிரதந்தன், அகம்பன் என்னும் துஷ்டர்களாகிய அசுரர் முதலியோரை வதைத்து, இலக் குமணர் முதலியோர் மூர்ச்சையுற்ற காலத்துச் சாம்பவந்த ரால் ஏவப்பட்டு சஞ்சீவிமலை சென்று சஞ்சீவி கொண்டு வந்து அவர்களைப் பிழைப்பித்தவர். இராவணன் வஞ்ச கமாகக் கொலைசெய்வித்த மாயாசீதையைக் கண்டு புலம்பி இராமருக்குச் செய்தி கூறியவர். இராவணன் முழு பலத்து டன் யுத்தத்திற்கு வந்து விபீஷணர்மீது ஏவிய வேலை இலக்குமணர் தாங்கி மூர்ச்சையுற்றபோது மீண்டும் சஞ்சீவி கொணர்ந்து மூர்ச்சை தெளிவித்தவர். இராமபிரான் கட் டளையால்சீதாபிராட்டியை மீட்க விபீஷணருடன் சென்று கொணர்து இராமனிடம் காட்டியவர். குகனுக்கும் பரதனுக் கும்இராமனின் முத்திரை மோதிரம் காட்டித் தீயில் விழாது தடுத்து மீண்டு இராமனை அடைந்துசிரஞ்சீவி பெற்றவர். விபீஷணர், இவர் இலங்கையில் செய்த வீரத்தை இராம னுக்குக் கூறியபோது இராமன் மகிழ்ந்து பிரமபதம் பெற வரமளிக்கப் பெற்றவர். பஞ்சபூதங்களால் அழியாதவர். இவருக்கு மாருதி ஆஞ்சநேயர், கேசரிபுத்திரன், வாயுபுத் திரன் எனவும் பெயர். இராமனுக்குச் சிவ பூசையின் பொருட்டுக் காசியினின்றும் சிவலிங்கம் கொணர்ந்து தாபித்தவர். ஒருமுறை இராமனின் சிவபூசைக்குக் கங்கா தீர்த்தம் அநுமான்கொண்டுவந்தனன். அவன் வருதற்குமுன் இராமர் சிவபூசையை முடித்தார். அதனால் அநுமான் அத்தீர்த்தக்குடத்தை எறிய அதில் ஒரு நதி உண்டாகிப் பெண்ணைநதியில் கலந்தது. இவர் சஞ்சீவியின் பொருட்டு உத்தரதிசை செல்கையில் தான்யமாலியின் சாபம் போக்கி னவர். அக்காலத்துத் கபடமாகத் தவம் செய்துகொண் டிருந்த காலநேமியை வதைத்தவர். சஞ்சீவிகொண்டு வரு கையில் எதிர்த்தமால்யவந்தனைக் கடலில் எறிந்தவர்.மயில் இராவணனைக் கொன்றவர். கந்தமாதனனைச் சத்திய உலகஞ் சென்று அழைத்து வந்தவர். சதகண்டராவண னால் உதையுண்ட சுக்கிரீவ விபீஷணர்களை வாற்பாலத் தால்வருவித்தவர்.சதகண்டன் உதிரத்தில் பிறந்த சதகண் டர்களை வதைக்கக் குரங்கு,நரசிங்கம், கருடன், வராகம், குதிரை ஆகிய பஞ்சமுக ஆஞ்சநேயராக உருக்கொண்டு அரக்கனை வதைத்து இராமனிடம் ரத்தனமாலை பெற்றவர். இராமபணிமுடித்துக் கந்தமாதனையடைந்து கதலிவனத்தில் தவம்புரிந்தவர்.கருடன் கர்வத்தை வாலசைத்து அவனைத் துவாரகையில் தள்ளிக் கர்வமடக்கினார். ருக்மணியைச் சீதையாகவும் கண்ணனை இராமனாகவும் கண்டு சத்தி பாமையின் கர்வபங்கம் செய்தவர். நாரதவீணையில் கானம் பாடிக் கல்லை உருகச் செய்து அதில் தாளத்தையிட்டு இறுகச் செய்து மீண்டும் அதை இறுகச் செய்து கல் லுருகப் பாடுக என அவர்கள் பாடாதது கண்டு கர்வ மடக்கினவர். புஷபயாத்திரை சென்ற வீமனது கர்வத்தை வாலைத் தூக்கச்செய்து அடக்கினவர் என்கிறது இராமா யணம் (அபி.சிந்.பக்.56 - 57).

ஆயிப்பேட்டை - ஆஞ்சநேயர்

சிதம்பரம் வட்டம் ஆயிப்பேட்டை கிராமத்து நெடுஞ்

சாலையில் அமைந்துள்ளது. இந்த ஆஞ்சநேயர் சிலை சுமார் 100செ.மீ உயரத்தில் அமைந்துள்ளது. அருகில் வேம்புமரம், அரசமரம், புளியமரம் போன்றவையும் வயல்வெளிகளும் கால்வாய் ஒன்றும் உள்ள இடத்தில் இக்கோயில் உள்ளது.

ஆஞ்சநேயர் வந்த வரலாறு

இவ்வூரில் வசிக்கும் சுரேஷ் சிறந்த ஆஞ்சநேய பக்தர் என்றும் ஆஞ்சநேயர்மீது கொண்ட அதீத பக்தியால் இச்சிலையை அவர் அமைத்தார் என்றும் அவ்வூர்ப் பொது மக்கள் கூறுகின்றனர்.

ஆயிப்பேட்டை பெயர்க்காரணம்

இவ்வூரில் ஆயிகுளம் என்று ஒன்று இருந்ததாகவும் அக்குளத்தை ஒட்டியபடி மக்கள் அப்பகுதியில் குடியேறியதால் ஆயிப்பேட்டை என்று பெயர் வந்ததாகவும் அம்மக்கள் கூறுகின்றனர்.

வழிபாடு

செவ்வாய்,சனிக்கிழமைகளில் பக்தர்கள் வந்து விளக்குப் போட்டு வழிபட்டுச் செல்வர் என்றும் அம்மக்கள் கூறுகின்றனர். ஆஞ்சநேயருக்கு உகந்த நாட்களில் படையல் செய்வோம் என்றும், செவ்வாய் ம் வெள்ளிக்கிழமைகளில் விளக்கேற்றி வழிபடுவோம் என்றும்கூறுகின்றனர் **(தக.ஆயி.பே.ஊ.பொ.ம. 2020)**

திருவிழா

ஹனுமான் ஜெயந்தி அன்று உற்சவரான ஹனுமனை அலங்கரித்து இவ்வூர் முழுதும் சகடையில் வைத்துச் சுற்றி வருவோம் என்றும் பக்தர் அனைவரும் அன்று தம்மால் முடிந்த அளவு தானம் செய்வது, அன்னதானம் போடுவது போன்றவற்றைச் செய்வர் என்றும் அம்மக்கள் கூறுகின்றனர்.

பரிவாரத்தெய்வங்கள்

பதினெட்டாம்படி கருப்பு

ஐயப்பசாமியின் பதினெட்டுப் படிகளையும் காவல் காப்பவர் பதினெட்டாம்படி கருப்பு ஆவார். இவரை ஐயப்பனுக்கு காவல் தெய்வமாக சிவபெருமான் பூமிக்கு அனுப்பியதாக ஐயப்பன் வரலாறு கூறுகிறது. சிதம்பரம் வட்டம் கணகாகாரப்பட்டு என்னும் ஊரில் பதினெட்டாம்படி கருப்பையா கோயில் அமைந்துள்ளது. இரண்டு குதிரைகளுடன் கருவறை ஒரு பெரிய சூலத்துடன் கருவி வழிபாடாக அமைந்துள்ளது. ஊருக்கு அருகில் சற்றுத் தொலைவில் கொடியம்பாளையம் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. அருகில் வயல் வெளிகள் அமைந்துள்ளன.

கணக்காரப்பட்டு பெயர்க்காரணம்

தில்லை நடராஜர் ஆலயத்தின் கட்டடப் பணி நடந்த போது கணக்குப் பார்ப்பதற்காக இவ்வூரிலிருந்து நிறைய பேர் சென்றதாகவும் இவ்வூரில் முன்பு பட்டு வியாபாரம் செய்து வந்ததால் இவ்வூருக்கு கணக்காரப்பட்டு என்று பெயர் வந்ததாகவும் அவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.

வழிபாடு

ஆறு மணிக்குமேல் இக்கோயில் பக்கம் யாரும் வர மாட்டார்களாம். வந்தால் இறைவன் அச்சுறுத்திவிடுவார் என்றும் மறுநாள் காலையில் இக்கருப்பனிடம் வந்து திருநீறு பூசிக்கொண்டால் சரியாகிவிடும் என்றும் அவ்வூர் மக்கள் கூறுகின்றனர். **(தக.கணக்.ப.ஊ. பொ.ம-2020)**

திருவிழா

ஆடிமாதம் சிறப்பு வழிபாடு நடத்தப்படுகிறது. மேலும் ஆவணி மாதம் இவ்விறைவனுக்குக் கிடா வெட்டி நேர்த்திக்கடன் செலுத்தப்படுகிறது.

தெ.நெடுஞ்சேரி பொறையனார்

உடல் இல்லாமல் தலை மட்டும் இருக்கும் இவரை அனைவரும் பொறையனாராக வழிபடுகின்றனர். இப்பொறையனாருக்குச் சரியான வரலாறு இக்கிராமங்களில் சொல்லப்படவில்லை எனினும் அவரை வழிபடு முறை பற்றித் தெளிவாக எடுத்துரைக்கின்றனர். சிதம்பரம் வட்டம் நெடுஞ்சேரி கிராமத்தில் அமைந்துள்ளது. ஊருக்குப் புறத்தில் வயல்வெளிகளுக்கு அருகில் கொள்ளிடம் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. தல விருட்சமாக வன்னி மரம் உள்ளது. சதுர வடிவ அமைப்பின்மீது சிறிய விமானம் ஒன்றை எழுப்பியது போன்ற அமைப்பில் பொறையான் கோயில் உள்ளது. இங்கு இரண்டு குதிரைகள் மற்றும் காவல்காரர்கள் பைரவருடன் உள்ளதுபோல் சிலை அமைந்துள்ளது. அன்றியும், வீரன் சிலை ஒன்றும் அமைந்துள்ளது. சப்த கன்னிகளும் தனியாகச் சிறு சதுர வடிவ அமைப்பினுள் உள்ளது.

பொறையனார் வந்த வரலாறு

இப்பொறையான் சிலை கொள்ளிட ஆற்றில் மிதந்து வந்து கரை ஒதுங்கியதாகவும் அச்சிலையை எடுத்து அக்கரை அருகிலேயே பிரதிஷ்டை செய்து அதற்கு ஆலயம் எழுப்பியதாகவும் அவ்வூர்ப் பொதுமக்கள் கூறுகின்றனர்.

தெ.நெடுஞ்சேரி பெயர்க் காரணம் -

இவ்வூர் பெரிய நெடும் காடாக இருந்ததாகவும் பல சீமைக்கருவேல மரங்கள் வளர்ந்து இருந்ததாகவும் அதனை அழித்து மக்கள் அவ்விடத்தில் குடியேறியதாகவும் இப்பகுதியில் குளம், குட்டைகள் இருந்ததாகவும் அவ்வூர் மக்கள் கூறுகின்றனர். நெடிய காடாக இருந்த இப்பகுதியை அழித்து மக்கள் அதில் குடியேறியதால் நெடும் சேரி என்று வழங்கியதாகவும் காலப்போக்கில் நெடுஞ்சேரி என்று சொல் வழக்கில் வழங்கிவருவதாகவும் அம்மக்கள் கூறுகின்றனர். தென்பாதி என்னும் ஊருக்கு அருகே இருப்பதால்

தெற்கு நெடுஞ்சேரி என இருந்தது *தெ. நெடுஞ்சேரி* என ஆயிற்று

திருவிழா

இப்பொறையனாருக்கு ஆடி மாதம் விழா எடுத்து வழிபாடு செய்கின்றனர். அன்றியும், ஆடு கோழி போன்றவையும் பலி கொடுத்து வழிபாடு செய்கின்றனர் என்று அவ்வூர்ப் பொதுமக்கள் கூறுகின்றனர். (தக.நெ.ஊ.பொ.ம.2019)

பாவாடைராயன்

இவன் அங்காளம்மையின்காவற் சேவகன்; கீழ்க்குலத்துச் சத்திபூசகன். அங்காளம்மை ஸ்மசானத் திருக்கையில் அவளிடஞ் சென்று உடுத்த ஆடை கேட்டு அவள் கொடுத்த பாவாடையை உடுத்தக் குழந்தையுருக் கொண்டு அவளிட்ட பணி செய்துகொண்டிருந்து தவத்தால் பூதபிசாசுகளை வென்றவனாம் (அபி.சிந்.பக்.1103)

வாள்கரைமேடு பாவாடைராயன்

சிதம்பரம் வட்டம் வாலக்கரைமேடு எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. தெற்கு பார்த்த அமைப்பில் வேப்பமரத்தின்கீழ் அமைந்துள்ளது. பாவாடைராயன் அருணாச்சியம்மனுடன் காட்சி தருகிறார். ஊருக்குப் புறத்தில் வயல்வெளிகளுக்கு அருகில் பொன்னேரிக் கரையில் அமைந்துள்ளது.

வாள்கரை மேடு பெயக்காரணம்

இவ்வூர் பொன்னேரி ஆறு ஓடும் கரையின் மேட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. இங்கு மரம் அறுக்கும் வாள்கள் அதிக அளவில் செய்யப்பட்டதால் வாள்கரைமேடு என்று பெயர் வந்ததாகக் கல்யாணி கூறுகிறார்.

பாவாடைராயன் வந்த வரலாறு-

இக்கோயிலுக்குச்சரியான வரலாறு இல்லை எனினும் அவ்வூரில் வசிக்கும் கல்யாணியின் குடும்பத்து முன்னோர் காலத்திலிருந்து இருக்கிறது என்றும் கல்யாணி கூறுகிறார்.

வழிபாடு

செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் விளக்கு ஏற்றி வைக்கப்பட்டு, சூடம் தீபம் காட்டப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது.

திருவிழா

இப்பாவாடை ராயனுக்கு ஆடிமாதம் விழா எடுத்து வழிபாடு நடத்தப்படுகிறது என்றும் இக்கோயிலைக் குலதெய்வமாகக்கொண்டவர்கள் ஆடு, கோழி போன்றவற்றைப் பலி கொடுத்து வழிபடுவர் என்றும் அவ்வூரில் வசிக்கும் கல்யாணி(50)(தக.வாள்.க.மே.2019 -கி.வா) கூறுகிறார்.

முடிவுரை

சிதம்பரம் வட்டத்தை சேர்ந்த கிராமங்களில் மதுரை வீரன், மன்மதன், பதினெட்டாம்படி கருப்பு, பாவாடை ராயன் போன்ற தெய்வங்களுக்கு எவ்வாறு வழிபாடு நடைபெறுகிறது என்றும் அக்கோயில் திருவிழாக்கள் பற்றியும் அறிந்துகொள்ள முடிகிறது, இத்தெய்வங்களுக்கு என்னென்ன நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர் என்றும் அக்கோயில்களின் அமைப்பு மற்றும் அவை அமைந்துள்ள சூழல் பற்றியும் காண முடிகிறது. இத்தெய்வங்கள் அமைந்துள்ள ஊர் மற்றும் அவற்றின் பெயர்க்காரணம் பற்றியும் இத்தெய்வங்கள் அங்கு வந்த வரலாறு பற்றியும் அச்சம் ஏற்படுத்தக் கூடிய தெய்வமே அதனை நீக்குவதையும் இக்கட்டுரைவழி அறியலாம்.

உட்கருத்து

வளமுடைய, வளமற்ற ஊர் என்றிலாது ஓர் இடத்தில் வாழுகின்ற தன்மை உடையதாக மாற்றக்கூடிய தன்மை தெய்வங்களுக்கு உண்டு. அவ்வாறு மாற்ற வேண்டும் என்பதற்காகவே பொது இடம் ஒன்று உருவாக வேண்டும் எனும் நோக்கில் தெய்வங்கள் தமக்குக் கோயில் அமைக்கச் சொல்வது உண்டு அவ்வகையில் கிராமப்புற தெய்வங்கள் தம்மைச் சுற்றி ஊர்களை உருவாக்கி வளம் சேர்த்து வாழ வைக்கின்றன எனலாம்.

மேற்கோள் நூல்

1. அபிதான சிந்தாமணி, ஆ.சிங்காரவேலு முதலியார், Asian Educational Services, New Delhi.

அடிக்குறிப்பு

திருச்சிற்றம்பலம்(50) (தக. பூ.ம.வீ.2019) - திருச்சிற்றம்பலம் — பூங்குடி கிராமம் — மதுரைவீரன் கோயில் — தகவலாளி — 2019

சுதா (40) (தக.கொ.கி.ம.ம.2020,கோ.உ) — சுதா — கொடியாலம் கிராம்ம் — மன்மதன் கோயில் — தகவலாளி — 2020

(தக.ஆயி.பே.ஊ.பொ.ம.2020) — ஆயிப்பேட்டை — ஆஞ்சநேயர் கோயில் — தகவலாளி — ஊர் பொதுமக்கள் — 2020

(தக.கணக்.ப.ஊ.பொ.ம-2020)-கணக்காரப்பட்டு-பதினெட்டாம் படி கருப்பையா கோயில்-தகவலாளி-ஊர்ப் பொதுமக்கள்-2020.

(தக.நெ.ஊ.பொ.ம.2019)-நெடுஞ்சேரி-பொறையான் கோயில்-தகவலாளி-ஊர்ப் பொதுமக்கள்-2019.

கல்யாணி(50) (தக.வாள்.க.மே.2019-கி.வா) கல்யாணி-வால்கரைமேடு-பாவாடைராயன் கோயில்-தகவலாளி-2019.

பூங்குடி மதுரைவீரன், வெள்ளையம்மன், பொம்மியம்மன்

மன்மதன் கோயில்

மன்மதன் கோயில் கருவறை

ஆயிப்பேட்டை – ஆஞ்சநேயர்

கணக்காரப்பட்டு –பதினெட்டாம்படி கருப்பையா

வாள்கரைமேடு பாவாடைராயன்

தெ.நெடுஞ்சேரி பொறையனார்

The soul of India lives in its villages. - Mahatma Gandhi

The true India resides in its villages. - Charan Singh

ISSN 2320-4842

உடல்நலம் காக்கும் உணவு வகைகள் – விழிப்புணர்வு

முனைவர் ப. மகேஸ்வரி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை 18

முன்னுரை

‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’. எனவே உடல்நலம் பேணுவதில் நாம் கவனம் செலுத்த வேண் டும். அவ்வகையில் உடல்நலத்திற்கு மிகவும் தேவையான, ஊட்டச்சத்து நிறைந்த, எளிதில் செரிக்கக் கூடிய உணவுவகைகள் பற்றி நாம் ஒவ்வொருவரும் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும். அவற்றைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இவண் நோக்கம்.

உண்ணும் முறைகள்

ஒரு நாளைக்கு இரண்டு முறை உண்பதே போதுமானது. எனினும் பழக்கத்தை மாற்ற இயலாதவர்கள் மூன்று முறை உண்ணலாம். சாப்பிட்ட சாப்பாடு வெளிவரும் வண்ணம் வயிறு முட்டச் சாப்பிடக்கூடாது. வயிற்றில் பாதியளவு உணவு, கால்பகுதி தண்ணீர், அடுத்த கால்பகுதி காற்றின் வருகைக்கு ஏற்றபடி வயிற் றில் இடம்விட்டுச் சாப்பிடுவதே மிதஉணவுப் பழக்கமாகும்.

நோய் வராமல் தடுப்பதற்கான வழிமுறைகளை மருந்து எனும் அதிகாரத்தில் பத்துக் குறள்களில் வள்ளுவர் தெளிவுபடுத்தியுள்ளார். அதிக அளவு உண்டால் நோய் வரும்; ஆயுள் குறையும். எனவே எப்போதும் வயிறு புடைக்க, மூச்சு முட்ட உண்ணக்கூடாது. அளவிற்குக் குறைவாக உண்டாலும் உடலில் சக்தி குறையும். எனவே தேவையான அளவு அதாவது அதிகமாகவும் இல்லாமல் குறைவாகவும் இல்லாமல் உண்ண வேண்டும்.

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று (குறள் 941) என்பார் வள்ளுவர். நமக்குப் பசியே இல்லாத பொழுது கடனே என்று, மேலும் மேலும் உண்ணக்கூடாது. பசித்தே புசிக்க வேண்டும். பகலில் உணவு சிறப்பான விருந்தென் றால் இரவில் எதுவும் உண்ணக்கூடாது. மன உழைப்பு அதிகம் உள்ளவர்கள் அரிசி உணவு குறைவாகவும், கோதுமை, பால், வெண்ணெய், தேன், பாதாம் பருப்பு, முந்திரிப்பருப்பு, தக்காளிச்சாறு, ஆப்பிள், திராட்சை, மாதுளை, ஆரஞ்சு, பசலைக்கீரை, புடலங்காய், பாகற்காய், ஆகிய ஊட்டச்சத்துக்களையும், புதிய காய்கறி களையும் நிறைய உண்ண வேண்டும். உடல் உழைப்பு உள்ளவர்களுக்கு, உணவு அதிகம் தேவை. இவர்கள் அரிசி, கோதுமை, நெய், தயிர், உருளைக்கிழங்கு, முட்டைக்கோசு, நிலக்கடலை, நல்லெண்ணெய் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.
உடல் உழைப்பின்றி நாற்காலியில் அமர்ந்து பகல் முழுவதும் வேலை பார்ப்பவர்கள் உணவைக் குறைக்க வேண்டும். உடல் உழைப்பு இல்லாததால் உண்ணும் உணவானது உடலில் கசடுகளாகத் தங்கித் துன்பம் விளைவிக்கும். அதனால் நாள் முழுதும் நாற்காலியில் அமர்ந்து வேலை செய்பவர்கள் எளிதில் செரிக்கக் கூடிய காய்கறிகள், பழங்கள் மற்றும் ஒரு கப் அளவான சாதம் எடுத்துக்கொண்டு அரை வயிற்றுக்குச் சாப் பிட்டுக் கால்வயிற்றுக்கு நீர் குடித்தாலே சரியானது. இது மேலும் இவர்கள் கொழுப்பு சார்ந்த எண்ணெய்ப் பொருட்கள், பால், தயிர், வெண்ணெய், நெய், தேங்காய் போன்றவற்றில் தயாரான உணவுப் பொருட் களைக் குறைத்தால் வீணாக உடலில் கூடும் கொழுப்புகளைக் குறைத்து ஆரோக்கியமாக வாழலாம்.

மூன்று வேளையும் அதிக உணவுகளை உண்பவர்கள் தம் உடலில் தேவை இல்லாத நோய் வளரத் தானே காரணமாக அமைந்துவிடுகின்றனர். இவ்வாறு அதிகம் உண்பதால் இரைப்பையின் உறுதித்தன்மை குறைந்து தொப்பை உண்டாகிறது. வயது முதிர்ந்தபொழுது, பாதியளவே உண்பவர்கள் நீண்டகாலம் வாழ்கின்றனர். இதில் சர்க்கரை வியாதி உடையவர்கள் வயிறு புடைக்க உண்ணாமல் மூன்று வேளை உணவை நான்கு அல்லது ஐந்து வேளைகளில் உண்ணலாம்.

உடனே சாப்பிடக் கூடாதன, சேர்த்து உண்ணக் கூடாதன

தேனும், நெய்யும் சம அளவில் கலந்தால் நஞ்சாகிவிடும். எனவே இரண்டையும் சேர்த்து உண்ணக்கூடாது. இவற்றில் ஏதாவது ஒன்றை ஒரே நேரத்தில் சாப்பிடவேண்டும். வாழைப்பழத்தைத் தயிர், மோருடன் கலந்து சாப்பிடக்கூடாது. வாழைப்பழம் சாப்பிட்டவுடனும், தயிர், மோர் சாப்பிடக்கூடாது. பழங்களைத் தனியேதான் சாப்பிடவேண்டும். சாப்பாட்டுடன் சேர்த்துச்சாப்பிடக் கூடாது.அதன் தாதுச்சத்து உணவுடன் கலந்து பலனற்றுப் போய்விடும். வெண்ணெயுடன் காய்கறிகளைச் சேர்த்துச் சாப்பிடக்கூடாது. மீன், கருவாடு சாப்பிட்ட வுடன்

பால், தயிர் சாப்பிடக்கூடாது. மீறி உண்டால் *வெண்மேகம்* போன்ற நோய்கள் வர வாய்ப்பு உள்ளது. உடல் மெலிந்தவர்கள், புழுங்கலரிசி சாதம் சாப்பிட வேண்டும். உடல் பருத்தவர்கள் கோதுமை உணவு உண்பதுநல்லது. ஆஸ்துமா உள்ளவர்கள், சளி அதிகம் உள்ளவர்கள் தக்காளி, பூசணிக்காய், முள்ளங்கி ஆகியவற்றைச் சாப்பிடக்கூடாது. மூல நோய் உள்ளவர்கள் முட்டை, அதிக காரம், மாமிச உணவு ஆகியவை உண்ணக்கூடாது.

நெய்யை வெண்கலப் பாத்திரத்தில் வைத்துப் பயன்படுத்தக்கூடாது. காலையில் வெறும் வயிற்றில் காபி, டீ குடிக்கக்கூடாது. ஒரு டம்ளர் தண்ணீர் குடித்துவிட்டுப் பின்னர், காபி, டீ போன்றவைகளைக் குடிக்கலாம். அல்சர், மஞ்சள் காமாலை உள்ளவர்கள் மிளகாய், ஊறுகாய் ஆகியவை சேர்த்துக்கொள்ளக் கூடாது. பெண்கள் வீட்டிற்குத் தூரமான நாட்களில் கத்தரிக்காய்,எள், அன்னாசி, பப்பாளி ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

தோல்நோய் உள்ளவர்கள் கத்தரிக்காய், புடலங்காய், நிலக்கடலை, மீன், கருவாடு, அதிக காரம், அதிக புளிப்பு,கொத்தவரங்காய், பீன்ஸ் ஆகியவற்றைச் சாப்பிடக்கூடாது. கோதுமையை நல்லெண்ணெயுடன் சமைத்துச் சாப்பிடக்கூடாது. மூட்டுவலி, வாத நோய் உள்ளவர்கள், அசைவ உணவுகள், முட்டை, கிழங்கு வகைகளைச் சாப்பிடக்கூடாது.

அசைவம் உண்போர் கவனத்திற்கு

அசைவம்பல வழிகளில் மனிதனுக்குக் கெடுதல் செய்கிறது. *கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி, எல்லா உயிருந் தொழும்* என்கிறார் வள்ளுவர். அசைவ உணவுகளைச் சாப்பிடுவதால் இவ்வுணவு நமக்குச் செரிப்பதற்கு, நம் குடலானது இரு மடங்கு வேலை செய்ய வேண்டும்.

அசைவ உணவு நம் குடலில் செரிமானமாகாவிடில் இவ்வுணவு புளித்துப் பல கிருமிகளை உண்டாக்கும். அது உடலுக்குக் கெடுதியாகும். இவை மேலும் பல நோய்களை உண்டாக்கும். ஆனால் மனிதக்குடல் நீளமாய் இருப்பதால் கழிவுப்பொருட்கள் எளிதில் வெளியாகாமல் நீண்ட நேரம் குடலில் தங்கி நச்சுக் கிருமிகளைத் தோற்றுவிக்கிறது. இவை இரத்தத்தில் கலந்து பல நோய்களைத் தோற்றுவிக்கின்றன. அசைவ உணவில் கொடிய புளிப்பு நஞ்சு கலந்துள்ளது. இதனால் மார்பு வலி, வயிற்று வலி, நீரிழிவு ஆகியவை உண்டாகின்றன. சில நேரங்களில் இறந்த விலங்கின் கறியை உண்ணுவதால் விசக்கிருமிகள் தொற்றும் வாய்ப்பும் உள்ளது. இரண்டு, மூன்று நாட்கள் கறிகளைக் குளிர்சாதனப் பெட்டியில் வைப்பதாலும், கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் சேர வாய்ப்புள்ளது. அசைவ உணவு உண்பதால் இயற்கையான மன உணர்வுகள் மாறுகின்றன. குறிப்பாக, நல்ல உணர்வுகள் குறையத் தொடங்கும்.

சாமையின் பயன்கள்

புன்செய் தாவரங்களில் (சிறுதானியங்கள்) சிறப்பிற்குரிய தானியமாகக் கருதப்படுவது சாமையாகும். இதன் மருத்துவக் குணங்கள்- எலும்புகளுக்கிடையே உள்ள தசைகளை வலிமை பெறச்செய்வதோடு காய்ச்சலால் ஏற்படும் நாவறட்சியைப் போக்கும். வயிறு தொடர்பான நோய்களைக் கட்டுப்படுத்தும். ஆண்களின் இனப்பெருக்க அணு உற்பத்திக்கும், ஆண்மைக் குறைவை நீக்குவதற்கும், சர்க்கரை நோயைக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கும் உதவுகிறது. ஏனைய சிறு தானியங்களைவிட இரும்புச்சத்து அதிகமிருப்பதால் இரத்தசோகை வராமல் சாமை தடுக்கிறது. உடல் உறுதிக்கும்ஆரோக்கியத்திற்கும் உகந்த சாமை இளம் பெண்களின்முக்கிய உணவாக அமைவது அவசியம். சர்க்கரைநோயைக் கட்டுப்பாட்டிற்குக் கொணர முக்கிய பங்கு வகிக்கும் நார்ச்சத்து, நெல்லரிசியைவிட ஏழு மடங்கு கொண்டது சாமையாகும். இதனை உணவாக உட்கொள்ளும்போது நீரழிவு நோயினைக் கட்டுப்படுத்தவும், வராமல் தடுக்கவும் உதவுகிறது. நோய்களுக்கெல்லாம் மூலமான மலச்சிக்கலை அது போக்க வல்லது. வயிற்றுக் கோளாறுக்குச் சாமையரிசி நல்லமருந்தாகும். தாதுப்பொருட்களை உடலில் அதிகரித்து உயிரணுக்களின் எண்ணிக்கையை உயர்த்துவதில் சாமையின் பங்கு குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தில் அதிக அளவு தேவையில்லாத கொழுப்பையும், சர்க்கரை பொருட்களையும் தரும் பீட்சா, பர்கர் மற்றும் மைதா பொருட்களை உண்பதைத் தவிர்த்து இம்மாதிரியான பாரம்பரிய தானியங்களில் செய்த உணவினை உட்கொள்ளும்போது உடல் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும். இளையோர் சாமையினால் ஆன உணவுகளை உண்பது நல்லது.

எனவே சிறு தானியங்களான தினை, கம்பு, கேழ்வரகு, சாமை, வரகு, சோளம் முதலியவற்றைக் குழந்தை முதல் வயதானோர் வரை உட்கொள்வது சாலச்சிறந்தது. இவை எளிதில் செரிக்கக்கூடியவை; சத்து நிறைந்தவை. இவற்றின் முக்கியத்துவம் கருதியும், நாம் உண்ண மறந்து அடைந்த வேதனைகளையும் கருத்தில் கொண்டு மீண்டும் சிறுதானியங்களை உண்டு உடல்நலம் பேணுவோம்.

முடிவுரை

உணவினை உண்ண வேண்டிய முறைகள், விழிப்புணர்வு, உடல்நலத்திற்கேற்ற சிறுதானியத்தின் பயன்கள் தெளிவாக்கப்பட்டுள்ளன.

துணைநின்ற நூல்கள்

1. உணவே மருந்து - டாக்டர் மகாதேவன்
2. உணவு நூல் - மயிலை சீனி வேங்கடசாமி
3. மருத்துவ உணவுகள் - துசந்த் சசி

ISSN 2320-4842

'மோடி' ஆவணங்களும் எழுத்துகளும்

முனைவர் த. கண்ணன்
பேராசிரியர்–தலைவர், அரிய கையெழுத்துச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 010

ஆய்வுச் சுருக்கம்

மோடி எழுத்திலான மராத்திய மன்னர்களது அலுவலக ஆவணங்கங்கள் மகாராட்டிர மாநிலத்திலும் தமிழகத்திலும் காணப்படுகின்றன. அன்றாட அலுவல் நடைமுறைகள், வரவு செலவுக் கணக்குகள் என்ற முறையில் அமைந்த அவை வரலாற்று உண்மையை அறிவதற்கான நம்பகத்தன்மையுடையவையாகக் கருதப்படுகின்றன. .மோடி எழுத்துகள் பொதுமக்களின் பயன்பாடாக இல்லாமல் வல்லுநர்களின் பயன்பாடாக இருந்த காரணத்தால்இவ்வெழுத்துமுறைக்கெனத் தனி அச்சு எழுத்துகள் உருவாகவில்லை. இந்நிலையில் ஆவணம் எழுதியோரின் கையெழுத்து வேறுபாடுகளைக் கடந்து மோடி ஆவண எழுத்துகளுள் காணப்படும் எழுத்தமைதியின் பொதுக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டு பல வெளியீடுகள் வந்துள்ளன. இந்நிலையில் மோடி ஆவணங்கள் குறித்தும் மோடி எழுத்துகளின் வரிவடிவம் குறித்தும் இவ்வாய்வில் விரித்துரைக்கப்படும்.

குறி சொற்கள்: *வரலாற்று ஆவணங்கள், மோடி ஆவணங்கள், மராத்திய மன்னர்கள், பன்மொழிச் சூழல், எழுத்துமைதிகள், வரிவடிவங்கள், தேவநாகரி.*

முன்னுரை

மராட்டிய மன்னர்கள் தமது அலுவலக ஆவணங்களை மராத்தி மொழியில் எழுதுவதற்குப் பயன்படுத்திய மாற்று எழுத்து வடிவம் *மோடி* எனப்படுகிறது. மோடி எழுத்தில் எழுதப்பட்ட வரலாற்று ஆவணங்கள் *மோடி ஆவணங்கள்* என எழுத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மோடி சொற்பொருள் விளக்கம்

தேவகிரி யாதவ அரசவையின் ஆவணக் காப்பக அலுவலர் ஹேமாட்பந்த (பொ.ஆ 12) தேவநாகரி எழுத்தில் சில மாற்றங்களைச் செய்து, எளிதாகவும் விரைவாகவும் எழுதுவதற்கு ஏற்றவாறு மோடி எழுத்துமுறையை உருவாக்கினார் என்பர் (केशव आप्पा पाध्ये: 2008). இந்த எழுத்துமுறையைத் தமிழில் *மோடி* என்றும் மராத்தியில் *மோடி லிபி* ('मोडी लिपी') என்றும் குறிப்பிடுகின்றனர்.

தேவநாகரி வடிவத்தை உடைத்தும் சில இடங்களில் மாற்றிச் சில வளைவுகளைச் செய்தும் உருவாக்கப்பட்டிருப்பதால் இந்த எழுத்துமுறைக்கு *உடைதல்* என்ற பொருளுடைய *மோடணே* (मोडणे) என்ற சொல்லின் அடியாக மோடி (मोडी) என்ற பெயர் இடப்பட்டுள்ளது. *உடைதல்* (उडैदल्) என்ற சொல்லை விளக்கும் தமிழ்-மராத்தி அகராதி 8 பொருள்களைக் குறிப்பிடுகிறது. (1.मोडणे 2.जीर पडणे 3.फुटणे 4. पीळ सुटणे 5. फुलणे, मोहरणे 6. दरिद्रि होणे 7. प्रसिध्दी पावणे 8. नाश पावणे) அவற்றுள் முதலாவதாக மோடணே (मोडणे) என்பது இடம்பெறுகிறது (सौ. रमावाई जोशी 1976: p. 65).

மோடணே சொல்லை விளக்கும் மராத்திய அகராதி, இச்சொல் *மோடர்னே* (मोडर्णे) என்ற சொல்லின் அடியாகவுள்ளதையும் அதற்கு அடிப்படைப் பொருள் *உடைதல்* என்பதையும் பின்வருமாறு விளக்குகிறது:

मोडणे (verbal of मोडर्णे) Breaking down; breaking up; breaking off; breaking or bending; throughout the applications of the verb; but as a sense of especial use and currenty, Breaking off the heads of a ripened field of corn, in order to the thrashing. 2 They way or course; the line of being or acting; the customary manner, method, fashion, style. (J.T.Molesworth 1857: p.669).

மோடி (मोडी) என்ற சொல்லை விளக்கும் மராத்தி அகராதி, मोडी The मोड or common business character मोर्डीव a (मोडर्णे) Capable of being broken up into its parts or of being taken to pieces: also that can be doubled up or turned down or in-any machine or article. 2.Fit to be broken up for sale; or brought or offered to be sold or changed;-esp. trinkets or metal vessels. 3. Made of the material of broken up trinkets or vessels. 4.one Broken up or broken; shattered or impaired (J.T.Molesworth 1857:p.670) என்றுரைக்கிறது.

இவற்றால் ஓர் எழுத்துருவைச் சிதைத்து மாற்றியமைக்கப்பட்ட எழுத்து முறை மராத்தி மொழியில் *மோடி* (मोडी) என்றழைக்கப்படுவது விளங்கும். இதனை, ***மோடணே என்றால் மராட்டி மொழியில் 'உடைதல்' என்று பொருள். அஃதினின்று 'மோடி' என்ற சொல் வந்திருக்கக்கூடும். மோடி எழுத்து என்பது தேவநாகரி எழுத்தை***

உடைத்துச் சிதைத்து உருவாக்கியது எனக்கொள்ளலாம் என்ற கூற்றும் உறுதிப்படுத்தும் (பா. சுப்ரமணியன் 1989: பதிப்புரை).

மோடி எழுத்துமுறை அரசுசார் அலுவலகப் பயன் பாடாகவும் அதனை அறிந்திருந்த வல்லுநர் பயன் பாடாகவும் இருந்த காரணத்தால் இன்றும் மராத்தி மக்கள் மராத்திமொழியைத் தேவநாகரி எழுத்திலேயே எழுதுவதால் இந்த எழுத்துமுறையின் தேவை என்பது மோடி ஆவணங்களைப் படித்தல், மொழிபெயர்த்தல், ஆராய்தல் என்றளவில் மட்டுமே உள்ளது. பொது மக்கள் பயன்பாட்டிலிருந்து விலகிநிற்பதால் மோடி எழுத்திற்கு வரையறுக்கப்பட்ட அச்சு வடிவங்கள் உரு வாக்கப்படாமல் உள்ளன.

ஆவணங்களில் காணப்படும் எழுத்துகள் எழுதியோ ரின் கைவண்ணத்திற்கு ஏற்ப வேறுபட்டு அமைதல் என்பது பொதுப் பண்பாகும். அவ்வாறே, ஆவணங் களில் எழுதப்பட்டுள்ள மோடி எழுத்துகளும் எழுதி யோரின் கைவண்ணத்திற்கு ஏற்ப பலவாறு வேறுபட் டுக் காணப்படினும் அவ்வேறுபாடுகளுக்கிடையே எழுத்துகளின் பொதுத்தன்மையைக் கண்டறிந்து, அதன் அடிப்படையில் மோடி எழுத்து குறித்த பயிலரங்கைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் சரஸ்வதி மகால் எனும் நிறுவனங்களும் மகாராட்டிர மாநிலத்திலுள்ள ஆவணக்காப்பம், சிவாசி பல்கலைக்கழகம், விவே கானந்தா கல்லூரி எனும் நிறுவனங்களும் நடத்திவரு கின்றன.இப்பயிலரங்கில் வழங்கப்படும் மோடி எழுத் துக் குறிப்பேடுகள், நூல்கள் யாவும் கையினால் எழுதப்பட்டனவாக உள்ளன.

ஸ்ரீமத. உதயசிஹ மானசிகராவ் ராஜேயாதவ் (श्रीमंत. उदयसिंह मानसिंगराव रजेयादव) அவர்களின் आपली मोडी लिपी (ஆப்ளி மோடி லிபி) என்ற நூலின் இரு தொகுதி களிலும் மோடி எழுத்துகள் கையினால் எழுதப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகம் 1984இல் மோடி எழுத்து களை வரையறைப்படுத்திய அட்டவணையில் (கே. எம். வேங்கடராமையா 1984: ப.539), உயிரெழுத்து களும் அகரமேறிய உயிர்மெய்யெழுத்துகளுமாக மொத்தம் 46 எழுத்துகள் குறிக்கப்பட்டுள்ளன.

மகாராட்டிர மாநிலத்தில் எழுதப்பட்ட மோடி ஆவண எழுத்துகளில் காணப்படும் வேறுபாடுகளை நான்கு காலங்களாகப் பிரித்துரைப்பர். அந்நான்கு கால எழுத்து வடிவங்களிலிருந்தும் மாறுபட்டனவாகத் தஞ்சை மராத்திய மோடி ஆவணங்கள் உள்ளன என்பர் (பா.சுப்பிரமணியன் 1984: பதிப்புரை).

இந்திய வரலாற்று ஆவண ஆணைக்குழு உறுப்பின ரும் *பாரத இதிகாச சன்சோதக் மண்டல்* மன்றத்தின் தலைவருமான பேராசிரியர் டி.வி. போட்தார் (D.V. Potdar), சென்னை ஆவணக் காப்பாட்சியராக இருந்த பி.எஸ்.பாலிகாவுக்கு 10.02.1947இல் தஞ்சாவூர் மோடி ஆவணங்களின் நிலைகுறித்து எழுதிய கடிதத்தில் மகாராட்டிர மாநிலத்தில் எழுதப்படும் மோடிக்கும் தஞ்சாவூரில் எழுதப்படும் மோடிக்குமான வேறுபாடு களையும் மோடி எழுத்துமுறை விரைவாக அழிந்து வருவதையும், The Modi writing in South India is slightly different from the Modi in Maharashtra proper. Archic Modi is not quite so easy to read. Even the Marathi language in South India is somewhat Tamilianised... Modi is now fast dying out even in my province என்று குறிப்பிடுகிறார் (ஆ.ஜெ. எத்தி ராஜ் 1982 ப.7).

இந்நிலையில் தமிழகம், மகாராட்டிர மாநில மோடி ஆவணங்களின் அடிப்படையில் மோடி எழுத்துகள் இவ்வாய்வில் எழுதப்பட்டுள்ளன.

தமிழகத்தில் மோடி ஆவணங்கள்

1676முதல்1855வரை தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர் காலத்திலான மோடி ஆவணங்கள் அவர்கள் காலத்திற்குப் பின் ஆங்கிலக் குடியிருப்பு ஆட்சியர் அலுவலங்களில் இருந்தன. அந்த ஆவணங்களை 1950இல் நாராயண பாலகிருஷ்ண கத்ரே என்பார் ஏ,பி,சி என்று வகைப்படுத்தி அட்டவணையிட்டார் (இவ்வட்டவணை இன்னும் பதிப்பிக்கப்படவில்லை). அவ்வகைப்பாட்டின் அடிப்படையில் தஞ்சாவூர் மோடி ஆவணங்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும் தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல்நிலையத்திலும் உள.

மூட்டைகளிலும் பெட்டிகளிலும் தொகுத்து வைக்கப் பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் நிகழ்த்தப் பட்ட மொழிபெயர்ப்புகளின்வழித் தமிழ்ப் பல்கலைக் கழகம் *தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்* என்ற ஆய்வு நூலையும் *தஞ்சை மராட்டியர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும்* என்ற மூன்று தொகுதிகளையும் வெளி யிட்டுள்ளது. தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலை யம், Modi documents in the T.M.S.S.M Library என்ற நூலை தேவநாகரி-தமிழ-ஆங்கிலம் என்ற பன் னோக்கில் வெளியிட்டுள்ளது. *தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்-50* என்னும் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீட்டில் பத்து மோடி மராத்திச் செப்பேடுகளின் மூலம் வெளியிடப்பட்டு ஆராயப்பட்டுள்ளன.

மோடி ஆவண ஆய்வுகளுக்கான கருவி நூல்களாக அமைந்த மேற்கண்ட நூல்களை அடிப்படையாகக் கொண்ட முனைவர்பட்ட ஆய்வுகளும் ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வுகளும் நிகழ்த்தப்பட்டுள்ளன. மோடி ஆவண வல்லுநர்களும் ஆய்வறிஞர்களும் மோடி ஆவணங்கள் குறித்து பல கட்டுரைகளையும் படைத்துள்ளனர்(இதுவரை நடத்துள்ள மோடி ஆய்வு கள் தனித்து நோக்குதற்குரியன). எனினும் மோடி எழுத்துகளைப் படிப்பாரும் எழுதுவாரும் மிகவும் குறைந்த அளவிலே உள்ளனர்.

மோடி ஆவணங்களின் தனித்தன்மை

பொதுவாக வரலாற்றுத் தரவுகளாகக் கருதப்படும்

சில தரவுகளில் புனைவுகளும் மிகைக் கற்பனைகளும் இடம்பெற்றுவிடுகின்றன. அந்நிலையில் அவ்வரலாற்றுச் சான்றைப் பிற சான்றுகளுடன் ஒப்பிட்டு உறுதிப்படுத்துவர். இலக்கியச் சான்றுகளையும் கல்வெட்டுச் சான்றுகளையும் அவ்வாறே உறுதிப்படுத்த வேண்டும் என்பதை, ***எப்படி இலக்கியங்களில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புகள் அவ்வளவும் நம்ப முடியாதனவோ அப்படியே கல்வெட்டுச் செய்திகள் அவ்வளவும் நம்பத்தக்கன அல்ல. கல்வெட்டுகள் அவ்வப்போது பிற்காலத்தில் மாற்றியமைக்கப்பட்டதுமுண்டு. மேலும் ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள் இன்னும் வெளியிடப்படாமலேயே உள்ளன. எனவே, இந்நிலையில் கல்வெட்டுச் செய்திகளைமட்டுங்கொண்டு திட்டமான வரலாறு ஒன்றை வகுக்க முயல்வது சேற்றிலிட்ட தூண் போலாகும், கல்வெட்டுச் செய்திகள் தனிப்பட்ட இலக்கியச் சான்றுகளாலும் வேறு குறிப்புகளாலும் உறுதி செய்யப்படுவது நலமாகும்*** என்பர் (கே.கே.பிள்ளை2020:பதிப்புரை). ஆனால் மோடி ஆவணங்கள் அன்றாட நிகழ்வுகளின் குறிப்புகளாகவும் வரவு செலவு விவரக் குறிப்புகளாகவும் உள்ளதால் அவ்வாவணத்தின்வழிப் பெறப்படும் சான்றுகள் பெரிதும் நம்பகத் தன்மையினவாகக் கருதப்படுகின்றன.

மராட்டிய கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் ஆராய்ந்த ஆய்வறிஞர் செ.இராசு, ***எல்லோருடைய பெயர்களும் ஏகோஜி, சரபோஜி, சகஜி என்ற அமைப்பிலன்றி ஏகோசி, சரபோசி, சகசி என்றே எழுதப்பெறுவது அக்காலத்தின் பேச்சுத் தமிழின் நிலையைக் காட்டுகிறது*** என்பார் (எ.சுப்பராயலு, செ.இராசு (பதி) 2001:ப.198). இவ்வாறான மொழி சார் தரவுகள் மோடி ஆவணங்களிலும் காணப்படுகின்றன.

1941இல் வரலாற்றிஞர் ஜாதுநாத் சர்க்கார் என்பார் தஞ்சாவூர் மோடி ஆவணங்களைப் பார்வையிட்டு அறிக்கை அளித்தார். அதனுள் கருநாடகப் போர், ஹைதர்அலி, திப்புச்சுல்தான் படையெடுப்பு போன்ற தொடர்பான வரலாற்றுத் தரவுகள் அதனுள் காணப்படுவதைக் குறிப்பிடுகிறார் (ஆ.ஜெ.எத்திராஜ், ப.3).

மோடி ஆவணக் கட்டுகளுக்கு இடையில் தமிழில் எழுதப்பட்டஆவணங்களும் காணப்படுகின்றன. அவ்ஆவணங்களை ‘மோடிப் பலகணி’ என்ற சொல்லால் குறிக்கிறார் சரஸ்வதி மகால் தமிழ்ப் பண்டிதர் வி.சொக்கலிங்கம். மோடிப் பலகணி குறித்து ஆய்ந்த மோடி வல்லுநர் இராக.விவேகானந்த கோபால், ***மராட்டிய மன்னர்களின் ஆட்சியில் அரசவை மொழி மராட்டியாக இருந்தமையின், மராட்டி மொழியை மோடி எழுத்துக்களில் எழுதுவது இயலுவதாயிற்று. எனினும் தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட தஞ்சைவாழ் மக்கள் தம்முடைய விண்ணப்பங்களையும் குறைகளையும் தமிழிலேயே எழுதித் தந்தனர். எனவே, அவ்விண்ணப்பங்களின் உட்பொருளைச் சுருக்கமாக மராட்டி மொழியில், மோடி எழுத்துக்களில் எழுதி மன்னரின் பார்வைக்காகவோ சர்க்கேல் என்ற அமைச்சரின் பார்வைக்கோ வைக்கும் மரபு இருந்தது. அவ்வாறே, மன்னரின் மராட்டி மொழி ஆணை மக்களைச் சென்றடையும்போது தமிழில் எழுதி வழங்கப்பட்டது. இவ்வாறு எழுதப்பட்ட தமிழ் ஆவணங்கள் மோடி ஆவணங்களுக்கு இடையிடையே இன்றும் காணப்படுகின்றன*** என்று விளக்குவர் (தி.மகாலட்சுமி முதலியோர் (பதி)2001 ப.270).

மோடி ஆவணங்கள் தமிழக வரலாற்றையும் மராட்டியர் கால தமிழகத்துப் பன்மொழிச் சூழலையும் அறிதற்குக் கிடைத்த அரிய ஆவணங்களாகும். எனவே தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும் தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல்நிலையத்திலும் உள்ள அனைத்து மோடி ஆவணங்களும் மொழிபெயர்க்கப்பட்டு ஆராயப்பட வேண்டும்.

தேவநாகரி, மோடி - வேறுபாடுகள்

மோடிஎழுத்துகளை எழுதும்பொழுது முதலில் கோடு போடுதல் நெறியாக உள்ளது. அக்கோடுகளை அடிப்படையாகக் கொண்டு எழுத்துகள் எழுதப்படுகின்றன. தேவநாகரி, மோடி எழுத்து வடிவங்களுக்கும் இடைப்பட்ட வேறுபாடுகளாவன:

தேவநாகரியிலுள்ள எல்லா எழுத்துகளுக்கும் இணை மோடி எழுத்துகளில் இல்லை. தேவநாகரியில் இகர (इ), ஈகாரம் (ई) எழுத்து வடிவங்கள் உள. ஆனால் மோடியில் இவ்விரண்டையும் ஒரே வடிவில் எழுதியுள்ளனர் (அட்டவணை 1:வ.எண்3,4). அவ்வாறே உகர (उ) ஊகாரம் (ऊ) வேறுபாடுகள் தேவநாகரியில் உள்ளன. ஆனால் மோடியில் இவ்விரண்டையும் ஒரே வடிவில் எழுதியுள்ளனர் (அட்டவணை 1:வ.எண்5,6).

தேவநாகரியில் அகர வடிவத்திலிருந்து (अ), ஆகார வடிவம் (आ) கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் மோடியில் அகரத்திற்கும் (அட்டவணை 1 வ.எண்.1) ஆகாரத்திற்கும் (அட்டவணை 1 வ.எண்.2) வடிவ ஒற்றுமை காணப்படவில்லை. எனினும் சில மோடி ஆவணங்களில் அகர வடிவமே ஆகாரமாகவும் எழுதப்பட்டுள்ளன.

தேவநாகரியில் ஏகாரம் (ए), ஐகாரம் (ऐ) எனும் இவற்றின் எழுத்துவடிங்களுக்கும் அகர (अ) எழுத்து வடித்திற்கும் தொடர்பு இல்லை. ஆனால் மோடி எழுத்து வடிவில் ஏகாரம் ஐகாரம் எனும் எழுத்து வடிங்கள் (அட்டவணை 1: வ.எண்.7,8). மோடியின் அகர எழுத்து வடிங்களின் திரிபாக அமைகின்றன(அட்டவணை 1: வ.எண்.1,2).

தேவநாகரியில்அகரத்தின் வடிவத் திரிபாக ஆகாரம் எழுதப்படுகிறது (அ-अ, ஆ-आ) ஆனால் மோடியில் ஆகாரத்தின் வடிவம் அகர வடிவத் திரிபாக இல்லாமல் தனிவடிவமாக அமைகிறது (அட்டவணை 1: வ.எண்.2).

தேவநாகரியில் ஒகர (ओ), ஔகாரத்தின் (औ)வடிவம்

ISSN 2320-4842

ஆகாரத்தின் (ஆ) வடிவத் திரிபாக உள்ளன. அவ்வாறே மோடியிலும் ஒகர ஔகாரத்தின் வடிவங்கள் ஆகாரத்தின் திரிபாக அமைகின்றன (அட்டவணை 1: வ.எண்.11,12)..

அகர, ஆகாரங்களுக்கு வேறுபட்ட வடிங்களைக் கொண்டுள்ள மோடி எழுத்துகளில் எகர ஐகாரம் அகர வடிவத் திரிபாகவும் (அட்டவணை 1 வ.எண் 7,8) ஒகர ஔகாரங்கள் ஆகார வடிவத்திரிபாகவும் (அட்டவணை1 வ.எண்.9,10) உள்ளன.

अं-அம், अः-அஹ என்பதற்கான மோடி எழுத்து வடிவங்கள் தேவநாகரியைப்போல் அகரத்தின் திரிபாக உள்ளன (அட்டவணை 1 வ.எண்.11,12)

அட்டவணை 1

உயிர் எழுத்துகள் (स्वर)



வ.எண்	தேவநாகரி	மோடி	தமிழ் (ஒலிப்பு)
1.	अ		அ
2.	आ		ஆ
3.	इ		இ
4.	ई		ஈ
5.	उ		உ
6.	ऊ		ஊ
7.	ए		எ / ஏ
8.	ऐ		ஐ
9.	ओ		ஒ / ஓ
10.	औ		ஔ
11.	अं		அம்
12.	अः		அஹ

தேவநாகரி மோடி - வேறுபாடுகள்

உயிரெழுத்துகளில் ஆகாரம் வடிவம் அகர வடிவத் திரிபாக அன்றித் தனிவடிவமாக அமைந்திருப்பது மேலே கூறப்பட்டது. ஆனால், மோடி உயிர் மெய்யெழுத்துகளில் ஆகாரம் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து வடிவம் அகரம் சேர்ந்த உயிர்மெய் வடிவத் திரிபாகவே உள்ளது. எனினும் பா, யா, ஸா எனும் ஆகாரம் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து வடிவங்கள் அகரம் சேர் உயிர்மெய் வடிவினின்று வேறுபட்டுள (அட்டவணை 2.2 வ.எண்21, 26, 31).

மோடி உயிரெழுத்துகளில் இகர, ஈகாரங்களுக்கு ஒரே எழுத்து வடிவம் உள்ளது முன்பே கூறப்பட்டது. அவ்வாறே இகரம் ஈகாரம் சேர்ந்த உயிர்மெய்க்கு ஒரே வடிவம் இருப்பினும் டி , டீ எனும் இகர ஈகார வடிவங்களில் வேறுபாடுகள் உள (அட்டவணை 2.1 வ.எண்13).

மோடி உயிரெழுத்துகளில் உகர, ஊகாரங்களுக்கு ஒரே வடிவம் உள்ளது. அவ்வாறே உகரம் ஊகாரம் சேர்ந்த உயிர்மெய் வடிவங்களிலும் ஒன்றுபட்டு அமையினும் கு, கூ எனும் உகர ஊகார மோடி வடிவங்கள் தம்முள் வேறுபடுகின்றன (அட்டவணை 2.1 வ.எண். 3).

அட்டவணை 2.1



அட்டவணை 2.2

மோடி எழுத்துகளின் வடிவங்களில் சில ஒன்றுபோல் தோன்றும். எனினும் அவற்றுள் நுண்ணிய வேறுபாடு கள் உள்ளன என்பதை மோடி எழுத்து வல்லுநர் அறிவர்.

பிரதாபசிங் 1739முதல் 1763வரை தஞ்சையை ஆண்டார். இவர் காலத்தில் பேஷ்வா எனும் பொறுப்பில் பணியாற்றியர் இராஜஸ்ரீ நரசிங்கராவ் அனந்தராவ். இக்காலத்தில் புதுச்சேரி கவர்னர் முசேதிமாவுக்கு எழுதப்பட்ட ஆணை ஒன்று சரஸ்வதி மகால் மோடி ஆவணத் தொகுப்பில் உள்ளது (**Bundle No. Col.**18 **Document No.**48). அந்த ஆவணத்துள் கடனாகப் பெற்ற தஞ்சாவூர்ச் சக்கங்கரங்களுக்காக அடமான மாக வைக்கப்பட்ட ஊர்களின் விவரமும் அக்கடனை அடைப்பதற்கான நெறிமுறைகளும் குறிக்கப்பட்டுள்ளன.இவ்ஆவணம் சுகூர் ஆண்டு 1140இல் எழுதப்பட்டுள்ளது. இதனுள் குறிக்கப்படும் ஊர்ப் பெயர்களில் சில வருமாறு (**R.Vivekanandagopal.**1999).



இப்பெயர்களைத் தேவநாகரி மற்றும் தமிழில் இப்படி அட்டவணை செய்யலாம்:

முதல் வரிசை	இரண்டாம் வரிசை	மூன்றாம் வரிசை
कसबा त्रिनलार கஸ்பா திருநள்ளார்	मौजे कुमलिया मंगळ கிராமம் குமலியாமங்கலம்	मौजे नैवाजेरी अध्यार கிராமம் நைவாசேரி அக்ரஹாரம்
मौजे तेनूर கிராமம் தேனூர்	मौजे वळतामगळ கிராமம் வளதாமங்கலம்	मौजे विळदिउर கிராமம் விளத்தியூர்
मौजे मेलपाउर கிராமம் மேலப்பாவூர்	मौजे नैवाजेरी கிராமம் நைவாச்சேரி	मौजे सेळूर கிராமம் சேளூர்

முடிவுரை

தஞ்சாவூரை ஆண்ட மராத்திய மன்னர்கள் அலுவல் நடைமுறைகளை மராத்திய மொழியில் மோடி என்ற எழுத்துமுறையில் எழுதினர். மோடியில் எழுதப்பட்ட ஆவணங்கள் மோடி ஆவணங்கள் என்றழைக்கப் படுகின்றன. பொதுமக்களின் பயன்பாடாக இல்லாது அரசுசார் பயன்பாடாக இருந்த இந்த எழுத்துமுறை வல்லுநர்களால் மட்டுமே எழுதப்பட்டு வந்துள்ளது. இன்றும் மராத்திய மக்கள் மராத்திய மொழியை தேவநாகரி எழுத்தில் எழுதுவதால் கையெழுத்தில் உள்ள மோடி எழுத்துமுறைக்கு என்ற அச்சு எழுத்துகள் உருவாக்கப்படவில்லை. தமிழக வரலாற்றையும் தமிழகத்துப் பன்மொழிச் சூழலையும் அறிதற்குரிய அரிய தரவுத்தொகுப்பாக உள்ள இந்த மோடி எழுத்துகளை வரையறைப்படுத்த வேண்டும். மோடி ஆவணங்களை முறையாக மொழிபெயர்த்து ஆராய்வதன்வழிப் பல அரிய ஆய்வுத் தரவுகள் கிடைத்தல் கூடும்.

ஆய்வுத் துணை நூல்கள்

இராசு.செ.1983, தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்-50, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர.

சுப்பராயலு.எ, செ.இராசு. 2001, தமிழ்க் கல்வெட்டியலும் வரலாறும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சுப்ரமணியன்.பா. (பதி.), 1989, தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பிள்ளை.கே.கே.2020 (மீள்பதிப்பு) தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

வேங்கடராமையா.கே.எம். 1984, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

Molesworth J.T. 1857,"A Dictionary, Marathi and English, Bombay Education Society's press. Bombay.

Vivekanandagopal.R (Edited and Translated) 1999, தஞ்சை சரசுவதி மகால் நூலக மோடி ஆவணங்கள் (தொகுதி 1), Modi Documents in the T.M.S.S.M. Library, तंजावूर सरस्वती महाल ग्रंथालयातील मोडी कागद्पत्रे (खंड - १) Thanjavur Maharajah Serfoji's Sarasvati Mahal Library, Thanjavur.

सौ. रमाबाई जो शी व श्रि पु.दि जोशी (संपादक), 1976, तमिळ — मराढी शब्दकोश, महाराष्ध्र राज्य साहित्य — संस्कुती मंडळ.

श्रीमंत.उदयसिंह मानसिंगराव रजेयादव, 2013, आपली मोडी लिपी, भाग -1, राष्ढीय मोडी इतिहास प्रबोधिनि.

श्रीमंत.उदयसिंह मानसिंगराव रजेयादव, 2013 आपली मोडी लिपी, भाग -2, राष्ढीय मोडी इतिहास प्रबोधिनि.

केशव आप्पा पाध्ये, 2008, हेमाद्रि उर्फ हेमाडगंत, वरदा सेनापती बापट मार्ग, 397/1- वेताळबाबा जौक, पुणे 411 016.

मोडी लिपी वाजन सराव पुस्तक 1, पुराभिलेख संजालनालय, महाराष्ध्र शासन.

मोडी लिपी वाजन सराव पुस्तक 2, पुराभिलेख संजालनालय, महाराष्ध्र शासन.

मोडी वाजन आणी सुलेखन, 2015, सर्व हक्क प्रकाशकाज्या स्वाधीन.

கட்டுரைகள்

எத்திராஜ். ஆ.ஜெ. 1982, தஞ்சை மராட்டிய மன்னர்களின் மோடி ஆவணங்கள் வரலாறு, பதிக்கப்படாத மோடி ஆவண கருத்தரங்கக் கட்டுரைத் தொகுதி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

விவேகானந்தகோபால்.இராக. மோடிப் பலகணி ஆவணங்கள் -ஓர் ஆய்வு, மகாலட்சுமி.தி, நிர்மலாதேவி.தி, பூமிநாகநாதன்.த, 2001, சுவடிச்சுடர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை..

The world is a book and those who do not travel read only one page.

— St. Augustine

ISSN 2320-4842

தி.வெ. இராசேந்திரன் சிறுகதைகளில் சமுதாயச் சிந்தனைகள்

ப. கௌரி
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்) (Ref.No:29431/Ph.D.K8/Tamil/P.T./June 2019(3-5) Confirm., dt:03.08.2021), தமிழ்த்துறை உயராய்வு மையம், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த),தஞ்சாவூர் 613 007

நெறியாளர்: **முனைவர் தெ. வாசுகி**
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், அ.து.ம.மகளிர் கல்லூரி (த), நாகப்பட்டினம் 611 001. (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

இணை நெறியாளர்: **முனைவர் சீ. வைஜெயந்திமாலா**
இணைப் பேராசிரியர்–தலைவர், தமிழ்த்துறை உயராய்வு மையம், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த),தஞ்சாவூர் 613 007 (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச்சுருக்கம்

இலக்கியம், தன் காலத்து மக்களின் அரசியல், நாகரிகம், பண்பாடு முதலிய வற்றைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடி. அன்றியும், கால வெள்ளத்தால் அழியாக் கலையாகவும் அது திகழ்கின்றது. ***நம்முடைய மனத்தில் நிகழும் காரியங்கள், எண்ணங்கள் என்றும், உணர்ச்சிகள் என்றும் இரண்டு வகைப்படும். ஒருவருடைய எண்ணங்களைப் பிறர் மனத்தில் உண்டாகும்படி செய்வதற்காக ஏற்பட்ட சாதனங்களை அறிவு நூல்கள் (ஸயன்ஸ்) என்று கூறுவார்கள், அதுபோல, ஒருவருடைய மனத்தில் எழும் உணர்ச்சிகளைப் பிறருடைய மனத்திலும் உண் டாகும்படி செய்வதற்காக ஏற்பட்ட சாதனங்களை இலக்கிய நூல்கள் (கலை) என்று கூறுவார்கள். . . . ஆகவே, எது உணர்ச்சி ஊட்டுமோ அதுவே இலக்கியம். அதனால் உணர்ச்சி ஊட்டப்பெறுவதே இலக்கியத்தால் நாம் அடையும் இன்பம். இதுதான் நாம் இலக்கியத்தால் பெறக்கூடிய பிரதான இன்பமும் நன்மையுமாயினும், இந்த இன்பத்தை இலக்கிய கர்த்தா எந்தவிதமான சாதனங்களைக் கையாண்டு நம்முடைய மனத்தில் உண்டாகும்படி செய்கின்றார் என்பதை அறிவதும் ஒருவித இலக்கிய இன்பமாகும்*** (திரிகூடசுந்தரம், பக்.iii-iv).

கருவிச்சொற்கள் (Keywords): உரையாடல், சமுதாயம், சிறுகதை இயைபு, சிறுகதை இலக்கணம், வருணனை.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

இலக்கியத்தின் பயன்

இலக்கியம் நம் முன்னோர்களாகிய தெய்வப் புலமைச் சான்றோர் தம் வாழ் நாட்களில் பட்டறிந்து கண்டு வைத்த உண்மைகளாகிய, விலைமதிக்க முடியாத பொற்பேழையாகும், கருவூலமாகும். ஒன்பான் சுவை களும் (சுந்தர சண்முகனார், ப.109) ஒருங்கே அமைந்து, பத்துவித அழகும் (நன்னூல், நூ.13) பாங்குடன் பொருந்தி, நடைநலமும் தொடை நலமும், ஓசை நலமும் உள்ள இலக்கியம் ஐம்பொறிகளுக்கும் அறிவிற் கும் ஒருங்கே, இன்ப விருந்தளிக்கும் ஒரு பூங்காவாகும் எனலாம்.

சிறுகதை

சிறுகதை என்பது குறிப்பிட்ட அளவுள்ள உரைநடைக் கதையாகும். இது ஏனைய இலக்கிய வடிவங்களைப் போல் மிகப் பழமையான ஒன்று. எழுத்துக்கலை பழக்கத்திற்கு வருதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பே சிறுகதை இருந்திருக்க வேண்டும். அன்று முதல் இன்றுவரை சிறுகதை வளர்ந்துவருகிறதெனினும், நாம் இன்று கருதும் சிறுகதைக்கும், நாட்டுக்கதை, நீதிக்கதை போன்றவற்றிற்கும் இடையே வேறுபாடு உண்டு. ***இக்கொள்கையின்படி சிறுகதை என்பது மாத, வாரப் பத்திரிக்கைகளின் தோற்றத்தோடு கி.பி.பத்தொன்பதாம் நூற் றாண்டில் அமெரிக்காவில் தோன்றியது***[4] (ந.பிச்சமுத்து, ப.280) என்பர். சிறுகதையின் உள்ளடக்கம் (Hidden Sources) என்பது *அடக்கி வைத்த பொருள்* எனத் 'தமிழ்ப் பேரகராதி' விளக்குகிறது (ப.28). 'வ.வே.சு. ஐயர் யுகம்' என்று குறிப்பிட்டு, இவர் தமிழில் சிறுகதைக்கு உருவும் உயிரும் கொடுத்தவர் என்று புதுமைப் பித்தன் போற்றுவது மட்டுமல்லாது சான்றோர் அனைவரும் அவரின் பங்களிப்பைப் போற்றுகின்றனர்.

எழுத்தாளன் தனித்திருந்து வாழும் ஒருவன் அல்லன். அவன் சமூகப் பிராணி. காலந்தோறும் சமுதாயத்தில் முரண்பாடுகளும் போராட்டங்களும் இயக்கங்களும் இடைவிடாது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பது கண்கூடு. ***இவற்றின் மத்தியிலே எழுத்தாளனும் வாழ்கிறான். இவற்றுக்கு அவன் முகங்கொடுக்கும் விதத்திலும் முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் அவன் புரிந்துகொள்ளும் விதத்திலும் அவற்றுக்கான தேர்வு முடிவுகளைத் தெரிந்துகொள்ளும் தகைமையிலுமே அவனது இலக்கியப் படைப்பின் வெற்றி தோல்வி அமையும்*** (ப.13) என்கி

றார் க.கைலாசபதி. இஃது விழுமிய இலக்கியத்தின் தன்மையினை விளக்குகிறது. இவ்வுண்மையை உளங் கொளவும் எழுத்தாளன் கையாளும் மொழி, அவன் புலப்படுத்தும் கருத்து, உணர்வு, அவற்றால் படிப் போர் ஈர்க்கப்படுந்தன்மை, ஈற்றில் விளையும் பயன் முதலியனசிறுகதைக்குத் தேவை.

சிறுகதை இலக்கணம்

சிறுகதை இலக்கணத்தைப் பலரும் பலவாறு கூறுவர். எவ்வரையறையும் முடிந்த முடிபன்று எனலாம். சிறந்த சிறுகதையின் அமைப்பே அதற்கு இலக்கணம் ஆகும். ***சிறுகதை குதிரைப் பந்தயம்போல் தொடக்கமும் முடிவும் சுவைமிக்கனவாக இருத்தல் வேண்டும்*** என்பர் (கு. முத்துராசன்,ப.210). ***சுவையான ஒரு நிகழ்ச்சி, அல்லது சூழ்நிலைஅமைப்பு, கவர்ச்சியான ஒரு காட்சி, நெருங்கிப் பின்னப்பட்ட சிறு நிகழ்ச்சிகள், ஒருவரின் தனிப் பண்பு, ஒரு சிறு அனுபவம், வாழ்க்கையின் ஒரு வெற்றி, அற உணர்வால் விளைந்த ஒரு சிக்கல், இவற்றுள் ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதையின் அடிப்படைத் தன்மையாக அமையும்*** (கு.முத்துராசன்,ப.214). எனவே, சிறுகதை பெரும்பாலும் அறக் கருத்துக்களின் அடிப்படையில் அமைவது எனலாம்.

சிறுகதை அமைப்பும் பண்பும் (Nature and Structure) பற்றி எழுபதாண்டுகட்கு முன்னரே மு. வரதராசன், ***சுவையான நிகழ்ச்சி (அல்லது) சூழ்நிலை அமைப்பு; கவர்ச்சியான ஒரு காட்சி; நெருங்கிய பின்னப்பட்ட சிறு நிகழ்ச்சிகள்;ஒருவரின் தனிப் பண்பு, ஒரு சிறு அனுபவம்; வாழ்க்கையின் ஒரு பெற்றி; அற உணர்வால் விளைந்த ஒரு சிக்கல்- இவற்றுள் ஏதேனும் ஒன்று அல்லது இவை போன்றுஏதேனும் ஒன்று நல்ல சிறுகதையின் அடிப்படை யாக அமையலாம்*** (ப.156) எனக் குறிப்பிட்டுள்ளார்.

சிறுகதை இயைபு (தன்மை)

இயைபு என்பதற்குப் புணர்ச்சி, பொருத்தம், இது கேட்டபின் இது கேட்கத் தக்கது என்னும் யாப்பு; நூல் வனப்புள் ஒன்று எனக் 'கழகத் தமிழ் அகராதி' பொருள்தருகிறது. ஆகச் சிறுகதைக்கு அவசியமான தன்மை (natural quality) எனப் பின்வரும் கூற்று விளக்கிக் காட்டுகிறது: ***சிறுகதையில் கூறப்படுவது ஒரு மணி நேர நிகழ்ச்சியாகவும் இருக்கலாம், ஒரு நாள் செய்தியாகவும் இருக்கலாம், ஒரு வாரத்து நிகழ்ச்சியாகவும் இருக்கலாம் . . . ஒருவரின் வாழ்க்கையில் ஒரு சிறு பகுதியும் சிறுகதையாக இருக்கலாம்; ஓர் இடமே களமாக அமையினும்அமையலாம்; பல்வேறு இடங்களும் வரினும் வரலாம். ஒருவர் இருவரே கதைமாந்தராகவும் அமைய லாம்; பலரும் வந்து அமையலாம். ஆயின், ஒருமுக இயைபு அதில் விளங்கல் வேண்டும் - கூறப்படுவன எல்லாம் ஒரு காரணம் பற்றியனவாக, ஒரு நோக்கம் உடையனவாக, ஓர் உணர்ச்சியை (மனத்தால் அனுபவிக் கும் அன்பு, இயல்பு, இரக்கம், பண்பு, பரிவு, கோபம், பொறாமை, போன்றவை) விளைப்பனவாக இருத்தல் வேண்டும் . . . .அஃதாவது ஆங்கிலத்தில் எமோஷன், சென்டிமெண்ட்ஸ் . . . எனப்படுகிறது. மேலும், ஒருமுக இயைபுக்கு இடையூறானவற்றையும் வேண்டாதவற்றையும் நுழைத்தலும் சேர்த்தலும் ஆகாது*** (மு.வரதராசன், ப. 162) என்பது சிறுகதை இயைபுக்குப் பொருத்தமான விளக்கமாகும்.

சிறுகதைகளை, 1.கருவின் சிறப்பால் அமையும் சிறு கதை, 2. ஒருவரின் பண்பின் சிறப்பால் அமையும் சிறுகதை,3.உள்ளத்தில் பதியும் உணர்வின் சிறப்பால் அமையும் சிறுகதை என வகைப்படுத்தினும். மூன்றா வதான உணர்வுச் சிறப்பால் அமையும் சிறுகதையே மற்றவற்றைக் காட்டிலும் சிறந்தது என்பர் அறிஞர் ஆலன்போ (கு.முத்துராசன்,ப.210).

உரையாடலும் வருணனையும்

அதிகமான உரையாடல்களும் தேவையற்ற வருணனை களும் சிறுகதைகளில் இடம்பெறக் கூடாது என்பர். ***சிறுகதைகளில், அதிக உரையாடலுக்கு இடமில்லை. கதை மாந்தரின் பண்பை விளக்குமளவிற்கும்; கதை நிகழ்ச்சி யைப் புலப்படுத்தும் அளவிற்கும்; ஏற்ற உரையாடல் இருந்தால் போதுமானது. இதேபோல் அதிக வருணனை தேவை இல்லை*** (கு. முத்துராசன், ப.212) என்பர்.

சிறுகதைக் 'கரு' தோன்றும் முறை

சமுதாய அமைப்பிலும் மனித உறவிலும் மாற்றங்கள் தோன்றி வளர்ந்து பெருகும் கால கட்டத்தில் வாழும் ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் உணர்வினைத் தாக்கு வது புதிய சூழ்நிலையில் தோன்றும் மனித இன்னல் அல்லது புதிய சூழ்நிலையில் ஏற்படும் நடைமுறையே. இதுவே சிறுகதையின் கருவாக அமையும் (ப.16) என் கிறார் கா.சிவத்தம்பி. குறிப்பிட்ட ஒரு சம்பவத்தில் மனித மனம் படும்பாட்டை அல்லது ஒரு பாத்திரம் இயங்குகின்ற முறைமையைக் குறிப்பதுவே சிறுகதை என விளங்கிக் கொள்ளமுடிகிறது.

தமிழ்ச் சிறுகதை வளச்சிக்குக் காரணமான முக்கிய எழுத்தாளர்கள்

சிறுகதையின் வளர்ச்சிக்குக் காரணமானவர் கல்கி; ஆழவளர்ச்சிக்குக் காரணமானவர்கள் மணிக்கொடிக் குழுவினர் என்பது தமிழ்ச் சான்றோர் முடிபு. மணிக் கொடியே இலக்கிய இலட்சியத்துடன் தோன்றிய முதல் பத்திரிகை (1933). இதில், சிறுகதை எழுதிய வர்களுள் என்றென்றும் குறிப்பிடத் தக்கவர்களாகப் ப.இராமசாமி, வ.ரா., பி.எஸ்.ராமையா, கி.ராமச்சந்தி ரன், லா.ச.ராமாமிர்தம், நா.பிச்சமூர்த்தி, சிட்டி (எ) பெ.கோ.சுந்தரராஜன், புதுமைப்பித்தன், கு.அழகிரி சாமி,கு.ப.ரா., டி.எஸ்.சொக்கலிங்கம், சிதம்பர ரகுநா தன், தி.நா.சுப்பிரமணியம், ராஜாஜி எனப்படும் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் முதலியோர் ஆவர். சிறுகதையின் உருவத்தையும் வடிவத்தையும் தமிழ்மொழியை எளிமைப்படுத்தி வளமாக்கிய முதல் சிறுகதைச் சிற்றிதழ் 'மணிக்கொடி' (ப.28) என்று தி.செந்தமிழ்ச்செல்விஆராய்ந்து உறுதி செய்துள்ளார்.

இன்றைய தமிழ்ச் சிறுகதை உலகில் மிகவும் பேசப்படு பவர்பெருமாள் முருகன். அரசு கல்லூரியில் முதல்வ

ராகப் பணி. இவர் எழுத்துப் பயணம் 1988 முதல் இன்று வரை. இவரது முதல் கதை ‘கணையாழி’யில் மார்ச்-ஏப்ரல் 1988இல் வெளியானது முதல், நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரைகள், தொகுத்தவை எனப் பல்வேறு பரிமாணங்களில் வாழ்ந்துவரும் படைப்பாளர். இவரது சிறுகதைகளின் தன்மை கிராமத்தைக் களமாக அமைத்தும் வேளாண்குடிகளைப் பாத்திரங் களாகக் கொண்டும் அமைந்துள்ளன.

தி.வெ.ரா. என்றழைக்கப்படும் தி.வெ.இராசேந்திரன் (1956-)எனும் படைப்பாளர் (எழுத்தாளர்) சிறுகதை, நாவல், குறுநால். நாடகம் ஆகிய நான்கு வகை (genre) இலக்கியங்கள் படைத்துள்ளார். இவர் ***தன் பத்தொன்பதாம் அகவையில் எழுதிய கறிவேப்பிலை என்ற சிறுகதை கல்லூரிக் கல்வி பயிலும் காலத்துக் கல்லூரி ஆண்டு மலரில் வெளியிடப்பட்டது*** (ப.3) எனும் குறிப்பினால், அவர்தம் எழுத்துப்பணி 1975 முதல் தொடங்கியதென அறியலாம். இன்றைய காலகட்டங் களில் கவிதை, சிறுகதை, புதினம், கட்டுரை போன்றவை தரம்தாழ்ந்து வெறும் அலங்காரங்கள் மிகுந்து எழுதப் படும் நிலையினை உணர்ந்து, அதன் தீவிரத்தையும் வன்மத்தினையும் *நெஞ்சு பொறுக்குதில்லையே-இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்* என்று பாரதி உணர்ச்சி பொங்கி எழுந்ததைப்போல் தி.வெ.ரா.வும் வெறும் அலங்காரங்கள் எழுதுகின்றவர்களின் போக் கினை, ***பல்வேறு துறைகளிலும்-நம் நாட்டில்-ஊழல்வாதி கள் மலிந்து விட்டார்கள். இது இலக்கியத்தையும் விட்டு வைக்கவில்லை! மக்களின்சுய அறிவை மழுங்கச் செய்யக் கூடிய வகையில் ‘எழுத்து வேசிகள்’ இலக்கியவாதிகள் என்ற போர்வையில் உலா வந்து கொண்டுள்ளனர்*** (தி. வெ.ரா., ப.13) என்று குறிப்பிடுகிறார். இவ்வாறான நிலையினைச் சுட்டியதோடு நில்லாது மேற்சொன்ன அறிஞர்களின் கூற்றுக்கள் அடிப்படையில் ***இலக்கிய வாதி என்பவன் ஒரு மானுடப் பேராசிரியர்(ன்) ஆவான். சமுதாயத்தில் நிகழும் குறை, நிறைகளைச் சுட்டிக் காட் டும் துணிவு அவனுக்கு உண்டு. அவன் முயன்றால் மக்கள் உள்ளத்தில் சிறந்த சிந்தனைகளை விதைத்து, அவற்றைச் செயல் வடிவமாக்க மக்களை ஆயத்தப்படுத்த முடியும். இந்தக் குறிக்கோளுடன் ஓர் இலக்கியவாதி எழுத்துக்க ளைப் படைத்திட வேண்டும்*** என்று *மானுடம் வென்ற தம்மா . . .* நூல் முன்னுரையில் (ப.12) குறிப்பிடு கின்றார். இது அவரின் சமூகச் சிந்தனை. அவர் 1975முதல் செப்டம்பர் 01, 2021 வரையான 46 ஆண்டுகளில் 50 சிறுகதைகள் எழுதியுள்ளார். அவை பல்வேறு ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளன. இவற் றையெலாம் தொகுத்து *மானுடம் வென்றதம்மா . . . (50 சிறுகதைகளின் தொகுப்பியம்)* எனும் தொகுப்பு நூல் பிப்ரவரி 2022, அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இதன் பதிப்பாசிரியர் சி.ஜெயக்குமார். இத்தொகுப்பி லிருந்து ஐந்து சிறுகதைகள் [(1) அவன் ஏன் நாணு கிறான்? (2) கறிவேப்பிலை (3) சிடுமூஞ்சி (4) சூரியாஸ்தமனம் (5)நேசம்]மட்டும் எடுத்துக்கொண்டு, இதுகாறும் கூறிய விளக்கங்களினின்று, *ஆராய்ச்சியில் வரையறுத்துக்கொண்டால்தான் ஆய்வு சரியாக நிகழ்த்த முடியும்* (பொற்கோ, ப.81) என்ற கோட் பாட்டிற்கிணங்க இக்கட்டுரை அமைகிறது.

சிறுகதை உள்ளடக்கம்

உள்ளடக்கம் என்பது கதையின் அடிப்படைக் கருத் தாகும். இதனைக் கதை கூறும் பொருண்மை என்றும் நுவல்பொருள் என்றும் கூறலாம். இதனைக் கதைக் கரு என்றும் கூறுவர். இது பற்றி, ***ஓர் இலக்கியப் படைப்பு எதைப் பற்றிப் பேசுகிறதோ அல்லது எந்த ஒன்றை அது தன்னுடைய உள்ளடக்கமாகக் கொண்டுள் ளதோ அதுவே நுவல் பொருளாகும்*** (மா.இராமலிங் கம்,ப.51) என விளக்கப்படுகிறது. இதன் அடிப் படையில் தி.வெ.இராசேந்திரன் சிறுகதைகளில் உள்ளடக்கம் பற்றிக் கண்டறியப்படுகின்றன.

(1) அவன் ஏன் நாணுகிறான்?

இக்கதையில், பேராசிரியர் நாதன், மாணவன் மணி ஆகிய இருவரும் பாத்திரங்களாவர். கதைக்களம் கல்லூரி வகுப்பறை. பெரும்பாலும் அனைத்துக் கல் லூரிகளிலும் யதார்த்தமாக நடைபெறும் சிறு நிகழ்வு ஒன்றினைப் படைப்பாக்கியுள்ளார் தி.வெ.இராஜேந்தி ரன். கல்லூரிப் பேராசிரியர் பணியில் தான் பெற்ற அனுபவத்தைச் சமூகத்திற்கு அவர் எடுத்துக் காட்டு வதாக எண்ணமுடிகிறது. பேராசிரியர் முதல் நாள் வகுப்பறைக்குச் சென்றபொழுது கரும்பலகையில், ***எங்களை அறுக்க வந்திருக்கும் பேராசிரியர் நாதன் அவர்களே வருக . . . வருக . . .*** என்னும் தொடர் எழுதப்பட்டிருந்ததைப் பார்த்ததும் கோபப்படாமல் புன்முறுவலிக்கிறார். பின்னர், ஆசிரியர் என்பவர் ஒழுக்கத்தைக் கற்றுக்கொடுப்பவர் என்பதால், ஒழுக்க முடையவர் *ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை* (குறள்.137) என்ற வள்ளுவர் கூறும் நெறிநின்று, ***எங்கள் அறியாமையை அறுக்க வந்திருக்கும் பேராசிரியர் நாதன் அவர்களே வருக . . . வருக . . .*** எனத் திருத்தம் செய்தார். இதனைக் கண்டு மாண வர்கள் கரவொலி எழுப்பினர். மேற்படி தவறு செய்த மாணவர் யார் எனக் கேட்டறிந்து, மணி என்ற மாணவனின் பின்புலம் அறிந்த ஆசிரியர் ***மணி மீது எனக்குக் கோபமில்லை . . . இனிமேல் நன்றாக நடந் தால் போதும் . . .*** (ப.25) என அறிவுரை கூறினார். மணியின் தந்தை கட்டடக் கூலிவேலை செய்யும் குடும் பச் சூழ்நிலை நாதனுக்குத் தெரியவர, ***மணி கவலைப்படாதே . . .செலுத்தவேண்டிய கலலூரிக் கட்ட ணத்தை நான் செலுத்தியுள்ளேன் . . . இந்தா பற்று முறிச் சீட்டு . . .*** (ப.26) என்று நாதன் மணியிடம் கொடுத்துவிடுகிறார். ***அய்யா . . . நீங்கள் மாந்த நல்லன். . . தெய்வம். . . .*** என்று கூறி மணி பேரா சிரியர் நாதனை வணங்கினான். இக்கதை உணர்த் துவது, யாரும் யாரையும் இகழ்ச்சி செய்தல் கூடாது; மாணவர்களுக்குப் படிப்பு முதன்மைதான் அதைவிட முதன்மை ***பண்புதான்*** (ப.27) என உணர்த்தும்போது,

தி.வெ.ரா. இயல்பு சமூகச் சிந்தனையாக வெளிப்படு கிறது.

(2) கறிவேப்பிலை

இக்கதையின் களம் கோடைக்காலம். கோடைக்காலம் என்பது பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறைக் காலம். இதனைத் தி.வெ.ரா. நாசூக்காகக் கோடைக்காலம் என்று குறிப்பிடுகிறார். இந்த நாட்களில், பொதுவாக உறவினர்கள் தம் குடும்ப உறவுகளுடன் கூடி மகிழ்வது இயல்பாகும். அந்த வகையில் *கறிவேப்பிலை* கதை அமைந்துள்ளது. எதிர்பாராது நடக்கும் ஒரு சம்பவம் இக்கதையில் *இரக்கம்* என்ற பதத்திற்குப் பொருத்த மானதாய் அமைகிறது. சமூகத்தில் குடும்ப உறுப்பின ரிடையே காணப்படும் ஈவிரக்கமற்ற நிலையினைச் சுட்டுகிறது. இக்கதைக்கு இரக்க குணம் மையக் கரு. அந்த மையக் கருவாக, ***கைகளில் திருவோடு, நெற்றி நிறையத் திருநீறு. கசங்கிக் கந்தலாகிப் போன மேலாடை, மற்றும் கீழாடை! அருவெறுக்கத்தக்க தோற்றம்.***

அம்மா. . . தாயே . . . அன்னபூரணி. . . ஏதாவது போடுங்கம்மா . . . (ப.18) என்ற கூற்றின்வழி *பிச்சைக்காரன்* பாத்திரம் அறிமுகமாகிறது. வாசலில் நின்று குரல் கொடுத்த பிச்சைக்காரன், வீட்டினுள் ளிருந்து பதில் ஏதும் இல்லாததால், வாசல் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான். குழந்தை (அம்மு)யின் உடல் முழுக்கச் சுற்றி வளைத்த பாம்பு, தன் தலை யைக் குழந்தையின் தலைமீது வைத்துப் படம் விரித்தபடி இருந்தது. சூழ்நிலையைப் புரிந்துகொண்ட அவன், ***அட ஈஸ்வரா-பச்சப் புள்ளை ஒடம்புமேலே பாம்பு படுத்திருக்குது . . . பாத்துப்புட்டு அத்தனை பேரும் சும்மா இருக்கீங்களே . . . ஏன் சாமி . . . நீங்கள்ளாம் ஈவு இரக்கம் உள்ளவங்களா . . .*** (ப.18) என்று பதறி உள்ளே வந்தான். பெற்றோர் உட்படக் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றும் புரியாது உயிரச்சத்தில் தவித்தனர். அவன், ***உங்க எல்லாருக் கும் அவங்க அவங்க உசிரு மேலே எம்புட்டு ஆசை . . . பச்சப் புள்ளையைப் பலிகுடுத்துடாதீங்க அய்யா . . . தர்மப் பிரபுக்களே . . . பாம்பை வெரட்டுங்க*** (ப.19) என்று கத்தினான். அதற்குப் பெரியவர் கேசவன், ***டேய் பிச்சைக்காரப் பயலே . . . போடா வெளி யிலே . . . எங்களுக்கு உபதேசமா . . . ஏன் . . . பாக்கறியே நீ போய்ப் புடி பார்க்கலாம் . . .*** (19) என்று கத்தினார். திடீரென்று ***பாம்பின் கழுத்தைப் பிடிக்கப் பாய்ந்தான் பிச்சைக்காரன். அது இவன் வலது கையில் ஆவேசமாகக் கொத்தியது. 'அய்யய்யோ . . . அம்மா. . .' என்று அவன் அலறியபடி பாம்பை இரு கைகளாலும் சுற்றிப் பிடித்துக்கொண்டு தரையில் உருண் டான். குழந்தை அம்மு மீட்கப்பட்டு விட்டது*** (ப.20). ஆளுக்கு ஆள் அந்தக் குழந்தையை முத்தமிட்டனர். கொஞ்சினர். திருநீறு வைத்தனர். திருஷ்டி கழித்தனர். ஆனால், சில நாட்கள் அவர்கள் இட்ட சோற்றைத் தின்று வயிறு வளர்த்த அந்தப் பிச்சைக்காரன், இறந்து விட்டான். காரணம் ***இந்த ஜென்மங்களைப் பார்க்க விரும்பாமலோ என்னவோ அந்தப் பிச்சைக்காரனின் விழிகள் அழுத்தமாக மூடியிருந்தன!!*** (ப.20) என்று கதை நிறைவுறுகிறது. இரக்கத்தின் இன்றியமையாமையை இவ்வாறு இக்கதை வலியுறுத்துகிறது.

(3) சிடுமூஞ்சி

இச்சிறுகதையில் முருகப்பன், வேலாயி இருவரும் கதைப் பாத்திரங்கள். இக்கதை ஒரு வாரத்தில் நடக் கும் நிகழ்வு. ஒரே பகுதியில் அமைந்த பத்துப் பதி னைந்து வீடுகளே கதைக்களம். அப்பகுதியில் அமைந் துள்ள முருகப்பன் குடியிருக்கும் வீட்டில் வேலாயி வீட்டுவேலை செய்கிறாள். முருகப்பன் கண்டிப்பான வர். மேற்படி குடித்தனங்களில் உள்ள பெண்கள் ஒரு வீட்டின் முன் நாள்தோறும் கூடி ஊர்வம்பு பேசிச் சிரிப்பார்கள். அப்படியானவர்களின் கட்டளைக்கும், ஏவலுக்கும் பணிந்து உதவி செய்பவள் வேலாயி. ஒருநாள் காலை தன் அப்பாவிற்கு வயிற்றுவலி; ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதாகவும் உடனே ஆபரே ஷன் செய்யணும் என்றும் அந்தக் குடியிருப்புப் பகுதி முன்பு வந்து அவள் கதறுகிறாள். ஊர்வம்பு பேசும் பெண்களில் சிலர் வேலாயி கதறுவது கண்டு, தமக்கு வேலை ஆகவேண்டும் என்றால் வேலாயி வேணும். இல்லையென்றால் . . . ***ஏண்டி நீ என்ன கலெக்டர் உத்தியோகமா பாக்குறே. . . திருப்பித்தர எப்படி முடியும் உன்னாலே . . . போடி போக்கத்தவளே. . . என்றும் பத்துப் பாத்திரம் தேய்க்கிற ஒனக்கு மூவாயிரம் யாருடி குடுப்பா. . . காலையிலே தர்மம் கேட்டு வந்துட்டா போடி போடி என்றும் விரட்டினாள் இன்னொருத்தி*** (ப. 41) என்று அப்பெண்களின் இயல்பாக நடைமுறை வாழ்வில் நடுத்தர மக்களிடம் அனுசரணையின்றி சுயநலம் மேலோங்கியிருப்பதனை இக்கதை காட்டுகி றது. இப்படி ஈவு இரக்கமற்றத் தன்மையில் அக்குடித் தனப் பெண்களின் பேச்சுக்கும் ஏகடியத்திற்கும் ஆளா னாள் அவள். இதனைக் கண்ட முருகப்பன் அமைதி யாகப் பல் துலக்கிக் கொண்டிருந்தவன், ***ஏய் . . . வேலாயி . . . இங்கே வா . . .*** என்றான் அதிகார மாக. ***எல்லாம் எனக்குத் தெரியும் வேலாயி . . . இதிலே மூவாயிரம் இருக்கு . . . உங்க அப்பனைக் காப்பாத்தற வழியைப் பாரு. . . ஒனக்குச் சௌகரியப் படற போது பணத்தைத் திருப்பிக் குடு . . . ஆபத் துக்கு உதாவத பணமும், தாகத்துக்கு உதவாத தண்ணி யும் இருந்தா என்ன . . . போனா என்ன . . . போ வேலாயி . . . போயி உங்க அப்பனுக்கு வைத்தியம் பாரு . . . நான் அப்புறமா வந்து உங்க அப்பனை ஆஸ்பத்திரியிலேயே பாக்கறேன் . . . புரியுதா . . .*** (ப.42). இவர் செய்த உதவி கண்டு விக்கித்துப் போய் நின்றாள் வேலாயி. ***சார் . . . சார் . . . நீங்க மனுஷனேயில்லே சார் . . . தெய்வம். . .*** எனத் திக்கித் திணறிப் பேசினாள். ***புகழாராம் சூட்டினது போதும். . . போயி உங்க அப்பனைக் காப்பத்துற வழியைப் பாரு. . .*** (43) இப்பொழுது முருகப்பனின் சொற்கள் வேலாயி காதுகளில் தேனாக இனித்தது! முருகப்பன் செய்த உதவி, வள்ளுவர்தம் குறள் 102இல் காணலாம். இக்குறளுக்கு, ***உபகாரஞ் செய்யப்***

பட்ட சமயத்தினது அருமை பெருமைகளை நோக்கி அவ்வுபகாரத்தை நன்குமதிக்க வேண்டும் என வை.மு. கோபாலாகிருஷ்ணமாச்சாரியர் குறிப்புரை தந்து விளக்குகிறார் (திருவள்ளுவர், ப.125). முருகப்பன் தன் வீட்டில் வேலை செய்யும் வேலாயியைக் கண் டிப்புடன் நடத்தினாலும்உரிய காலத்தில் அவன் செய்த உதவியையும் காட்டிய இரக்கத்தையும் இக்கதை சமூ கத்திற்கு உணர்த்துகிறது. கதைத் தலைப்புக்கேற்ற இயைபும் (harmonious relation) வெளிப்படுகிறது.

(4) சூரியாஸ்தமனம்

இக்கதையின் கதைப்பாத்திரம் மாரப்பன். அவனுக் குத் தாய் தந்தை யார் என்று தெரியாது எப்படியோ வளர்ந்தான். ஒரு கிழவியால் வளர்க்கப்பட்டவன். அவள் இறந்துவிட்டாள். இவனை ஒரு பெண் காத லித்து ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொடுத்தாள். இவ னுக்குத் தெரிந்த தொழில் ஜோசியம். இதில் கிடைக் கும் சொற்ப வருமானத்தில் தம் குடும்பத்தை நடத்து பவன். ஒரு நாள் பொழுது என்பது கதைக்களம். கதை நிகழிடம் ***வண்ணான் சத்திரம் தெருக் கோடியி லிருக்கும்கடைசி வீடு*** என்று குறிப்பின்படி ***நாடோடிகள் நிறைந்து வாழுமிடமாகக் காட்டப்படுகிறது. அன்றைய தினம் சூரியன் அஸ்தமிக்கும் நேரமாகிவிட்டது. கிடைத்த எண்பது பைசாவில் புகையும் சாதா டீயும் குடித்தது போக எஞ்சியிருப்பது பத்தே பைசா*** (ப.22)என்ற நிலை. இவன் வீட்டுக்குவரும் வழியில் ரொட்டிக்கடை. அதில் புதிது புதிதாக ரொட்டிகள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. மெதுவாகக் கடையை நெருங்கினான். ***ஒரு ரொட்டி.... ஒரே ரொட்டி. . . போதும். அவன் குழந்தையின் பசி அடங்கிவிடும்...*** (ப.22) திருடிக் கொண்டுவந்து தன் செல்வ மகனை உச்சி மோந்து முத்தமிட்டு, பாதி ரொட்டியைப் பிய்த்து அவன் கைகளில் கொடுத்து விட்டு, தந்தை என்ற முறையில் பெருமைப்பட்டான். ரொட்டிக் கடையில் வேலை செய்பவர்கள் திடீரென இருவர் நுழைந்து, ***டேய் திருட்டு ராஸ்கல் . . .ரொட்டி யைத் திருடித் திங்கச் சொல்லுதா?*** (ப.23) என்று மாரப்பனை அடித்துத் துவைத்துவிட்டனர். நாடோடிக் கும்பல் செய்வது அறியாமல் வேடிக்கை பார்த்தது. எந்நிலையிலும் களவு கூடாது; கள்வன் தண்டிக்கப்படு வான்; கள்வனிடமும் மனிதாபிமானம் காட்ட வேண்டும் என இக்கதை தெரிவிக்கிறது.

(5) நேசம்

இக்கதையில் மீனா, வள்ளி, பாலு கதைப் பாத்திரங் கள். பாலுவும் மீனாவும் தம்பதியர். மீனா வீட்டில் வள்ளி வேலைபார்க்கிறாள். மாதச் சம்பளம் ரூ.100. 12ஆம் வகுப்பு படிக்கும் வள்ளியின் மகளுக்குச் சீருடை வாங்க மீனாவிடம் 500 ரூபாய் கடன் கேட் கிறாள். மீனா தரமுடியாது என்கிறாள். அதேசமயம் ஆயிரம் நோட்டீஸ் அடிக்க மட்டும் தான் சேர்த்து வைத்திருந்த தொகையிலிருந்து 500 ரூபாய் செலவிட முனையும் மீனா, வள்ளிக்கு உதவி செய்ய அவளிடம் மனிதத்தன்மை இல்லை என்பது இக்கதையின் கருவாகும். கணவன் பாலுவுக்கு ஹெட் கிளார்க் பணி. மீனா பெயருக்கு ஒரு கடிதம் வரு கிறது. அதில் ***...ஸ்ரீ வெங்கடாசலபதியின் திருவருளை முன்னிட்டு எழுதுவது... இதை நம்புங்கள். யார் இதை ஆயிரம் நோட்டீசுகள் வீதம் அச்சடித்து அனைவருக்கும் விநியோகம் செய்கிறாரோ அவருக்கு இருபது நாட்களுக் குள் பதவி உயர்வு, திருமணம் ஆகாதவர்களுக்கு திரு மணம்...*** (ப.50) என்று அதில் எழுதப்பட்டிருந்தது. இந்தக் கடிதத்தைத் தன் கணவனிடம் காண்பித்து, உடனே ஆயிரம் நோட்டீஸ் அடித்துக்கொண்டு வாருங் கள் என்று கோரிக்கை வைத்துச் சிணுங்கினாள். பாலு தன்னிடம் பணம் இல்லை என்கிறான். ***எங்கிட்டே இருக்குங்க... நீங்க வீட்டு செலவுக்கு குடுக்கற பணத்துல சிறுகச் சிறுக மிச்சம் புடிச்சுப் பணம் சேர்த்து வச்சிருக் கேன்.அதுலே ஐநூறு தர்றேன்*** (ப.51) என்று கூறி ஐந்து நூறு ரூபாய்த் தாள்களைக் கணவனிடம் கொடுக்கிறாள். அதனை வாங்கிக் கொண்டு வெளியே போகிறான்.

மறுநாள்- *மீனா... வள்ளி வந்திருக்கிறாளா?* என்றவன் ***அவளைக் கூப்புடு*** என்றான். வள்ளியை அவன் முன் கொண்டுவந்து நிறுத்தினாள். ***வள்ளி உம் பொண் ணுக்கு யூனிபார்ம் வாங்க அம்மாகிட்டே ஐநூறு ரூபாய் கேட்டே இல்லியா...இந்தா வச்சுக்க... இதிலே யூனிபார்ம் இருக்கு... இதை நீ எங்க அன்பளிப்பா வச்சுக்க... பாலு அமைதியாகத் துணிப் பொட்டலத்தை வள்ளியிடம் தந்தான். அவள் கண்ணீர் மல்கப் பெற்றுக் கொண்டாள்*** (ப.51). ***வள்ளி... நீ வீட்டுக்குப் போயிட்டு நாளைக்கி வா...*** என்றான். அவள் ஆனந்தமாகப் புறப்பட்டாள். ***என்னங்க இது... உங்களுக்கு ஏதாவது புத்தி தடுமாறிப் போச்சா... நான் குடுத்த பணத்துக்குத் துணி வாங்கி வேலைக்காரிக்குத் தூக்கிக் குடுக்கறீங்க...*** பாலு அமைதி யாகச் சிரித்தான். ***உனக்குத்தான் மீனா புத்திபேதலிச் சுப்போச்சு... எவனோ முன்பின் தெரியாதவன் கடவுள் பத்தி எழுதிப் போட்டதை நோட்டீசா அடிக்கிறதுக்கு நீ கஷ்டப்பட்டு சேர்த்து வச்ச பணத்தைக் குடுக்கறியே இது முறையா? நம்ம வீட்டுக்காக மாடா ஓழைக்கிறாளே வள்ளி அவளைப் பத்தி என்னிக்காவது கவலைப்பட்டிருக்கியா?*** (ப.52). ***வள்ளி என்ன கேட்டுட்டா... தன் பொண்ணுக்கு யூனிபார்ம் வாங்கத்தானே ஐநூறு ரூபா கேட்டா . . . அதுவும் கடனாத்தானே... அதுக்கு ஏன் உனக்கு மனசு இல்லே...என்று பாலு கேட்டான். அதற்குப் பதில் சொல லத் தெரியவில்லை மீனாவுக்கு. நேர்மையும் உழைப் பும் இருந்தால கடவுள் நமக்குப் பக்கத்து வீட்டுச் சிநேகிதர் மாதிரி.புரிஞ்சிக்க, எங்கிட்ட நேர்மையானஉழைப்பு இருக்கு மீனா. கண்டிப்பா என் முன்னேற்றத்தை ஒருத்தனாலும் தடுக்க முடியாது*** (பக்.52-53) என்று கதை நிறைவுறு கிறது. இக்கதையில் கணவன் மனைவிக்கு அன்புடன் அறிவுரை கூறி நேர்மையும் உழைப்பும் மனிதத்தன் மையை உண்டாக்கும் இயைபுத் தன்மை வெளிப் படுகிறது.

முடிவுரை

தி.வெ.இராசேந்திரன் வெறும் பொழுதுபோக்கிற்காகக் எழுதாது சிறுகதைக்குத் தேவையான உறுப்புகளை இயைத்து எழுதுகிறார். ***தொடர்ச்சி: பக். 81***

ISSN 2320-4842

கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியனின் 'அவளுக்கு வெயில் என்று பெயர்' கவிதைத் தொகுப்பில் பெண் கருத்தாக்கங்கள்

ஜெ. அரவிந்தன்
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்) (Ref.14079/Ph.D.K8/Tamil/PT/Revoke&Extn.1&2/July 2014/dt: 15.09.2023), தமிழ்த்துறை,அ.வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி (த), பூண்டி 613 503 (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

முனைவர் நா. சிவாஜி கபிலன்
ஆய்வு நெறியாளர், இணைப் பேராசிரியர் – தலைவர், தமிழ்த்துறை, அ.வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி (த), பூண்டி 613 503 (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச்சுருக்கம்

கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் தம் கவிதைகள்வழி நினைவில் ஊறும் சொற்களைக் காதலில் கொஞ்சம், வெயிலில் கொஞ்சம் நனைத்து வரிகளில் ஒளியூட்டிப் படிக்கும் வாசகர்களுக்கு இளஞ்சூட்டை உணரச் செய் கிறார். வெயில் கொண்டு காதல் செய்கிறார். கவிதை நெய்கிறார். நுரைத்துப் பொங்கும் பேரன்பைத் தரும் காதலானது அகத்தை விழிப்பு நிலையில் வைக்கிறது. தகிக்கும் வெயிலை இரசிக்கவைப்பதோடு உவமை, உவமானங்களாக்கவும் செய்கிறது. கவிஞரது காதல் கவிதைகள் உலகத்தை ஈரம் உலராமல் பாதுகாப்பதோடு இலக்கியத்தில் நறுமணம் மிக்க பூக்களாகவும் மலர்கின்றன.

இலக்கியப் படைப்புகளில் காதல் கவிதைகளை ஆண் எழுதும்பொழுது எங்கேனும் எப்படியாவது ஓர் ஆதிக் கச்சொல் வந்துவிடுகிறது. பெண் எழுதும் காதல் கவிதைகளில் ஒரு சொல்லில்கூட தன் ஆதிக்கம் வெளிப் படுவதில்லை. மாறாக, இதுகாறும் பெண்கள் பின்பற்றிவந்த நாணத்தை விட்டொழிக்கச் செய்கிறது எனில் மிகையன்று. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி மட்டுமல்ல ஆண்டாள், அவள் இல்லாத இறைவனுக்காகத் தமிழை ஆண்டாள். அவ்வாறே பண்பாட்டு மரபுச் சிக்கல்களில் சிக்கிக்கொள்ளாமல் ஓர் இரயில்பாதையைப்போல, கண்ணுக்கெட்டியவரை அழகாகத் தெரிகிற காதற்கவிதைகளை எழுதியிருக்கிறார் கவிஞர் தமிழச்சி தங்க பாண்டியன். இவர்தம் ‘அவளுக்கு வெயில் என்று பெயர்’ கவிதைத் தொகுப்பில் காணலாகும் பெண் கருத்தாக்கங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கருவிச்சொற்கள் (Keywords): எதிர்சிந்தனை, கருத்தாக்கம், பண்பாட்டுப்பாலியல், பெண் எழுத்து, பெண்ணியல்பு.

பெண் எழுத்து

பெண் எழுத்து ஆதரிக்கப்பட்டும், எதிர்க்கப்பட்டும், விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டும் வருகிற நவீனக் கவிதைச் சூழலில் கவிஞரின் காதல் கவிதைகள் எல்லாம் விமர்சன வெளிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவை எனலாம். வெயிலைக் காதலோடு உறவாட வைத்த அவரின் கற்பனை, மிகையான ஒன்றல்ல. அது காலம் காலமாக அடிமைப்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட பெண் மனம் ஆகும். காதல் வெயிலைத்தான் கொண்டாடும். ஏனெனில், அதில்தான் வெப்பம் இருக்கிறது. பெண் எழுத்துக்களின் தீராத்தனிமையை வெப்பம் சுட்டுப் பொசுக்குகிறது.

ஆண் பெண் சமம்

பண்பாட்டுப் பாலியல் (Gender) வேறுபாடுகளுக்கான மதிப்பீட்டு அளவைகள் ஆண் அறம், பெண் அறம் என்ற வேறுபட்ட அறங்களின் அடியொற்றி உருவாக்கப்பட்டன. ஆணுக்குப் பெருமை, வலிமை, அழகு, புகழ், அறிவு, கடமை, உரிமை, ஆள்வினை, செயலூக்கமான பாலியல், அதிகாரம் ஆகியவை வேறாகவும் பெண்ணுக்கு உடல் அழகு, மென்மை, பணிவு, அடங்கிய பாலியல், கற்பு ஒழுக்கம், சேவைச்செயல், மடமை, நாணம் ஆகியவை வேறாகவும் ஆகியதற்கு வேறுபட்ட அறங்களே காரணம். உடலின் வன்மை - மென்மை, உடற்கூற்றுச் செயல்பாடுகளின் வேறுபாடுகள், பாலியல் வேலைப் பிரிவு ஆகியவற்றின் மீது பண்பாட்டு ரீதியாகக் கட்டப்பட்ட இந்த அறங்கள் சமூகம், வீடு என்ற இரண்டு இடங்களுக்கு உரியவையாகச் சொல்லப்பட்டன என்கிறார் ராஜ் கௌதமன் (அறம், அதிகாரம், ப.156).

இவ்வாறாக, அடுக்கமைவை உண்டாக்கி வைத்திருக்கிற தந்தைவழிச்சமூக அமைப்பின் மூலங்கள் ஏதேச்சதி காரம் கொண்டவையாக இருக்கின்றபொழுது ஆதிக்கத்தை உடைக்கத் துடிக்கும் பெண் எழுத்து எப்போதும் மென்மையாகவும் இருக்காது, வன்மையாகவும் இருக்காது. அது பெண்ணைப்போலவே கருணை நிறைந்த தாகும். கவிதையடிகளெல்லாம் அன்பூறியதாக இருக் கும். அப்படியான அன்பூறிய அடிகளில் வெயிலை

ஏற்றி எழுதுகிறார் கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன்.

கால் சுற்றித் தோளேறிய
வெயிலை
உதற மனமின்றி
அவனை அணைப்பதுபோல்
உடுத்திக்கொண்டேன் வியர்வையாய்
ஊற்றெடுக்கிறது
அன்பு (அவளுக்கு வெயில் என்று பெயர், ப.79)

எனும் கவிதை அடிகளில் அன்பு மிளிர்வதைக் காண லாம். இதில் ***அவனை அணைப்பதுபோல்*** என வரும் தொடர் ***உடுத்திக்கொண்டேன்*** எனும் சொல்லாடல் உவமையாகச் சொல்லி முழுமையாகக் காதலை உள் வாங்கிக்கொண்டமையை எடுத்துரைக்கக் காணலாம். காதலில் அன்புஅப்படித்தான். வியர்வைபோல ஊறும். அஃறிணைகள்மீது கூட அறம் பொங்கும். இவ்வகை உணர்ச்சி காதலுக்கு மட்டுமே உரியது. உடல் மேல் வெயில் படர்வதுபோலப் படர்கின்ற காதலைச் சொல் கிற அடிகளில் வெயிலை அன்பில் நனைத்தெடுக் கிறார் கவிஞர்.

இறக்கிவிட்ட இடுப்புக்குழந்தையென
அழுதபடி பின்தொடர்கிறது வெயில்.
அள்ளிக் கொஞ்சத்தான் ஆசை
அவனைச் சந்திக்கும் அவசரம்
புரிந்துகொண்டு
தலைமேல் அதனைத்
தூக்கி வைத்துக்கொள்கிறது குடை (அவளுக்கு வெயில் என்று பெயர், ப.82) என வரும் அடிகளில் யதார்த்தம் தொனிக்கிறது.

காதல் எனும் இயல்பான உணர்வைப் பெண்கள் வெளிப் படுத்த முடியாத புறச்சூழலில் அக அழுத்தம் கொண்ட பெண் எழுத்துக்கள் புறச்சூழலைச் சிதறடிக்கின்றன. இன்னதென உணர்தற்குள் பற்றிப் படர்ந்து மரபு மரங் களிலேயே பூப்பூக்கத் தொடங்கிவிடுகின்றன பெண் எழுத்துக்கள். குழந்தைபோல அழுதபடி பின்தொடரும் வெயிலை அவனைச் சந்திக்கும் அவசரம் கருதிக் கண்டுகொள்ளாமல் விட அவள் எடுத்துச்செல்லும் குடையோ வெயிலை எடுத்துக்கொள்கிறது. வெயிலை அள்ளிக் கொஞ்ச ஆசைப்படுகிறார் கவிஞர்.

ஆனால் சமூகம், நேரம், வேலை, மரபு, பண்பாடு போன்ற சிக்கல்களைத் தோற்றுவித்திருக்கிறது. சிக்கல் களைத் தீர்த்துக்கொண்டிருந்தால் சந்திப்பு நிகழாமல் போய்விடும். சிக்கல் கணக்கை நான் தனியாகத் தீர்த் துக்கொள்கிறேன். இப்பொழுது சந்திக்கச் செல்கிறேன் என்கிறார் தமிழச்சி தங்கபாண்டியன்.

பெண்ணியல்புகள்

பெண்களுக்கெனச் சில இயல்புளைச் செயற்கையாக உருவாக்கியது ஆணாதிக்கச் சமூகம். அதை அவர் களுக்குப் போதித்துத் திணிக்கவும் செய்தது. இதன் மூலம் பெண் சமுதாயத்தை ஒரு வட்டத்துக்குள் கட்டிப் போட முயல்கிறது ஆணாதிக்கம். பெண்ணியல்பு என்று கூறும் பண்புகள் முழுக்கமுழுக்கச் செயற்கையானவை. அப்படிப்பட்ட இயல்புகள் ஆண்களால், பெண்ணைத் தனக்கு அடிமைப்படுத்த உருவாக்கப்பட்டவை என லாம். ***இத்தகைய இட்டுக்கட்டிய மாயை ஒன்றைப் பெண் ணின்மீது திணித்து முடக்கிவிட்ட நிலையில், அதிலிருந்து விடுபடத் துடிக்கும் பெண்களுக்குத் தற்சார்பே தக்க சார்பாக இருக்க முடியும் என்று கருதுகின்றனர் பெண் எழுத்தாளர்கள்*** என்கிறார் க. வேங்கடராமன் (எண்பது களில் தமிழ்ப்புனைகதைகளில் பெண்ணியம், ப.99).

வெயிலள்ளிக் குடித்துக்
கருப்பன் செகப்பனாவான்
செகப்பி கருவாச்சியாவாள்
வண்ணங்களற்ற காதலை
வெயில்தானே விதைக்கிறது! (அவளுக்கு வெயில் என்று பெயர், ப.83) என்கிறார் கவிஞர்.

கருப்பு, சிவப்பு காதலுக்கேது? வண்ணங்களை மட்டு மல்ல வருணங்களையும் ஏற்றுக்கொள்வதில்லை காதல். இவர் கவிதையிலும் வெயிலப்பிக்கொள்கிற காதல் கருப்பன் செகப்பி வண்ணங்களை மாற்றுவதன் மூல மாகச் சமூகம் உருவாக்கி வைத்திருக்கின்ற எல்லா மூடத்தனங்களையும் புறந்தள்ளுகிறது. புதுமைகளை விதைக்கிறது. ஒடுக்குமுறைக்குப் பொருளாதாரச் சுரண் டல் என்ற நோக்கம் முதன்மையானதுதான், ***'ஆயி னும் அது ஒடுக்குபவர்களின் தன்மான உணர்வை, அகத்தை அழித்துவிடுவதன்'*** மூலம் ***தன்னை நிலைநிறுத் திக் கொள்கிறது. ஒடுக்கு முறையாளர்கள் தாங்கள் மேலானவர்கள் என்பதை ஒடுக்கப்பட்டவர்களின் மனங் களிலேயே நிறுவிவிடுகிறார்கள்*** (இன்குலாப், நமது மானுடம் ப.2) என்கின்ற கூற்று, பெண் ஒடுக்கு முறைக்குப் பொருந்தும் எனலாம். பெண்கள் தாம் ஒடுக்கப்பட்டுள்ளோம் என்றே அறியாத நிலையில் உள்ளனர் அல்லது ஒடுக்கப்பட்ட நிலையை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றே கருதமுடிகிறது.

கவிஞர் தமிழச்சி தன் கவிதையில்,

முழுசாப் போர்த்திக்கிட்டா
மோசம் போகாதுல்லங்கிற
கனவான்களும்
ஆம்பளையோடு அந்த நேரம்
அங்க இங்க ஏன் போறங்கிற
அரசாங்கச் சீமான்களும்,
அண்ணேன்னு கூப்பிட்டிருந்தா
அபயம் கிடைச்சிருக்கும்லங்கிற
அரைலூசு ஆண்மக்களும்,
எம் பொண்ணாயிருந்தா
எரிச்சிப் புதைச்சிருப்பேங்கிற
மெத்தப்படிச்ச மேதாவிகளும்...
எட்டுத் திக்கும் சுத்தி வர
இப்ப,
நா எந்திருச்சி என்ன செய்ய?
இன்னும் உறங்குதியோ
என்றெழுப்பும் தோழிமாரே
மாறுமிந்த அவலம்
எனத்துடிக்கும் தோழன்மாரே
இப்ப,

நா எந்திருச்சி என்ன செய்ய? (அவளுக்கு வெயில் என்று பெயர், ப.101)

என வினா எழுப்பி இன்னும் உறங்குகிறீர்களே விரைவாக எழும்புங்கள் என்றெழுப்பும் ஆண்டாள் பாடலின் சாயலாகக் கொண்டு, இன்றைய பெண்ணிய அடிமைச்சூழலையும் பெண்ணிய அடிமைக் கருத்துக்களையும் கவிதையில் காட்டும் கவிஞர் உறங்கி எழுவதல்ல தீர்வு, உரிமையோடு எழுவதுதான் தீர்வு என்கிறார். மேலும்,

இருந்தாலும்
என் கையூன்றி நா
எந்திருச்சு உட்கார்ந்து
கோடாலிக் கொண்டை போட்டு
எழுதி வைப்பேன் இப்படி:
வெத்திலைக் காம்பைப் போல நீ
கிள்ளிக் கிள்ளிப் போடக்
கொல்லையிலே மண்புழுவா
நா மறுபடி மறுபடி பிறப்பெடுப்பேன்!
மலைதுளைக்க முயற்சிப்பேன்! (அவளுக்கு வெயில் என்று பெயர், ப.102)

என்று எச்சரிக்கை செய்யும் கவிஞர் பெண்களே கையூன்றி எழுவதைத் தவிர இந்த வறட்டுச் சமூகத்தில் எங்கேயும் இடமில்லை . அப்படி எழுந்தாலும் மலையைப் புரட்டுகிற அளவுக்கு வலுவோடு எழ வேண்டும் என்கிற சிந்தனையை முன்வைக்கிறார். இவ்வடிகள் அடிமைப்பட்டுக்கிடக்கும் பெண்ணுக்கு ஊக்கத்தைக் கொடுக்கக் காண்லாம்.

உத்திகளினூடாக எதிர்சிந்தனை

புதுக்கவிதையில் உத்தி சிறப்பான பங்கு வகிக்கிறது. எளிமையாக மட்டுமல்ல, நுட்பமாகச் சொல்வதற்கும் உத்திகள் தேவைப்படுகின்றன. ***வரலாற்றில் ஆளும் தரப்பான ஆண்வர்க்க இலக்கியத்தில், உத்திகள் இரசனையின்பாற்பட்டன. எதிர்மரபு இலக்கியத்தில், பாதுகாப்புக்கும் தாக்குதலுக்கும் பயன்பட்டன*** என்பார். ச. விஜயலட்சுமி (தமிழ்க்கவிதைகளில் பெண்ணுரிமை, ப. 257). .அவ்வகையில் எதிர்மரபைக் கொள்கையாகக் கொண்டு பாடும் கவிஞர் மற்றொரு கவிதையில்,

சேர்தலின் ஈரமும்
பிரிதலின் உக்கிரமும்
வெயிலும் வெயில் சார்ந்த
காதலுமே கரிசல் (அவளுக்கு வெயில் என்று பெயர், ப.89)

என்கிறார். இலக்கிய வடிவங்களில் கவிதையில் மட்டும்தான் மொழி தானும் ஒரு வடிவமாகக் கருக்கொள்ளும். அந்த அடிப்படையில், பிரிதல் உக்கிரமானதுதான். சேர்தலோ ஈரமானது. இப்படி, பெண் எழுத்துக்களால் மட்டுமே கொண்டாட்டத்தையும் போராட்டமாக மாற்றுகிற வெயிலும் வெயில் சார் காதலும் என்று சொல்லுகிற விடுதலை உணர்வைக் கொண்டு எழுதமுடியும். இரசனை அடிப்படையிலான கவிதை என்றாலும், இக்கவிதையில் வெளிப்படுகிற உத்தி பெண் அடிமைத்தனத்தை உணர்த்துவதோடு காதலின் நுட்பத்தையும் இக்கவிதையில் படிந்திருக்கிற வெயிலின் வெப்பத்தையும் வாசகர் உணருமாறு உணர்த்துகிறது.

பெண்களை உவமைகளால் புகழ்பாடும் இலக்கியங்கள் நிகழ்வில் நடக்கிற பெண்களுக்கெதிரான கொடுமைகளைக் காட்சிப்படுத்தத் தவறிவிடுகின்றன. அப்படியே காட்சிப்படுத்தினாலும் அது ஆண் எழுத்தாக இருக்கிற பட்சத்தில் தக்கசார்பு எடுத்துவிடுகிறது. தமிழச்சி தங்கபாண்டியன் கவிதைகளில் ஆண் என்கிற அதிகாரப் பிம்பத்தால் அல்லலுறும் எளிய குடும்பத்துப் பெண்களைக் காட்சிப்படுத்துவதின்வழி ஆண்டாண்டு கால அடிமைத்தனத்திற்கு எதிராக எதிர்க்கேள்வி கேட்பதோடு மட்டுமன்றித் தீர்வையும் முன்வைக்கிறார். அவர் கவிதைகளில் ஓர் அரசியல் தெளிவு மேலோங்கி நிற்கிறது. அந்த அரசியல் தெளிவை அவர் கவிதையடிகளைக் கொண்டே ***வெயிற்பிடாரி***யாக உருவெடுத்தது எனலாம்.

ருசி பார்த்த ஒரு சொட்டு
கொதி உணவின்
சுவையோடு ஒடுங்கும்
உணர்நரம்புகள்
ஆறிய மீதி உணவில்
பெண் நாவிற்கே முழுப்பங்கும் (அவளுக்கு வெயில் என்று பெயர், ப.120)

எனும் கவிதையில் சூடு ஆறிய உணவைக் கடைசியாக உண்ணும் குடும்பத்துப் பெண்களைக் கவிதையாக்கிச் சுவைமட்டும் கொதிச்சூட்டில் பார்க்கிற பெண் நாவுகள் என்றைக்குமே சுடச்சுட உட்கொண்டதில்லை; என்றைக்குமே சுடச்சுடப் பேசியதுமில்லை; உரிமை கோரியதுமில்லை என்பதை முன்வைக்கிறார் தமிழச்சி தங்கபாண்டியன்.

தொகுப்புரை

தமிழச்சியின் மனவோட்டம் சார்ந்து எழுப்பியுள்ள கேள்விகள் முடிவில்லாமல் நீள்கின்றன. தன் அடையாளத்தையும் இருப்பையும் இலக்கியச்சூழலில் தக்க வைத்துக்கொள்ளவும் போராடுகிற பெண் படைப்பாளிகள் தமது படைப்பின் வழியாகவும் போராட வேண்டும் என்கிற உண்மையைக் கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியனின் ***அவளுக்கு வெயில்*** உணர்த்துகிறது.

துணைநூற் பட்டியல்

இன்குலாப், நமது மானுடம், பயன் பதிப்பகம், சென்னை, மு.ப., 1985.

தமிழச்சி தங்கபாண்டியன், அவளுக்கு வெயில் என்று பெயர், உயிர்மை பதிப்பகம், சென்னை, மு.ப., 2015.

ராஜ் கௌதமன், அறம் அதிகாரம், விடியல் பதிப்பகம், கோயம்புத்தூர், மு.ப., 1997.

விஜயலட்சுமி, ச., தமிழ்க் கவிதைகளில் பெண்ணுரிமை, தி பார்க்கர், சென்னை, 2002.

வேங்கடராமன், க., எண்பதுகளில் தமிழ்ப்புனைகதைகளில் பெண்ணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1993.

திருக்குறளில் அரசனும் ஆட்சி முறைமையும்

மு. ஐஸ்வர்யா
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்) (Ref. 12641/Ph.D.k6/Tamil/Part Time/October 2017/ Date:18.09.2017), திரு.வி.க. அரசு கலைக்கல்லூரி, திருவாரூர் 610 003
முனைவர் சோ. குமரேசமூர்த்தி
ஆய்வு நெறியாளர், இணைப்பேராசிரியர் – முதல்வர் (பொ), அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேதாரண்யம் 614810 (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)
முனைவர் கு. சந்திரன்
இணை நெறியாளர், தமிழ் இணைப்பேராசிரியர், திரு.வி.க. அரசு கலைக்கல்லூரி, திருவாரூர் 610 003 (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச் சுருக்கம்

திருக்குறளில் உலகம் பின்பற்றத்தக்க வாழ்வியல் கூறுகள் மிகுதியாக உள. அரசு, குடும்பம் எனும் இரு வகைச் சமுதாய அமைப்புகளையும் அவற்றின் நல்ல, அல்லாத இயல்புகளையும் அது எடுத்துரைக்கிறது. தனி மனித மற்றும் சமூகம் சார் ஒழுக்க நெறிகளைக் காட்டும் உயர்ந்த படைப்பாக அது திகழ்கிறது. இத்தகு குறளில் அரசு மற்றும் அரசாட்சிமுறை, அரசனின் இலக்கணம், தனித் தன்மைகள், பண்பு நலன்கள், நிர்வாக முறைமை முதலியவற்றை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கருவிச்சொற்கள் (Keywords): அரசனின் பண்புநலன், அரசு, ஆட்சிமுறை, நிர்வாக முறை.

வள்ளுவர் காட்டும் அரசு

சமண, பௌத்தங்களின் மேலாண்மை மிக்க காலத்து வள்ளுவம் உருவாக்கமுற்றது. சமூகம் மற்றும் தனி மனித நடத்தைகளினால் சிதறுண்டுபோன சமுதாயத்தை *அறம்* என்ற ஒழுங்கமைவுக்குள் கட்டமைக்கும் காலச் சூழலில் அது எழுந்தது. இனக்குழுவின் அழிவும் அரசு எனும் நிறுவனத்தின் உதயமும் இக்காலத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. அரசு உருவாக்கத்தை, ***சங்க காலத்தில் மருதநில வாழ்க்கை, பிற நில வாழ்க்கைகளில் எல்லாம் செழிப்பு மிக்கதாயிருந்தது. இங்குக் குழுவாழ்க்கை அழிந்து அரசு தோன்றியது*** என நா. வானமாமலையை மேற்கோள் காட்டிக் கா.சுப்பிரமணியன் சுட்டுவதும் (ப.41) நோக்கத்தக்கது.

திருக்குறள் சங்ககாலத்தின் தொடர்ச்சியாக, அக்காலச் சமுதாய எச்சங்கள் தொடர்ந்த நிலையில் குறிப்பாக, மூவேந்தர் அரசின் எச்சங்களும் இனக்குழுச் சமுதாயத்தின் எச்சமாக இருந்து பொதுநல மனப்பான்மையைப் பேணிய சீறூர் மன்னர் சமுதாய இயல்புகளும் நிலவிய சமண பௌத்த மதங்களின் செல்வாக்கால்; இந்தியச்சிந்தனை மரபு தலைதூக்கத் தொடங்கிய ஒரு காலப்பகுதியாக உள்ளது. எனவே, திருக்குறளுக்குள் தமிழ்ச்சிந்தனை மரபின் தாக்கத்தையும் ஒரு சேரக் காணமுடிகிறது. இந்தப் பின்புலத்தில் திருக்குறள் அரசு, குடும்பம் எனும் இரு அலகுகளின் சிந்தனை மரபை முன்னிறுத்தியுள்ளது (ப.220) என்கிறார் பெ. மாதையன். எனவே, திருக்குறள் வலுவான அரசக் கட்டமைப்பும் நிர்வாக முறைமையும் தேவைப்படும் காலச்சூழலில் எழுதப்பட்டது என்பதை மேற்கண்ட கூற்றுகள் மூலமும் வள்ளுவத்தில் காணப்படும் அரசியல்சார் கருத்துக்கள் வாயிலாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது.

திருவள்ளுவர் அரசனுக்குரிய நற்பண்புகளையும் இலக்கண நெறிமுறைகளையும் இறைமாட்சி என்ற அதிகாரத்தில் விளக்கியுள்ளார். அதில் அரசனின் இலக்கணமாக நேர்மை, மன உறுதி, கொடை, ஊக்கம் போன்ற பலவற்றைக் குறிப்பிடுகின்றார். மேலும், பொருட்பாலின் அரசியல், அங்கவியல், ஒழிபியல் எனும் மூன்று இயல்களிலும் அரசன் மற்றும் அரசாங்கம் பற்றிய இயல்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இறைமாட்சி தொடங்கி இடுக்கண் அழியாமை ஈறாகவுள்ள அதிகாரங்களில் அரசனுக்கு இருக்க வேண்டிய நல்லியல்புகளும் இருக்கக் கூடாத அல்லியல்புகளும் எடுத்துரைக்கப்பட்டுள.

சமுதாயத்திலிருந்து தோன்றிய, சமுதாயத்திற்கு மேலாகத் தன்னை உயர்த்தி வைத்துக்கொண்டு, சமுதாயத்திலிருந்து மேலும் தன்னை வேறாகப் பிரித்துக்கொண்டு செல்லும் இந்தச்சக்தியே அரசு என எங்கெல்சும் (குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், ப.264) குறிப்பிடுவதுபோல் சமுதாயத்திற்கு மேலாகத் தன்னை உயர்த்தி வைத்துக்கொண்ட அரசு அதன் தலைவனான அரசனை எல்லாம் வல்லவனாய்க் காட்டிக்கொண்டது. வள்ளுவரும் இறைமாட்சியின் முதற்குறளில், ***படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்/உடையான் அரசருளேறு (குறள்.381)*** என அரசனின் பண்பைக் குறிக்கிறது. கா. சிவத்தம்பியும் ***அடிப்படையில் வள்ளுவருடைய அரசு என்பது அமைப்பாக உருவான ஒரு நிறுவனமன்று. மாறாக ஆட்சியாளன் என்னும் தனிமனிதனில் நிலைபெற்றிருக்கும் ஒன்றாகும்*** என்பார்(பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி,ப.65). எனவே தனிமனிதன் சார்ந்த இயல்புகளோடு அரசனின் நேர்மை, மன உறுதி, கொடை, ஊக்கம் போன்ற பலவற்றைத் தெளிவாக விளக்குகிறார்.

ஆட்சிசெய்யும் முறையினைக் கூறும்போது, ***அறன் இழுக்காதுஅல்லவைநீக்கி மறனிழுக்கா/மானம் உடையது அரசு (குறள்:384)*** என்று தெளிவுறுத்துகின்றார்.

அரசனின் பண்பு

மனிதனின் உயர்பண்பு என்பது அவனைச் சமுதாயத்தில் தனித்தன்மை பெற உதவுவது. ஒவ்வொரு மனிதனிடமும் நன்மை-தீமைப் பண்புகள் நிறைந்துள்ளன. உயர்வான எண்ணங்கள் ஒருவனை வாழ்வின் உயர் நிலைக்கு இட்டுச்செல்கின்றது. வள்ளுவரும் அரசனின் பண்பு நலன்களையும் அவன் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதையும் தெளிவாக விளக்குகிறார்.

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவற்கு (குறள்:384) என்று அரசனுக்கு வேண்டிய நீங்காப் பண்பினைக் கூறுகிறார். மேலும் அரசன் காட்சிக்கு எளியவனாகவும், கடுஞ் சொற்களைப் பேசாதவனாகவும், மக்களுக்கு வரையாது கொடுப்பவனாகவும், மக்கள்மேல் கருணை உடையவனாகவும், மக்களை எக்குறையுமின்றிக் காத்து வழி நடத்துபவனாகவும் இருப்பவனே சிறந்த அரசனாவான் என்கின்றார்.

அரசனுக்குரிய இயல்புகளை இயற்றல், ஈட்டல், காத்தல், காத்த வகுத்தல் எனும் நால்வகையாக வெளிப்படுத்துகின்றார் (385). ஈகை (382), கொடை (390) என்பன அரசனின் பண்புகளாகக் கூறப்பட்டுள்ளன. நாடாளும் அரசன் சிறந்த அறிவுத்திறன் உடையவனாக இருத்தல் வேண்டும். அறிவுத்திறன் கல்வி, கேள்வி, ஒழுக்கம், சிறந்த செயல்திறன் போன்ற நற்பண்புகளைக் கொண்டவனாய் இருத்தல் வேண்டும்.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு (குறள்:424) என அறிவுத்திறனின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதோடு ***நிலத்தியல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு/ இனத்தியல்ப தாகும் அறிவு (குறள்:452)*** எனவும் அறிவுத்திறனின் வலிமையையும் விளக்கியுள்ளார்.

வள்ளுவர் காட்டும் நிர்வாகத்திறன்

நாடு பற்றிய சிந்தனைகளை வள்ளுவர் சுருக்கமாகவும் செறிவாகவும் உரைத்துள்ளார். நாடு எனும் அதிகாரத்தில் பெரும்பான்மையும் நாட்டின் வளமே பேசப்பட்டுள்ளது. குறிப்பாக வேளாண்வளமே உரைக்கப்பட்டுள்ளது (குறள்:731,732,734,738,739).பசியில்லா நாடு(734)என்பது விளைவு சார்ந்தே கூறப்படுகின்றது. உறுபசி என்பதற்கு, ***உழவருடைமையானும் ஆற்ற விளைதலானும் சேராதாயிற்று (திருக்குறள், ப.228)*** என உழவின்மேல் வைத்தே உரைவிளக்கம் தந்துள்ளார். வறுமை இல்லாத நாடாக இருக்கவேண்டும் என்பதை,

தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருந் சேர்வது நாடு
உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு
கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டில் தலை என்ற குறட்பாக்கள்வழி வெளிப்படுத்துகிறார். இவற்றில் தள்ளா விளையுள், உறுபசியும் ஓவாப்பிணியும், கேடறியா நாடு, கெட்டாலும் வளங்குன்றா வாழ்வு படைத்ததாக வேண்டும் என்கின்றார்.

வள்ளுவர் அமைச்சு, தூது, ஒற்று, உல்கு எனப்படும் பல்வேறுபட்ட அரசியல்சார் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். ***அரசவருவாய், வரிமுறை, நீதி, நிர்வாகம், இராஜதந்திரம், சூழ்ச்சி, போர் தந்திர உபாயங்கள், அரசுப் பணி, பயிற்சி, தேர்வுமுறை...*** பற்றிய ***வள்ளுவரின் கருத்துக்கள் வியக்கத்தக்க நவீனத்தன்மை கொண்டவை. இந்த 'அறிவு' தொல்தமிழர் காலத்து அரசியல் அறிவினும் பார்க்க வளர்ச்சி பெற்றதாக உள்ளது (ராஜ் கௌதமன், ப.285)*** எனக் கூறுவதுபோல வளர்ச்சியுற்ற ஓர் அரசாங்கத்தை வள்ளுவர் உருவாக்க எண்ணியுள்ளார். குன்றாத வளமும், குறைவிலாச் செல்வமும், நிறைந்த இன்பமும் உடைய நாடாக அமைதல் வேண்டும் என்ற நோக்கத்தை,

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாடா வளம்தரு நாடு (குறள்:739)
பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கு இவ்வைந்து. (குறள்:738) என்ற குறட்பாக்கள் உணர்த்துகின்றன. அரச நிர்வாகப் பணிகளில் பொருளீட்டல் என்பது முக்கியமான ஒன்றாகும்.
இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு எனச் செல்வம் இயற்றப்படலும், இயற்றியவை பயன்தரும் வழியில் வகுக்கப்பட வேண்டும் என்பதை வள்ளுவர் சுட்டுகிறார். அதனால் தான் வள்ளுவர் ***பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை*** என்கிறார். வரிபெருக்கி நாட்டை வளப்படுத்த வேண்டும் (512) என்கிறார். *பொருள் செயல்வகை* அதிகாரம் கூழ் பற்றிக் கூறுகிறது. இதில் கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கொடுங்கோன்மை பற்றியும் (554) குறிப்பிடுகின்றார். தீதின்றி வந்த பொருள் (754), அருளோடும் அன்போடும் வாராப் பொருள் (755), பொருள் அருளெனும் அன்பீன் குழவி (757), பகைவர் செருக்கறுக்கும்பொருள்(759)என்பன பொருள் பற்றிய அவர் கருத்தாகும். பல்குழு, பாழ் செயும் உட்பகை, வேந்தலைக்கும் கொல் குறும்பு (735) என்பனவற்றையும் அவர் கூறுகிறார். ஒழிபியல் எனும் பகுதி அரசின் குடி பற்றிப் பேசுகிறது. குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நன்றியில் செல்வம், நாணுடைமை, குடிசெயல்வகை, உழவு, நல்குரவு, இரவச்சம், கயமை என்பன பேசப்பட்டுள்ளன. உழவரே உலகத்தவர்க்கு அச்சாணி (1032), ஏர்ப்பின்னது உலகம் (1031) உழுதுண்டு வாழ்பவரே வாழ்பவர் பிறர் அவர் பின் செல்பவர்(1033) என்றெல்லாம் கூறியுளதோடு உழவர் பல மன்னர்களின் குடை நிழலும் குறிப்பிட்ட அரசர் ஆட்சியின் கீழ்த்தங்கக் காரணமானவர் (1034) என உழவின் வழிப்பட்டதாய், உழவால் உயர்வதாய்

ISSN 2320-4842

அரசு காட்டப்பட்டுள்ளது.

வள்ளுவர் ஒரு புதிய அரசியல் அமைப்பையோ, பொருளாதார அமைப்பையோ உருவாக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. அன்றிலிருந்தது முடியாட்சி அதன் அடிப்படையில் அமைந்த பொருளாதாரம் அன்றைய தமிழ் வாழ்வின்அடிப்படையில் அமைந்த சமுதாய வாழ்வு இவற்றை வைத்துக்கொண்டு, பெரும்பான்மையும் தனிமனிதனுக்கு வாழ்வியல் வகுக்கின்றார். அந்தத் தனிமனிதன் குடும்பத்தின் தலைவனாக, ஒரு நாட்டின் குடிமகனாக, சமுதாயத்தின் ஓர் உறுப்பாக, தந்தையாக, மகனாக, இல்வாழ்வானாக, துறவியாக, அமைச்சனாக, அரசனாக, இன்னும் அவன் ஏற்கும் பல பொறுப்புகளிலும் அவனை வைத்து அரசியலமைப்பும், பொருளாதார அமைப்பும் எதுவாயினும், எப்படி மாறினும் பேரளவிற்குப் பொருந்தத் தக்க ஒரு வாழ்வியலை உருவாக்குகின்றார் (வா.செ.குழந்தைசாமி, வாழும் வள்ளுவம், ப.95) என்ற கருத்தியலை வெளிப்படுத்தும் வண்ணம் வள்ளுவம் திகழ்வதைக் காணமுடிகிறது. தனிமனித வாழ்வாயினும் அரசியல் வாழ்வாயினும் நெறியோடு வாழ வேண்டும் என்பதே வள்ளுவரின் இலக்காக அமைகின்றது.

முடிவுரை

சங்க மருவிய காலச் சூழலில் உருவான திருக்குறள் அக்காலச் சமுதாயச் சூழலை வெளிப்படுத்தும் வண்ணம்உள்ளது. குறிப்பாக, அக்காலத்தின் அரசும் அரசு நிர்வாக முறையும் எவ்வாறு இருந்தன, எவ்வாறு இருக்க வேண்டுமென்ற சிந்தனையை வள்ளுவம் சுட்டுகிறது. வள்ளுவர் காண விரும்பும் அரசு மக்களின் எண்ண வெளிப்பாட்டை நிவர்த்திசெய்யும் நிறுவனமாக இருக்க வேண்டும்; இவ்வரசு பண்டைய அரசுகளிலிருந்து வேறுபட்டதாய், வளர்ச்சி நோக்கிய அரசாய், ***அறனிழுக்கா அல்லவை நீக்கி மறனிழுக்கா மானம் உடைய அரசாக*** இருக்கவேண்டும் என்பது குறட்பாக்கள்வழி வெளிப்படுவதைக் காண முடிகின்றது..

துணைநூற் பட்டியல்

ஃபிரடெரிக் எங்கெல்ஸ், குடும்பம் தனிச்சொத்து அரசு அகியவற்றின் தோற்றம், நியூ செஞ்சுரி புக்கவுஸ், சென்னை, 2011.

கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத்தமிழ்ச்சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி, மக்கள் வெளியீடு, சென்னை, 2003.

சுப்பிரமணியன், கா., சங்ககாலச் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் கவுஸ், சென்னை, 2011.

சுப்பிரமனியன், ச.வே., பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.

மாதையன், பெ., தமிழ்ச் செவ்வியல் படைப்புகள்: கவிதையியல், சமுதாயவியல் நோக்கு, நியூ செஞ்சுரி புக் கவுஸ், சென்னை, 2009.

ராஜ் கௌதமன், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், தமிழினி, சென்னை, 2006.

75ஆம் பக்கத் தொடர்ச்சி

அவன் ஏன் நாணுகிறான் கதை கல்லூரி மாணவர்கள் முதலில் பண்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஒவ்வொரு மனிதரிடமும் இரக்கம் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தப் *பிச்சைக்காரன்* பாத்திரம் *கறிவேப்பிலை* கதையில் புனையப்பட்டுள்ளது. இக்கதை ஆசிரியரின் 19ஆம் அகவையில் வெளிவந்து அவருடைய ஆசிரியர் முப்பால்மணியால் பாராட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் சூரியன் தோன்றி மறைவது இயல்பு. இந்த இயற்கை நியதியைப் பொருளாதாரமின்றி இன்னல்களுக்கு ஆளாகித் துயரப்படும் மாரப்பன் பாத்திரம் *சூரியாஸ்தமனம்* கதையில் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. இது ஒரு சமூகக் குறைபாடு என்பது வெளிப்படுகிறது. *நேசம்* கதையில் பாலு கதைப்பாத்திரம் மனைவி மீனாவுக்கு மனிதத்தன்மையின் இயல்பு நளினமாகப் புரியவைக்கும் பண்பும் ஆசிரியரின் சமூகச் சிந்தனைத் திறமும் வெளிப்படுகின்றன. மேற்படி ஐந்து கதைகளும் ஒரே சீரான அளவில் 5 பக்கங்களில் அடங்கிச் சிறுகதை இலக்கணம் பின்பற்றப்பட்டுள்ள பான்மை பாராட்டத்தக்கது.

துணைநின்ற நூல்கள்

இராமலிங்கம், மா., *விடுதலைக்குமுன் புதிய தமிழ்ச் சிறுகதைகள்*, முத்தமிழப் பாசறை, திருச்சி, 2 ஆம் பதிப்பு, 2001.

கைலாசபதி, க., *இலக்கியமும் திறனாய்வும்.* நாகர்கோவில்: காலச்சுவடி பப்ளிகேஷன்ஸ், மு.ப.2021

சிவத்தம்பி, கா., *தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் (கட்டுரைத் தொகுதி).* சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், 3 ஆம் பதிப்பு, 1980.

சுந்தர சண்முகார், *இயல் தமிழ் இன்பம்.* புதுச்சேரி: புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், 1992.

செந்தமிழ்ச்செல்வி, தி., *மணிக்கொடி சிறுகதைகளில் மகளிர்.* சென்னை: குடியரசி பதிப்பகம், மு.ப., 2001.

தி.வெ.ரா. (தி.வெ.இராசேந்திரன்), ''முன்னுரை'', *மானுடம் வென்றதம்மா (50 சிறுகதைகளின் தொகுப்பியம்)*, சென்னை: அருணா பப்ளிகேஷன்ஸ், 2022.

திரிகூடசுந்தரம், பொ., "முன்னுரை" (பக்.iii-vii). நாமக்கல் கவிஞர்வெ.இராமலிங்கம் பிள்ளை, *இலக்கிய இன்பம்* (1964). சென்னை: பழநியப்பா பிரதர்ஸ், முதற் பதிப்பு 1947.

திருவள்ளுவர். *திருக்குறள் (மூலமும் பரிமேலழகருரையும்).* வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார் ஆராய்ச்சி குறிப்புரை, சென்னை: உமா பதிப்பகம், 2009.

பிச்சமுத்து, ந., *திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும்*, சென்னை: சக்தி வெளியீடு, 6 ஆம் பதிப்பு, 2006.

பொற்கோ, *ஆராய்ச்சி நெறிமுறைகள்*, சென்னை:ஐந்திணைப் பதிப்பகம், 7 ஆம் பதிப்பு, 2016.

மாணிக்கம், அ. (உ.ஆ.). *நன்னூல் காண்டிகையுரை.* நூ.13. சென்னை: பூம்புகார் பதிப்பகம், 6 ஆம் பதிப்பு 2015.

முத்துராசன், கு., இலக்கியக் கொள்கைகளும் இலக்கியத் திறனாய்வும். சேலம்: தேன்தமிழ்ப் பதிப்பகம், 1983.

வரதராசன், மு., இலக்கிய மரபு (1960). சென்னை: பாரி நிலையம், மறுபதிப்பு 2006.

வையாபுரிப்பிள்ளை, எஸ்., (ப.ஆ.). *தமிழ்ப் பேரகராதி*, தொகுதி-1.சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம், மறுபதிப்பு 1982.

ISSN 2320-4842

குறுந்தொகையில் தலைமை மாந்தர்களின் சிறப்பு

ஆ. கவிதா
முனைவர் பட்ட ஆய்வாளர் (Ref. 006068/Ph.D.K8/Tamil/FT(2-4)/July-2019/Confirm. Date: 25.05.2003),தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை மாவட்டம் (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

முனைவர் பெரி. அழகம்மை
உதவிப் பேராசிரியர் – ஆய்வு நெறியாளர், தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை மாவட்டம் (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச்சுருக்கம்

பண்டைத் தமிழர்கள் காதலையும் வீரத்தையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்துவந்தனர். அவர்களது வாழ்க்கை முறை, அறிவு முதலியவற்றை இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. வாழ்வினை வரையறைப்படுத்தி வாழ்ந்த சமூகம் தமிழ்ச் சமூகம். இச்சமூகத்தில் மக்களின் வாழ்க்கை நெறிகள், இலக்கியங்களின் சிறப்பு ஆகியவை குறித்து இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

கருவிச்சொற்கள் (Keywords): அகமாந்தர் நெறி, அகவாழ்க்கை நெறி, களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை, தலைமை மாந்தர், மனிதநேயம்.

முன்னுரை

பண்டையத் தமிழரின் அகவாழ்க்கை நெறிகள்

தமிழ் எனும் சொல்லே அகம் எனவும் பொருள்படும். அதனுள்ளும் காதற்களவையே குறிப்பதாக 'அகம்' என்ற சொல் குறிக்கும். *ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்குப் பாடியது* எனும் அடிக்குறிப்புடைய குறிஞ்சிப்பாட்டுக்குக் களவே பாடுபொருள். அகம், புறம் எனும் திணைப் பகுப்புஉலகில் எம்மொழியிலும் இல்லை.

உலகமெங்கும் காதற்பாடல்கள் காற்றைப்போல உலவிக்கொண்டுதான் இருக்கின்றன. பனி உறைந்து கிடக்கும் எஸ்கிமோக்களின் வாழ்விடத்திலும் அரேபியப் பாலைவனத்திலும் முத்தத்தின் ஓசை கேட்காமல் இல்லை. ***காதல் அடைவது உயிரியற்கை*** என்றான் பாவேந்தன். ஆனால் இக்காதற்பாடல்கள் வேறு, சங்க அகப்பாடல்கள் வேறு.

நெடுநிலந் தன்னை உடைமை செய்யினும்
விரிகடற் பரப்பை உரிமை யாக்கினும்
ஆகாய மீன்கள் அத்தனையும் பெறினும்
அமையாது நெஞ்சம் அடங்காது பேராவல்
இன்னும் இன்னும் என்றுதான் கேட்பேன்
அன்புக்குறியவளே!
உன்னை நான் அடைந்து விட்டால்
எங்கோ ஒருசில மூலை என்றாலும் அது போதுமென்பேன் (சி.எஸ்.தேவ்நாத் (மொ.பெ.), *தாகூரின் சிறந்த கவிதைகள்*, ப.95). இது தாகூரின் கவிதை. தலைவனின் காதல் நெஞ்சுப் பிழிவு இது. உலகம், வானம், மீன்கள் அனைத்தையும் உடைமையாக்கினும், அதனைப் பெரிதாகக் கருதாத உள்ளம் இங்கே வெளிப்படுகிறது. ஒரு குறுந்தொகைப் பாட்டு இங்குக் காணற்குரியது.

விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிதுபெரு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டும் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போல் உண்கண் பொன்போல் மேனி
மாணவரி அல்குல் குறுமகள்
தோள்மாறு படூஉம் வைகலோ டெமக்கே *(குறுந். ப.101)*
கடல் சூழ் உலகமும், உயர்ந்த வானமும் தலைவியோடு இன்பமாக வாழும் ஒருநாள் வாழ்க்கைக்கு ஈடாகாது. இவ்வுலகு தரும் இன்பம், வான உலகம் தரும் இன்பம் இரண்டையும் ஒருங்கு வைத்து நோக்கினும் தலைவியோடு வாழும் ஒருநாளிற் பெறும் இன்பத்திற்கு ஈடாகாது என்பது குறுந்தொகைப்பாட்டு.

அகவாழ்க்கை நெறியில் சிறந்து விளங்கியவர்கள் தமிழர்கள். எத்தனை இன்பம் பூமியில் வாய்க்கப் பெற்றாலும் தலைவன் தலைவியால் பெறும் இன்பமும் இவ்வுலகில் மிகப்பெரியது. இதனை,

ISSN 2320-4842

நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே (*குறுந். ப.3*)

என்ற பாடல் மலைப்பக்கத்திலுள்ள கரிய கொம்பு களை உடைய குறிஞ்சி மரத்து மலர்களைக் கொண்டு பெரிய தேன் வண்டுகள் செய்தற்கு இடமாகிய, நாட னொடு நட்பானது பூமியைக் காட்டிலும் அகலம் உடை யது. வானைக் காட்டிலும் உயர்ந்தது. நீரினும் அளத் தற்கரிய ஆழம் உடையது எனத் தலைவி காதலின் பெருமையைச் சிறப்பித்துக் கூறுகிறாள்.

தமிழர்களின் தொன்மை இலக்கணமாகிய தொல்காப் பியம் எழுத்து, சொல், பொருள் எனும் மூன்று பகுதி களாக இலக்கணத்தைப் பிரித்துப் பேசுகிறது. மூன்றா வதாகிய பொருளதிகாரம் மனித வாழ்க்கை எப்படி இலக்கியமாகப் படைக்கப்பட வேண்டும் என்பதை வரை யறுத்துக் காட்டுகிறது. வாழ்வின் அகப்பகுதியும் புறப் பகுதியும் இணைந்த ஒட்டுமொத்தமான மனித வாழ்க் கையும் எப்படி அமையவேண்டும் என்பதை நேரிடை யாகவும் குறிப்பாகவும் வகுத்துரைக்கிறது தொல்காப் பியம்.

அகவாழ்வு

அறிவு,ஆற்றலில் சிறந்து விளங்கிய தமிழர்கள் மனித வாழ்க்கையினை முறைமைப்படுத்தியதில் உலகிற்கே எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தனர். அத்தகைய அறிவு நுட்பம் நிறை பண்டைத் தமிழர்கள் அகவாழ்வைக் களவு, கற்பு என இரண்டாகப் பகுத்தனர்.

களவு வாழ்க்கை

களவு வாழ்க்கை என்பது தலைவனுக்கும், தலைவிக் கும் திருமணத்திற்கு முன்னதாக உள்ள காதல் வாழ் வைக் கூறுவதாகும். அதாவது ஒருவனும் ஒருத்தியும் காதல் கொள்ளும் இன்பம் அவர்கள் உள்ளத்தில் மறைவாக நுகரப்படுவதாகும்.

புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமலம் மலர்ந்து ஒரு கற்பகத்தின்
அயலே பசும் பொற் கொடிநின்ற கால் வெள்ளை
அன்னம் செந்நெல்
வயலே கடம் பொய்கை கழ்தஞ்சை வாணன் மலையத்திலே
(*தஞ்சைவாணன்கோவை*) என்ற பாடல் தலைவியைக் கண்ட தலைவனின் உளத்து எழும் காதலுணர்வை வெளிப்படுத்துகிறது.

கற்பு வாழ்க்கை

திருமணமானபின் நிகழும் இல்லற வாழ்வு கற்பியல் எனப்படும். இனிய இல்லற வாழ்வின் சிறப்பும் கட மையும் பயனும் கட்டமைப்புடையன. இக்குடும்பக் கட்டமைப்பில் பொருள் தேடல் முதலிய பிரிவுகள் இன்றியமையாதனவாகும்.

பொற்பமை சிறப்பின் கற்பெனப்படுவது
மகிழ்வும் ஊடலும் ஊடலுணர்த்தலும்
பிரிவும் பிறவும் மருவிய தாகும் (*தமிழண்ணல் உரை, நம்பியகப் பொருள், நூ.200*)

கற்பு வாழ்க்கை சிறப்புடையது. (பொற்பு-பொலிவு) இதில் மகிழ்ச்சியும் தலைவன் பிரிவால் தலைவி ஊடு தலும், தலைவன் அவளது ஊடலை தணிவித்தலும் (ஊடலுணர்த்தல்) பிரிவுகளும் பிறவும் பொருந்தி யதே இல்லறக் கற்பு வாழ்வதாகும்.

இலக்கியங்களின் சிறப்பு

அகம், புறம் எனும் இரண்டும் ஒற்றுமையைக் காட் டிலும் அகத்திணையே சிறப்புடையதாகக் கருதப்பட் டன என்று புலனாகின்றது. புறத்திணைப் பொருளான வீரம் மக்களுள் சிலருக்கே உரியது. அகத்திணைப் பொருளான மிகை அன்போ ஆண், பெண் என்றும் பிரிவமைந்த உயர்திணை, அஃறிணை உயிர்கெல் லாம் பொதுவானது.

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம்மே வற்றாகும்

இன்பம் என்பது உலக உயிர்கள் அனைத்திற்கும் பொருந்தி வரும் விருப்பமுமையாக தொல்காப்பியர் சுட்டியுள்ளார். சங்கப் பாடல்கள் மொத்தம் 2381 புறத்திணைப் பாடல்கள் 519. புறத்திணைப் பாடல் களை காட்டிலும் அகத்திணைப் பாடல்கள் மிகுதி. தொல்காப்பியர் புறத்திணைக்கு ஓர் இயலை மட்டுமே ஒதுக்கி அகப்பொருளுக்கு அகத்திணையில் களவி யல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் எனப் பல இயல்களை ஒதுக்கியுள்ளார். இதன் மூலமும் அகத்திணையின் சிறப்பை உணரமுடிகிறது.

இலக்கியங்களில் மனிதநேயம்

அக இலக்கியங்கள் வெறும் காதலை மட்டும் பாட வில்லை. மனிதர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என் பதையும் சிறப்பாகக் கூறுகின்றன. இப்பிறவியிலேயே இன்பமடையவும் மறுமைக்கான நல்லறங்களைச் செய் வதற்கும் செல்வமே சிறந்த துணையாகும். ஆகை யால் பொருளீட்டும் முயற்சியிலே ஒவ்வொரு ஆட வனும் ஈடுபடவேண்டும். இது பழந்தமிழர் கொள்கை.

அரிதாய் அறன் எய்தி அருளியோர்க் களித்தலும்
பெரியதாய பகைவென்று வேராளனைத் தெறுலும்
புரிவு அமர் காதலன் புணர்ச்சியும் தரும் (*கலித்.11*)

பொருளே சிறந்த அறத்தை அடையச் செய்யும் அரு ளுடையோர்க்கு அளிக்கும்படி செய்யும் தனது எதிரிகளை அழிக்கச் செய்யும். அன்பு நிறைந்த காத லுடன் இல்லற வாழ்க்கையிலே இன்புற்று வாழவும் செய்யும் என்று செல்வத்தை சேர்த்து அதனை எவ் வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை இவ்விலக் கியம் மிக சிறப்பாக எடுத்தியம்புகிறது.

அகத்திணை வகுத்த முறைமை

சங்கத் தமிழர்தம் அகவாழ்க்கையில் இருவகை ஒழு கலாறுகளை இருந்தன. அவை, 1. களவொழுக்கம், 2. கற்பொழுக்கம். இவ்விருவகை ஒழுக்கத்துக்குப் பொதுவாகவும் அவற்றுக்குத் துணையாகவும் அமை

யும் இரு துணைநெறிகள்: 1. உடன்போக்கு, 2. அறத் தொடு நிற்றல்.

தலைவனும் தலைவியும் பிறர் அறியாதவாறு தனிமையில் சந்தித்துக் கூடும் ஒழுக்கம் களவு ஆகும். இதுவே கற்பாக மாறுகிறது. களவு கற்பாக மாறத் தலைவன் நன்மகனாக ஒழுக்கநெறி தவறாதவனாக இருக்க வேண்டும். தாமே பிறர் அறியாதவாறு துணையைத் தேடிக் கொளின் மனமே அவர்கள் மணத்திற்குச் சான்றாகும்.

களவுப் புணர்ச்சி

இயற்கை புணர்ச்சி இடந்தலைப் பாடு
பாஸ்கள் கூட்டம் பாஸ்தியிற் கூட்டம் என்று
உணர்த்திய களவிற் புணர்ச்சி றால் வகைந்தே (*அகப் பொருள் விளக்கம், நூ.27, ப.25*) எனக் களவொழுக்கம் நால்வகைப்படும். இந்த நான்கு கூட்டங்களுக்குப் பிறகு கற்பு வாழ்வில் தலைவனும் தலைவியும் ஈடுபட வேண்டும். இதுவே களவு நெறியாகப் பண்டு மக்கள் பின்பற்றினர்.

கற்பொழுக்கம்

கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை என்கிறது கொன்றை வேந்தன். கற்பே பெண்களுக்கு முடிமணி போன்றது. இதனை வள்ளுவர்,

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின் (*குறள்.54*)
களவொழுக்கத்தோடு வாழ்க்கை முடிவதில்லை. கற்பு மணத்தில்தான் அது தொடங்குகிறது. அவர்கள் கணவன் மனைவி என்பதை ஊர் உலகிற்கு அறிவிப்பது கற்பு மணந்தான். இதனைத் தொல்காப்பிய காலத்திலேயே தமிழகத்தில் திருமணச் சடங்குகள் தோன்றிவிட்டன என்பதை அறியமுடிகிறது.

கற்பெனப்படுவது கரணமொடு புணரத்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுமே (*தொல். பொருள். கற்பு., நூ.1*)

அகமாந்தர் நெறி

அகம் என்பது அகப்பொருள் தலைவர்கள் வாழும் இல்லம். முன்றில் நுழைவாயில் புழைக் கடை எனும் வாயில்கள் இல்லத்துக்கு இருப்பதுபோல அகத்திணைத் தலைவர்களாகிய தலைவன் தலைவியரின் அகமாம் உள்ளங்கள் ஒன்றி நிலையாக நுழைந்திருப்பதற்கு வாயில்களாகச் சிலர் இருப்பர். அவர்கள், 1. தோழி, 2. தாய், செவிலி, பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர் அறிவிர், காண்டோர் ஆகியோர் களவு வாழ்விலும் கற்பு வாழ்விலும் தலைவன் தலைவி ஆகியோரின் வாழ்வு சிறத்தற்கு இவ்வாயில்களே தூண்டுகோலாய் நிற்பர். அகத்துறையில் இடம்பெறுவதால் அகமாந்தர் என அழைக்கப்பட்டனர்.

அகப்பாடலின் உளவியல் நிலை

உளவியல் என்பது மனதின் செயல்பாடுகள் மற்றும் நடத்தைகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்யும் கற்கை மற்றும் பயன்பாட்டு ஒழுங்கு முறையாகும். உளவியலின் அடிப்படை ஆய்வு என்பது உள்ளுணர்வு, அறியும் ஆற்றல், கவனம், மன உணர்வு அல்லுத உணர்ச்சி வேகம், இயல்பு ஊக்கம் ஆளுமை நடத்தை, உள்ளார்ந்த தொடர்புகள் ஆகியவை கொண்டதாகும். சங்கப்பாடல்கள் அமைப்பாலும், நடையாலும், உரையாடலாலும், தன்மையாலும், கருத்தமைதியாலும், நிகழ்ச்சிப் பின்னலாலும் உளவியல் அடிப்படையை ஒத்து நிற்பவையாகும்.

அகமாந்தர் உறவு மேம்பாடு

அகமாந்தர்கள் உறவு மேம்பாடு என்பது அன்புவழியில் அமைந்துள்ளதைச் சங்கப்பாடல்களின்வழி அறிய முடிகிறது. உறவு நிலைகளாக, தலைவன்-தலைவி, தலைவன்-தோழி, தோழி-தலைவி, தலைவி-செவிலி, செவிலி-நற்றாய், நற்றாய்-தலைவி, தலைவன்-பாங்கன், தலைவன்-பாமணர் என்ற வகையில் இடம்பெறும் அனைத்து உறவுகளையும் ஆராய்வது மிகப் பெரிய ஆய்வாகும். எனவே எடுததுக்காட்டாய்த் தலைவன்-தலைவி அன்பு நிலையை இப்பகுதி எடுத்துக்காட்டுகிறது.

தலைவனும், தலைவியும் ஒருவரை ஒருவர் கண்டு காதலுற்றுக் களவொழுக்கம் புரிந்து, பின் மணஞ் செய்துகொள்வது சங்ககால மக்கள் இயல்பு வாழ்க்கையாக இருந்தது. சங்க இலக்கியங்களும் தலைவன் தலைவியரது பிள்ளைப் பருவம் பற்றியோ அவர்களின் தாய் தந்தை யார் என்றோ குறிப்பிடவில்லை. மாறாக, தமிழர்களின் குடும்ப வாழ்வையும், குடும்பத்தில் அவர்கள் மேற்கொண்டொழுகிய அறச் செயல் பற்றியும் கூறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

தலைவன்-தலைவி

மனதால் ஒன்றுபட்டு வாழ்க்கை எனும் தேரில் பயணிக்கும் தலைவன் தலைவியரில் தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தையிடம் செல்வது இயல்பாக இருந்தது. அதாவது உணவருந்தோர் இனிப்பையே மிகுதியாகத் தின்றால் திகட்டும். சுவை மாற்றத்திற்காக இடையில் சிறிது காரம் உட்கொள்வதுபோல் தலைவனின் பரத்தையர் ஒழுக்கம் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் தலைவி அவ்வாறின்றித் தலைவனையே நினைத்துக்கொண்டு அவன் வருமளவும் ஆற்றியிருப்பாள்.

மனித மனம் மட்டுமன்றி உலகின் எல்லா உயிர்களும் இன்பத்தையே நாடுகின்றன என்பது தொல்காப்பியத்தின் கருத்து.

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும் (*தொல். பொருள். 1169*)
மனிதன் இன்ப நுகர்ச்சியைப் பெறுவதற்கு இயற்கை ஐம்புலன்களை அவனுக்கு அருளியுள்ளது. ஐம்புலன்

நுகர்ச்சியில் ஒன்று குறைவுபட்டாலும் அவனது இன்ப நுகர்வு குறையுடையதாகவே இருக்கும். ஐம்புலன் களின் மூலமாகவும் பெறும் இன்பத்தைக் குறைவற அனுபவமாகவே இந்த மனித மனம் இடையீடின்றிப் பாடுபடுகிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்களும் தனித்தனியே தரக்கூடிய இன்பத்தை ஒருசேரத் தரக்கூடிய சக்தி பெண்ணிடமே உள்ளது என்பதை,

கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள *(குறள்.1101)* என்னும் குறள்வழிப் புலப்படுத்துகிறார் வள்ளுவனார். மேலும் உலகத்து இன்பத்தையெல்லாம் மாயம் என்று வெறுத் தொதுக்கிய இன்பம் கொட்டிக்கிடக்கும் இடம் இவ்வுல கம் என்று அவர்களை எண்ணவைத்து, அதே மாய உலகத்துக்கு அவர்களைத் திருப்பும் வல்லமை பிள்ளை மொழிக் குழறக்கிள்ளை கீழும் பிழற்றும் ஒரு பெண் ணின் குயிற்குரலுக்கு மட்டுமே உண்டு. அத்தகைய பெண்ணானவள் தலைவன் செய்யும் சிறுசிறு தவறு களையும் ஏற்றுக்கொண்டு, அவனுடன் இல்லறம் நடத் தித் தன் வாழ்வில் இன்பமுறுகிறாள். தலைவனைக் கடிந்தும், கனிவாய்ப் பேசியும் அவனை நல்வழிப் படுத்தித் தன் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறாள்.

முடிபுகள்

பண்டைத் தமிழர்கள் வாழ்வினை 1. அகவாழ்வு, 2. புறவாழ்வு என இரண்டாய்ப் பகுத்து வாழ்ந்தனர். அக வாழ்வின் சிறப்புகள் விளக்கப்பெற்றுள்ளன.

அகவாழ்க்கை நெறியில் சிறந்து தமிழர்கள் விளங்கி னர். எத்தனை இன்பம் பூமியில் வாய்க்கப் பெற்றா லும், தலைவன் தலைவியின் காதல் இன்பமே மிகப் பெரியது என்பது புலனாகிறது.

அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கிய தமிழர்கள் மனித வாழ்க்கையை முறைமைப்படுத்தியதில் உலகத் திற்கே எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்துள்ளனர் என்பது புலனாகிறது.

தலைவனுக்கும் தலைவிக்கும் ஏற்பட்ட திருமணத் திற்கு முன்னதான காதல் வாழ்வை களவுக்காதல் என்று கூறியிருப்பது தமிழர்தம் அகவாழ்வு நெறி யினை எடுத்துக்காட்டுகிறது.

திருமணமானபின் நடைபெறும் இல்லற வாழ்வு கற் பியல் எனப்படும். இனிய இல்லற வாழ்வின் சிறப்பும் கடமையும் பயனும் கட்டமைப்புடையன என்பதும் அதைத் தமிழர்கள் பின்பற்றி வாழ்ந்துவந்துள்ளனர் என்பதும் தெளிவாகின்றன.

திருமணம் என்பது உடன்போக்கு மணம், களவு மணம் என இருவகையில் நடைபெற்றுள்ளது. மடலேறி மணம் செய்துகொள்ளலும் உண்டு என்பதை அறிய முடிகிறது.

தொழில் செய்து பொருளீட்டும் காதலனுக்குக் காதலி தன் வாழ்க்கையில் உற்சாகமூட்டும் உயிர் என்பதை யும் இவ்வாறே இல்லத்திலேயே இருந்து கடமையைச் செய்யும் காதலிக்குக் காதலனே இன்பத்தையும் மகிழ்ச் சியையும் ஊட்டும் உயிர் என்பதையும் தெளிவாக உணரமுடிகிறது.

இல்லறத்தின் பயனாய பிள்ளைப்பேறு சிறந்த செல்வ மாகக் கருதப்பட்டது. எத்தனைச் செல்வங்களைப் பெற்றிருந்தாலும் மழலைச் செல்வம் இல்லையென் றால் வாழ்நாள் பயன் இல்லை என்பதைச் சங்க அகப் புறப் பாடல்களின்வழி அறியமுடிகிறது.

துணைநூற் பட்டியல்

தட்சிணாமூர்த்தி, அ., *தமிழர்நாகரிகமும் பண்பாடும்*, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, முற்பதிப்பு, 1994.

தமிழண்ணல், *நம்பியகப் பெருமாள்*, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, முதற்பதிப்பு, 2018.

விமலானந்தம், மது.ச., *தமிழ் இலக்கிய வரலாறு*, முல்லை நிலையம், சென்னை, 2020.

நாகராசன், வி., *குறுந்தொகை மூலமும் உரையும், பகுதி - 1*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, நான்காம் பதிப்பு, 2011.

நாகராசன், வி., *குறுந்தொகை மூலமும் உரையும், பகுதி - 2*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, நான்காம் பதிப்பு, 2011.

விசுவநாதன், அ. (உ.ஆ.), *கலித்தொகை மூலமும் உரையும்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, நான்காம் பதிப்பு, 2011.

இராமசாமி, ஆ.வே., திருக்குறள், வல்வில் அச்சகம், திருச்சி, ஏழாம் பதிப்பு, 2012.

இளம்பூரணனார் (உ.ஆ.), *தொல்காப்பியம் - பொருளதிகாரம்*, சாரதா பதிப்பகம், சென்னை, 11 ஆம் பதிப்பு, 2011.

திருஞானசம்பந்தம், ச., *தொல்காப்பியம் சொல்லதிகாரம் மூலமும் உரையும்*, கதிர் பதிப்பகம், திருவையாறு, முதற்பதிப்பு, 2009.

திருஞானசம்பந்தம், ச., *நாற்கவிராச நம்பி அகப்பொருள் விளக்கம்*, கதிர் பதிப்பகம், திருவையாறு, 14 ஆம் பதிப்பு, 2010.

You've gotta dance like there's nobody watching,
Love like you'll never be hurt,
Sing like there's nobody listening,
And live like it's heaven on earth.

— William W. Purkey

When we love, we always strive to become better than we are.
When we strive to become better than we are, everything around us becomes better too.

— Paulo Coelho

ISSN 2320-4842

குறிஞ்சி நில தினைப்புன வேளாண்மை

சு. கிருஷ்ணநந்தினி
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர் (Ref.No.05762/Ph.D.K8/Tamil/P.T./April 2018/Confirm./dt: 15.07.2021), **அரசுக் கலைக் கல்லூரி, அரியலூர் 621 713**
நெறியாளர்: **முனைவர் த. கார்த்திகேயன்**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அரசுக் கலைக் கல்லூரி, அரியலூர் 621 713
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச் சுருக்கம்

மலையும் மலை சார் பகுதியுமான குறிஞ்சித் திணை வாழ்வியலில் வேளாண்மை மிக முக்கியமானதாக உள்ளது. கானவர், புனவர், குறவர் எனும் திணை மக்கள் வாழ்ந்த குறிஞ்சி நிலப் பகுதிகளில் வரகு, தினை, எள், அவரை போன்றவை பயிரிடப்பட்டதைச் சங்க இலக்கியங்கள்வழி அறிந்துகொள்ள முடிகிறது. நிலத்தைச் சமப்படுத்தியது, பயிரிட்டது, களையெடுத்தது, அதைக் காவல் காத்து, அறுத்து, போரடித்து விளைச்சல் பெற்றது உள்ளிட்ட பல்வேறு செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. காவல் காக்கும் பணியில் அதிகமாகப் பெண்கள் ஈடுபட்டனர். அக்காலகட்டங்களில் பெண்கள் காதல் கொள்வதும் நிகழ்ந்துள்ளது.

முன்னுரை

இலக்கியம் மனித வாழ்க்கைக்கு நெருக்கமானது; சமூக இயக்கங்களிலிருந்து பெறப்படுவது. எனவேதான் பண்டைய வரலாறுகளை பழைய இலக்கியங்களிலிருந்து தேடும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பண்டைய வரலாறுகளை ஐந்திணை சார்ந்த இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் பதிவுசெய்து வைத்துள்ளன.

ஐந்திணை இலக்கியங்களுள் குறிஞ்சித்திணை இலக்கியம் முக்கியமானதும் முதன்மையானதுமாகும். அது சமூகம் நிலையான ஒரு குடியிருப்பில் வாழத் தலைப்பட்ட தொடக்க காலச் சூழலில் அமைந்துள்ள நிலப் பகுதி எனலாம். மலையும் மலை சார் பகுதிகளிலும் வாழ்ந்த கானவர், புனவர், குறவர் எனும் குறிஞ்சிநில மக்களின் வரலாறுகளை அறிந்துகொள்ள வேண்டியது சமகாலச் சூழலுக்குத் தேவையானதாகிறது. அத்தகு குறிஞ்சி நில மக்களின் தினைப் புன வேளாண்மை குறித்து இக்கட்டுரை ஆராய்ந்து விளக்குகிறது.

தினைப் புன வேளாண் நடைமுறைகள்

குறவன் மரங்களை வெட்டியெறிந்த கொள்ளையில் களைக்கொட்டினால் களையை நீக்கிக் கருந் தினையை விதைப்பர் என்பதைக் குறுந்தொகை (214:1,2) பதிவுசெய்துள்ளது. ***யாம் கொன்ற மரம் சுட்ட இயவில்*** கரும்பு போன்ற அடிப்பகுதிடைய பசிய தாள்களைக் கொண்ட தினை வளர்ந்து நின்றதைக் குறுந்தொகை (306: 1) சுட்டுகின்றது பறம்பு நாட்டின் வளம் குறித்துப் பேசுகையில் தினைப்புன வேளாண் செயல்பாடுகள் பற்றியும் பேசப்பட்டுள்ளது என்கிறார் கு.வெ.பா. (279).

மலைச்சாரலில் மழை பெய்த பதமான கொல்லையில் குறவர் அகலமாகவும் வளையவும் அமைத்து உழுது விதைகளைப் பரவலாக விதைக்க அவை ஒரு சேரப் பலமாக விளைந்து கதிர்கள் தலைசாய்ந்து நின்றதை,

மலை இடம்படுத்துக் கோட்டிய கொல்லைத்
தளிபதம் பெற்ற கான் உழு குறவர்
சில வித்து அகல இட்டென பல விளைந்து
இறங்கு குரல் பிறங்கிய ஏனல் (நற்.209:1-4)

எனும் அடிகள் காட்டுகின்றன. தினைப் புனத்தில் விதைப்பு மேற்கொண்டது பற்றிப் பேசுகையில் *தந்தை வித்திய மென்தினை* (நற்.306:1), *இருங்கல் அடுக்கத்து என்னையர் உழுத* (நற்.122:1) எனத் தலைவியின் தந்தை தமையன்மார் விதைத்த புனம் பற்றிக் குறிக்கப் பெற்றுள்ளது. அருவி நீரைக் கொண்டு வேளாண்மை செய்யப்பெற்றதை, *மை படு சிலம்பின் ஐவனம் வித்தி/அருவியின் விளைக்கும் நாடொடு* (குறுந்.371:2-3) எனும் பாடலடிகள் காட்டுகின்றன. மழையை நம்பி வேளாண்மை செய்ததை நற்றிணை (209), புறநானூறு (168) ஆகியவை காட்டுகின்றன.

தினைப் புன வேளாண்மையையும் பயிர்களும்

தினைப் புன வேளாண்மையில் தினை மட்டுமன்றி வரகு, எள் அவரை ஆகிய பயிர்களும் விளைவிக்கப் பட்டன. இவற்றுள் தினை 80 இடங்களில் சங்க இலக்கியங்களில் வந்துள்ளது. பெரும்பாலும் இது குறிஞ்சித்

திணையிலும் சிறுபான்மை பிற திணைகளிலும் (முல்லை.மது.271, கலி. 108:33 நெய்தல் நற்றிணை 267:4, குறுந்தொகை 397:1) பதிவுசெய்யப்பட்டுள. வரகு, தினை, எள், அவரை, என்பன பாரி நாட்டின் புது வருவாய்களாகக் காட்டப்பட்டுள்ளன. இத்துடன் தினையின் மறுபெயரான ஏனல் 43 இடங்களில் வந் துள்ளது. இது பெரும்பாலும் குறிஞ்சித் திணைப் பாடல் களிலேயே வந்துள்ளது. வரகு சங்க இலக்கியங்களில் 31 இடங்களில் வந்துள்ளது. பெரும்பாலும் இது முல்லை நில விளைபொருளாகவே காட்டப்பட்டுள்ளது.

தினை பயிரிடப்பட்டமை குறித்து விரிவான செய்தி கள் சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. ***பரிஇ விந்திய ஏனல் (குறுந்.72), இருவி வேய்ந்த குறுங்காற் குரம்பை (குறிஞ்சி. 153),*** மேலும் (அகம், 28:3,4), (நற்.44:6,7), (நற். 386;2,3) எனத் தினை பயிரிடப் பட்டமை சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளது .

குறுந்தொகையில் (குறுந்.82:1,2) தினை அறுவடைக் குப் பின் மறுக்கால் பயிராக அவரை பயிரிடப் பெற் றதைக் காட்டுகின்றன. இவ்வாறு தினை அறுவடைக் குப்பின்அவரைமறுக்கால் பயிராகப் பயிரிடப்பட்டதை

கொய் பதம் உற்றன குலவுக் குரல் ஏனல்
விளை தயிர்ப் பிதிர்வின் வீஉக்கு இருவிதொறும்
குளிர்புரை கொடுங்கால் கொண்டன அவரை (மலைபடு. 108:-110)என மலைபடுகடமும் சுட்டுகிறது. அவரை தனியே பயிரிடப்பட்டதை அகநானூறு **அவரைப் பைம்பூப் பயில** (294:9) எனச் சுட்டுகின்றது. இவற் றுடன் ஐவன நெல்லும் பயிரிடப்பட்டதை
அருவிப் பரப்பின் ஐவனும் வித்திப்
பரு இல்லைக் குளவியொடு பசுமரல் கட்கும்
காந்தள் அம் சிலம்பில் சிறுகுடி (குறுந். 100:1-3)
எனும் குறுந்தொகைப் பாடலடிகள் காட்டுகின்றன .

களையெடுப்பு

தினை பயிரிட்ட குறவர்கள் பயிர் வேளாண்மையை முறையாகச் செய்தனர் என்பதையும் அறியமுடிகிறது.

கடவை மடைந்த துடவை அம் சிறுதினைத்
துளர் ஏறி நுண்துகள் கலைஞர் தங்கை (குறுந்.392:4,5)
எனும் அடிகள் தினைகளுக்கிடையே நெருக்கமாக முளைத்திருந்த களைகளைக் கொட்டினால் வெட்டி எறிந்தமையைச் சுட்டுகின்றன. மலைநெல் பயிரிடப் பட்ட புனத்தில் வளர்ந்திருந்த களைகளான காட்டு மல்லிகையையும் பசிய மரலையையும் பறித்து எறிந் தனர் என்பதையும் அறியமுடிகின்றது.

அறுவடை

விளைந்த பயிர்களை அறுவடை செய்தமை குறித் தும் சங்கப் பாடல்கள் சுட்டுகின்றன.

நீடு இலை விளை தினைக் கொழுங்குரல் நிமிரக்
கொடுங்குரல் கோடல் கண்ணி செழும் பல
பல்கிளைக் குறவர் (நற்.44:6-8) என்கிறது நற்றிணை. மேலும் ஐங்குறுநூறு (286:1,2) குறவர் தினை அறுவடை செய்ததையும் அறுவடை செய்யப்பட்ட வருந்தட்டை யில் அவரைக் கொடி படர்ந்து நின்றதையும் சுட்டும்.

போரடித்தல்

அறுவடை செய்த தினையைக் கதிரடித்து நெடும் போராகக் குவிக்கும் வழக்கமும் இருந்துள்ளதனை

வேங்கை கண்ணீயர் எருது எறி களமர்
நிலம் கண்டன்ன அதன் கண் பாசறை
மென்தினை நெடும்போர் புரிமார்
துஞ்சு களிறு நெடுப்போர் தம் பெருங்கல் நாட்டே (நற். 125:9-12) என்னும் அடிகள் காட்டுகின்றன.

எருதுகளைக் கொண்டு ஓட்டிக் கதிர் போர் அடிக்கும் மருத நிலத்தார்களம் செம்மை செய்தது போன்ற அகன்ற பரப்பை உடைய பசிய கற்பாறை இடத்து வேங்கையின் மலர்களை மாலையாக சூடும் குறவர் தினையைக் கதிர் அடித்து நெடும் போராகக் குவிக்க எண்ணுவர். அங்கன மாக குரவரை விடியலில் எழுமாறு துஞ்சுகின்ற களிறு முழங்கி எழுப்பும் பெரிய மலைநாட்டிடத்து என்பதாக நற்றிணை உரையில் கு.வெ. பாலசுப்பிரமணியன் குறிப்பிடுகிறார் (2004:229) என்னும் பாடல் கருத்து போரடித்தல் அதிகாலைப் பொழுதிலேயே மேற்கொள் ளப்பட்டது என்பதைச் சுட்டுகிறது.

தினைப் புனக் காவல்

குறிஞ்சி நில வேளாண் செயற்பாடுகளில் தினைப் புனக் காவல் முக்கிய இடம்பெறுகிறது. தினைப் புனக் காவலைப் பொறுத்தவரை, பகற் காவல் பெண்களா லும் இரவுக் காவல் ஆண்களாலும் மேற்கொள்ளப் பட்டன. தினைப் புன வேளாண்மையில் ஒரு குடும் பமே ஈடுபட்டது எனலாம் தினைப் புனக் காவல் குறித்து நற்றிணை (13, 128, 134, 201, 274, 368, 373, 389),குறுந்தொகை (54, 72, 217, 223, 291, 333), அகநானூறு (12, 28, 32, 88, 102, 118, 188) ஐங்குறுநூறு (282, 285, 289) கலித்தொகை (39, 50, 52) குறிஞ்சிப்பாட்டு (35-45, 99-106) உள்ளிட்ட பல பாடல்கள் பதிவுசெய்துள்ளன.

வேங்கைமரத்தருகில் தினைப்பயிரைக் காவல் புரியப் பரண் அமைத்ததை அகநானூறு (292, 388),நற்றிணை (206), குறுந்தொகை(357, 291), கலித்தொகை (41), குறிஞ்சிப்பாட்டு (43-44), மலைபடுகடாஅம் (291 - 293) உள்ளிட்ட பாடல்கள்வழி அறிய முடிகின்றது.

தட்டை, கிணை, அரிப்பறை, தண்ணுமை முதலான கருவிகளைக் கொண்டு தினைப் புனத்தை அழிக்க வரும் விலங்குகளை விரட்டினர். கிளிகளை விரட்ட பயன்பட்ட கருவிக்குக் கிளி கடி கருவி என்று பெயர்.

விலங்குகளின் நடமாட்டம் குறித்து அறிந்துகொள்ள ஆசினிப் பலாமரம், மலைக்குகை ஆகியவற்றின்மீது பரண் அமைத்தனர். இத்தகைய பரணைக் குறிக்க, கழுது (கலி 41), இதனம் (அகம் 392) பகுனவை எனும் பெயர்கள் வழங்கின.

கிளி,மயில், மந்தி, குருவி, காட்டுப்பன்றி, முளவுமா, மான், யானை முதலியவை தினைப் புனம் நாடி வரும் உயிரினங்களாக இருந்துள்ளன. தீப்பந்தங்கள் எரித்து இரவு நேரத்தில் தினைப்புனக் காவல் மேற்கொள் ளப் பெற்றதை

சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
வான மீனின் வயின் வயின் இமைக்கும் (குறுந்.150:1,2) எனும் பாடல் அடிகள் காட்டுகின்றன.

தினைப்புனத்திற்கு உண்ண வரும் யானையைக் கண்ட குறவர் குடியில் அம்பினை உடையாரும் கிணைப் பறை உடையாரும் கவணுடையாரும் கூடிக் கூவிப் பேரிரைச்சலிடுவதை நற்றிணை (108:1-5) அடிகள் குறிக்கின்றன. எனவே அம்பு, கிணைப் பறை, கவண் ஆகியவை கொண்டு விலங்குகளிடமிருந்தும் பறவை களிடமிருந்தும் தினைப்புனங்கள் காத்தமை தெளிவு.

குறிஞ்சித் திணையில் தினை வேளாண்மை மிக முக்கிய இடம் பெற்றிருந்தது. விதைத்தல், காத்தல், அறுவடை செய்தல் எனும் முந்நிலைகளில் காத்தல் தொழிலில் பெண்களும் ஈடுபட்டிருந்தனர் என்பதைச் சங்கப்பாடல்கள் காட்டுகின்றன.

புன்செய் வேளாண்மையில் காவல் மிகுதியும் வேண் டப்படுகின்றது. காவல், பகற் காவல் இரவுக் காவல் என்ற இரு நிலைகளில் அமைகின்றது. பகற்காவல் பெரும்பாலும் பெண்களால் புரியப்பட்டுள்ளதைச் சங்க இலக்கியம் காட்டுகின்றது. தினை வரும் 80 இடங்க ளில் ஆண் தினைக்காவல் புரிந்தமை 6 இடங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளது பெண்கள் தினைப்புனம் காத்தமை 29 இடங்களில் பேசப்பட்டுள்ளது. ஏனல் வரும் 43 இடங்களில் ஆண் காவல் 8 இடங்களி லும் பெண் காவல் 26 இடங்களிலும் பேசப்பட்டுள. ஆக, 55 இடங்களில் பெண்கள் தினைப்புணர் காவ லில் ஈடுபட்டமை பாடப்பட்டுள்ளது என்பதைச் சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம் எனும் நூலில் பதிவுசெய்கிறார் பெ. மாதையன் (2010: 97,98)

வளைவாய்ச் சிறுகிளி விளைதினைக் கடீஇயர்
செல்கென் றோளே அன்னை (குறுந். 141:1,2) என்று தினைப்புனக்காவல் பற்றிக் குறுந்தொகை குறிக்கிறது.
சிறு கிளி முரணியை பெருங்குரல் ஏனல்
காவல் நீ என்றோளே (நற்.389: 6,7) என்ற பாடல் தாய் மகளை தினைப்புனக் காவலுக்கு அனுப்பிய தைக் குறிப்பிடுகின்றன. மேலும், (நற். 147: 1-5), சில பாடல்கள் அவற்றைப் பதிவு செய்துள்ளன.

துய்த் தலைப் புனிற்றுக் குரல் பால் வார்பு இறைஞ்சித்,
தோடு அலைக் கொண்டன ஏனல் என்று,
துறுகல் மீமிசைக் குறுவன குழீஇச்
செவ்வாய்ப் பாசினம் கவரும்' என்று அவ்வாய்த்
தட்டையும் புடைத்தனை கவணையும் தொடுக்க என
எந்தை வந்து உரைத்தனனாக (நற் 206 1-6) எனும் பாடலடிகள் தந்தை தினைப்புனக் காவலுக்கு அனுப் பியதையும் குறிப்பிடுகின்றன.

தினைப் புனக் காவல் பெண்டிரை பொறுத்தமட்டில் அவர்களின் காதல் வாழ்க்கைக்குரிய களமாகவும் இருந்துள்ளதைச் சங்கப் பாடல்கள் பதிவுசெய்துள.

முடிவுரை

மலையும் மலை சார்ந்த பகுதியுமான குறிஞ்சித் திணை வாழ்வியலில் வேளாண்மை மிக முக்கிய தொழிலாக இருந்துள்ளது. கானவர், புனவர், குறவர் எனும் திணை மக்கள் வாழ்ந்த குறிஞ்சி நிலப் பகுதி களில்வரகு,தினை, எள், அவரை போன்றவை பயிரி டப்பட்டமை தொடர்பாகப் பல்வேறு செய்திகளை அறிந்துகொள்ள முடிந்தது.

நிலத்தைச் சமப்படுத்தியது, பயிரிட்டது, களையெடுத் தது உள்ளிட்ட பணிகளோடு, அதைக் காவல் காத்து, அறுத்து, போரடித்து விளைச்சல் பெற்றது உள்ளிட்ட பல்வேறு செய்திகள் கொண்ட பாடல்களின் பதிவாக சங்க இலக்கியங்கள் காணப்படுகின்றன.

வேளாண்மை சார்ந்த காவல் காக்கும் பணிகளில் ஈடுபட்ட பெண்கள் அக்கால கட்டங்களில் காதலிலும் ஈடுபட்டுள்ளனர்.

துணைநூற் பட்டியல்

செயபால், இரா., அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை, 2004.

தட்சிணாமூர்த்தி, அ., ஐங்குறுநூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை, 2004.

நாகராசன், வி., குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை, 2004.

பாலசுப்பிரமணியம், கு.வெ., நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை, 2004.

பாலசுப்பிரமணியன், கு.வெ., முதலியோர், புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

மாதையன், பெ., சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010.

மோகன், இரா., பத்துப்பாட்டு தொகுதி 1, 2, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை, 2004

விசுவநாதன், அ., கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை, 2004.

Don't walk in front of me… I may not follow
Don't walk behind me… I may not lead
Walk beside me… just be my friend.

— Albert Camus

It is better to be hated for what you are than to be loved for what you are not.

— Andre Gide

Live as if you were to die tomorrow. Learn as if you were to live forever.

— Mahatma Gandhi

ISSN 2320-4842

நற்றிணையில் நீர்

சு. ரம்யா
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர் (Ref.No. BDU2010632778626, dt: 13.06.2023)
தமிழாய்வுத் துறை, அரசுக் கலைக் கல்லூரி, திருச்சி 620 022
நெறியாளர்: **முனைவர் மா. செங்குட்டுவன்**
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அரசுக் கலைக் கல்லூரி, திருச்சி 620 022
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச் சுருக்கம்

எல்லா உயிர்களுக்கும் தண்ணீர் அடிப்படைத் தேவை என்பதை உணர்ந்த பண்டைத் தமிழர்கள் அடிப்படைக் கட்டமைப்பை மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர். மலைகளில் இயற்கையாக உற்பத்தியாகும் வெள்ளத்தின் இரு புறமும் கரைகளை உயர்த்தி, அவற்றை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் பாசனம் மற்றும் குடிநீர்த் தேவை களுக்குப் பயன்படுத்தினர். நீர்ப்பாசனம் இல்லாத நிலங்களில், அவர்கள் தொட்டிகள், குளங்கள், ஏரிகளை உருவாக்கி, பாசனம், குடிநீர், கால்நடைத் தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றனர். தண்ணீர், அதன் அளவு, தன்மை, பயன்பாடு ஆகியவற்றுக்கேற்ப வெவ்வேறு பெயர்களால் அடையாளம் காணப்பட்டு, நீண்ட காலமாக அதன் திறனையும் பயனையும் உணர்ந்த தமிழர்கள், கடல் வணிகத்திலும் சிறந்து விளங்கினர். மேலும், பண்டைத் தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்களிலிருந்து, மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் தம் கோட்டைகளை அகழிகள் அமைத்து நீரை நிரப்பி அவற்றைப் பாதுகாத்ததைக் காணலாம். தமிழர்களிடையே நீரின் அறிவு, பெயர், பயன்பாடுகளை நற்றிணையின்வழி வெளிப்படுத்திப் பேசுகின்றது இவ்ஆய்வுக் கட்டுரை.

கருவிச்சொற்கள்: அருவி/சுனை நீர், ஆற்று நீர், கண்ணீர், கடல், காட்டாற்று நீர், குளம், பொய்கை.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

தமிழ்ச் சமூகம் வேட்டைச் சமூகத்திலிருநது அரசு உருவாக்கம் பெற்ற காலம் முதல் நீரின் தேவையை நன்கு அறிந்திருந்தனர். நீரின் இன்றியமையை உணர்ந்த சேர, சோழ, பாண்டிய, பல்லவ அரசர்கள் தம் நாடுகளில் மக்கள் பயன்பாட்டிற்காக எங்கு நோக்கினும் நீர் நிலைகளை உருவாக்கியிருந்தனர். அவர்கள் உருவாக்கிய நீர் ஆதாரங்கள் ஆறுகள், ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், கிணறுகள் இன்றும் தமிழக நிலப் பரப்பை வளப்படுத்திக்கொண்டிருக்கின்றன. சங்கப் பாடல்கள் முதல் இக்கால இலக்கியங்கள்வரை நீர்நிலை களின் தேவை உணர்ந்த படைப்பாளர்கள் அவற்றைப் பாடுபொருளாக்கியுள்ளனர். அத்தகு சிறப்புமிக்கது நீர். ஆய்வுக் கட்டுரை வரையறை (பொற்கோ, ப.81) எனும் கோட்பாட்டைக் கருத்தில் கொண்டு நற்றிணையில் காணலாகும் 6 கூறுகள் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

பூமியில் தோன்றும் அத்தனை உயிர்களுக்கும் இன்றியமையாதது நீர். நீர் இல்லாமல் எந்த உயிரினமும் வாழ முடியாது என்பதைப் பல இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அவற்றுள் சங்கப் புலவர் குடபுலவியனார் இயற்றிய,

நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே (புறம்., பா.18:18-23) என்ற புறநானூற்றுப் பாடல்வழி நீரின் சிறப்பு அறியலாம். உடலானது நீராலும் உணவாலும் ஆனது. உடலுக்குத் தேவையான நீரையும் உணவையும் கொடுப்பவன் உயிரைப் படைத்தவன் ஆவான் என்ற கருத்து பழந்தமிழர்கள் நீருக்கும் உணவிற்கும் கொடுத்த முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

விதைகள் பூமியில் கிடந்தாலும் அவை ஆகாயத்திலிருந்து விழும் மழைத்துளிக்காகக் காத்துக் கிடக்கின்றன என்பதிலிருந்து நீரின் இன்றியமையாமையை உணரலாம். மாறாக மழையால் பெருகிய வெள்ளம் குறிஞ்சி நிலத்தடுத்துள்ள முல்லைநில ஆயர்கள் எதிர்கொண்டது குறித்து, ***பெய்த பெருமழையாலே பெருகின வெள் ளத்தை வெறுத்த கொடிய கோலினுடைய இடையர்கள், ஏற்றையுடைய முந்நிரைகளையும் மேடாகிய முல்லை நிலத்***

திலே மேயவிட்டுத் தாம் பயின்ற இடத்தை நீங்கிப் போந் தமையால் உண்டான தனிமையாலே வருத்தமெய்திய கோவலர்கள் (சோமசுந்தரம்,ப.8) என்று கோவலர்கள் இங்ஙனம் வெள்ளத்தால் அலைப்படும் நிலை உணர்த் தப்படுகிறது.

நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்த திருவள்ளுவர் *வான் சிறப்பு* என்ற அதிகாரத்தைப் படைத்துள்ளார். பூமியிலுள்ள எல்லா உயிர்களின் இயக்கமும் நீரைச் சார்ந்தே அமைகின்றன. உணவுப்பொருள் உற்பத்திக்கு அடிப்படையாக நீர் உள்ளது. அதே நீர் அனைத்து உயிர்களுக்கும் உணவாகவும் பயன்படுகிறது. இதனை,

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை (குறள்.12) என்ற திருக்குறள் வழி அறியலாம். உணவுப்பொருள் உற்பத்திக்கு உதவு வதோடு குடிநீராகவும் பயன்படுவதும் மழைநீரே (ப. 24). உணவு இல்லாமல் மனிதன் 30 நாட்களுக்கு மேல் உயிர்வாழ முடியும். ஆனால், நீர் இல்லாமல் வாழ முடியாது என்பதே அறிவியல் உணர்த்தும் உண்மையாகும்.

சோழர்கள் நாட்டைச் சீர்த்திப் புதிய நீர்நிலைகளை உருவாக்குவதில் தனிக்கவனம் செலுத்தினர். பகை நாட்டை வெற்றி பெற்றுத் திரும்பும்போது அந்நாட்டு வீரர்களைக் கைதிகளாகப் பிடித்து வருவது மரபு. அவர்களைக் கொண்டு கோவில் கட்டுதல், புதிய நகரங்களை உருவாக்குதல், குளங்களை வெட்டுதல், காடுகளை அழித்து ஊருக்கு வெளியே புதிய குடி யிருப்புகளை உருவாக்குதல் போன்ற செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இதனை மெய்ப்பிக்கும் விதமாகப் பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங் கண்ணனார்,

காடு கொன்று நாடு ஆக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி (பட்டின. 283-284) எனப் பாடுகிறார். இதற்குக் கரிகால் பெருவளத்தான் காடுகளை அழித்துப் புதிய குடியிருப்புகளை உருவாக் கினான். புதிய நீர்நிலைகளையும் உருவாக்கி வேளாண் பரப்பை அதிகரிக்கச்செய்தான் என்று உரையெழுது கின்றார் கு.வெ.பாலசுப்பிரமணியன் (ப.313).

நீர்நிலைகள் மற்றும் நீரின் முக்கியத்துவம் பற்றிச் சங்க இலக்கியங்களில் மிக அதிகமாகக் காணக்கிடக் கின்றன. அவற்றுள் நற்றிணையில் நீர் இடம்பெற்றுள எல்லா இடங்களிலும் நீரைக் குறிக்க ஒரே சொல்லை ஆளாமல் பல்வேறு சொற்களின்வழி நீரையும் நீரின் முக்கியத்துவமும் கூறப்பட்டுள. 1. அருவி/சுனைநீர், 2.ஆற்றுநீர், 3. கடல் நீர், 4. கண்ணீர், 5. காட் டாற்று நீர், 6. குளம்/பொய்கை நீர் என நீர் வகைப்படுத் தப்படுகின்றது.

1. அருவி / சுனை நீர்

நல்வெள்ளியார் சுனைநீர் குறித்தும் அருவிநீர் குறித் தும் நற்றிணைப் பாடல் ஒன்றில் பதிவுசெயதுள்ளார். அறத்தொடு நின்ற பின்பும் மணம் செய்து கொள் ளாது பொருளீட்டுதற்காகத் தலைவன் பிரிந்து செல் கின்றான். பிரிந்து சென்ற இடத்தில் கார்காலத்தின் தொடக்கமாக வானம் மழைக்கான அடையாளத்தோடு மின்னுகின்றது. இவ்விடத்தில் சுனைநீர் குறித்தும், அருவிநீர் குறித்தும் இப்பாடல்,

சூருடை நனந் தலைச் சுனை நீர் மல்க,
பெரு வரை அடுக்கத்து அருவி ஆர்ப்பக்
கல்அலைத்து இழிதரும் கடுவரற் கான்யாற்றுக்
கழைமாய் நீத்தம் காடுஅலை ஆர்ப்ப (நற்., பா.7:1-4) எனச் சுட்டுகிறது. காட்டில் வெந்நிற மூங்கில் அரிசி கொட்டிக்கிடக்கிறது. சந்தன மரமும் மூங்கில்களும் நீரின்றி வாடிக் கிடக்கின்றன. இச்சூழலில் அகன்று உயர்ந்த மலைப் பக்கத்தே மழை பொழிந்து பெருக் கெடுத்து ஓடி வருகிறது. வழியில் உள்ள நீர்ச்சுனை களைநிறைத்து வளமூட்டுகிறது. மலையிலிருந்து கொட் டும் அருவி ஆரவாரத்தோடு கற்களைப் புரட்டிப் போட்டுக்கொண்டு ஓடி வருவதை இப்பாடல்வழி அறிய முடிகிறது. ***இயற்கையாக மலையில் பொழியும் மழைநீர் மலை உச்சியிலிருந்து பள்ளத்தை நோக்கிப் பொழிவது அருவி*** (ப.74) என மைக்கேல் ராஜ் என்பார் தமது ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

2. ஆற்றுநீர்

கோண்மா நெடுங்கோட்டனார் இயற்றிய நற்றிணைப் பாடலில் தலைவன் பரத்தைபால் பிரிந்து சென்று அவள் இல்லத்தில் நீண்ட நாட்கள் தங்கி இருக்கின்றான். அப்போது அவனது இற்கிழத்திக்கு மகன் பிறக்கி றான். பரத்தை வீட்டிலிருந்து தன் மகனைக் காணக் கள்வனைப்போல மெல்லமெல்லத் தன் இல்லத்திற்கு வந்த செய்தியைக் கூறும் இடத்தில் அகன்ற நீர்த் துறைக்குரிய தலைவன் என்பதை,

நள்ளென் கங்குல் கள்வன் போல
அகன்துறை ஊரனும் வந்தனன் (நற். 40:10-11) என்ற தொடர்கள்வழி அறியமுடிகின்றது. வளமான நீர்த் துறைக்குரிய மருதநிலத் தலைவன் (ஊரன்) நீண்ட நாவையுடைய மணி ஒலிக்கத் தொடங்கிய பொழுது தன் இல்லத்திற்கு வந்தான். இங்கு பெரிய ஆறு ஓடியது என்பதால் வளமை பொருந்திய தலைவன் எனலாம்.

3. கடல் நீர்

உலகம் நீரால் சூழப்பட்டிருந்தது. நீர் ஆவியாகி மலை முகடுகள் தோன்றி, மண் தோன்றிப் பின் கடல் தோன்றிற்று. கோடிக்கணக்கான ஆண்டுகளாக நீர் ஆவியாகிக் கடல் உப்புத் தன்மைமிக்கதாக மாற்றம் பெறுகிறது. கடலில் பழந்தமிழர்கள் வணிகம் செய் யும் பொருட்டுப் பிற நாடுகளுக்குச் சென்று வந்த னர். அரசனின் மூவகை வருவாயுள் கடற்படுபொரு ளின் வருவாயும் ஒன்றாக இருந்துள்ளது. பூமி முழு வதும் பெய்கின்ற மழைக்கு அடிப்படையாகக் கடல் இருப்பதோடு மக்களின் உப்புத் தேவையையும் அது

நிறைவுசெய்கிறது. இத்தகு கடல் குறித்த சிறப்புகளைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பேசுகின்றன. அவற்றுள் நற்றிணையில் ஒரு பாடலில்,

மாநிலஞ் சேவடியாகத் தூநீர்
வளை நரல் பௌவம் உடுக்கை ஆக(கடவுள் வாழ்த்து)
எனக் கடல்சூழ் பரப்பை விவரிக்கிறது. பரந்த உலகம் 79% கடலால் சூழப்பட்டுள்ளது. கடல் திருமாலின் ஆடை என்கிறார் பாரதம் பாடிய பெருந்தேவனார் (ப.1). தூவுகிற அலைநீர் கொண்டதும், சங்கினம் ஆரவாரிப்பதுமான கடலினையே, தன் அரையிடத்து உடுக்கையாக உடுத்தியிருப்பவன் என்று போற்றிப் பாடியுள்ளார்.

4. கண்ணீர்

குறிஞ்சித்திணைப் பாடலொன்றில் மணம் புரியாது காலம் தாழ்த்தும் தலைவனை நினைத்துத் தலைவி அழுகிறாள்.அவளது கண்ணீர் அருவிபோல் கொட்டுவதாகத்,

தம்மோன் கொடுமை நம்வயின் எற்றி
நயம்பெரிது உடைமையின் தாங்கல் செல்லாது
கண்ணீர் அருவி யாக
அழுமே, தோழி!அவர் பழம்முதிர் குன்றே **(நற். 88:6-9)**
எனும் அடிகள் சுட்டுகின்றன.

5. காட்டாற்று நீர்

இயற்கை தந்த கொடைகளில் காட்டாறும் ஒன்றாகும். ***கட்டற்று ஓடும் ஆறுகளே காட்டாறு எனப்படுகின்றன. இவை வெள்ளத்தின்போது பெருகி ஓடும். மழை பெய்யும்போது மட்டுமே இவற்றில் வெள்ளம் பெருக்கெடுக்கும். மற்ற காலங்களில் வறண்டே காணப்படும்*** (மைக்கேல் ராஜ், ப.75) என்பதன் மூலம் காட்டாற்றின் இயல்பை அறிந்துகொள்ளலாம்.

கபிலர் இயற்றிய குறிஞ்சித்திணைப் பாடலொன்றில் காட்டாறு பற்றிய குறிப்பொன்று இடம்பெற்றுள்ளது. தலைவன் பொருள் ஈட்டுதற்குப் பிரிந்து சென்றிருக்கிறான். குறித்த காலத்தில் அவன் திரும்பவில்லை. தலைவி துயருறுகின்றாள். இதனை உணர்ந்த தோழி நற்சொல் (விரிச்சி) கேட்க விரும்புகின்றாள். அப்போது அயல்வீட்டுப் பெண்ணொருத்தி, அவன் இப்பொழுதே வருவான் என்று வேறொரு பெண்ணிடம் பேசிக் கொண்டிருக்கிறாள். இவ்விடத்தில் குறிஞ்சித்திணையை விவரிக்கப் புகும் கபிலர் காட்டாற்றுப் போக்கைப் படம்பிடித்துக் காட்டுகிறார். இதனை,

. . . . இட்டுக்கரைக் கான்யாற்றுக்
கலங்கும் பாசி நீர் அலைக் கலாவ
ஒளிறுவெள் அருவி ஒண்துறை . . .**(நற். 65:2-4)** என்ற அடிகளால் அறியமுடிகிறது. குறிஞ்சி நிலத்து மலைப் பகுதியிலிருந்து வெள்ளிய அருவி ஆரவாரத்துடன் கொட்டுகிறது. அதன் அருகே புலி, யானையோடு போர்செய்து, யானை புண்பட்டுப் பிளிறுகிறது. அந்த யானைமீது கானவர்கள் அம்பு எய்கின்றனர். அருகே ஒலிமிக்க அருவி காட்டாற்று வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது. நீரின் போக்கிற்கேற்ப நீர்ப் பாசி அசைந்துகொண்டிருக்கும் காட்டாறு என்கிறார் (பால சுப்பிரமணியன், ப.115).

6. குளம் / பொய்கை நீர்

பழந்தமிழர்கள் குளங்களிலும் ஏரிகளிலும் நீரைத் தேக்கிவைத்துத் தமது தேவைகளை நிறைவு செய்து கொண்டனர். நீரைத்தேக்கி வைத்திருந்த இடத்தின் அமைப்பை ஆய்வாளர், ***எட்டாம் பிறை வடிவில் ஏரி அமையும்போது ஏரிக்கரை நீளம் குறைவானதாகவும் அதிக கொள்ளளவு கொண்டதாகவும் சிக்கன வடிவமைப்பாகவும் விளங்கியது*** (மஹேஷ்வரி,ப.91) எனக் குறிப்பிடுகிறார். இவ்வாறு நற்றிணைப் பாடலொன்று குளத்தின் மூலமாக நீர்ப் பாசனம் நடைபெற்ற செய்தியை உணர்த்துகிறது. மருத நிலத்தின் ஊர்களில் ஏதாவது ஒரு பகுதியில் குளம் அமைத்திருந்தனர். ஊரின் குடிநீர்த் தேவையையும் கால்நடைகளின் குடிநீர்த் தேவையையும் நிறைவுசெய்யத் தனிதனியே குளங்கள் இருந்தன. குளத்தில் உள்ள மீனை உண்ணக் கொக்குகள் காத்திருந்தன.யானைக் காதுபோன்ற அகன்ற தாமரை இலைகளால் சூழப்பட்ட குளம் ஆலங்குடி வங்கனார் பாடலில் சிறப்பிக்கப்படுகிறது. இதனை,

முயப் பிடிச் செவியின் அன்ன பாசடை
கயக்கணக் கொக்கின் அன்ன கூம்பு முகை
கணைக்கால் ஆம்பல் அமிழ்து நாறு தண் போது **(நற்., 230:1)** என்பதால் அறியலாம். ஆம்பல் மலர்களும் கொட்டிப் பூக்களும் மலர்ந்து மணம் வீசும் குளிர்ந்த நீருடைய குளத்தில் கிழக்கில் தோன்றும் வெள்ளியைப் போன்று அழகிய பூக்கள் பூத்துக் குலுங்கும். கோடைக் காலத்தில் வற்றாத குளிர்ந்த நீர்ப்பரப்பினையுடைய குளத்தைக் காணும்போது தலைவனைக் கண்ட மகிழ்ச்சி தருவதாகத் தலைவி குறிப்பிடுகிறாள். பொய்கையில் நீந்திச்செல்லும் மீனின் வழித்தடம் எவ்வளவு விரைவாக மறைந்துபோகிறதோ அவ்வளவு விரைவாகச் செல்வம் அழிந்துபோகும் இயல்பினது என்பதனை இப்பாடல் விளக்குகின்றது.

. . . . பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியின் கெடுவ **(நற். 16:4-6)**

தரைப்பகுதியில் புழுதியாக இருப்பின் மனிதர்கள் மற்றும் விலங்கினங்கள் நடந்து சென்றால் அதன் தடம் வெளிப்படையாகத் தெரியும். ஆனால், நீரில் நீந்திச் செல்லும் மீனின் தடமானது கண்ணிமைக்கும் நேரத்தில் மறைந்துபோகும். தலைவன் மறைந்து போகும் இயல்புடைய செல்வத்தைத் தேடிச் செல்வது பொய்கை நீரில் மீன் நீந்திச் செல்வதோடு ஒப்பிடுவது மிகச் சிறந்த உவமையாகும்.

முடிவுரை

தமிழர் வாழ்வியலில் பிரிக்க முடியாதது நீரும் நீர் மேலாண்மையும். ***தொடர்ச்சி: பக். 95***

ISSN 2320-4842

சித்தர்களின் சமய நிலைப்பாடுகள்

ஜே. கௌரி ஆனந்த்
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர் (Ref.No.06965/Ph.D.K6/Tamil/PT/Re–Reg./March 2021)
நெறியாளர்: **முனைவர் சு. இரவிச்சந்திரன்**
முதல்வர், சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் தமிழ் உயராய்வுமையம், அரசர் கல்லூரி
திருவையாறு 613 204 (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச்சுருக்கம்

மனித சமூகத்தில் அச்சத்தின் காரணமாகவே கடவுள் நம்பிக்கையும் அதன் ஊடாகச் சடங்குகளும் சமயங்களும் பிறந்தன என்பர் மானிடவியலாளர். அந்த வகையில் சித்தர்கள் என்ற பிரிவினரும் அச்சத்தின் காரணமாகவே தோன்றினர். சித்தர்களின் அச்சம் என்பது சாதி, மத வேறுபாட்டாலும், சமய நம்பிக்கையாலும் இந்தச் சமூகம் அழிந்துவிடுமோ என்ற அச்சமேயாகும். சித்தர்களின் பாடல்களை மேலோட்டமாகப் பார்க்கும் போது அவர்கள் பக்தி மார்க்கத்தினர்போலக் காணப்படினும் வைதீகம், வழிபாட்டுச் சடங்கு ஆகியவற்றுக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்ததையும் வைதீக மதக் கொள்கைகள் பலவற்றைத் தாக்குவதையும் காண முடிகின்றது. சித்தர்கள் சமயத்திற்கு எதிரானவர்கள் என அறிஞர்கள் பலரும் சித்தர்களும் கூறியிருப்பினும் சமயத்திற்கு ஆதரவான கருத்துக்கள் அவர்தம் பாடல்களில் இல்லாமல் இல்லை.

கருவிச்சொற்கள் (Keywords): உருவ வழிபாடு, சமய நிலைப்பாடு, சமய மறுப்பு நிலை, சித்தர்கள்.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

இலக்கியம் மக்களின் வாழ்வியலைப் பிரதிப்பலிப்பதன்றி தத்துவக் கருத்துக்களை மக்களிடம் பரப்பும் ஊடகமாகவும் திகழ்கிறது. உலகாயதம், வேதம், ஆசிவகம், சமணம், பவுத்தம், வைசேஷிகம், சாங்கியம், நியாயம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. உலகாயதம், சைவம், வைணவம் ஆகியவை தென்னிந்தியத் தத்துவத்தில் முதன்மையானவையாகக் கருதப்படுகின்றன. இவ்வரிசையில் தமிழகத்தில் சித்தர் தத்துவம், சைவம் மற்றும் வைணவம் இரண்டிற்கும் ஏற்பட்ட முரண்பட்ட நிலையில் தமிழகத்தில் தோன்றித் தனித்த இடத்தைப் பெற்றுள்ளது. சைவம், வைணவம் ஆகிய தத்துவச் சிந்தனைகள் கொண்டு தனக்கான சைவம் மற்றும் வைணவ இலக்கியங்கள் உருவாக்கிக்கொண்டதுபோல் சித்தர் தத்துவச்சிந்தனைகளுக்கும் இலக்கியப் படைப்புக்கள் தோன்றியுள. தமிழ்நாட்டில் வாழ்ந்த சில சித்தர்கள் தம் காலத்தில் நிலவிவந்த சமூகக் கட்டமைப்பினை மாற்றுவதற்கான கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளனர். சித்தர் பாடல்களில் பெரும்பான்மை தத்துவப்பொருளில் அமைந்திருந்தாலும் தமிழ்ச் சமூக இயல்புகள் ஆங்காங்கே பதிவாகியுள்ளன. அவை சமயச் சார்பும் சமய நிலைக்கு மாறான கருத்தாக்கம் கொண்டதாகவும் அமைந்துள்ளது. இதனை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

சித்தர்கள் வாழ்வும் வரலாறும்

'சித்தம்' என்ற சொல்லுக்கு 'உள்ளம்' என்பது பொருளாகும். அந்த உள்ளத்தில் இறைவனைப் பரிபூரணமாக உறையச்செய்தவர்களே சித்தர்களாவர். சித்தர் என்னும் சொல்லுக்குத் தமிழ்ப் பேரகராதியில் *(Tamil Lexicon)* ***பதினெண்கணத்துள் ஒரு சாரார், பூரண அருளை அடைந்தோர், அஷ்டமாசித்தி அடைந்தோர் எனக் குறிப்பிடுகிறது*** (p.1410). சித்தம் எனும் சொல்லுக்கு முடிவான மனக்கொள்கை என்றும், சித்தன் என்னும் சொல்லுக்குச் சித்தி பெற்றோன், முருகக் கடவுள் என்றும் இச்சொல் முறையே பரிபாடல் (20:47), திருமுருகாற்றுப்படை (176) ஆகியவற்றில் பயின்று வந்துள்ளதைத் தமிழ்ப்பேரகராதி சுட்டுகிறது (p.1411). சித்தி எனும் சொல்லுக்கு மெய்யறிதல், வெற்றி, காரியம் கைகூடல், மோட்சம், அஷ்டமா சித்தி (Supernatural power) என்னும் பல பொருள்கள் கொடுக்கப்பட்டுள (p.1412). சித்தர் எனும் சொல்லுக்குத் தமிழ்ப் பேரகராதியில் கொடுக்கப்பட்ட பொருள்களில் வரலாற்று நிலையில் சித்தி பெற்றவர்கள், அருள் பெற்றவர்கள் என்பது மிக நெருக்கமாகப் பொருந்தி வருகின்றன (அருணாசலம், ப.290). சித்தர் என்னும் சொல்லோடு தொடர்புடைய சித்து எனும் சொல்லுக்கு மாயவித்தை, இரசவாதிகள் எனத் தமிழ்ப்பேரகராதி பொருள் கொடுத்துள்ளது. இவற்றின் அடிப் படையில் சித்தர் எனும் சொல் சித்திகள் கைவரப்பெற்றவர்கள் என்றும், முடிவான கொள்கையை உடையோர் என்றும் வரையறுக்கலாம்.

தொல்காப்பியத்தில் வரும் அறிவன், கணியன் ஆகிய பெயர்கள் சித்தர்களைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. ***மறுவில் செய்தி மூவகைக் காலமும்/ நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்*** (தொல். புறத்.16:4-5) எனும் நூற்பா விற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தரும் விளக்கங்கள் மேற்காட்டப்பட்ட கருத்தோடு ஒத்துள. (கணபதி,ப.25) நாட்டுப்புற வழக்காறுகளான பழமொழி யிலும், தமிழகஊர்ப்பெயர்களிலும் *சித்தர்க்காடு*, *சித்தர்* எனும் சொல்வழக்குப் பரவலாகக் காணப்படுகிறது. சித்தர்கள் யோகப் பயிற்சியில் நாட்டமுடையவர்கள், சமய, சமூக வாழ்வில் மரபாய் ஊன்றியிருந்த கண் மூடித்தனமான பழக்கவழக்கங்களைத் தம் பாடல் களில் சாடியிருக்கிறார்கள் (கைலாசபதி, பக்.186-187).

தமிழகத்தில் சித்தர்களின் எண்ணிக்கையைக் குறிக் கும்போது பதினெண் சித்தர் எனக் குறிப்பிடுவது மரபு. ***சீர் பெற்றோர் பதினெட்டுச் சித்தர்தாமே*** எனக் கருவூரார் பாடலுள் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் தமிழகத்தில் பல சித்தர்கள் காணப்படுகின்றனர். போகர், புலிப்பாணி ஆகிய சித்தர்கள் சீனதேசத்திலிருந்து வந் தவர்கள் என்ற கருத்தும் உண்டு. சித்தர்களிடம் வட நாடு, தென்னாடு என்ற வேற்றுமை இல்லை. வான்மீகர், தன்வந்திரி, பதஞ்சலி, அகத்தியர், திருமூலர், கோரக்கர் போன்ற சித்தர்கள் வடநாட்டினராலும் தென்னாட்டி னராலும் போற்றப்படுகின்றனர்.

தமிழியல் சார் அறிஞர்கள் சித்தர்கள் பற்றி ஆய்வு மேற்கொண்டு தம் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். அவற்றுள் தெ.பொ.மீ, க. கைலாசபதி, ஆ. வேலுப் பிள்ளை, கமில் சுவளபில், ஆ. சிவசுப்பிர மணியன், ச. மாடசாமி ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சித்தர்கள் பற்றிய வரை யறை சற்றுக் கூர்ந்து நோக்கவேண்டிய ஒன்றாகும். இவ் வரையறையை உணராது சித்தர் பாடல்களை எளிதில் வரையறுக்கஇயலாது. ***ஒரு குறிப்பிட்ட விலங்கு, தாவரம் (அல்லது குலக்குறி), இயற்கைப்பொருள், ஆவி, முன்னோர், முனிவர், தெய்வம் ஆகியவற்றில் எந்த ஒன்றின் ஆற்றல் மீதும் கொண்டுள்ள அனைத்து வகையான நம்பிக்கை களும், சடங்குகளுமே வழிபாட்டு மரபாகும் (cult). தெய் வீக அருளைப் பெற்ற மன்னர்கள் (divine kings) மழை தருவிப்பவர்கள், புனிதத் தலைவர்கள் போன்றவர்கள் தனித்த வழிபாட்டு மரபினை ஏற்படுத்துவர்*** (பக்தவத் சல பாரதி, ப.215) என்னும் கருத்தினுள் சித்தர் மரபினையும் உள்ளடக்கலாம் என்பர்.

பிற்காலச் சித்தர்கள் தோன்றிய காலப்பகுதி கி.பி. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகும். கி.பி. 7ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 14ஆம் நூற்றாண்டுவரை பக்தி இயக்கம் நிலைபெற்றது. அதனைத் தொடர்ந்து இஸ்லாமியப் படையெடுப்பின் விளைவாகத் தென்னிந் தியாவின் சமூகமும் அரசியலும் வீழ்ச்சியுற்றிருந்தன. தமிழகத்திலும் அரசியல் மற்றும் சமூகமரபுகளும் சீர் குலைந்திருந்தன என்பதை வரலாறு சுட்டியுள்ளது. பிற்காலச் சித்தர்கள் இவ்வகையான காலச் சூழலில் தோன்றிச் சமூக ஏற்றத்தாழ்வுக்கும் மூடநம்பிக்கைக் கும் எதிராகக் குரல் கொடுத்துள்ளனர். இந்தப் பின் புலத்தோடு பிற்காலச் சித்தர் பாடல்களைப் பார்க்கிற போது ***இவர்கள் இஸ்லாமியப் படையெடுப்பை ஒட்டிய காலத்தில் அல்லது, அதன் பின்னரே தோன்றியுள்ளனர் என்பது சிவவாக்கியர் பாடலில் வரும் குலாம் என்னும் உருது சொல் உறுதிப்படுத்துகிறது*** (அருணாச்சலம், ப. 292). ***இக்காலப்பகுதியில் சித்தர்களின் குரல் ஓங்கி ஒலித்த காலம் ஆகும். எனவே, இக்காலப் பகுதியைச் சித்தர்காலம் என வழங்கக் காணலாம்*** (மாடசாமி, ப. 16) எனக் குறிப்பிடுவர். ***தமிழகத்தில் சித்தர்கள் காயச் சித்தர்கள், ஞானச்சித்தர்கள், சன்மார்க்க சித்தர்கள் என்ற முப்பிரிவினுள் சேருவர். தமிழகத்தின் தேவார ஆசிரியர் களுக்கு முன்வாழ்ந்த சித்தர்கள்பலர். அவர்களுள் திருமூல ரையும் அவருடைய சீடர்களையும், சீடர்களுக்குச் சீடர் களையும் ஈண்டு முற்காலச் சித்தர்கள் என்கின்றோம்*** என்பர் (செல்வம், ப.142)

சமயம் தொடர்பான கருத்துக்கள்

சித்தர்கள் தாம் சார்ந்த சமயத்தின் மீது பற்றும் பிற சமயங்கள் மீது வெறுப்பும் காட்டக்கூடியவர்களாக இருந்துள்ளதை பாடல்கள் வழியாக காணமுடிகிறது. சமயத்தின் மீது பற்றுக்கொண்டு ஒருவர் மீது ஒருவர் அன்பு காட்டினாலே இறைவனை அடையலாம்,

எள்ளளவும் அன்பகத்தில் இல்லாதார் முக்தி எய்துவதும் தொல்லுலகில் இல்லை (பாம்.சித்.பா.89) என்ற பாட லில் பாம்பாட்டிச்சித்தர் அன்பின் அவசியத்தை வலி யுறுத்துகின்றார். எச்செயல் செய்தாலும் இறைவனை நினைந்தே செய்யத்தொடங்க வேண்டும் என்னும் சிந்தனை கொண்ட இவர்,

பாடுபடும் போதுமாதி பாதம் நினைந்தே
பன்னிப்பன்னிப்பரவிநின் றாடு என்று பாடுகின் றார். இவருடைய பல பாடல்கள் யோக நெறி, பக்தி நெறி, புறப்பூசை போன்றவற்றைப் பழிக்கும் வகை யில் அமைந்துள்ளன. சித்த நெறியினர் காயகற்பம் (உடலினை உறுதியாக்கி, முதுமை வாராது தடுக்கும் சித்தவைத்திய மருந்து) தேடி அலைய வேண்டிய தில்லை என்பதை,

மெய்ப்பொருள் கண்டு விளங்கும் மெய்ஞ்ஞானிக்குக் கற்பங்கள் ஏதுக்கடி-குதம்பாய் (குதம்பைச் சித்தர், பா.2)

பதினெண் சித்தர்களில் ஒருவர் போகர் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். இவர்தம் இயற்பெயர் போகநாதன். இவர்தம் பாடல் களில் போகநாதன், போகரிஷி எனத் தம்மைக் கூறிக்கொள்கிறார். இவர் சமயம் சார்ந்த பாடல்களில் புராணக்கருத்துக்களும் வழிபாட்டு மரபுகளும் காணப் படுகின்றன.

தயானிதியாம் சிவனுமணக் கோல மாகி
நந்துமேதான் நவரத்தி னபீடத்தன்னில் (போகர் ஏழாயிரம், பா.2933)

மேற்கண்ட பாடலில் போகர், சிவன் மற்றும் பார்வதி யின் திருமணத்தைத் தேவர்கள் மற்றும் பூதகணங்கள்

முன்னிலையில் பிரம்மதேவன் நடத்திவைத்தார் என்ற குறிப்பு காணப்படுகின்றது. இக்குறிப்பு இதற்கு முன் வேறு எந்தச் சித்தர் பாடல்களிலும் காணப்படவில்லை. போகரே முதன்முதலாக இக்கதையைக் கூறியுள்ளார் என்பதை அறியமுடிகின்றது.

கூறுவேன் புலிப்பாணி மன்னாகேளு
கொற்றவனார் காலங்கி சொன்ன நீதி
பேறுடைய வையகத்தின் ஸ்தலங்களெல்லாம்
பேர் வகுத்துச் சீர்வகுத்துப் பிரித்துச் சொன்னார்(போகர், பா.6910).

தன் குருநாதர் காலாங்கிநாதர் 1008 புண்ணிய சிவ ஆலயங்களின் பெயரினைப் போகருக்குக் கூறியதாகவும், போகர் தன் சீடன் புலிப்பாணிச் சித்தனுக்கு 1008 சிவாலயங்களில் பெருமையினைக் கூறுவதாகவும் இப்பாடல் அமைகின்றது.

சமய மறுப்பு நிலை

சமயங்களில் கூறப்படுகின்ற கருத்துக்களை மறுத்தும் எதிர்த்தும் கூறும் போக்கினைச் சித்தர் பாடல்களில் காணமுடிகின்றது. திருமாலின் மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கிருஷ்ணன், கல்கி என்ற 10 அவதாரங்களும் சித்தர்களேயாகும். அவர்கள் கடவுள் இல்லை என்றும் அவர்தம் பெயர்களை மச்சரிஷி, கூர்மரிஷி, வராக ரிஷி, வாமரிஷி, பரசுராமரிஷி, பலராமரிஷி, ராம ரிஷி, கலிக ரிஷி, பௌத்த ரிஷி எனவும் போகர் கூறுவதாகப் போகர் ஏழாயிரத்தில் பாடல் உள்ளது.

பாத்தாரே நரசிங்க ரிஷியார் தம்மைப்
பட்சமுடன் காலங்கி காணும் போது
தீர்த்தமுடன் ரிஷியாரின் தவசின் வேடம்
திரேகமெல்லாச் சிம்மத்தின் ரூபமாகும்.
நேர்த்தியுள்ள வர்ணமது தங்கவர்ணம்
நேர்மையுடன் வையகத்தில் இருந்த சித்து
ஆர்த்ததொரு திருமுகம் மனிதரூபம்
அப்பனே தவநிலையை அறித்திட்டாரே (போகர், பா. 6881)

சித்தர்கள் சிவனைத் தங்கள் இறைவனாக எண்ணி வழிபடுகின்றனர் என்பது சைவ சமயத்தாரின் கருத்தாகும். திருமாலின் 10 அவதாரங்களும் சித்தர்களே எனக் கூறுவதன் மூலம் திருமாலைச் சைவசமயத்துள் ஒருவராகச் சித்தரிக்க முயற்சிக்கின்றனர் என்று எண்ணத் தோன்றுகின்றது. சித்தர்களின் கடவுள் சிவன். எனவே திருமாவின் 10 அவதாரங்களும் சித்தர்கள் எனில் சிவனே அவர்களுக்கும் கடவுள். எனவே சிவனே பெரியவன். திருமால் அவனை வழிபடும் பலருள்ஒருவன் என்பதனை மக்கள் மனத்தில் மறைமுகமாகப் பதியவைக்க இத்தகைய பாடலை எழுதியுள்ளாரா என்று எண்ணத் தோன்றுகின்றது. மேலும் ஒருபாடல் திருமாலைப் பற்றிப் போகர் ஏழாயிரத்தில் இடம்பெற்றுள்ளது.

கோடியாம் இன்னமொரு கூத்து கேளீர்
கூறுகின்ற மானிடர்கள் அறிய என்று
நாடியே கிருஷ்ணாவ தாரன் அப்பா
நலமான துவாரகையில் பிறந்தார் கண்டிர்
தேடிலே லோகத்து மங்கைமாரை
தேற்றமுடன் சிறையது தானெடுத்தார் (பா.3523)

திருமால் கிருஷ்ணாவதாரம் எடுத்து துவாரகையில் பிறந்து அங்கிருந்த பல பெண்களின் தொடர்பு கொண்டவர். இறுதிக்காலத்தில் பல பழிபாவங்களுக்கு ஆளாகி இறந்துபோனார் என்று போகர் கூறுவதாகப் பாடல் ஒன்றுள்ளது. சித்தர்கள் உருவ வழிபாட்டையும், புராணக் கதைகளையும் ஏற்காதவர் என்பதால் இவ்வாறு எழுதியிருக்கலாம் என்ற எண்ணம் தோன்றினாலும் உண்மையில் இது திருமாலைக் கடவுளாக வழிபடும் மரபினரை அல்லது அவர்கள் பின்பற்றும் சமயத்தை அழிக்கப் பிற சமயத்தார் செய்த செயலாகவே எண்ணத் தோன்றுகின்றது. நாம் கடவுள் என்று வணங்கும் ஒன்றைச் சித்தர்கள் கடவுளாக ஏற்கவில்லை. அப்படி இருக்கையில் போகர் பாடல்களில் சிவனை உயர்த்தியும் திருமாலைத் தாழ்த்தியும் பாடியிருப்பது நம்மைச் சிந்திக்கவைக்கின்றது.

சித்தர்களின் சாதி, சமய, உருவ வழிபாட்டு எதிர்ப்பு நிலை

சித்தர்கள் சமயச் சார்பினர் எனினும் சமய எதிர்ப்பாளராகவும் இருந்துள்ளதைக் காணமுடிகின்றது. ***சித்தர்கள் பேரண்டத்தைப் பொருளாகவும் ஆற்றலாகவும் கண்டனர்; சித்தர்கள் ஆழ்ந்த சமயக்கருத்தினர். அவர்கள் உருவ வழிபாட்டை அறிவற்ற செயல் என்றனர். சமயச் சடங்குகளையும் வரவேற்கவில்லை, என்றாலும் அவர்களுடைய சமய நோக்கில் நாத்திக வாதமெழவில்லை; பகுத்தறிவின் முனைப்பைக் காணலாம். அறிவை விஞ்ஞான நோக்கில் பயன்படுத்திய அவர்கள் உடம்பினுள்ளே உறுபொருளை நோக்கினர்*** (செல்வம், ப.142) என்பது போலவே சித்தர்கள் சமயத்தில் புதுமையைக் காண விழைந்தனர்.

சிவவாக்கியர் பாடல்களில் இத்தகைய கருத்துக்களை அதிகம் காணமுடிகின்றது. ***நட்ட கல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே*** (513), ***பறைச்சியாவ தேதடா பணத்தியாவ தேதடா*** (33), ***கோயிலாவ தேதடா குளங்களாவது ஏதடா*** (34), ***கண்டகோயில் தெய்வம் என்று கையெடுப்பதில்லையே***(257), ***சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம், நாட்டுக்கொரு கோயிற்கட்டி நாளும் பூசித்தோ*** (பாம்பாட்டி., பா.94) இதுபோன்று எண்ணற்ற பாடல்கள் மூலம் சித்தர்கள் தம் சாதி, சமய, எதிர்ப்பைப் பதிவுசெய்துள்ளனர்.

முடிவுரை

சித்தர்கள் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்களில் வாழ்ந்தாலும், உருவ வழிபாடு, சடங்குமுறைகள், சாதி, மூடபழக்கவழக்கங்கள் எதிர்ப்பு முதலியவற்றில் ஒருமித்த கருத்தினராராக விளங்கியுள்ளனர். சித்தர்கள் மனித நேயத்தினை மட்டுமே முதன்மையாகக் கொண்டவர்கள் என்பது இவர்கள் பாடல்கள் வழி அறியமுடிகிறது. போகர் திருமாலை எதிர்ப்பவராக

வும் சிவனைப் போற்றுபவராகவும் இருவேறுபட்ட நிலையினராக இருப்பதற்குப் பிற சமயங்களின் தாக்கம் இருக்குமோ என்கிற எண்ணத்தினை ஏற்படுத்துகிறது.

துணைநூற் பட்டியல்

அருணாசலம், மு., *தமிழ் இலக்கிய வரலாறு (14, 15, 16ஆம் நூற்றாண்டு)*, தி பார்க்கர், சென்னை, 2005.

கணபதி, டி.என்., *தமிழ்ச் சித்தர் மரபு*, ரவி பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2004.

கைலாசபதி, கலாநிதி க., *ஒப்பியல் இலக்கியம்*, பாரி, நிலையம், சென்னை, 1969.

91ஆம் பக்கத் தொடர்ச்சி

சங்க இலக்கியங்கள் முழுவதும் பாடுபொருளாக நீர் இடம்பெற்றுள்ளது. நீரை வானத் தில் தேடாமல் பூமியில் உருவாக்க வேண்டும் என்ற உயரிய கோட்பாட்டை மதித்துத் தமிழர்கள் அதனை நடைமுறைப்படுத்தினர். நீருக்கு மூல ஆதாரமாக உள்ள மரங்களை மதித்துப் போற்றினர். சங்ககாலச் சோழர் களில் கரிகால் பெருவளத்தான் காவிரிக்குக் கரை எடுத்தான் எனப் புறநானூறு பேசுகிறது. இவ்வாறு நீரைப் பாதுகாப்பது பற்றியும் தமது தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வது பற்றியும் நற்றிணை மிகத் தெளிவாகப் பேசுகிறது. நீர் என்ற சொல்லை எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகப் பயன்படுத்தாமல் அதன் பயனுக்கு ஏற்ப, நீர் இருப்பிடத்திற்கு ஏற்ப, இருக்கின்ற இடத்திற்கு ஏற்பப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

துணைநூற் பட்டியல்

சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ.), *நெடுநல்வாடை மூலமும் உரையும்*, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி, 1967:1-188.

நாகராசன், வி. (உ.ஆ.), *பட்டினப்பாலை*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, மூன்றாம் பதிப்பு, 2007.

102ஆம் பக்கத் தொடர்ச்சி

உடலை வளர்த்தலை விடுத்து உயிர் சிறக்க உற்ற வழி தேடுவதுமே சாலச் சிறந்த வழி என்பதனைத் திருப்புகழின் நிலையாமைக் கொள்கைகள் உணர்த்து கின்றன.

துணைநூற் பட்டியல்

இளம்பூரணர், தொல்காப்பியம் (பொருளதிகாரம்), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.

உஷாராணி, சு., பாரதியார் கவிதைகள், வர்த்தமானன் பதிப் பகம், சென்னை, 2019.

செல்லம், வே.தி., *தமிழகம் வரலாறும் பண்பாடும்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

பக்தவத்சல பாரதி, *தமிழர் மானிடவியல்*, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2002.

மாடசாமி, ச., *பாம்பாட்டிச் சித்தர்*, அருவி பதிப்பகம், மதுரை, 2004.

மெய்யப்பன், ச., *சித்தர் பாடல்கள்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2006.

மோகன், ஆர்.சி. (ப.ஆ.), *போகர் ஏழாயிரம்*, தாமரை நூலகம், சென்னை.

Tamil Lexicon, University of Madras, vol.3, 1982.

நிஷாநேவிஸ், நே. (க.ஆ.), "சங்க இலக்கியத்தில் மீன் உணவும் பண்பாடும்," *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 5, இதழ் 1, ஜூலை 2022.

பாலசுப்பிரமணியன், கு.வெ. (உ.ஆ.), *நற்றிணை (மூலமும் உரையும்)*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 3 ஆம் பதிப்பு, 2007.

---. *புறநானூறு (மூலமும் உரையும்)*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2007.

பாலசுப்பிரமணியன், கு.வெ. (ப.ஆ.), *பத்துப்பாட்டு தொகுதி-2: பட்டினப்பாலை*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 3 ஆம் பதிப்பு, 2007.

பொற்கோ, *ஆய்வியல் நெறிமுறைகள்*, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 7 ஆம் பதிப்பு, 2016.

மஹேஷ்வரி, அ.செ., "பழந்தமிழரின் நீர் மேலாண்மைக் கட்டமைப்பு", *சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்*, தொகுதி 8, இதழ் 2, அக்டோபர் 2023.

முஹம்மது அஸ்ரின், ஷா., "பழந்தமிழ் நாட்டில் பண்டமாற்று முறை வணிகம்", *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 6, இதழ் 1, ஜூலை 2023.

மைக்கேல் ராஜ், இ., "பழந்தமிழ் இலக்கியங்களில் நீர்நிலைகளும் நீர் மேலாண்மையும்", *மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்*, தொகுதி 3, இதழ் 7, 2023:71-77 (doi: 105281/zenodo.7690477).

ராமசுப்பிரமணிய ராஜா, மு.ந. (உ.ஆ.), *திருக்குறள்*, கொற்றவை வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 2017.

கண்ணப்ப முதலியார், தமிழ் மந்திரம், வானதி பதிப்பகம், சென்னை, 1965.

செங்கல்வராய பிள்ளை, திருப்புகழ், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2000.

பரிமேலகர், திருக்குறள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1962.

புலியூர் கேசிகன், புறநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை, 2010.

மாதவன், சு., தமிழ் அற இலக்கியங்களும் பௌத்த சமய அறங்களும், செம்மொழிப் பதிப்பகம், தஞ்சாவூர், 2008.

ஸ்ரீசந்திரன், நாலடியார் மூலமும் தெளிவுரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1989.

Be who you are and say what you feel, because those who mind don't matter, and those who matter don't mind. — Bernard M. Baruch

ISSN 2320-4842

'கூத்தாயி' நாவலில் பண்பாடு

ச. தென்றல் ஜான்சி
முனைவர் பட்ட ஆய்வாளர் (Ref.No.:BDU2010632778564, dt: 09.10.2023)
நெறியாளர்: **முனைவர் வெ. அமுதா**
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுமையம், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கல்லூரி (த), தஞ்சாவூர் 613 007 (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச்சுருக்கம்

உரைக்கப்படும் கருத்துக்கள் உயராத நிலைமையினையும் சமுதாயத்தில் நடப்பவற்றை, நடந்துகொண்டிருப்ப வற்றைக் கதைக்களமாகக் கொண்டு மக்களின் வாழ்வியல் போராட்டங்களையும் வார்த்தைகளின் வலிமை யோடு வடிவமைத்துக் கற்போர்க்குக் காட்சியாகக் கண்முன் நிகழ்த்திக் காட்டும் பாங்கு ஆசிரியரின் அறிவுத் திறம் என்பர். மனிதமும், மனித உரிமையும், வாழ்வியலின் அடிச்சுவடாக அமையும். கலாச்சாரமும் பண் பாடும் அனைவரையும் ஒன்று சேர்க்கும் சமுதாயமாக இப்பூமியானது நகரும், நகர்த்த வேண்டும். அது நிகழாவிடில், சில சமூகங்கள் அவலநிலைக்கு ஆட்பட்டு, நாகரிக ஒழுங்குக்குத் தாக்குப் பிடிக்காது அழிந்து விடும். இந்த எச்சரிக்கையுணர்வு கலந்த மானுடம் சார்ந்து எழுதப்பட்டுள்ள நாவல் 'கூத்தாயி.' இந்நாவலில், ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டாரம் கீழையூர் கிராமப் பகுதியில் ***வாழ்ந்து மறைந்த வரலாற்றுச் சின்னமாகிய கூத்தாயிக்கு மனித நேயமோ அல்லது அதன் பொருளோ 'அந்த அத்தைக்கு'த் தெரியாது*** எனும் சொற்றொடர்களுக்குப் பொருத்தமான தலைமைப் பெண் பாத்திரம் கூத்தாயி ஒரு விவசாயக் குடும் பத்தைச் சேர்ந்தவள். மேற்குறிப்பிட்ட பகுதி மக்களின் வாழ்க்கையில் கூத்தாயியின் செயல் (செல்வாக்கு - Influence) பற்றி இக்கட்டுரையில் பேசப்படுகிறது.

கருவிச் சொற்கள் (Keywords): கூத்தாயி, குமார், அன்பு, உதவி, நம்பிக்கை, விருந்து, விதவை மறுமணம், பண்பாடு

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

எழுத்தாளனுடைய வாழ்க்கை அனுபவங்களைப் பிறருக்குத் தெரிவிக்கும் கலைப்படைப்புகளே இலக்கியங்க ளாகின்றன. ஒரு படைப்பாளியைப் பொதுவாக இலக்கியம் படைக்கத் தூண்டுவதே அவன் வாழும் சமுதாய மும் சுற்றுப்புறச் சூழலும்தான். அவற்றோடு மனிதனுக்கு ஏற்படும் உராய்வுகளும் ஆகும். தமிழ் நவீன இலக் கியங்களில் ஒன்று நாவல். இவ்விலக்கியம் பொதுவாக மையக் கருத்துக்களால் வெகு முக்கியத்துவம் வாய்ந் தவையாக அமைகின்றன. பாத்திரப்படைப்புக்கள் மற்றும் நாவல்களின் கதைச்சூழல்கள் படிப்போரின் கவனத்தை ஈர்த்துவருகின்றன. நடந்தேறிய பல வரலாற்று உண்மைச் சம்பவங்களின் விளைவுகளையும் பிரதிபலிக்கும் திறன் கொண்டதாக இலக்கியவுலகில் தனி இடம் பெற்றுவருகின்றது நாவல் இலக்கியம். ***நாவல் என்பது கதை அல்ல; அது ஒரு சமூகத்தின் ஆவணக் காப்பகம்; நாவல் எழுத்தாளர் என்பவர் கதை சொல்லி அல்ல; ஒரு சமூக விஞ்ஞானி*** (பஞ்சாங்கம், ப. 135) என நாவல் இலக்கியம் இருபதாம் நூற்றாண்டில் வந்திருக்கின்ற அளவிற்கு எடுத்துரைக்கப்படவில்லை; உரையாடல் நடத்தப்பெற வேண்டும் என்று வேண்டுகோளினை மேற்படி கூற்று காட்டுகிறது. இக்கட்டுரைக்கு முதன்மை ஆதாரமாகக் கொள்ளப்பட்ட 'கூத்தாயி' நூலுக்கு 'எழில் முதல்வன்' என்கிற நாவல் இலக்கியத் திறனாய்வளர் மா. இராமலிங்கம், ***அண்மைக் காலத்தில் நான் படிக்க நேர்ந்த மிகச் சிறந்த நாவல்களில் பேராசிரியர் சுபாஷ் சந்திரபோஸ் எழுதிய 'கூத்தாயி' முதலிடமும் முக்கிய இடமும் பெறவல்லது*** எனும் மதிப்பீட்டையும், ***ஆராய்ச்சியில் வரையறுத்துக்கொண்டால்தான் ஆய்வு சரியாக நிகழ்த்த முடியும்*** (பொற்கோ, ப. 81) எனும் கருத்தையும் ஏற்று இந்நாவல் உணர்த்தும் முக்கிய மூன்று பண்பாட்டுக் கூறுகள் பற்றி விளக்குகிறது இக்கட்டுரை.

நோக்கம்

'கூத்தாயி' நாவலின் தலைமைப் பெண் பாத்திரம் கூத்தாயி. இப்பாத்திரத்தின் இயக்கச் செயல் அறிவுபூர்வ மாகவும், ஈவு இரக்கம் நிறைந்த மனத்துடனும் அவள் நிறைவேற்றியிருக்கும் ஒருசில கரணங்களை எடுத்துக் காட்டி இன்றைய சமுதாயத்திற்குத் தெளிவுபடுத்துவதும்; பண்பு என்ற சொல்லுக்கு ***அழகு, பிறர் இயல்பை அறிந்து நடக்கும் நற்குணம், செய்கை, தகுதி, மனத்தன்மை, விதம்*** (சண்முகம் பிள்ளை, ப.713) என்று *தமிழ்* -

தமிழ் அகர முதலி குறிப்பிடும் பொருள்களை ஆய் வது இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

கருதுகோள்

மனிதப்பிறவி எடுத்ததன் நோக்கம், தனக்காக மட்டு மன்றிப் பிறருக்காகவும் வாழ்வதற்காகவேதான். ஐந் தறிவு படைத்த உயிரினங்களும் விலங்கு, பறவைகள், மரஞ்செடிகொடிகள்கூடத் தம்மைச் சார்ந்தவைகட்காக வும் வாழுகின்றன. இந்த வகையில், மரபு சார்ந்த பண்பாட்டு விழுமியமே கூத்தாயி பாத்திரம் என்பதே இந்த ஆய்வுக் கட்டுரையின் கருதுகோள்.

நல்ல நாவல்

ஒரு நல்ல நாவலை ஆழ்ந்து வாசித்து முடித்து மூடி வைக்கிறபோது எனக்கு என்னைப் பற்றியும் என்னைச் சுற்றியிருக்கிற உலகைப் பற்றியும் அதுவரை நான் தெரிந்து வைத்திருக்கிற விடயங்களைவிட அது அதிகம் தெரியப்படுத்தியிருக்க வேண்டும். இவ்வளவுதான் நான் எதிர்பார்ப்பது. ஒரு நல்ல நாவல் என்று நான் நினைப் பதும் அதுதான். அது உணர்வுபூர்வமான அனுபவத்தை ஏற்படுத்த வேண்டும். I certainly feel with heart. இது ஆன்மீக அனுபவம் அல்ல. மனித உறவு நிலை, வேறு எதைச் சொல்ல முடியும் (ப.24) எனக் கி. நாச்சி முத்து, கா. சிவத்தம்பியை மேற்கோள் காட்டி விளக்கு வதிலிருந்து நல்ல நாவல் எது எனத் தெளியலாம்.

தமிழ் நாவல் இலக்கியம்

தமிழில் நாவலிலக்கியம் செழித்து வளர்ந்ததற்குச் சில முற்படுகளாக: பல்லாயிரக்கணக்கான நூல்கள் உற் பத்தி செய்யும் எந்திர வசதியும்; படித்து இன்புறத் தக்க கல்வியறிவும்; பரந்துபட்ட வாசகர் கூட்டமும்; போதிய ஓய்வு நேரமும் ஆகியனவே இன்றியமை யாதனவாக இருந்தன; இருக்கின்றன. அவை,

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாவலிலக் கியத்திற்கு இன்றியமையாச் சூழ்நிலை வந்து பொருந்தி யது. இந்தியதேசிய மறுமலர்ச்சியின் முன்னணியில் நின்ற கல்வி கற்ற மத்தியதர வர்க்கத்தினரே நாவல் முதல்வ ராகவும் விளங்கினர். தமிழ் நாவலின் ஆரம்ப காலத்தில் எழுதியவர் யாவரும் ஆங்கிலம் கற்றவரே. அச்சிறப்புத் தகுதியால் புத்திசீவிகளாய் வாழ்ந்தவர்கள். உதாரணமாக வேதநாயகம்பிள்ளை(1826-1889) அரசாங்கத்தில் முன்சீபு உத்தியோகம் செய்தவர். சரவணமுத்துப் பிள்ளை உயர் குடும்பத்தில் பிறந்து அரசாங்க சேவையிலிருந்தவர். ராஜமையர் (1872-1898) பத்திரிகையாளராகக் கடமை யாற்றியவர்.மாதவையர(1872-1925) உப்பு-சுங்க இலாகா வில் பணிபுரிந்தவர். எம்.ஏ. தேர்விற்குப் படித்தவர். சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்ற உறுப்பினரா யிருந்தவர். நடேச சாஸ்திரியார் (1859-1906) ஆங்கிலத் திலும் தமிழிலும் எழுதியவர். சென்னை அரசாங்கப் புதைபொருளாராய்ச்சிப் பிரிவில் வேலை பார்த்தவர் ... பரிதிமாற் கலைஞரென் றழைக்கப்பட்ட சூரிய நாராயண சாஸ்திரியார் (1870-1903) கல்லூரி விரிவுரையாளராக வும் பத்திரிகையாளராகவும் இருந்தவர். நாவலிலக்கிய முன்னோடிகளாயும் வழிகாட்டிகளாயும் விளங்கிய இவர்கள் யாவரும் மத்தியதர வர்க்கப் பிரதிநிதிகள் என்பதில் யாதும் ஐயுற வேண்டியதில்லை (கைலாசபதி, ப.31)

இச்சான்றின்வழி ‘கூத்தாயி‘ நூலாசிரியர் முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ், கல்லூரியில் பேராசிரியரா கப் பணிபுரிந்தவர். அவர் தமிழ் இலக்கண இலக்கி யம் படைத்திருக்கும் எழுத்தாளர். நல்ல விமரிசகர். மேற்குறித்த பிற்புலத்தில் அவர் கூத்தாயி நாவலை படைத்துள்ளாற். இந்நாவல் மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்த குடும்பப் பின்னணியில் தோன்றிய பிரதிநிதி யின் சமூக அக்கறையின் வெளிப்பாடாகும். சமகா லப் படைப்பாளர்களின் நாவல் கதைப் பின்புலக் கருத்தாக்கங்களை எவ்வாறு பிரதிபலித்துக் கொண் டிருக்கின்றனர் என்பது பற்றிய ஆய்வாளரின் நுணு கிய பார்வை ஆய்வேட்டில் விளக்கமாக இடம் பெறும்.

ச.சுபாஷ் சந்திரபோஸ் நாவல்கள்

உள்ளத்தில் எழும் உணர்ச்சிகள் படைப்புகளில் பதிவு செய்யப்படுகின்றன. படைப்பாளன் சமூகத்தைக் கூர்ந்து நோக்கி அனுபவக் கூறுகளைத் தேர்ந்தெடுத்து அவற் றைப் படைப்பில் இணைக்கிறான். ஒவ்வொரு படைப் பாளனும் வெவ்வேறு வகையில் கருப்பொருளைத் தேர்ந்தெடுத்து அழகியல் நோக்கில் படைப்பதால் ஒவ்வொருவருக்கும் உரியதொரு தனித்தன்மை அவ ரவர் படைப்புகளில் வெளிப்படுகின்றன. இத்தகைய தனித்தன்மைகள் பெற்ற படைப்பாளரையே இலக்கிய வுலகில் வலம்வரச் சமூகம் அனுமதிக்கிறது. இவ்வகை யில் வரலாறு, வட்டார மரபு ஆளுமை கொண்ட படைப்பாளராக ச. சுபாஷ் சந்திரபோஸ் விளங்குகி றார். இயல்பிலேயே முற்போக்குச் சமூகநோக்குப் பெற்றுள்ள படைப்பாளர். தமிழ்ப் பேராசிரியராகப் பணி ஆற்றியிருப்பதால் இலக்கியங்கள் படைப்பதில் (36 நூல்கள்) சிறந்து விளங்கும் இவர் எளிய யதார்த்தப் பார்வையில் தம் படைப்புகளில் வட்டார வாழ்வைப் பதிவுசெய்துள்ளார். எந்தவொரு பொரு ளாக இருந்தாலும், அதன் தனித்தன்மை உணர்ந்து 1. அக்கினிக் குழந்தைகள், 2. கால வெள்ளம், 3. கூத்தாயி, 4. சாம்பவான் ஓடைச் சிவராமன், 5. பயிர் முகங்கள், 6. பொதுவுடைமைப்போராளி ஏ.எம். கோபு, 7. மலைப்பாம்பு மனிதர்கள், 8. மாவீரன் வாட்டாக் குடி இரணியன் ஆகிய எட்டு நாவல்கள் படைத்துள் ளார். அவை இலக்கியவுலகில் தனித்த அடையாளம் காட்டுபவை. இவற்றுள் ஒன்றே ‘கூத்தாயி’ நாவல்.

பண்பாடு - ஒரு விளக்கம்

பண்பாடு என்பதற்குத் திருந்திய ஒழுக்கம் என்பர். ‘க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி’ பண்பாடு எனும் சொல்லுக்குக் ***குறிப்பிட்ட நாடு, இடம் போன்ற வற்றைச் சேர்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கை கள், மதம், மொழி, கலைகள், சிந்தனை வெளிப்பாடு, வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டிருக்கும் பொருள்கள் போன்றவற்றின் மொத்தம்; கலாச்சாரம்*** (ப.887) என்று

விளக்குகிறது. மேலும், பண்பாடு பற்றிச் சான்றோர் கருத்துரைகள் வருமாறு:

பண்பாடு என்பது பண்பட்ட நிலை அதாவது எண்ண மும் சொல்லும், செயலும், திருந்திய நிலை எல்லா ருடைய இயல்புகளும் அறிந்து ஒத்து நன்னெறியில் ஒழுகுபவர் பண்பாடு உடையவர் ஆவார் என லெ.ப. கரு. இராமநாதன் செட்டியார் (ப.112) விளக்குவர்.

பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கட் கூட்டம் தனது சமூக, வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள் ஆத்மார்த்தக் கருத்துக் கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகிய வற்றின் தொகுதியாகும் எனக் கார்த்திகேசு சிவத்தம்பி (ப.5) விளக்குவர். பண்பாடு பற்றிப் பலதுறை அறி ஞர்கள் கூறியுள்ள வரையறைகள்: *குரோபரும் (Kroober) குளுக்கனும் (Kluchohn)* நூலில் தொகுத்துக் கூறப் பட்டுள்ள மூன்றில் இரண்டாவது கூற்றினை வாழ் வியற் களஞ்சியம், ***தலைமுறை தலைமுறையாக மக்கள் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்க வழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு என்பார் இலப்பியர் (Lapicre)*** (ப.16) என்று எடுத்துக்காட்டி விளக்கமளிக்கிறது.

கூத்தாயி விதைத்த விருந்து

பண்டைத் தமிழர்களிடம் இருந்து வரும் பண்பாடு என்ற வழக்கம் கூத்தாயி (பாத்திரத்தின்)வழி ஆசிரி யர் ச.சுபாஷ் சந்திரபோஸ் சமூகத்திற்கு,

எனக்கு விருந்தாக்குனப்ப, கோழிக்கறிய எடுத்து 'அதுக்கி அதுக்கி' எலும்பு இல்லாம போட்டத என்னால இன்னும் மறக்க முடியல மாமா; பெத்த தாயிகூட அப்படிப் போட்டதுல்ல.

ஒனக்கு மட்டுமில்ல; எல்லாருக்கும் அத்த அப்படித் தான் பாத்துப் பாத்துச் செய்யும் (ப.24) என்ற உரை யாடலில் தமிழர்களிடம் வழங்கிவரும் பழக்கத் தினை (ஆண் தலைமைப் பாத்திரம்) குமார் பின் வருமாறு பேசுகிறார்: ***வாசிடம் சொல்லும்போது தனக்கு அத்தை விருந்தாக்கியது நினைவிற்கு வந்தது. அநேனகமாக இந்தப் புதுவிருந்து முறையை அத்தை தான் (கூத்தாயி) உருவாக்கி இருக்க வேண்டுமெனக் குமாருக்குப் பட்டது*** (24) என்று குறிப்பிடுகிறார். இது தற்காலத்தில் நடைபெறும் திருமணம், விழாக் கள் போன்றவற்றில் நடக்கும் விருந்து முறையில் மாறுபட்டுக் காணப்படும் நிலையை உணரச் செய் கிறது. அதாவது மரபுசார்ந்த வாழ்க்கையில் குடும்ப விழாக்கள், கோயில் விழாக்கள் போன்றவற்றில் இன்றைய இளைய சமுதாயத்தினரால் கடைப்பிடிக் கப்படும் முறைதவறிய நிலை மாற்றப்பட வேண் டும் என்று ஆசிரியர் சுட்டுவது எண்ணத்தக்கது.

விதவைக்குத் திருமணம் நடத்தி வைத்தல்

இந்த நாவலில் கூத்தாயியின் அப்பா அருணாசலம் அம்மா அஞ்சலை. கூத்தாயியின் உடன் பிறந்தோர் அண்ணன் சுப்பிரமணியன், தங்கை முருகாயி. சுப்பிரமணியன் மனம் சராசரி மனிதனைப் போல் இல்லாதவன். எப்பொழுதும் எதையோ வெறித்தப் பார்த்தபடியே இருப்பான். ***மனநிலை சரியில்லாதவனுக் குக் கல்யாணம் செய்தால் சரியாகி விடுவானாம்*** (ப. 97). இதனால், தந்தை அருணாசலம் குடும்பச் சொத்துக்கு வாரிசு இல்லாமல் போய்விடுமோ என்ற நல்ல எண்ணத்தில் கூத்தாயி மனம் எண்ணுவதாக, பெரியோர்சொல்கேட்டு நடப்பது எந்தவொரு மனித ருக்கும் உயர்வைக் கொடுக்கும் என்பர். அதுபோல் அப்பாயி அழகம்மா சொன்னது கூத்தாயிக்கு அடிக் கடி நினைவுக்கு வருகிறது. இந்த நிலையில், ***அப்பா அண்ணனுக்கு ஒரு பொண்ணப் பார்த்துக் கலியாணம் பண்ணனும்*** (ப.96) என்று கூத்தாயி சொன்னதும், ***பொண்ணு எங்கயும் பாத்து இருக்கியா?*** என்று கேட்டு விட்டுக்கொஞ்ச நாழி யோசித்துக் கொண்டிருந்தவர், ***நான் எந்தப் பொண்ணையும் நெனச்சுப் பாக்கல; தோட் டம் நெலக்கிறதுக்கு முன்னாடி தென்னம்புள்ள எங்க போடுறது; நீயே பொண்ணப் பாரு; கேளு; கோயிலுல கொண்டு வச்சுத் தாலி கட்டியாந்துடுவோம்*** (ப.96) என்று தன் மகள் கூத்தாயியிடம் திருமணத்திற்கான எல்லாப் பொறுப்பையும் கொடுக்கிறார். இது பெரிய மகள் மேல் அப்பா வைத்துள்ள நம்பிக்கையினை வெளிப்படுத்துகிறது. மேலும், விதவை மறுமணம் அதிகம் நடைபெறாமல் அங்கொன்றும் இங்கொன் றும் நடப்பதாகக் காலச்சூழல் புனைவு வெளிப்படுத் தப்படுகிறது.

கூத்தாயிக்கு மங்களம் என்ற பெண் அத்தாச்சி முறை. அவள் கணவன் தன் கூட்டாளிகளோடு திருட்டுக் கள்குடிக்கப் போய் இறந்துவிட்டான். தன் அண்ணன் நிலையினைக் மனத்தில் கொண்டு, மனிதாபிமானத் தோடு அத்தை ஆயாவிடம் நேரடியாகச் சேதியைச் சொல்கிறாள். ஆயா அதுகேட்டு மலைத்துப் போய், ***மகள் தாலி அறுத்தவள், இரண்டு மூன்று வயதுகூட அதிகம் இருக்கும்*** (ப.97) என்று யதார்த்தமாக மறுப் புச் சொல்கிறாள்.

இதற்குக் கூத்தாயி, ***இனுமே நீங்கக் கவலப்படாதிய அத்த;மங்களம் அத்தாச்சி இனுமே எனக்கு அண்ணிதான்*** (ப.97)என்று பதில் சொல்லுகிறாள். இது அண்ணன் சுப்பிரமணியனுக்கும் மங்களத்திற்கும் திருமணம் உறுதிசெய்ததைத் தன் அப்பாவிடம் கூத்தாயி சொல் லுகிறாள். திருமணத்திற்கான எல்லாப் பணிகளும் மளமளவென்று நடந்து முடிந்தது. பின்னர் ***சத்திரம் போய் விசாலாட்சிஅம்மன் கோயிலில்*** இனிதே திருமண மும் முடிந்தது. இந்நிகழ்வு, தமிழ் நாட்டின் கிராமப் புறங்களில் வழங்கி வரும் ***பொறந்த எடம் நல்லா இருந்தாதான் போற எடத்துலயும் புண்ணியம் கெடக்கும்*** (ப.94) எனும் சொலவு (முதுமொழி) மெய்ப்பிக்கப் படுகிறது.இத்திருமண நிகழ்வின்மூலம் அன்பு, பாசம், பண்பு, கடமை உணர்ச்சி போன்ற தன்மையில் உயர்ந்து நிற்கிறாள் கூத்தாயி.

வயதில் மூத்தோரைப் பேணுதல் (பாசம்)

உலகப் பொதுமறை ஆகிய திருக்குறள் 96. குடிமை அதிகாரம் *உயர்ந்த குடியின்கண் பிறந்தாரது தன்மை* பற்றி பத்துக் குறள்களில் விளக்கி உரைக்கின்றது. அதில் ***நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் . . .*** (குறள்.959) என்ற தொடருக்குப் பரிமேலழகர் ***நிலத்தினியல்பை அதன் கண் முளைத்த முளை காட்டும்*** என்று விளக்குகிறார். இதுபோல் கூத்தாயி மருதநில மண்ணில் பிறந்தவள் என்பதைக் காட்டுவதாக, ***கூத்தாயி திண்ணைப் பள்ளிக்கூடத்திலும் படிக்கவில்லை. எப்படித்தான் எல்லாரையும் ஒன்றாக நினைத்து வாழக் கற்றுக்கொண்டாளோ என்று வியந்து போவார்கள். பங்காளி வீட்டுப் பொம்பளைப் பிள்ளைகளுக்கு இவளால் பேச்சுக் கிடைக்கும்*** (ப.46). இக்கூற்றிற்கிணங்கத் தம் தாத்தா வடிவேலுவையும், பாட்டி அழகம்மையும் கவனித்துக் கொண்டகூத்தாயி பான்மையைத் ***தாத்தாவும் அப்பாயியும் கொல்லை வயற்காட்டிலிருந்து வந்ததும் கூத்தாயி சுடுதண்ணீர் வைத்துப் பச்சைப் பிள்ளையைக் குளிப்பாட்டுவதைப்போல அமுக்கித் தேய்த்துத் தண்ணீர் ஊற்றுவாள். கச்சிதமாகச்சோற்றைப் போட்டு வைப்பாள். . . . இரண்டு பேருக்குமே முதுகு கூனல் விழுந்துவிட்டது. கிராமத்தில் வயல் கொல்லைக் காட்டில் குனிந்து வேலை செய்பவர்கள் முக்கால்வாசிப் பேருக்கு முதுகு கூனல் விழுந்து விடுகிறது. இதனால் படுத்துக் கிடக்கும் போதும் கூனியே படுத்துக் கிடக்கிறார்கள். கூத்தாயி இருவருக்கும் இடுப்பைப் பிடித்து விடுவாள். கால், கையை அமுக்கி விடுவாள்*** (ப.47) என்கிறார். இஃது இன்றைய காலத்தில் பெற்றோரைப் புறக்கணிக்கும் இளம் தலைமுறையினரை உணரச்செய்து, மரபு சார் வாழ்க்கையை சமூகம் வாழ வேண்டும் எனச் படைப் பாளர் ச. சுபாஷ் சந்திரபோஸ் விரும்பும் பண்பு எனத் தெளிய முடிகிறது.

முடிவுரை

இக்கட்டுரையின் கருதுகோள் மெய்ப்பிக்கப்பட்டதோடு அதற்கான கரணங்களும் முன்வைக்கப்பட்டன. படைப் பாளரின் மனிதநேயமும், அழகியலும், பண்பாடும் இந்நாவல்வழி வெளிப்படுத்தப்பட்டிருக்கும் பாங்கு மிகவும் பாராட்டத்தக்கது. டெல்டா மாவட்டம் எனப் படும் ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்த நாடு வட்டாரம் ஒக்கநாடு கீழையூர்ப் பகுதி எளிய மக்களின் வாழ்வில் பங்குகொண்டு அன்பு, பாசம், உதவி, உணர்ச்சி போன்றவற்றினைக் கடைப்பிடித்த கூத்தாயி பாத்திரப் படைப்பு தத்ரூபமாகத் திகழ் கின்றது. எளிய குடும்பத்தில் பிறந்த ஒரு பெண் ணிற்கு மனத் திட்பம் இருந்தால் போதும், எதையும் சாதித்துக் காட்டலாம் என்று கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துகொண்டிருக்கும் பண்பாட்டு விழுமியங்களை எதிர்காலச் சந்ததி காப்பாற்ற அறிவுறுத்துவதாகவும் நினைவூட்டுவதாகவும் இந்நாவலைக் கொள்ளலாம்.

துணைநூற் பட்டியல்

இராமநாதன் செட்டியார், லெ.ப.கரு. *சங்க காலத் தமிழர் வாழ்வு.* இராமநாதபுரம்: வெள்ளையன் பதிப்புக் கழகம், இரண்டாம் பதிப்பு, 1958.

கைலாசபதி, க. *தமிழ் நாவல் இலக்கியம்.* நாகர்கோவில்: காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., 2017.

சண்முகம்பிள்ளை, மு. (தொ.ஆ.). *தமிழ்-தமிழ் அகர முதலி.* தமிழ்நாடு அரசு: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், 4 ஆம் பதிப்பு, 2022.

சிவத்தம்பி, கார்த்திகேசு. *தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும்.* சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 1994:5

சுபாஷ் சந்திரபோஸ், ச. *கூத்தாயி,* தஞ்சாவூர்: இயல் வெளி யீடு, 3 ஆம் பதிப்பு, 2015.

நாச்சிமுத்து, கி. (க.ஆ.), தலைமையுரை - தமிழ் நாவல் இலக்கியப் போக்குகள். *நாவல் இலக்கிய போக்குகள்,* இரா.காமராசு (தொ.ஆ.), புது டில்லி: சாகித்திய அகாதெமி, முதற் பதிப்பு 2016:17-24

பஞ்சாங்கம், க. (க.ஆ.). தமிழ்நாவல் இலக்கியப் போக்கு கள், *நாவல் இலக்கிய போக்குகள்,* இரா.காமராசு (தொ.ஆ.), புது டில்லி: சாகித்திய அகாதெமி, முதற் பதிப்பு 2016:135-145.

ராமகிருஷ்ணன், எஸ். (ப.ஆ.), *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி(தமிழ்-தமிழ்-ஆங்கிலம்).* சென்னை: க்ரியா, விரிவாக் கித் திருத்திய புதிய பதிப்பு, 2018:887.

வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 12. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், 1992.

ஜெயக்குமார், சி. (ப.ஆ.), *திருக்குறள் மூலமும் உரையும்.* (பரிமேலழகர் உரை), சென்னை: அருணா பப்ளிகேஷன்ஸ், 2020:384.

After the sewage flowed into the sea
and took the oxygen away, the fishes fled,
but the jellies didn't mind. They stayed
and ate up the food the fishes left behind.
I sat on the beach in my red pajamas
and listened to the sparkling foam,
like feelings being fustigated. Nearby,
a crayfish tugged on a string. In the dis-
tance,
a man waved. Unnatural cycles seemed to
be
establishing themselves, without regard to
our lives.
Deep inside, I could feel a needle skip:
Autumn dark.
Murmur of the saw.
Poor humans.

- Henry Cole

ISSN 2320-4842

திருப்புகழும் நிலையாமையும்

ந. மாமலைவாசன்
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
(Ref.No.17076/Ph.D.K8/Tamil/P.T./Extn.1&2/Re.Regn./July 2015/Dt: 20.07.2023)
நெறியாளர்: **முனைவர் ச. இரமேஷ்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம் 612 002
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச் சுருக்கம்

இக்கட்டுரையில் பதினைந்தாம் நூற்றாண்டில் எழுந்த பத்தி இலக்கியமான திருப்புகழ் நூலில் கூறப்பட்டுள்ள நிலையாமை தொடர்பான கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. செல்வம், இளமை, உடல் என்பவற்றின் நிலையாமை தொடர்பான செய்திகள் மட்டும் கூறப்பட்டுள்ளன. தமிழின் பிற இலக்கியங்கள் மற்றும் நீதி நூல்களில் கூறப்பட்டுள்ள நிலையாமை தொடர்பான கருத்துகளும், தற்காலக் கவிதைகள் சிலவும் அருண கிரிநாதர் கருத்துக்கு வலுசேர்க்கும் விதமாக ஒப்புமைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன.

கருவிச்சொற்கள்: திருப்புகழ், நிலையாமை, கூறுகள், கோட்பாடுகள்.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

இந்த உலகமும் அதனுள் இருக்கும் எந்தப் பொருளும் (மனிதன் உட்பட) நிலையானதல்ல. இன்றிருப்பார் நாளை இல்லை என்ற வழக்காற்று மொழி நாம் அறிந்த ஒன்று. விதையாய் விழுந்து துளிராய் மலர்ந்து செடியாய் வளர்ந்து விருட்சமாய் விரிந்து நின்ற எத்தனையோ கோடி ஜீவராசிகள் இன்று மறைந்துவிட்டன. உலகில் தோன்றியபோது இருந்த நிலப்பரப்பு இன்று எத்தனை மாற்றங்களுக்குள்ளாகி மனிதனுக்கு நிலை யாமைக் கோட்பாட்டை உணர்த்துகின்றபோதும் மனிதன் தான் நிலைத்தவன் என்ற எண்ணத்தில் பல தீய செயல்களைச் செய்து மாய்கிறான்.

***..........* பிறர்**
வாடப் பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவமெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போல என்ற பாரதியாரின் கவிதைவரிகள் (சு.உஷாராணி, பாரதியார் கவிதைகள், பக். 285-286) இக்கால மாந்தர்க்கு நிலையாமையை உணர்த்தவல்ல தற்காலப் படைப்பாக அமைகின்றது. தமிழ் இலக்கியப் பெரும்புலவர்கள் தம் படைப்புகளில் நிலையாமைக் கருத்துக்களை முன்வைக்கின்றனர். அந்த வகையில் திருப்புகழ் ஆசிரியர் அருணகிரிநாதரும் நிலையாமைக் கோட்பாடுகளைப் பற்றிப் பேசுகிறார். இங்கு நாம் திருப்புகழ் உணர்த்தும் நிலையாமை தொடர்பான செய்திகளைக் காண்போம்.

நிலையாமைக் கோட்பாடு

நிலையாமை தொடர்பான எண்ணம் மனிதனுக்கு மட்டும் தேவைப்படும் ஒன்று. ஏனெனில் மனிதனைத் தவிர வேறு எந்த உயிரினமும் தான் என்ற அகந்தை கொண்டும், தான் நிலையானவன் என்ற நினைப் புடன் பல இழி செயல்களைச் செய்தும் வாழ்வதில்லை. எனவே, மனிதனுக்குத் தேவையான நிலையாமைக் கொள்கைகளினை நம் முன்னோர்கள் பல வழிகளிலும் உணர்த்தியுள்ளனர்.

மனிதனின் நினைப்பில் நிலையானவை என எண்ணப்படும் செல்வம், இளமை, யாக்கை ஆகியன நிலை யற்றவை என்றும், மனிதனைப் பிறவிக் கடலிலிருந்து காப்பாற்றும் இறைவனின் திருவடியே நிலையானது என்றும் தமிழ் இலக்கியங்கள் முன்மொழிகின்றன.

புறத்திணைகளுக்கு இலக்கணம் வகுத்த இலக்கண நூலார் காஞ்சித்திணை என்ற ஒரு திணையினை நிலை யாமைக் கோட்பாடு மற்றும் அது தொடர்பான செய்திகளைக் கூறும் ஒரு பிரிவாகவே வகுத்துள்ளனர்.

தொல்காப்பியம் காஞ்சித்திணை குறித்துக் கூறுகையில்,

காஞ்சி தானே பெருந்திணைப் புறவே
பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறியானும்

நில்லா உலகம் புல்லிய நெறிந்தே என உரைத்துள்ளது. உலகத்தின் இயல்பு யாதெனக் கேட்பின் நிலை யாமையே அதன் அடிப்படை இயல்பென்று மேற் குறித்த இந்நூற்பாவிற்கு விளக்கமளிக்கத்துள்ள இளம் பூரணர் (தொல். இளம்பூரணர் உரை, ப.126), ***நிலையாமை மூவகைப்படும். இளமை நிலையாமை, செல் வம் நிலையாமை, யாக்கை நிலையாமை*** என்பன நிலை யாமை பண்புடையன என உணர்த்தியுள்ளார்.

தமிழ் அற இலக்கியங்களும் பௌத்த சமண அறங் களும் என்ற நூல் (சு. மாதவன், தமிழ் அற இலக் கியங்களும் பௌத்த சமண அறங்களும், பக்.203-204) ***எந்தெந்த பொருண்மைகளின் பொருட்டு சண்டை யும் சச்சரவும் பகைமையும் விளைந்தனவோ, அந்தந்தப் பொருண்மைகளின் மீதும் நிலையாமைத் தத்துவம் கட் டமைக்கப்பட்டது. இளமை, யாக்கை, செல்வம் ஆகியவற் றின் மாறும் தன்மையை நிலையாமை என்னும் கருத் தியல் கட்டமைத்தது. ஏனெனில் இவற்றின் பொருட்டே சமூக அமைதிக் குலைவுக்கான செயன்மைகள் மிகுந் தன. எனவே இத்தகைய நிலையாமை தத்துவத்தைச் சமூகம் தன்வயப்படுத்திக் கொண்டது*** என நிலையாமை குறித்துக் கூறுகின்றது.

நிலையாமையினைச் செல்வம், உடல் இளமை என் பவற்றின் அடிப்படையில் அருணகிரிநாதர் கூறுவத னைக் காண்போம்.

திருப்புகழ் உணர்த்தும் நிலையாமை கூறுகள்

முருகனை முதன்மையாகக் கொண்டு பாடப்பெற்ற நூலான திருப்புகழ் மனித வாழ்விற்குத் தேவையான பல அறக்கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு வாழ்வியல் பெட்டகமாக விளங்குகிறது. அந்த வகை யில் திருப்புகழ் நூலில் கூறப்பட்டுள்ள நிலையாமை தொடர்பான செய்திகளைச் செல்வத்திலிருந்து தொடங் கலாம்.

செல்வதற்கு வருவது செல்வம். அதாவது செல்வம் என்பது இடமாறும் தன்மை கொண்டது. எவரிடத்தி லும் நிலைத்து நிற்காத இயல்புடையது செல்வம். இதனையே திருவள்ளுவரும்

கூத்தாட்டு அவைக் குழாந்தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அது விளிந்தற்று எனும் திருக்குறளில் (பரிமேலழகர்,திருக்குறள், ப.136) ஒருவனுக்கு அதிக மாகச் செல்வம் வந்து சேருவது கூத்தாடும் இடத் தில் கூட்டம் சேருவது போலவாகும். கூத்து முடிந்த வுடன் கலைந்து செல்லும் கூட்டம்போல் செல்வமும் நில்லாது சென்றுவிடும் என்கிறார்.

அறுசுவையுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண்டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்பர்.

மனைவி பரிமாறிட அறுசுவை உணவினை உண்டு வாழ்ந்தவரும் கூட ஒருநாள் வறிஞராக (ஏழையாக) மாறிடும் நிலை ஏற்படும் என்று நாலடியார் பாடல் (ஸ்ரீசந்திரன், நாலடியார், பக்.8-9) கூறுவதை இங்கு ஒப்பு நோக்கலாம்.

நிலையற்றதான செல்வத்தின் வழி நாம் இன்பம் அடைவது எவ்வாறு என்ற வினா நம் மனதில் எழுகிறது.

செல்வத்துப் பயனே ஈதல் என்கிறது புறநானூறு. அதாவது செல்வம் நிலையற்றது என்றும் அதனைப் பிறருக்குப் பயன்படுமாறு செய்வது அதற்குப் பய னாகும் (புலியூர் கேசிகன், புறநானூறு, பக்.201, 202) என்பதை உணர்த்துகிறது.

திருப்புகழின்கண் அமைந்துள்ள பாடலும் மேற்காணும் இலக்கியங்களின் கருத்துடன் உடன்படுகிறது.

இடாதுபல தேடுங் கிராதர் பொருள் போலிங்
இராமலுயாக கோலிங் இதமாகும்
இதாமென்று போதுஞ் சதாவின் மொழியாரின்
றியானு முனை யோதும் படிபாராய்

இப்பாடலில் அருணகிரிநாதர் பிறருக்குக் கொடுத்து உதவாத பொருள் நில்லாது செல்லும் தன்மை கொண் டது என்கிறார் அத்துடன் நில்லாது செல்வம் நிலைத் ததாக இருப்பினும் அதனை அனுபவிக்கும் உடல் சுமந்து நிற்கும் உயிர் நில்லாதது (செங்கல்வராய பிள்ளை, திருப்புகழ், ப.201) என உரைக்கிறார்.

ஆக, செல்வம் என்பது ஓரிடத்தில் நில்லாத இயல்பு உடையது என்பதைப் புரிந்து நமது தேவைக்குப் போக எஞ்சியவற்றைப் பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்று வலியுறுத்துகிறார் அருணகிரிநாதர் (செங்கல்வராய பிள்ளை, திருப்புகழ், ப.202).

இளமைப் பருவம் அழகும் வசீகரமும் கொண்டது. அத்தகைய இளமைப் பருவம் நிலைத்தது என எண் ணியே பலரும் சுற்றித் திரிகின்றனர். *இளமையில் கல்* என்பது ஔவையார் சொன்ன அமுதமொழி. கல்விக்கும் திறமைக்கும் அறிவுக்கும் அடிப்படையான இளமையான பருவத்தைச் சரியாகப் பயன்படுத்தா மல் இருந்தால் அந்த நபரின் முதுமை கேள்விக்கு உரியதாகிறது.

சொல் தளர்ந்து கோலூன்றிச் சேர்ந்த பல் கழன்று

இளமைக் காலத்தினை ஆக்க வழிகளுக்கு பயன் படுத்தாமல் இருந்தால் முதுமையினில் துன்புறுவர் என நாலடியார் கூறுகிறது (ஸ்ரீசந்திரன், நாலடியார், பக்.14-15). இங்கு அருணாகிரிநாதரும் இளமை நிலையற்றது என்பதனைப் பின்வரும் பாடலில் வலியுறுத்துகிறார்.

கறுத்ததலை வெளிறு மிகுந்து
மகர்த்த இணை விழிகள் குழிந்து
கதுப்பிலுறு தசைகள் வறண்டு செவிதோலாய்க்
கழுத்தடியு மடைய வளைந்து
கனத்த நெடு முதுகு குனிந்து
கதுப்புனுப லடைய விழுந்து தடுநீர்சோர்

ISSN 2320-4842

உரைத்த நடை தளரு முடம்பு
பழுத்திருமூன் மிகவும் விரும்பி
உனக்கடிமை படுபவர் தொண்டு புரிவேனோ

மேற்கண்ட பாடலில், கறுத்த தலைமுடி வெளுத்து, கண்கள் குழிவிழுந்து கன்னத்துத் தசைகள் வற்றிப் போய் காதுகள் வெறும் தோற்போல் தளர்ந்து போக இளமை குறையும் என்கிறார். அத்துடன் நில்லாது கழுத்து வளைந்து முதுகெலும்பு கூன் விழுந்து பற்கள் எல்லாம் விழுந்துவிடும் எனவும் கூறுகிறார்.

இளமைச் செருக்கில் இருந்த உடலானது தளர்ந்து, இவ்வுடம்பு பழுத்திடும் தன்மையுடைது என இளமையிலிருந்து முதுமைக்கு உடல் அடையும் மாற்றங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறார் (செங்கல்வராய பிள்ளை, திருப்புகழ், பக்.112-113).

ஆக, நிலையற்றதான இளமையை மனதிற் கொண்டு அல்லாதன செய்யாமல் இளமையில் கல்வியினைக் கற்று, இறைவனின் தொண்டில் ஆழ்ந்திருப்பவர் முதுமையில் துன்புற மாட்டார் எனத் தெளிவுபடுத்தும் அருணகிரிநாதரின் கருத்து இளமை நிலையற்றது என்பதையும் நமக்கு உணர்த்துகிறது.

அடுத்ததாக உயிரைச் சுமந்து நிற்கும் உடல். உடல் உயிரைச் சுமக்கும் வெறும் கூடு; உயிர் நீங்கினால் உடல் பயனற்றது. இதனையே,

ஊரெலாங் கூடி ஒலிக்கே அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டைக் கொண்டு போய்
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே

உயிர் நீங்கிய உடலைப் பிணமென்று அழைத்துக் காட்டினில் வைத்துக் தீக்கிரையாக்கிய பின் நீரினில் மூழ்கி நினைவை இழப்பர் என்கிறார் திருமூலர் (பாலூர் கண்ணப்ப முதலியார், திருமந்திரம், ப.145)

யாக்கை (உடல்) நிலையாமை குறித்த திருப்புகழ்,

அமைவுற் றடையப் பசியுற் றவருக்கு
அமுதைப் பகிர்தற்கு இசையாதே
அடையப் பொருள்கைக் கிளமைக்கு எனவைத்
தருள்தப் பிமதத் தயராதே
தமர் சுற்றி அழப் பறைகொட்டு இடச்
சமன் எட்டு உயிரைக் கொடுபொகுஞ்
சரிரத் தினைநிற்கும் எனக் கருதித்
தளர்வுற்று ஒழியக் கடவேனோ

பசியென வந்தவர்க்கு உயிரை வழங்கும் அமுதாகிய உணவைப் பகிராமல், தான் தினமும் இளமையாகிக் கொண்டு இருக்கிறோம் என்ற நினைவால் தவறு செய்து எவருக்கும் உதவிடாமல் இருப்பவர் ஈயாத வஞ்சகர்.அவர்கள் இந்த உடல் நிலையென எண்ணிப் பொருளைச் சேர்க்கின்றனர் எனத் தன்னைத் தானே ஏசுவதுபோல உடல் நிலையற்றது என்பதை உணர்த்துகிறார்(செங்கல்வராய பிள்ளை, திருப்புகழ், ப. 249).

மேற்காணும் கருத்துடன் நாலடியாரின் கருத்து ஒப்பு நோக்கத்தக்கதாக உள்ளமையைக் காண்போம்.

மலைமிசைத் தோன்றும் மதியம் போல் யானைத்
தலைமிசை கொண்ட குடையர்
எஞ்சினார் இவ்வுலகத்தில்

மலைமீது தோன்றும் முழு நிலவைப்போல யானை மீது அமர்ந்து வலம் வந்த வேந்தரும்கூட இறந்து போயினரே தவிர இவ்வுலகில் நிலைத்து வாழ வில்லை என்று கூறுகிறது நாலடியார் (ஸ்ரீசந்திரன், நாலடியார், பக்.16-17).

ஆக, எத்தனை பெரிய செல்வம் வைத்திருப்பினும் எத்தனை அழகான உடல் பெற்றிருப்பினும் அதனால் எந்த பயனுமில்லை. ஏனெனில், உடல் நிலையற்றது என்கிற திருப்புகழ் கருத்து நம் அறிவுக்குப் புலனாகிறது.

இளமை, செல்வம், யாக்கை நிலையற்றவை என வருந்தி யுரைக்கும் அருணகிரிநாதர் அவற்றுடன் நில்லாது இன்ன பிறவற்றையும் நிலையற்றது என உரைக்கிறார்.

மக்கட் செல்வமும் பொருட்செல்வமும் நிலையில்லாத பண்பினை உடையன என்பதை,

பொன்றாமன் றாக்கும் புதல்வரும்
நன்றாமன் றார்க்கின் றுறுதணை
பொன்றானென் நாட்டம் பெருகிய புவி யூடே
பொங்கா வெங் கூற்றம் பொதிதரு
சிங்காரஞ் சேர்த்தியங் குயரிய
புன்கூடொன் றாயக் கொண் குறைதரு முயிர்போல
(செங்கல்வராய பிள்ளை, திருப்புகழ், ப.469)
என உரைக்கிறார். உற்றார், உறவினர்கள், மனைவி, நண்பர்கள், சகோதரிகள், செல்வம் என எல்லாம் நிலையற்றவை என்பதை,

அடுத்த பேர்மனை துணைவியர் தமர்பொருள்
பெருத்த வாழ்விது சதமென மகிழ்வுறு
மசட்ட னாதுலன் அவமது தவிர்றநி னடியாரோ எனக் கூறி அவ்வாறு நிலையில்லாத உறவுகளையும் செல்வத்தையும் நிலையென் கருதும் தன்னை அசடன் (முட்டாள்) என்றும், ஆதுலன் (வறிஞன்) என்றும் பழித்துக்கொள்கிறார் (செங்கல்வராய பிள்ளை, திருப்புகழ், ப.842).

மாத்திரப் போதிலுடு காட்டினிற்போமென இல்
வாழ்க்கைவிட் டேறுமடி யவர்போல

இடுகாட்டில் இந்த உடலைத் தீயிட்டு அழிக்கும்போதே மனித வாழ்வின் நிலையற்ற தன்மை புரியும் எனக் கூறுகிறார் (செங்கல்வராய பிள்ளை, திருப்புகழ், ப. 982).

முடிவுரை

வாழ்வு நிலையற்றதென மனிதவனுக்கு உணர்த்த வல்லது இறப்பு (மரணம்) ஒன்றேயாகும். இருக்கும் காலத்தில் செல்வத்தைப் பிறருக்குப் பயன்படும்படி வாழ்வதும்,இளமைக் காலத்தைக் கடவுள் வழிபாடு, கல்வி பெறுதல் எனப்பயன்படுத்துவதும், ***தொடர்ச்சி: பக். 95***

ISSN 2320-4842

சிவராஜ் கவிதைகளில் இயற்கை

கோ. திருநாவுக்கரசு
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர் (Ref. No. BDU2010630350, dt: 09.10.2023)
நெறியாளர்: **முனைவர் வீ. வெற்றிவேல்**
தமிழ்த்துறைத் தலைவர், மருதுபாண்டியர் கல்லூரி, தஞ்சாவூர் 613 403
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச்சுருக்கம்

தமிழிலக்கியம் இயற்கையுடன் பின்னிப்பிணைந்து கண்ணுக்கும் மனதுக்கும் இனிமை பயக்கிறது. இயற்கை, இறைவன் படைத்த எழிற்களஞ்சியம். சங்ககாலம் முதல் இக்காலம்வரை கவிஞர்கள் இயற்கையைத் தமது படைப்பில் பாடுபொருளாகக் கொண்டுள்ளனர். அந்த வகையில் கவிஞர் சிவராஜ் கவிதைகளில் இயற்கை குறித்து இக்கட்டுரை ஆய்கிறது.

கருவிச் சொற்கள்: இயற்கைச் சீற்றம், மனிதநேயம், மானுடம், விளைநிலம்.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

மானுடம், இயற்கையின் ஓர் அங்கமாகும். கவிஞர், மானுடத்தின் அங்கம், சராசரி மனிதரைவிட ஆற்றல் பெருக்கெடுத்து ஓடும் உணர்ச்சியை உடையவர் கவிஞர். மனிதனுக்கு வாழ்நாள் முழுவதும் அமைதியைத் தரவல்லது இயற்கை. ***இயற்கை அனைத்தும் அழகு காணும் பொருளில் எல்லாம் அழகைக் காணவும் வேண்டும்*** (மு. வரதராசன், **நற்றிணைச் செல்வம்,** ப.38) என்பார் மு.வ.

இயற்கை விழிகளுக்கு விருந்து படைக்கும் அமிர்தம். மனிதனின் தேவைக்காக இறைவன் தந்த உறவு. இந்த உறவுகள் வெறும் பிணைப்போடு நின்று விடவில்லை. மனிதனுக்கு மனநிறைவை மகிழ்வையும் தருகிறது.

இயற்கை

காலையில் முளைக்கும் கண்ணைப் பறிக்கும் விடிவெள்ளி, வெளுக்கும் கீழ்வானம், சிவப்புப்பழமாய் உதிக்கும் கதிரவன், புள்ளினங்களின் பாட்டு, தங்கக் கடற்கரையின் அழகு, மலர்களின் அழகும் மனமும், பச்சைப் புல்வெளி, ஆறுகள், வயல்கள், காடுகள், மலைகள், அந்தி வானம், இருளை அரவணைக்கும் மேல்வானம், அது வாரியிறைக்கும் அற்புத ஓவியம், சோளக்கதிர் பொரித்தது போல் விண்மீன்கள், தங்கத் தட்டாய்த் திகழும் நிலாமுகம் இன்னும் எத்தனை எத்தனை கோடிகள் உள்ளன. அந்த இயற்கை என்னும் செல்வத்திடம், பாரதிதாசன் கண்ட சொல்லோவியம், ***இயற்கை அனைத்தும் அழகு காணும் பொருளில் எல்லாம் அழகைக் காணவும் வேண்டும்*** (பாரதிதாசன், **அழகின் சிரிப்பு,** ப.4) என்பார். இயற்கையோடு இயைந்தது நம் பண்டைய வாழ்வு; இப்பொழுது செயற்கைச் சார்வுகளே அதிகம் உள்ளன.

இயற்கையும் கவிஞரும்

எக்கவிஞரும் வெளிப்புறத் தோற்றங்களாய்ச் சூழ்ந்து கிடக்கும் இயற்கையை விடுத்துக் கவிதை எழுத முடி யாது. இயற்கை கவிஞனுக்குப் புதிய சொற்றொடர்களையும் புதிய சொல்லாட்சியையும் பெற்றுத் தரும் இலக்கணமாகும். இவ்வுலகில் இருபெரும் கூறுகள் மனிதனும், இயற்கையுமாகும். எந்தக் கவிஞனும் காணும் பொருள்களில் அழகையும் இயற்கை அன்பையும் பெறுகின்றானோ அவனே சிறந்த படைப்பாளியாவான். இதுபோன்ற இயற்கைச் சுவாசம் செய்த கவிஞர்களுள் சிவராஜும் தொடர்மழையால் ஏற்படும் பயன்களை யும் இடர்களையும் தமது கவிதைகளில் பதிவுசெய்துள்ளதை,

பொழுதெல்லாம்
சொலு சொலுன்னு
தூறிக் கொண்டே இருக்கிறது வானம்
கால் வைக்கும் இடமெல்லாம்
சவசவன்னு இளகிக் கிடக்கிறது பூமி
. . . .
. . . .
ஆடுகள் மேயும் செடி கொடிகளும்
மாடுகள் மேய புல்வெளிகளும்

பச்சை வண்ணம் காட்டும் நிறம்

. . . .

கொளுத்தும் வெயிலின் வக்கிரத்தை
குளிர்த்திப் போனது நினைவில்
அந்த அடை மழை (சிவராஜ், எழுத்தின் நிஜங்கள், பக். 68-69) என்பதால் அறியலாம். இக்கவிதை மழைப் பொழிவைச் சித்தரிக்கிறது.

மழைப்பொழிவை வர்ணித்த கவிஞர் மழை பொய்த்த காலத்தில் மக்களின் மனக்குமுறலையும் பதிவிட்டுள் ளார்.

கிணறு கிணறாய்
குளம் குளமாய் - ஏன்
ஏரி ஏரியாய்
மது அருந்தும்
மேக அரக்கன்
கண்ணீர் வடிக்க
மறுக்கின்றான் - எங்கள்
கண்ணீரையே குடிக்கின்றான் (சிவராஜ், எழுத்தின் நிஜங் கள், ப.28) என்று மழையின்றித் தவிக்கும் மக்களின் மனநிலையை சமூக நோக்கோடு பதிவிட்டுள்ளார்.

மரம் என்ற கவிதையில்,
சின்னக் காற்றில்
முறிந்து விழுந்தது
சத்தான கீரைக் கொடுக்கும்
முருங்கை

. . . .

கர்ப்பம் தரிக்காமலேயே
பால் சுரக்கிறது
இச்சி மரம்

. . . .

ரோட்டோரம்

. . . .

ஆண்டியாய் நிற்கிறது
அரச மரம் (சிவராஜ், புதைத்த நிலம், ப. 25) என மரம் இயற்கையின் வரப்பிரசாதம், மண்ணரிப்பைத் தடுக்கும் மகத்தான சக்தி, சுற்றுப்புறச் சூழலைப் பாது காக்கும் நண்பன், காளான், முருங்கை, பனை, இச்சி, நுனா, கொடுக்காப்புளி, அரசன் என மரங்களையும், அவற்றின் தன்மைகளையும் அழகுறக் கவிஞர் பட்டி யலிடுகிறார். மழைக்கு முளைக்கும் காளான், உடலுக்குச் சத்தான கீரை தரும் முருங்கை, பால் சுரக்கும் இச்சி மரம் எனப் பேசும் அவர், கறுத்துப்போன நுனாவை கவரிங்கோடும் ஒப்பிட்டுக் காட்டுவதோடு, உவமை நயமாகக் கொடுக்காபுளிப் பழத்தில் உள்ள வளைந்த காம்பினைப் பெண்கள் அணிந்துகொள்ளும் வளைய லோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார் கவிஞர். இவரது கவிதைக்கு வலிமையாய்,
மரங்கள் இல்லையேல்
காற்றை எங்கே போய்ச்
சலவை செய்வது?
மரங்கள் இல்லையேல்
மழைக்காக எங்கே போய்
மனுச் செய்வது?
மரங்கள் இல்லையேல்
மண்ணின் மடிக்குள்ளே
ஏதப்பா ஏரி

. . . .

. . . .

. . . .

மனிதா
மனிதனாக வேண்டுமா
மரத்திடம் வா
ஒவ்வொரு மரமும்
போதிமரம்! (வைரமுத்து, இந்த பூக்கள் விற்பனைக்கல்ல, ப.165)

நாளுக்கு நாள் வனப்பகுதி குறைந்த வண்ணம் இருப் பதால் வருங்காலச் சமுதாயம் ஏராளமான இன்னல் களை எதிர்கொள்ள நேரிடும். இயல்பான சுற்றுச் சூழல் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டு மனிதன் சுத்தமான காற்றைத் தேடி அலைய வேண்டியுள்ளது. மரங்களை மறந்ததால்தான் மனிதன் இத்தகைய சரிவைச் சந் திக்க நேர்ந்துள்ளது என்று மரத்தின் பயன்களைக் கவித்துவம் குலையா வகையில் கவிஞர் வைரமுத்து கவிதையில் காட்டி, மரங்களை வளர்த்து அதன் மூலம் மனிதனும் தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற மனிதநேயத்தை உணர்த்துவதோடு சுற்றுச் சூழல் மாசடைந்து வரும் ஆபத்தையும் உள்ளத்தில் ஆழப்பதியும் வண்ணம் பசுமைப் புரட்சிக்குப் பதியம் போடுவதில் வைரமுத்து முழுவெற்றி கண்டுள்ள திறத்தைக் காண்பதோடு, கவிஞர் சிவராஜ் கவிதைக் கும் வலுசேர்ப்பதாக அமைந்துள்ளதைக் காண முடி கிறது. இயற்கையின்மீது ஒவ்வொரு கவிஞனும் காணும் புதிய இலட்சியத்தையும் நேசிப்பையும் காண முடிகிறது.

வரப்பு

இயற்கை தந்த வளமையான இந்த நிலம் சார்ந்த வரப்பின் நிலையைக் கவிஞர் சிவராஜ் அழகாக எடுத் துக்காட்டியுள்ளார். வளமையான வயல் நிலையினை தன் பசுமையான நினைவுகளோடு கவிஞர் எடுத்துக் காட்டும் விதத்தை,

புதாத்து வண்டிப் பாலத்திலிருந்து
நீளும் இந்த வரப்பு
மூனுமைல் தூரத்திற்கு

. . . .

வாய்க்காலும்
காட்டாறும்
குறுக்கே வேகத் தடையாய்
விரைந்தோடும்

. . . .

ஆங்காங்கே
கோரைப்புல்மேலே
செந்தட்டான் மேலெழும்பும்
பாட்டன் முப்பாட்டன்
கால்சுவடுகள் எழுதிய
காலச் சுவடியாய்
வரப்பும் வாழ்க்கையும் (சிவராஜ், புதைத்த நிலம், ப.28)

புதைந்த நிலம் எனும் கவிதைத் தொகுப்பில் சிறந்த கவிதையாக வலம் வரும் கவிதை இது. தஞ்சை கிராமங்களைக் கோபுரத்தின் மேலிருந்து பார்ப்பது போன்ற உணர்வை இக்கவிதை கிராம மக்களின் நிலங்களில் பச்சைப் பசேல் என்று பார்டர் போட்ட வரப்பின்கீழ் நண்டுத் தோடுகள், எலி வளைகள் ஏராளம் என வரப்பின் அமைப்பினை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறார்.

நீர்

நீரின்றி யமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு (பரிமேலழகர் உரை, திருக்குறள், ப.28) என்கிறார் திருவள்ளுவர். இந்த பூமியின் ஆதாரமே நீர்தான். தண்ணீர் இல்லாமல் இந்த உலகத்தில் எந்தத் தொழிற்பாடுகளும் நடை பெறா. பச்சைப் புற்கள்கூட தண்ணீர் இல்லாவிடில் முளைக்காது. பூமியிலுள்ள எல்லா உயிரினங்களும் நீரையே நம்பி வாழ்கின்றன. நீரின் முக்கியத்துவத் தைக் கவிஞர்,

கரை புரண்டோடும்
கல்லணைக் கால்வாயில்
ஆடி பதினெட்டின்போது
குதித்து விளையாண்டது
. . . .
கபடி விளையாடி விட்டு
அய்யாச்சாமி கேணியில்
சம்மணம் போட்டு குதித்து
அலையெழுப்பியது
பாலன் பம்பு செட்டில்
தொட்டிக்குள் விழும்
தண்ணீரில் தலைகாட்டி
முங்கிக் குளித்தது
யாவம் வந்து நனைந்துப் போகும்
பாத்ரூமில்
பக்கெட் தண்ணீர் நிறைவதற்குள் (சிவராஜ், புதைத்த நிலம், ப. 6) என்று எப்போதோ நடந்த நிகழ்வை வைத்து எடுத்துக்காட்டுகிறார்.

நிலா

நிலவினைத் தம் படைப்புகளில் கையாளாத கவி ஞர்களே இல்லையெனலாம். நிலவினைப் பற்றி கனவு காணாது அறிவியல் பார்வையில் கவிஞர் சிவராஜ் நோக்குகிறார்.

நிலவு என்றனரே
அதனால்தான் - நீ
ஒளிர்வதும் தோற்றமே!
. . . .
உன்னிடத்தில்
காற்று இல்லை
நீர் இல்லை - இன்னும்
எந்த உயிரும் இல்லை
. . . .
கதிரவனின்
புறஊதாக் கதிர்கள்
உன்னை விழுங்கியபடி
காஸ்மிக் கதிர்களின்
கோபத்திற்கு நீ (சிவராஜ், எழுத்தின் நிஜங்கள், ப.15)
என்று நிலவினைப் பற்றி அறியாத தகவல்களை மக்களுக்குத் தருவதோடு நிலவின் எதிர்ப்புச் சக்திகூட என்னைப்போல் ஆறில் ஒரு பங்குதான் எனும் கவிஞரின் நோக்கு விசாலமானது என்பதை அறியமுடிகிறது.

முடிவுரை

இயற்கை,மனிதனால் அழிக்கப்பட்டுவருகிறது. இன்னும் மனிதன் விழிப்புணர்வு அடையாதது வருத்தத்திற்கு உரியது. பசுமை நிறைந்த வரப்புப்பகுதி, அதன் இயற்கை அழகு, இயற்கை வரப்பிரசாதமாகிய மரம், மரங்களின் மூலம் நாம் அடையும் பயன், அதன் தன்மை அறியப்பட்டுள்ளன. உயிரினங்கள் வாழ மழை அவசியம். இயற்கை அழிக்கப்படுவதால் மழை பொய்த்துவிடும் சூழலைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. ஆறு, ஏரி, குளம், கிணறு ஆகியன வறண்ட நிலையை அடைவதையும், விளைநிலங்கள் அழிக்கப்பட்டு வீட்டுமனைகளாக மாறிவரும் சூழல் களையும் இயற்கைச் சீற்றங்களையும் எடுத்துக்காட் டுகிறது.

துணைநூற் பட்டியல்

சிவராஜ், **எழுத்தின் நிஜங்கள்,** பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு, 2004.

சிவராஜ், **புதைத்த நிலம்,** காவியா வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 2003.

பதிப்பாசிரியர் குழு, பாலா கவிதைகள், ‘‘தமிழ்ப் புதுக்கவிதைகளின் பன்முகப் பரிமாணங்கள்’’, **தேசியக் கருத்தரங்க களஞ்சியம், பகுதி 2,** பாரத் நிர்வாகவியல் கல்லூரி, தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2007.

பரிமேலழகர் உரை, **திருக்குறள்,** கழக வெளியீடு, சென்னை, 1976.

பாரதிதாசன், **குடும்ப விளக்கு,** பூம்புகார் பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2008.

வரதராசன், மு., **நற்றிணைச் செல்வம்,** பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1958,

வைரமுத்து, **இந்த பூக்கள் விற்பனைக்கல்ல,** லிட்ரேச்சர் (பி.) லிட்., சென்னை, முதற்பதிப்பு, 2018.

The falling snow flakes
Cannot blunt the hard aches nor
Match the steel stillness.

Under moon shadows
A tall boy flashes knife and
Slices star bright ice.

- Etheridge Knight

ISSN 2320-4842

திருக்குறளில் இல்லறவியல் – ஒரு பார்வை

பா. விஜயராமன்

பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர் (Ref.006671/Ph.D.K8/Tamil/P.T./January 2019/Confirm./ Dt:06.10.2021)

நெறியாளர்: **முனைவர் மு. அருணகிரி**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, திரு.வி.க. அரசு கலைக்கல்லூரி, திருவாரூர் 610 003

(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச் சுருக்கம்

எல்லோரும் வாழவே எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்பதே மனிதத் தன்மையாகும். இத்தகு மனிதப் பண்பைப் பல்லாயிரம் ஆண்டு காலமாகவே தமிழன் பின்பற்றிவருகின்றான். தமிழ்க் குடியிலே தோன்றியவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காகவோ வேறு எந்தக் காரணங்களுக்காகவோ எந்த நாட்டில் குடியேறினும் இந்தப் பிறவிக் குணத்தை விடுவது இல்லை. தமிழர்கள் எல்லா ஊர்களையும் தமது ஊர்களாகவே அனைவரையும் தமது உறவினர்களாகவே எண்ணினர். இனிய உணவாகிய அமிழ்தமே கிடைப்பினும் கிடைத்தற்கரிய உணவென்று கருதி அதனைத் தனித்திருந்து உண்ணாது பிறருக்கும் தந்து தாமும் உண்பர். யாரையும் வெறுக்க மாட்டார்கள். பிறர் அஞ்சத்தகுந்த துன்பத்தைக் கண்டால் தாமும் அத்துன்பத்துக்கு அஞ்சுவர். புகழ் வரக் கூடிய அரிய செயல்களைச் செய்வதிலே உயிரையும் பொருட்படுத்தார். இந்த உலகமே பரிசாகக் கிடைப்பினும் பழிக்கத்தக்க செயல்களைச் செய்யார். இல்வாழ்க்கை சிறக்க வாழ வேண்டுமானால் அறம் என்றால் என்ன, அதன் இயல்புகள் யாவை என்பதைச் சிறிது நினைந்து பார்த்தோமானால் மனிதர்கள் வாழுகின்ற வாழ்க்கைக்கும், வாழவேண்டிய வாழ்க்கைக்குமுள்ள வேறுபாடு புலப்படும்.

கருவிச்சொற்கள் (Keywords): அன்புடைமை, இல்வாழ்க்கை, ஈகை, பகுததுண்டு வாழ்தல், புதல்வரைப் பெறுதல், விருந்தோம்பல்

Note: This article is strictly following the Guidelines in the *MLA Handbook for Writers of Research Papers Seventh Edition*. 2009.

முன்னுரை

இவ்வுலகில் தமக்கென்று சில கொள்கைகளின் அடிப்படையில் வாழ்வை அமைத்துக்கொண்ட தமிழ்ச் சமுதாயத்தின் மக்கள், எதிர்க்காற்றில் ஏறிப் பறக்கும் காற்றாடிபோல அல்லாமல், தண்ணீரில், இழுப்பார் பக்கமெல்லாம் இழுபடும் மரக்கட்டைபோலப் போய்விட்டதின் காரணங்களைத் திருவள்ளுவர் ஆராய்கிறார். அதாவது, தனக்குத் தேவையான அடிப்படையே மனிதன் இழந்துவிட்டதால்தான், அவன் அவல வாழ்வு வாழ்கிறானென்பதை உணர்ந்து, அவலம், துன்பம், துயரம், கண்ணீர், வேதனை, ஏக்கம் இவையெல்லாம் மனிதப் பெரு மனத்தில் புகுந்து, தெளிந்த நீரோடையைக் கலக்கிவிட்டமையைத் தெளிவாகக் காண்கிறார். கண்டவர், மனித சமுதாயம் அறவழி நீங்கி, முறையல்லாதன செய்வதனை, தம்மைப்போல மனம் படைத்த ஒருவன் பார்வையாளனாக நிற்காமல், ஒவ்வொரு குறட்பாவையும் ஒரு கதை, நாவல், காவியம், கவிதை, நாடகம், உரையாடல் என 1330 குறள்களில் பதியவைத்துள்ளார். மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய இல்லறவியல் பண்புகள் பற்றி இவ் ஆய்வுக்கட்டுரை பேசுகிறது.

அன்புடைமை

அன்பும் அறனும் உடையதே இல்வாழ்க்கை. இது சமுகத்தில் உயர்ந்த நிலையை அடையச் செய்கிறது. இதற்குக் காரணமாக வாழ்க்கைத் துணையினாலும் புதல்வரைப் பெறுவதினாலும் பிற உயிர்களிடத்து அருள் தோன்றுதலும் அன்பின் பயனாகும். இஃது இல்லறத்திற்கு அடிநிலையாய் அமைந்தது. ஆகவே, ஒருவனுடைய வாழ்க்கைக்கு ஆதாரமாகவுள்ள அன்புடைமையின் இன்றியமையாமையை *இல்வாழ்க்கை*, *வாழ்க்கைத் துணைநலம்*, *புதல்வரைப் பெறுதல்* என வரும் அதிகாரங்களை அடுத்து மொழிந்துள்ளார் வள்ளுவர். இந்த *அன்புடைமை* அதிகாரத்துள் அடங்கியப் பத்துப் பாக்களிலும் *அன்பு* என்னும் சொல் வந்துள்ளது குறிப்பிடத் தக்கது. இச்சொல்லை உடையாரையும் இல்லாரையும் முறையே *அன்புடையார்*, *அன்பிலார்* என இரண்டாம் குறளில் (குறள்.72) குறிப்பிட்டுள்ளார் வள்ளுவர் (சண்முகம் பிள்ளை, ப.41).

இல்லறம் நல்லறம்

தனிமனிதன், குடும்பம், சமூகம் என முப்பிரிவாக மனித வாழ்வு பரந்து விரிந்திருக்கின்றது. எனினும் அன்பு, பரிவு, அடக்கம், உதவி எனும் உயர்ந்த நோக்குக்கு ஒரு மனிதனை அழைத்துச் செல்வது என்பதை *வாழ்க்கைத்*

துணைநலம் அதிகாரத்தில் ***இல்வாழ்க்கைத் துணையாய மனைவி இன்ன நற்குணங்களையுடையவளாய் இருத்தல் வேண்டும்***(ப.25) எனக் கா. சுப்பிரமணியம் பிள்ளை விளக்குகிறார். ஒருவன் மனைத்தக்க மாண்புடையாளை வாழ்க்கைத்துணையாகக் கொண்டு நல்லறமாம் இல்ல றத்திற்கியைந்த செயல்களை நாள்தோறும் செய்து மக்கட் பேற்றுடன் மகிழ்ந்து வாழ்தலாகும். இதற்குப் பொருத்தமாக,

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் (தொல். பொருள்.களவு.நூ.1)என்பது தொல்காப்பியம். ***கைக்கிளை, பெருந்திணையைஒழித்துநின்றமுல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் எனக் கொள்ளப்படும். அவை அன்பொடு புணர்ந்தவாறு என்னை யெனின், கைக்கிளை பெருந்திணையைப் போலாமை, ஒத்த அன்பினராகிப் புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும் இரங்கலும் நிகழ்த்துப ஆகலான். அவை நிகழுங்கால் அத்திணைக்கு உறுப்பாகிய இடமும் காலமும் கருப்பொருளும் துணை யாகி நிகழுமாகலானும், இவை அன்பொடு புணர்ந்தன என்பதாம்*** (இளம். ப.156).

இல்வாழ்க்கை

இல்வாழ்க்கையாவது இல்லாளோடு கூடி வாழ்தலின் சிறப்பு உரைப்பதாகும். அன்பும் அறனும் ஒருங்கு கூடி நல்ல ஒழுக்கத்தோடு திகழ்கின்றபோது இல்லறம் சிறந்து விளங்கும். இதனைப் பின்வரும் குறள் காட்டுகின்றது.

அன்பும் அறனும் உடைத்தாயின்; இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (குறள்.45) என்பதில் ***மனைவி, மக்கள் முதலியவர்கள்பால் அன்பும், பிறர்க்குதவும் அற மும் கொண்டு இயங்கியிருப்பின், அவ்வாழ்க்கை உயர்ந்த தன்மையும் சிறந்த பயனும் நல்கும்*** என்கிறார் கா. சுப் பிரமணியம்பிள்ளை (ப.24). இங்கு உயர்ந்த தன்மை ***கணவன் மனைவியரிடைப்பட்ட இருதலை அன்பு அதன் பண்பாயிற்று. அதனாற் செய்யப்படும் அறம் அதன் பயனாயிற்று. அன்பு பண்பும் அறன் பயனும் ஆகும் என்பது நிரனிறை*** (தேவநேயப் பாவாணர், ப.67) என்பது இல்வாழ்க்கைக்கு வரையறை கூறப்படுகிறது.

ஈகை

அரசனுக்கு இயல்பாவது அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கும் அதாவது திண்மையும், கொடை யும், அறிவும், ஊக்கமும் என்னும் இந்நான்கு குண மும் இடைவிடாது நிற்றல் வேண்டும் என்கிறது (குறள். 382). கொடை என்பது அரசனுக்கு இயல்பு என்பது கருத்து. ஈகையால் இவ்வுலகம் இனிது வாழும் என் பது முன்னோர் மொழி. ஆதலால் ***எட்டிப் பழுத்தென்ன ஈயாதான் வாழ்ந்தென்ன*** (ப.9) என்பது பழமொழி. ஒருவன் தன் வாழ்நாளில் ஈட்டும் பொருளில் தம் குடும்பத்தார்க்கும், தம் எதிர்கால வாழ்வுக்கும் போக எஞ்சியுள்ளவற்றை இல்லாதவர்க்கு ஈயவேண்டும். இவ் வாறு செய்யின் இவ்வுலகில் ஏழ்மை விலகி எங்கும் இன்பம் நிலவும் என்ற உலகியல் நோக்கில் தெய்வப் புலவர் *ஈகை* எனும் தனி அதிகாரம் படைத்துள் ளார். பெரும் புகழுக்குரியராகிய உரையாசிரியர்களுள் மணக்குடவர் ***ஈகையாவது இல்லென இரந்துவந்தார் யாவர்க்கும் வரையாது கொடுத்தல்*** (ப.62) என்றும், பரிமேலழகர் ***வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தல்*** (ப.63) என்றும் கூறுகின்றனர்.

எவ்வகைப் பயனையும் எதிர்பாராது ஈதலே சிறந்த தாம் என்பர் ஆன்றோர். அவ்வகையில், இதுபற்றி பின்வரும் புறநானூற்றுப் பாடலில் கூறப்படுகிறது.

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிக னாயலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே என்பது (பா.134) அப்பாடல். இதற்கு உரையெழுதும் உ.வே. சாமிநாதையர், ***இப்பிறப்பின்கட் செய்ததொன்று மறுபிறப் பிற்கு உதவுமென்று கருதிப் பொருளை விலையாகக் கொடுத்துஅதற்கு அறங்கொள்ளும் வணிகன் ஆய் அண் டிரன் அல்லன்; அமைந்தோர் பிறரும் போயவழியென்று உலகத்தார் கருதஅந்த நற்செய்கையிலே பட்டது, அவனது கைவண்மை*** (ப.252) என்றெழுதுகின்றார். இது பண் டைத் தமிழ் வாணிகர்களுள் ஆய் அண்டிரன் அற நெறி தவறாது நடந்தமை புலப்படுத்துகிறது. தெய்வப் புலவரும் இதுபற்றி *ஈகை* அதிகாரத்தில்,

வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து எனும் குறளில் (221) குறிப்பிடுகின்றார். ***பொருளில் லாதவரும் திருப்பிச் செய்ய இயலாதவருமான ஏழையர்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுப்பதே ஈகை என்னும் அறச்செய லாம்; மற்றக் கைம்மாறு கருதியது கொடுப்பெல்லாம் அளவுகுறித்துக் கடன் கொடுக்கும் தன்மையதாம். குறி யெதிர்ப்பையாவது அளவு குறித்துக் கொடுத்து அவ் வளவில் திரும்பப் பெறுங் கடன். நீரது என்பதில் அது என்பது முதனிலைப் பொருளீறு*** (தேவநேயப் பாவா ணர், ப.143) என்று விளக்கம் காணப்படுகிறது. *திருக்குறள் அகராதி*யும் ***ஈகை-வறியராய் வந்து கேட் டார்க்கு மாறாது கொடுத்தல்*** (ப.30) என்றும் குறிப் பிடுகிறது.

பகுத்துண்டு வாழ்தல்

பண்டைத் தமிழர்களின் தலையாய பண்பு, ***கிடைத்த உணவைப் பசித்தஉயிர்கட்குப் பகுத்துக் கொடுத்து உண்டு, பல உயிர்களையும் துன்புறாமல் காப்பாற்ற வேண்டும். இதுவே அறநூல்களை வகுத்து அறிஞர்கள் தொகுத்துக் காட்டிய அறங்களிலெல்லாம் தலைமையான அறமாகும்*** என்கிறார் சு.சிவகாமசுந்தரி (ப.12). வள்ளுவர் *கொல் லாமை* அதிகாரத்தில் இந்தப் பண்பாட்டையே ***பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்/ தொகுத்தவற் றுள் எல்லாந் தலை*** (குறள்.322) என்று தலைசிறந்தது அறம் என்கிறார். உலகிலே அமைதி நிலவத் தமிழர் கண்ட இத்தலைசிறந்த அறம் உலகம் முழுவதும் பரவ வேண்டும். அறமென்பது இயல்பான பண்பாதலின் உலகிலுள்ள எவரும் அறநெறியை விரும்பிப் பேசு

கின்றனர். அறநெறியில் நடப்போரைப் பேணி மொழிதலும், நடவாதவரை வெறுத்து மொழிதலும் செய்கின்றனர்.

புதல்வரைப் பெறுதல்

இனிமை நிறை இல்லறத்தின் மகிழ்ச்சி வெளிப்பாடு மக்கட்பேறு. பெரியோர்கள் மணமக்களை வாழ்ததும் போது *வாழ்க* என்று மட்டும் வாழ்த்தாமல் *பதினாறும் பெற்று வாழ்க* என்று வாழ்த்துவது மரபு. ஆண் பிள்ளைகளை வாழ்த்துதற்கு வாழையடி வாழையாக நாட்டுப்புற மக்கள் ஒரு பாட்டைக் கையாள்வர். அப்பழம்பாடல் வருமாறு

வாழ்வாய் வளர்ந்திடுவாய் வையகம் பெற்றிடுவாய்
நிற்பாய் நிலைதரிப்பாய் நீளரசை யாண்டிடுவாய்
கற்பதித்த தூண்போலக் கலங்காது அரசாள்வாய்
விறபரித்த தூண்போல வெகுநாள் அரசாள்வாய்
போருக்குப்போய்விடுவாய் பொழுதோடே வென்றிடுவாய்
பகைத்தார்கள் பூமுடியைப் பருந்தாட்டம் ஆட்டிடுவாய்
சினத்தார்கள் பூமுடியைச் செண்டாட்டம் ஆடிடுவாய்
வென்ற களரியிலே வீரபட்டங் கொண்டிடுவாய்
பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்திடுவாய் என்ற

பழமொழிப் பாடலில் ***பதினாறு என்பது பதினாறு வகையான பேற்றைக் குறிக்கின்றது. பேறு என்பது பெறு என்னும் அடிச்சொல்லிருந்து வந்தது. பேறு என்பது முதல்நிலை நீண்ட தொழிற்பெயர். மனிதர்கள் அனைத்துத் துறைகளிலும் மிகச் சிறப்பாக வாழப் பதினாறு பேறுகளைப் பெறவேண்டும் என்று நம் முன்னோர் கருதினார்களே தவிரப் பதினாறு பேர்களைப் பெற வேண்டும் என்று கருதவோ சொல்லவோ இல்லை*** (பெருமாள்,பக்.331-332) எனப் *பழமொழிச் செல்வம்* ஆராய்ச்சிக்கட்டுரையில் விளக்கம் கூறப்படுகிறது. *தமிழ்-தமிழ் அகர முதலி*, *பதினாறுபேறு* என்பதற்கு ***அழகு, அறிவு, இளமை, கல்வி, துணிவு, நன்மக்கள், நல்லூழ், நுகர்ச்சி, நெல், புகழ், பெருமை, பொன், நோயின்மை, வலிமை, வாழ்நாள், வெற்றி*** எனும் பொருள்களைத் தருகிறது (ப.718). மேற்கண்ட பாடலில் ஈற்றடியில் பதினாறு பிள்ளைகள் பெற்று வாழ வேண்டும் என்ற கருத்தல்ல; பதினாறு வகைப் பேறுகள் பெற வேண்டும்; மனிதர்கள் நல்ல பல செய்கைகளில் மனத்தைச் செலுத்திட வேண்டும் என வற்புறுத்துகிறது. பேறு என்பதற்குஅகரமுதலி அழகு முதல் வெற்றி ஈறாகப் பொருள்களை விளக்கியிருப்பது எண்ணத் தக்கது. இவற்றில் நன்மக்கள் எனும் பேறு மிகவும் இன்றியமையாதது என்பதை அய்யன் வள்ளுவர் பின் வரும் குறளில்,

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற எனக் காட்டுகிறார். *மக்கட்பேறு* எனும் அதிகாரத்தில் மேற்படி முதல் குறளின் தொடர்கள் *பெறும் அவற்றுள்*-இல்லறத்தான் (பெற்றோர்) பெறக்கூடிய பேறுகளுள் பிள்ளைப்பேற்றின் தலைமையை எடுத்துக்காட்டும். உரையாசிரியர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், *மக்கட்பேறு* எனும் அதிகாரத்திற்கு, ***அதாவது, இனப்பெருக்கத்திற்கும் உலக நடப்புத் தொடர்ச்சிக்கும் வகுத்த இயற்கையான ஏற்பாட்டின்படியும், தத்தம் தொழிலில் தமக்கு உதவி செய்தற்பொருட்டும் உழைக்க இயலாத முதுமைக் காலத்தில் தம்மைப் பேணும் பொருட்டும், தாம் இறந்த பின் தம் பெயரால் அறஞ்செயதற் பொருட்டும், தம் பெயரை இவ்வுலகில் நிலவச் செய்தற் பொருட்டும் பிள்ளைகளைப் பெறுதல்*** (ப.74) என்று அதிகார விளக்கம் தருகிறார். இது புதல்வரைப் பெறவேண்டிய தலையாய நோக்கத்தினை உணரச்செய்கிறது.

விருந்தோம்பல்

புதிதாகவந்த உயர்ந்தோரையும் ஒத்தோரையும் அவர் தங்கும் சில பல நாள்கட்கு அவர் தகுதிக்கும் தம் நிலைக்கும் ஏற்ப, உறையுளும் சிறந்த ஊணும் தந்து பேண வேண்டும் என்பது பண்டைத் தமிழர் மரபு. இல்லறம்நடத்தும் கணவனும் மனைவியும் அன்புடையராய் இருந்து பேணுதல் பண்டைய இலக்கியங்கள்வழிச் சான்றோர் காட்டிய அறநெறியாகும். திருவள்ளுவர் *விருந்தோம்பல்* அதிகாரத்துள் அமைந்த

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு என்ற குறளில் (86) விருந்தோம்பல் பயன் பற்றிக் கூறியுள்ளார். இதற்குத் ***தன்னிடம் முந்தி வந்த விருந்தினரைப் பேணி விட்டுப் பின்பு பிந்திவரும் விருந்தினரையும் எதிர்பார்த்து அவரோடு தானுண்ணக் காத்திருப்பான்*** (ப.87) என்று தேவநேயப்பாவாணர் உரையெழுதுகிறார். இவ்வாறு அறஞ்செய்பவன் மறுமையில் தேவனாகி விண்ணகத்தாரால் சிறந்த விருந்தினனாக ஏற்றுக்கொள்ளப் படுவான் என்று திருவள்ளுவர் விருந்தோம்பல் சிறப்பையும், அதனைச் செயற்படுத்துபவரின் பண்பாட்டையும் நுவல்கின்றார்.

தமிழர் விருந்தோம்பும் பண்பு நலத்தின் சிறப்பினைப் பண்டைவேளாண் மகளிர் தம் பிள்ளைகளை முறையாக விடுத்து வழிப்போக்கரைத் தடுத்துத் தம் வீட்டிற்கு வருவித்து விருந்தோம்பல் செய்யும் செய்தியை,

உரன் நோன்பகட் டுழவர் தங்கை
பிடிக்கை அன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
இருங்காழ் உலக்கை இரும்புமுகந் தேய்த்த
அவைப்புமாண் அரிசி அமலைவெண் சோறு
சுவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்

என்ற சிறுபாணாற்றுப்படை பாடல் அடிகள் (190-195) கூறுகின்றன. ***அதாவது நல்லியக்கோடனுடைய ஆமூரை அடைவீராயின், ஆண்டு வலம்பட நடக்கும் உரன் உடைய எருதுகளை உடைய உழவருடைய தங்கையாகிய பிடியினது கையை ஒத்த பின்னல் கிடக்கும் சிறிய முதுகினையும் தொடிக்கையினையும் உடைய மகள், தன் மக்களாலே நும்மை முறையாகத் தடுத்து, மாண்பமைந்த வெள்ளிய அரிசியாலாக்கியசோற்றினை நண்டினது கலவையோடே தருதலாலே நீயிர் பெறுகுவீர்*** (ப.64) என்று உரையாசிரியர் பொ.வே.சோ. உரையெழுதுகின்றார்.

ISSN 2320-4842

முடிவுரை

தமிழர்கள் கண்ட தலைசிறந்த அறம் உலகம் முழுவதும்பரவவேண்டும். உலகில் அமைதி நிலவ வேண்டும். அறமென்பது இயல்பான பண்பாக இருக்கின்ற காரணத்தால் உலகிலுள்ள எவரும் அறநெறியை விரும்புகின்றனர். உயர்ந்தோரையும் ஒத்தோரையும் அவர் தகுதிக்கும் தம் நிலைக்கும் ஏற்ப, உறையுளும் சிறந்த ஊணும் தந்து பேண வேண்டும் என்பது பண்டைத் தமிழர் விருந்தோம்பல் பண்பு என அறிய முடிகிறது. தனித்திருந்து உண்ணாது பிறருக்குத் தந்து தாமும் உண்ணும் பண்பு உயர்ந்த மரபாய்ப் புலப்படுகிறது. யாரையும் வெறுக்காமல் அன்பு பாராட்டும் குணம் வெளிப்படுகிறது. புகழ் வரக்கூடிய அரிய செயல்களைச் செய்வதிலே உயிரையும் பொருட்படுத்தாது எண்ணித் துணிவது புலப்படுகிறது. மனித வாழ்வுக்கு அடிப்படை ஆதாரமாகவும் உற்ற துணையாகவும் இருப்பது இல்லறமே. ஒரு மனிதன் பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்து சமூகத்துக்கும் நாட்டுக்கும் நல்ல அறச்செயல்களை செய்ய வழிவகுப்பதாக பாயிரவியலுக்குப்பின் இல்லறவியல் அமைத்துள்ளது வள்ளுவரின் உலகியல் நோக்கு பாராட்டத்தக்கதாகும்.

துணைநூற் பட்டியல்

கந்தையா. ந.சி., *திருக்குறள் அகராதி*, சென்னை: தமிழ்மண் பதிப்பகம், 2003:30.

கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.), *தொல்காப்பியம் பொருளதிகாரம் (இளம். உரை)*, சென்னை: சாரதா பதிப்பகம், 14 ஆம் பதிப்பு, 2016.

சண்முகம் பிள்ளை, மு. (தொ.ஆ.), *தமிழ்-தமிழ் அகரமுதலி*. தமிழ்நாடு அரசு: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், 4 ஆம் மறுபதிப்பு, 2022

சண்முகம் பிள்ளை, மு., *திருக்குறள் அமைப்பும் முறையும்*, சென்னை: சென்னைப் பல்கலைக் கழகம், 1972:41, 62, 63,

சாமிநாதையர், உ.வே. (உ.ஆ.), *புறநானூறு மூலமும் பழைய உரையும் (1894)*. சென்னை: டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், 7ஆம் பதிப்பு 1971:252.

சிவகாமசுந்தரி, சு., *அறம் வெல்லும்*, நவஜோதி அச்சகம், இடமும் ஆண்டும் இல்லை.

சுப்பிரமணியம் பிள்ளை, கா. (உ.ஆ.), *திருக்குறள் மூலமும் உரையும்*, சென்னை: பூம்புகார் பதிப்பகம், 2012

சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ.), *பத்துப்பாட்டு வரிசை-3:சிறுபாணாற்றுப்படை* (1953), திருநெல்வேலி: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 4 ஆம் மறுபதிப்பு1970:1-106.

தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தார், *தமிழ் நாட்டுப் பழமொழி அகரவரிசைச் சுருக்கம்*, சென்னை: தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், 6ஆம் பதிப்பு, 1967:1-32.

தேவநேயப்பாவாணர், ஞா. (உ.ஆ.), *திருக்குறள் தமிழ் மரபுரை அறத்துப்பால்*-1 (1967), சென்னை: தமிழ்மண் பதிப்பகம், 2000.

பெருமாள், வ. (க.ஆ.), "பழமொழிச் செல்வம்", *தமிழ்ப் பொழில்*, தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு, பிப்ரவரி-மார்ச்சு 1973:323-354. <https://www/tamildigitallibrary.in> அணுகப்பட்ட நாள்:02.02.2024.



தீமகள், மலைமகள், காலகட்டம் பதிப்பகம், கன்னியாகுமரி மாவட்டம்

வாசகர்தம் மனவோட்டத்திற்கேற்ப விரிந்து நிற்கும் கடல்தான் நவீனக் கவிதை. அக்கட லுக்கு ஒரு துளிப் பங்களிப்பு முயற்சியாக மலைமகள் எழுதிய இக்கவிதைத் தொகுப்பு அமைந்துள்ளது. தன் பதின் பருவ மருவிய காலத்தில் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பு இது என்கிறார் இதன் ஆசிரியர். இது இவரது முதல் கவிதைத் தொகுப்பு எனினும், கவித்துவமும் கருத்தியலும் சிறிதும் குறையாமல் படைத்துள்ளார். எந்தச் சமரசமும் செய்து கொள்ளாது, பார்த்ததை தன்னைப் பாதித்ததைக் கவிதைகளாக்கியுள்ளார்.

புறக்காட்சிகளுக்கு அக உணர்வுகளால் அரூபக் காட்சி தந்து அழியா உருவம் அவர் சமைத்துள்ளார் என்பதற்குத் தெருவிளக்கு என்னும் தலைப்பில் அமைந்த கவிதையின் பின்வரும் அடிகள் சான்றாகும்:

நிலவை நகைத்து
மின்னும் டங்ஸ்டன் இழைகள்
நிலைகுலையும் அட்டகாசமான முதலாளிகளால்!

சமகாலச் சூழலை இக்கவிதை மிகவும் எதார்த்தமாகப் பதிவு செய்துள்ளது. இதேபோல் கட்டடத் தொழிலாளி என்னும் தலைப்பிலான கவிதை கூலித் தொழிலாளிகளாகப் பெண்கள் வேலை பார்ப்பதையும் அவர்களின் நிறைவேறாத கனவுகளையும் எடுத்துக்காட்டுகிறது.

வீடு கட்டும் தொழிலாளி போல்
கரு உரு கொள்ள
கட்டத் தொடங்கினாள் கனவை
சிறிது சிறிதாய் உருமாறி
வளர்ந்து விட்டதாய் அவள் நினைப்பு
விழியோரம் மின்னல் பளிச்சிட
வழியனுப்பினாள் மகவை
ஒரு வாய் குவளை நீரையும் மறந்து
அரைக் கட்டிடமாய் அவள் கனவு
இன்று வீதியில்!

இப்படி இத்தொகுப்பில் உள்ள ஒவ்வொரு கவிதையும் சமூகத்தின் எதார்த்த அவலங்களை மென்மையாகவும் காட்டமாகவும் பதிவுசெய்துள்ளது. வரவேற்கத் தக்க கவிதைத் தொகுதி இது.

– இரமேஷ் அர்ஜுன்

Eastern guard tower
glints in sunset; convicts rest
like lizards on rocks.

- Etheridge Knight

ISSN 2320-4842

A REVIEW ON NATIONAL EDUCATION POLICY 2020

Dr. R. SELVENDIRAN
Principal, DVJ Integrated College of Education (B.A.,B.Ed & B.Sc., B.Ed),
Sivagamiammal Group of Educational Institutions, Krishnagiri District 635 108

Abstract

The Indian Government has created a new plan called NEP 2020 to improve education system. There is a direction in our Indian constitution concerning Article 45 in Directive Principle of State Policy (DPSP), which states that all must be equally accessible for education. Since the Education is in Concurrent list, the state has to follow the center's instruction, but it is not mandatory. Now the primary education for children under the age of 6 to 14 years has become the fundamental right under Article 21A. The National Education Policy has made many new educational interventions such as the Mid-day meal scheme, Sarva Siksha Abhiyan, Navodaya Vidyalas, Kendriya Vidyalayas, etc. This National Education policy focuses on bringing changes in the traditional schooling pattern in school and higher education. The National Education Policy 2020 has been approved by the union cabinet headed by **PM Shri. Narendra Modi**. Hence replacing the Old National Education Policy, which is 34 years old, to gain globally competitive. The policy is well framed with five major key areas such as accessibility, equality, quality, affordability, and accountability. The United Nations Sustainable Development 2030 Agenda has set a benchmark for the National Education Policy. The National Education Policy is changing the Indian educational system into a globally competitive education system with the required flexibility. The multi-disciplinary aspect of the National Educational Policy will become a stepping stone for enhancing students' abilities.

Key Words: National Education Policy (NEP), Human Resource Development Ministry (MHRD), University Grants Commission (UGC), National Council for Teacher Education [NCTE], Integrated Teacher Education Programme [ITEP]

INTRODUCTION

"Education is very important, especially during uncertain times". On 29th July 2020, the Union Cabinet has approved the New Education Policy (NEP) with an aim to introduce several changes in the Indian Education System from School to College level. The National Education Policy (NEP) focuses on education meant to be universal right from primary school to the higher secondary level by the year 2030. The NEP 2020 aims at making "India as a Global Knowledge Superpower". **Prime Minister Shri. 'Narendra Modi'** gave the opening speech at the "Conclave on Transformational Reforms in Higher Education" held in accordance with the NEP. This event was organised by Human Resource Development Ministry and & University Grants Commission. The Cabinet has also approved the renaming of the Ministry of Human Resource Development to the Ministry of Education. The two earlier education policies were brought in 1968 and 1986. NEP is based upon 5 pillars and these are **Access, Equity, Quality, Affordability and Accountability**. It will prepare our youth to meet diverse national and global challenge of present and future. It also focuses on bringing the discontinued students back to the education stream to continue their education. In 2017, the Central Government formed a Committee under the leadership of **Dr. K. K. Kasturirangan** to draft a New Education Policy. The Committee came up with the NEP 2019.

FRAMEWORK OF EDUCATION IN SCHOOL LEVEL

The Old Education structure of 10+2 system has been changed by 5+3+3+4. Earlier the education system in school was well known as 10+2 which depicts 10 years of high school education and 2 years of higher secondary school education after the student eligible to take admission into college for higher study. The new curriculum is framed in 5+3+3+4 terms, i.e, with the schooling of twelve years and Anganwadi as three years. The Program aims at preparing teachers for Foundational, Preparatory, Middle and Secondary stages as per New School Structure of NEP 2020. Students cannot force to take any particular language; they can choose their language on their interest.

HIGHLIGHTS OF 5+3+3+4 SYSTEM IN SCHOOL LEVEL

Category	10+2 System	5+3+3+4 System
Structure	Existing Academic Structure	New Academic Structure
Stages	2 Stages	4 Stages
Age Period	[6-18] Years	[3-18] Years
Time Period	12 years of school	15 Years [12 School Years + 3 Pre- School Years]

Stage Wise	1st Stage = 6 to 16 Years (Class 1 to 10) 2nd Stage = 16 to 18 Years (Class 11 and 12)	Foundation Stage = 5 Years [Pre School] 3 Years (At age 3 to 6 Years) + [Class 1 to 2] 2 Years (At age 6 to 8 Years) Preparatory Stage = 3 Years [Class 3, 4 and 5] (At age 8 to 11 Years) Middle Stage = 3 Years [Class 6, 7 and 8] (At age 11 to 14 Years) Secondary Stage = 4 Years [Class 9, 10, 11 and 12] (At age 14 to 18 Years)

FRAMEWORK OF INTEGRATED TEACHER EDUCATION PROGRAMME [ITEP] IN COLLEGE LEVEL

The Old Teacher Education structure of 3+2 system has been changed by 4 years of ITEP. Earlier the education system in Teacher Education was well known as 3+2 which depicts 3 years of Bachelor Degree in Science or Arts and 2 years of Bachelor Degree in Education. National Council for Teacher Education [NCTE] has launched Integrated Teacher Education Programme [ITEP] in 57 Teacher Education Institutions [TEI'S] from the academic session 2020-2021 throughout the country. This is a flagship programme of NCTE under NEP 2020. It is a one stage of four years system. The 4 -years Integrated B.Sc., B.Ed will be a Dual-Major Holistic Bachelor's degree in Education as well as Specialised Subjects such as Language, History, Physics, Chemistry, Mathematics, Botany, Zoology etc., It will ensure that outstanding students will enter the teaching profession. A Student undergoing this course will be grounded in Indian Values, Languages, Knowledge, Ethos, Tribal Tradition and also versed in Latest Advances in Education and Pedagogy. This course caters to the need of 21st Century Skills.

The students of age group between 18-21 years can join the ITEP. The 4 years undergraduate programme combines academic studies in a chosen subject with professional training in Education. The Integrated Teacher Education Programme (ITEP) course provides hands-on experience through Classroom Activities, Field Placements and Internships. ITEP programme focus on developing necessary teaching skills that candidates to create engaging and effective study plans throughout their Professional Life.

HIGHLIGHTS OF INTEGRATED TEACHER EDUCATION PROGRAMME [ITEP] IN COLLEGE LEVEL

Category	3+2 System [(B.Sc) + (B.Ed)]	4 Year System B.Sc., B.Ed.
Structure	Existing Academic Structure	New Academic Structure
Stages	2 Stages	1 Stage
Age Period	[18-22] Years	[18-21] Years
Time Period	5 Years of College	4 Years of College
Stage Wise	1st Stage = 18 to 20 Years (B.Sc - 3 Years) 2nd Stage = 20 to 22 Years (B.Ed 2 Years)	One stage = B.Sc., B.Ed Integrated Degree

The basic foundation education and education on numeracy are given much more importance. The separation between academic curriculum and extracurricular activities is much reduced. The vocational courses are planned to be initiated from the class 6th onwards. The mother tongue is emphasized teaching up to grade 5. The student's progress is tracked in a better holistic way with comprehensive analysis than the traditional scrutiny. The gross enrolment ratio is expected to rise about 50% by 2035 in higher education with numerous flexible subjects. This mechanism in National Education Policy has multiple entry and exit with suitable certification with credit transfer facility time to time. The research platform is to be reformed with the formation of the National Research Foundation. The Higher Education authority is to be supported with four separate wings with respective functions to be monitored. Greater autonomy is to be given to the autonomous college with the integration of information technology throughout. The National Education Policy also incorporate ways to include funds based on gender and special zones for education to encourage the non-accessible regions.

IMPORTANT FEATURES OF NEP 2020

This system makes it more inclusive, holistic and innovative. It focuses on Quality Education, Learner-Centric Approach, Inclusive Education and Future-Readiness.

a) Quality Education

The NEP 2020 Prioritizes quality education by setting standards for Curriculum design, Teacher training and Assessment practices. It promotes excellence and innovation in teaching and learning methodologies.

b) Learner-Centric Approach

In NEP 2020 places learners at the Centre of the Education system focusing on their individual needs, interests and abilities. The students learn best through their learning experience and personalized and meaningful.

c) Inclusive Education

National Education Policy addresses the gaps in access to education and promotes inclusivity. It recognizes the diverse learning needs of students and aim to provide equal opportunities for all learning to excel.

d) Future – Readiness

The policy aligns education with needs of the future, preparing students to thrive in a rapidly changing the world. It emphasizes the development of skills and deep understanding of concepts, enabling students to navigate the challenges of the future.

MERITS OF NEP 2020

The following are essential features of NEP 2020 which will improve the Education Scenario in India.

- Introduction of new 5+3+3+4 curricular and pedagogical structure for school education and the students are also trained in gardening, carpentry, pottery, and painting.
- Emphasis on foundational literacy and numeracy in early years of schooling.
- It reduces exam stress for students.
- Integration of vocational education and skill training at all levels of education.
- Creation of a National Educational Technology Forum [NETF] to promote the use of technology in education.
- Increased public investment in education with a target of spending 6% GDP on education.
- Promotion of multilingualism and the use of mother tongue as a medium of instruction in schools.
- Saving of one year to study ITEP
- The government aims to make schooling available to everyone with the help of NEP 2020.
- For making the students prepared for future pandemic situations, online academic will be promoted on a larger scale.
- Students will be able to come back to educational institution through this new approach.
- Improve students Critical thinking
- By providing high quality education to all.

CONCLUSION

National Policy Education remodel of National Education Policy (2020) will prove beneficial for Students, Teachers and Education Sector. It is a significant step towards build a Knowledge based on Society that is equipped to meet the challenge of the 21st Century. The policy helps in eliminating the prevailing inequalities and other pedagogical problems prevailing in the structure. By the year 2030, it will be mandatory to have at least 4 years B.Sc., B.Ed degree for joining the occupation of teaching. This New Education Policy has been introduced after a gap of 34 years with the objective of providing a Comprehensive and Holistic Education System to Students across the Country.

REFERENCES

1. A Review on National Education Policy 2020 and Its Influence on Academics, Journal of Legal, Ethical and Regulatory Issues, Vol.24, ISSN:1544-0044.

2. Importance of National Education Policy – 2020. Imparting Education, Journal of Positive School Psychology, Vol. 6, No. 2, ISSN: 6557-6561.

3. National Education Policy (2020). Ministry of Human Resource Development, Government of India.

4. National Education Policy: An Overview. International Journal of Creative Research Thoughts (IJCRT). Vol.1, Feb 2023, ISSN: 2320-2882.

Education breeds confidence. Confidence breeds hope. Hope breeds peace.

- Confucius

Education’s purpose is to replace an empty mind with an open one.

- Malcolm Forbes

Education is not preparation for life; education is life itself.

- John Dewey

ISSN 2320-4842

இரட்டைக் காப்பியத்தில் திருநங்கைகள்

இ. ஜெயஸ்ரீ
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி, கரூர் (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)
முனைவர் மா. சண்முகம்
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி, கரூர் (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்

மனித இனம் தோன்றிய காலத்தே திருநங்கைகளும் தோன்றிவிட்டனர். அவர்கள் எப்படி இருந்திருப்பர்? அவர் களது வரலாறு என்ன? இவற்றுக்கான விடையை இலக்கியங்கியங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. மனித இன வரலாற்றைக் கூறும் நம் இலக்கிய ஆதாரங்கள், திருநங்கைகள் பற்றியும் பதிவுசெய்துள. அவற்றுள் காப்பியங்களில் இடம்பெற்றுள்ள திருநங்கைகள் பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் காணலாம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் கூறி, தன்னிகரில்லாத தலைவன், தலைவியையும்கொண்ட நீண்ட செய்யுட்பகுதி காப்பியமாகும். இத்தகு நெடுங்காப்பியங்களில்கூடத் திருநங்கையர் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. திருநங்கைகள் அரண்மனைகளில் அரசியர்க்கு உதவியாகவும் அந்தப்புரப் பணியாளர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை அறிந்துகொள்ளலாம்.

சிலம்பில் திருநங்கைகள்

இளங்கோவடிகள், சிலம்பில், இந்திரவிழவூர் எடுத்த காதையில், புகார் நகரில் இருந்த வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், சதுக்கப்பூத மன்றம், பாவை மன்றம் எனும் ஐவகை மன்றங்கள் குறித்துக் கூறியுள்ளார். ஒவ்வொரு மன்றத்திலும் வழிபடுவோர், வழிபடுவோர்க்கு ஏற்படும் பயன்கள் பற்றியும் அவர் விளக்கியுள்ளார். இவற்றுள், இலஞ்சி மன்றம், உடல் குறைபாடு உடையவர்களுக்கு உரியதாகக் கூறுகிறார். கூன்முதுகினர், குள்ளர், வாய் பேச இயலாதவர்கள், செவிடர், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இலஞ்சி மன்றப் பொய்கையில் முழுகி நீராடினால் நோயும் உடல் குறையும் நீங்கும் என்கிறார்.

கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழுகு மெய்யாளரும் முழுகினர் ஆடி
பழுதுஇல்காட்சி நல்நிறம் பெற்று
வலம்செய்யாக் கழியும் இலஞ்சி மன்றமும்.[1]

மேற்கூறிய பாடலின் மூலம் உடல் குறைபாடுடைய திருநங்கைகள் இலஞ்சி மன்றத்தை வழிபட்டிருக்கலாம் என்று கருத முடிகிறது.

ஆடல்

கடல் ஆடுகாதையில் ஆடல் வல்ல மாதவி தாளமுறைகெடாமல் கொடுகொட்டி ஆட்டம் முதற்கொண்டு பதினொரு வகை ஆடல்களை நிகழ்த்திக் காட்டுகிறாள். அதில் ஒரு வகைதான் பேடியாடல்.

ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காமன் ஆடிய பேடி ஆடலும்.[2]

வாணாசுரன் நகரத்திலிருந்த தன் மகனாகிய அநிருத்தனைச் சிறை மீட்க ஆண்மை திரிந்த பெண் கோலத்துடன் காமன் ஆடிய கூத்தே பேடியாடல் எனப்படுகிறது. இவ்வடிகளின் மூலம் ஆண்மை திரிந்த பெண்மை உணர்வு மிக்கவர்கள் திருநங்கைகள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. இன்றும் சில கிராமப்புரங்களில் வேண்டுதலுக்காக பெண் வேடமிட்டு ஆடும் பழக்கம் தொடர்கிறது.

தெய்வம்

மதுரைக் காண்டத்தில், கட்டுரைக் காதையில் கண்ணகி மதுரையை எரித்தழித்த பிறகு, அவள் அறியும்படியாகத் தோன்றி, முன்னர் நடந்த முற்பிறவிக் கதையைக் கண்ணகிக்குச் சொல்லும் தெய்வம் மதுராபதியாகும்.

வலமருங்கு பொன் நிறம் புரையும் மேனியள்
இடக்கை பொலம்பூந் தாமரை ஏந்தினும்
வலக்கை அம்சுடர்க் கொடுவாள் பிடித்தோள்

*வலக்கால் புனைகழல் கட்டினும், இடக்கால்
தனிச்சிலம்பு அரற்றும் தகைமையள் பனித்துறைக்
கொற்கைக் கொண்கன், குமரித்துறைவன்,
பொன்கோட்டு வரம்பன், பொதியில் பொருப்பன்
குலமுதல் கிழத்தி.*[3]

மதுராபதி தெய்வம் இருபால் கூறுடையது. இடது கையில் தாமரை மலரும் வலது கையில் கொடுவாளும் வலது காலில் வீரக்கழலும் இடது காலில் ஒலி செய் ஒற்றைச் சிலம்பும் அணிந்தவளாகக் காட்சி தருகிறாள். இருபால் கூறுடைய மதுரை மாதெய்வம் திருநங்கையாகவே இருந்த செய்தியை அறிந்துகொள்ளலாம்.

பெண்ணின் அழகு

இளங்கோவடிகள் பெண்ணின் அழகைக் கூறுமிடத்துத் திருநங்கையர் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது.

*ஆண்மையில் திரிந்துதன் அருந்தொழில் திரியாது
நாணுடைக் கோலத்து நகைமுகங் காட்டிப்
பண்மொழி நரம்பின் திவ்வியாழ் மிழற்றிப்
பெண்மையில் திரியும் பெற்றியும் உண்டென.*[4]

தன் ஆண் உருவை மாற்றிக்கொண்டாலும் கொல்லுதலாகியதன் கொலைத் தொழிலை மாற்றிக்கொளாது, வெட்கமும் சிரிப்பும் பொலியும் முகத்தோற்றத்தோடு, யாழிசைபோல இனியமொழி பேசிடும் பெண்ணுருக் கொண்டு இங்குத் திரிவதும் உண்டோ என்கிறார். இக் கருத்தை நோக்கும்போது ஆண் தன்மையிலிருந்து திரிந்தவர்களாகவே இவர்களைச் சிலம்பு கூறுகிறது.

சேரனின் வீரத்தைச் சோழனும் பாண்டியனும் அறிய வேண்டும் என்பதை வலியுறுத்துமிடத்தில் திருநங்கையர் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வம் கண்ணகிக்குக் கல் எடுக்கவும் தமிழனின் வீரத்தை நிலைநாட்டவும் வடதிசை நாடுகள்மீது படையெடுத்துச் சென்று கனகவிசயரைத் தோற்கடித்து இமயத்திலிருந்து கல்லெடுத்து, கங்கையில் நீர்ப்படைசெய்து தென்திசை நோக்கித் திரும்புகிறான்.

*சுருளிடு தாடி மருள்படு பூங்குழல்
அரிபரந்து ஒழுகிய செழுங்கயல் நெடுங்கண்
விரிவெண் தோட்டு வெண்ணகைத் துகர்வாய்ச்
சூடக வரிவளை ஆடமைப் பணைத்தோள்
வளரிள வனமுலை தளரியல் மின்னிடை
பாடகச் சீறடி ஆரியப் பேடியோடு.*[5]

இப்பாடலடிகளில் பேடி எனக் குறிக்கப்படும் திருநங்கையரை அழகு மிளரும் இளம்பெண்ணாய் ஆசிரியர் வருணித்துள்ளார். கருங்கூந்தலையுடையவள்; செவ்வரிகள் படர் பெரிய கெண்டைமீன் கண்களை உடையவள்; வெண்பற்களையும் சிவந்த வாயையும் உடையவள்; மூங்கில் தோளும் அழகிய இளமார்பும் மின்னல் போன்ற இடையும் கொண்டவள்; பாடகம் என்னும் கால் அணி அணிந்தவர்கள் ஆரிய பேடிகள் என்று கூறியுள்ளார். ஆசிரியர் இப்பாடலில் மட்டுமே திருநங்கைகளின் உடல்தோற்றம் பற்றி பதிவு செய்துள்ளார்.

பணிப்பெண்களாகத் திருநங்கைகள்

வஞ்சிக் காண்டம் நடுகற் காதையில் செங்குட்டுவனின் மனைவியும் அரசியுமான வேண்மாள், வெண்ணிலா காண நிலாமுற்றம் வருகிறாள்.

*மன்மதச் சாந்தும் வரி வெண்சாந்தும்
கூனும் குறளும் கொண்டன ஒருசார்
வண்ணமும் சுண்ணமும் மலர்பூம் பிணையலும்
வெண்அணிப் பேடியர் ஏந்தினார் ஒருசார்.*[6]

ஒளிவீசும் வளையல் அணிந்த பணிப்பெண்கள் மங்கல விளக்கேந்தி வாழ்த்துகின்றனர். ஒருபக்கம் மத்தள ஒலியும் யாழிசையும் கொண்டு பண்ணமைத்துப் பாடும் முழக்கம் ஒலித்துக்கொண்டுள்ளது. மறுபக்கம் கஸ்தூரிக் குழம்பையும் தொய்யில் எழுதும் வெண் சந்தனத்தையும் கூனரும் குள்ளரும் ஏந்தி நிற்கின்றனர். அதே வரிசையில் பெண்போல் அழகுடைய பேடிகள் சுண்ணப் பொடிகளையும் மணமுள்ள மலர் மாலைகளையும் தாங்கி நிற்கின்றனர் என்ற செய்தி மூலம் திருநங்கைகள் அரண்மனை அந்தப்புரங்களில் அரசியர்க்குப் பணிவிடை செய்யும் பெண்களாக இருந்தமை தெளிவாகிறது.

மணிமேகலை

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் திருநங்கைகள் பற்றிய குறிப்புகள் உள. மலர்வனம்புக்க காதையில் திருநங்கைகள் பற்றி இவ்வாறு பேசப்பட்டுள்ளது.

*மணிமேகலை கலைதன் மதிமுகந் தன்னுள்
அணிதிகழ் நீலத் தாய் மலரோட்டிய
கடைமணி யுகுநீர் கண்டன னாயிற்
படையிட்டு நடுங்குங் காமன் பாவையை
ஆடவர் கண்டால் அகறலு முண்டோ
பேடிய றன்றோ பெற்றியின் நின்றிடின்.*[7]

மணிமேகலை தன் தாய் தந்தைக்கு ஏற்பட்ட துயர் கேட்டுக் கண்ணீர் வடிக்கிறாள். மாதவி அவளுக்கு ஆறுதல் கூறுகிறாள். மணிமேகலையின் மதிபோன்ற முகத்தில் வரும் உகுநீர் கண்டால் காமன் தன் படையினை எறிந்துவிட்டு நடுங்குவான் என்றும் அவள் அழகைக் கண்டால் ஆடவர்கள் அவளைவிட்டு நீங்கிச்செல்லமாட்டார்கள் என்றும் கூறியுள்ளார். அப்படி நீங்கிச் செல்பவர்கள் பேடியர் ஆவர் என்று பதிவு செய்துள்ளார். இங்குப் பெண்களின் அழகு பற்றியும் பெண்தன்மை மிகுந்த பேடியர்களின் குணம் பற்றியும் கூறியுள்ளார்.

பேடிக் கூத்து

மலர்வனம் புக்க காதையில் புகார் நகரத்தில் நிலமளந்தநெடுமாலின் மகனாகிய காமன் ஆடிய பேடிக் கூத்து நிகழ்த்தப்படுகிறது.

*சூரியற் றாடி மருள்படு பூங்குழல்
பவளச் செவ்வாய்த் தவள வாள்நகை
ஒள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் தோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதல்
காந்தளஞ் செங்கை ஏந்திள வனமுலை*

அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்
இகந்த வட்டுடை எழுதுவரிக் கோலத்து
வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி
நீணில மளந்தோன் மகன் முன்னாடிய
பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும்.[8]

சுருண்ட தாடியும் இருண்ட அழகிய கூந்தலும் பவளம்போன்ற சிவந்த வாயையும் வெண்மைமிக்க பற்களையும் ஒளிபொருந்திய பெரிய கண்களையும் சங்கினாற் செய்த காதணியையும் கருமையான வளைந்த புருவத்தின் பக்கத்தில் வளைந்துள்ள பிறை போன்ற நெற்றியையும் காந்தள்மலர் போன்ற சிவந்த கையையும் அழகிய நுண்ணிய இடையையும் முழங்கால் அளவு உடுக்கப்படும் உடையும் அணிந்தவர்கள் பேடியர்கள் என்று மணிமேகலை திருநங்கைகளின் உருவ அமைப்பினை எடுத்துத்துரைக்கிறது.

தொகுப்புரை

மேற்கண்ட சான்றுகளின் மூலம் பண்டைக்காலத்தில் திருநங்கைகள் உயர்ந்த நிலையில் இருந்திருக்கின்றனர். அரண்மனைகளில் பெண்களைத் தவிர அரசியர்க்கு உதவ யாரையும் அனுமதிப்பதில்லை. இருப்பினும் திருநங்கைகளை அனுமதித்துள்ளனர் எனில், அவர்களைப் பெண்களாக மதித்துள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால், இன்றோ சக மனிதராகக்கூடப் பார்க்க மறுக்கிறது இந்தச் சமூகம். இந்த நிலை மாறி அவர்களுக்குச் சமூகத்தில் தக்க இடமளிக்கவேண்டும் என்பதை இந்தக் கட்டுரையின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

மேற்கோள்கள்

1. முனைவர் ச.வே.சு., 2015, சிலப்பதிகாரம், கங்கை புத்தக நிலையம், சென்னை.
2. மேற்படி.
3. மேற்படி.
4. மேற்படி.
5. மேற்படி.
6. மேற்படி.
7. புலியூர்கேசிகன் உரை, 2017, மணிமேகலை, பாரி நிலையம், சென்னை.
8. மேற்படி.
9. இ.ஜெயஸ்ரீ., 2020, திருநங்கையர் படைப்புலகம் காட்டும் வாழ்வியல், விழுப்புரம்.
10. மேற்படி.



செவ்வியல் இலக்கண ஆய்வு: தொல்காப்பிய இடைச்சொற்கள், முனைவர் ஜா. கீதா, சாராதா பதிப்பகம், சென்னை 600 014.

தமிழ்மொழியின் ஒரு குறிப்பிட்ட காலகட்டம் தொல்காப்பியத்தை மையமிட்டுக் கட்டமைக்கப்பட்டுள்ளது எனலாம். தொல்காப்பியரை இலக்கணி என்னும் கோணத்தில் அணுகுவதோடு, ஒரு சிறந்த ஆராய்ச்சியாளர் என்னும் கோணத்திலும் அணுக முடியும். முனைவர் ஜா. கீதாவின் இந்த நூல் தொல்காப்பியர் கூறிய இலக்கணக் கட்டமைப்பிற்குள் நின்றும் உரையாசிரியர்கள், நன்னூலார் ஆகியோர் துணையைக் கொண்டும் தொல்காப்பியத்தில் பயின்று வந்துள்ள இடைச்சொற்களை மிக நுணுக்கமாகவும் நேர்த்தியாகவும் ஆராய்ந்துள்ளது. இந்த ஆய்வு நூலின் முதல் பகுதி இடைச்சொல்லின் இலக்கணம், வகை, வரும் இடங்கள் குறித்து எளிமையும் தெளிவும் கொண்டு விளக்கி இலக்கண ஆய்வாளர்களுக்கு இடைச்சொல் குறித்த ஒரு தெளிந்த பார்வையை அளிப்பதோடு மேலும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தையும் தூண்டும் என்பதில் ஐயமில்லை.

தொல்காப்பியர் கூறிய சாரியைகளினும் கூடுதலாக உரையாசிரியர்கள் சாரியைகளைக் கூறியுள்ளனர். இப்பின்னணியில் தொல்காப்பியத்தில் பயின்று வந்துள்ள சாரியைகளைத் தொகுத்தும் பகுத்தும் நூலின் இரண்டாம் பகுதியில் நூலாசிரியர் ஆய்ந்துள்ளார். இது சமகால மொழிப் பயன்பாட்டில் சாரியைகள் பற்றிய ஆய்வை மேற்கொள்ள முன்மாதிரியாக அமையும் எனலாம். மூன்றாம் பகுதி விகுதிகள், கால இடைநிலைகள் பற்றியும் நான்காம் பகுதி வேற்றுமை உருபுகள் பற்றியும் ஆராய்கின்றன. நூலாசிரியர் துணிந்த ஆய்வு முடிபுகள் பல புதிய திறவுகளை இலக்கண ஆய்வாளர்களுக்கு அளிக்க வல்லவை. அடுத்தடுத்த பகுதிகள் அசைநிலைக் கிளவி, இசைநிறைக் கிளவி, உவம உருபுகள், தத்தம் குறிப்புச் சொற்கள் குறித்து ஆராய்கின்றன. இந்நூலின் இன்னொரு மிக முக்கிய கூறு பின்னிணைப்பு ஆகும். தொல்காப்பியத்தில் இனங்காணப்பட்ட இடைச்சொற்கள் அகர நிரலில் அகராதி அமைப்பில் இதில் அமைகின்றன. இது எதிர்கால ஆய்வாளர்களுக்கு வழிகாட்டியாகவும் மேலும் தொல்காப்பியத்தின் சொல் வளத்தை ஆய்வுக்கு உட்படுத்தவும் வழிவகுக்கும் எனலாம். இந்நூல் சமகாலத் தமிழ்க்கல்விச் சூழலில் மிக முக்கிய கவனம் பெறும் என எதிர்பார்க்கலாம்.

- இரமேஷ் அர்ஜுன்

ISSN 2320-4842

திருப்பணிமாலை என்னும் இலக்கிய வகை

முனைவர் செ. ஜகந்நாத்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ். இராமசாமி நாயுடு நினைவுக் கல்லூரி, சாத்தூர் 626 203

ஆய்வுச்சுருக்கம்

பிற்காலச் சோழர், பாண்டியர் ஆட்சிக் காலங்களில் எழுந்த பல ஆலயங்கள் தமிழகத்தில் நடந்த இசுலாமியப் படையெடுப்புகளால் பாழ்பட்டு நின்றன. அதன் பிறகு இங்கு எழுந்த விஜயநகர நாயக்கர் ஆட்சியின்போது அவை மீட்கப்பட்டு விரிவாக்கம் கண்டன. இம்மீட்டுப் பணிகளின் உந்துதலால் பல்வகைக் கோயில் சார் இலக்கியங்கள் இக்காலத்தில் எழுந்தன. அவற்றுள் ஒன்று திருப்பணி மாலை என்னும் இலக்கிய வகை.

தமிழகத்தின் பல்வேறு ஆலயங்களில் புராண காலம் முதல் இந்நூல்கள் தோற்றம் பெற்ற நாயக்கர் ஆட்சிக் காலம்வரை நடைபெற்ற திருப்பணிகள் குறித்த செய்யுள் வடிவத் தொகுப்பான இத்திருப்பணி மாலை இலக் கியங்கள் தோற்றம் பெற்றமைக்கான சூழல், திருப்பணி மாலை என்ற இலக்கிய வகையின் நோக்கம், அந் நூல்கள் தம் கருத்துகளை எடுத்துரைக்கும் போக்குகள், அந்நூல்களின் வரலாற்று முக்கியத்துவம், சமூகவியல் முக்கியத்துவம், இதுவரை தமிழில் வெளிவந்துள்ள திருப்பணிமாலை நூல்கள் பற்றிய குறிப்புகள் ஆகியவை குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

Abstract:

After Muhals invasion, many of the temples built by the later Cholas and Pandyas were left shattered. The Vijayanagar reign which flourished next to them gave a rebirth to those demolished temples. These restoration works with no doubt made an impact on literature. As a result of this, a new genre of literature arose on temple works which is known as Thiuppanimalai.

The present article encompasses the circumstance that paves a way for the establishment of Thiruppanimalai - a work in verse form which covers the construction and renovation works done in temples from ancient period to the Nayakas period, objective of this literary genre, the progress of the book and social & historical importance. This article also discusses about Thiruppanimalai editions.

முன்னுரை

பிரபந்தங்கள் அல்லது சில்லறைப் பிரபந்தங்கள் எனப் பண்டைய காலங்களில் அழைக்கப்பட்ட சிற்றிலக்கிய வகைகளுள் *மாலை* என்னும் இலக்கிய வகையும்இடம்பெற்றுள்ளது. ***ஒரு பொருள் குறித்துப் பல செய்யுள்கள் பாடுவதை மாலை என்கின்றார்கள்*** (நாடன்) என நாஞ்சில் நாடன் கூறுகிறார். ***அங்கமாலை, அனுராகமாலை, இரட்டை மணிமாலை, இணைமணி மாலை, நவமணிமாலை, நான்மணிமாலை, நாம மாலை, பல்சந்த மாலை, கலம்பக மாலை, புகழ்ச்சி மாலை, பெருமகிழ்ச்சி மாலை, மணி மாலை, மெய்கீர்த்தி மாலை, காப்பு மாலை, வருக்க மாலை, உற்பவ மாலை, வேனில் மாலை, வசந்தமாலை, தாரகை மாலை, தண்டக மாலை, வீரவெட்சி மாலை, காஞ்சி மாலை, நொச்சி மாலை, தும்பிச்சி மாலை, உழிஞை மாலை, வாகை மாலை*** (செயராமன், ப. 19.) ஆகிய மாலை இலக்கிய வகைகளை ந.வீ.செயராமன் பட்டியலிடுகிறார். இவ்வாறான பல வகை மாலைகளுள் ஒன்றாகத் திகழும் திருப்பணி மாலை என்னும் இலக்கிய வகை குறித்து இக்கட்டுரை பேச முற்படுகிறது.

கோயில் சார் இலக்கியங்கள்:

பழந்தமிழகத்திலேயே பல்வேறு கடவுளர்களுக்கு ஆலயம் அமைத்து வழிபடும் மரபு காணப்படுகிறது. ***திருமாலுக் குரிய திருப்பதிகள் சிலவும் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. அவையாவன இருந்தையூர், குளவாய், திருவரங் கம், திருவெஃகா, திருவனந்தபுரம், திருமாலிருஞ்சோலை முதலியனவாம்*** (சண்முகம் பிள்ளை, ப. 37). ***முருகன் கோவில் கொண்ட தலங்களைப் பற்றிய செய்திகளும் சங்கப்பாடல்களில் தெரிய வருகின்றன திருப்பரங்குன்றம், திருச் சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம்*** (சண்முகம் பிள்ளை, ப. 84) ஆகியன சங்கப்பாடல்கள் குறிப் பிடும் முருகத் தலங்கள் ஆகும். இவ்வாறு பல்வேறு தெய்வங்களைப் பற்றிய குறிப்புகளைச் சங்கப் பாடல்கள் வழங்கியபோதும் இத்தலங்களைச் சென்று தொழுவதை முதன்மை நோக்கமாகப் பேசும் மரபை பக்தி இலக் கிய காலத்தில்தான் காண்கின்றோம். சைவ சமய நாயன்மார்களும் வைணவ சமய ஆழ்வார்களும் தத்தம் இறையவர் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் தோறும் பயணித்து அத்தலத்து இறைவனின் பெருமைகளைப் பாடல்களாகப் புனைந்து அவ்விறைவன் அருள் கிட்ட அத்தலங்களைச் சென்று வணங்குமாறு அறிவுறுத்தினர்.

இவ்வாறான சிவத் தலங்களைச் சைவ மரபில் பாடல் பெற்ற தலம் என்றும் வைணவ மரபில் மங்களாசாசன திவ்யதேசம் என்றும் வழங்குவர்.

பல்லவர் ஆட்சிக் காலங்களில் ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் அடையாளம் காட்டப்பட்ட ஆலயங்கள் பல பிற்காலச்சோழர், பாண்டியர் ஆட்சிக் காலங்களில் அவர்களால் போற்றிப் புரக்கப்பட்டன. ***பல்லவர், பாண்டியர், சோழர், அதியர், போசளர் போன்ற பல்வேறு மரபினரால் கி.பி7ஆம் நூற்றாண்டில் தொடங்கி கி.பி 13ஆம் நூற்றாண்டு வரை கற்றளிகளாக உருவான தமிழகக் கோயிற் கட்டடக்கலை தழைத்துச் செழித்து தலைநிமிர்ந்து நின்றது. பதினான்காம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் ஏற்பட்ட மாற்றாரின் சூறையாடல் களாலும் மதுரையம்பதியின் மாறுபட்ட ஆட்சியாளர் களாலும் கோயில்கள் அழிக்கப்பெற்றுப் பூசைகள் முட்டுப் பாடுற்றுப் பல ஆண்டுகள் செயலிழந்து கிடந்தன. எண்ணற்ற செப்புத்திருமேனிகள், கொள்ளை போனவை போக எஞ்சியவை புதைக்கப்பட்டன இத்தகைய கால கட்டத்தில் மீண்டும் திருக்கோயில்கள் தழைக்க தமிழகம் வந்தவர்களே விஜயநகரப் பேரரசர்கள்*** (குடவாயில் பாலசுப்பிரமணியன, ப. 1) எனக் குடவாயில் பாலசுப் பிரமணியன் கூறுவது கவனிக்கத்தக்கது.

அழிநிலையில் இருந்த கோயில்கள் ஆக்கம் பெற்ற விஜயநகர நாயக்கர் ஆட்சிக் காலத்தில்தான் பல்வேறு கோயில்சார் இலக்கிய வகைகள் உருவாவதற்கான சூழல் ஏற்பட்டது எனலாம். அலங்காரம், கட்டியம், சந்நிதிமுறை, சோபானம் போன்ற பல்வேறு கோயில் சார் இலக்கியங்களில் ஒன்றாகத் திருப்பணி மாலை எனும் இலக்கிய வகையும் இடம்பெறுகின்றது.

'திருப்பணி மாலை' நோக்கும் போக்கும்

ஒரு கோவிலில் யார் யார் எந்த எந்தத் திருப்பணிகளை மேற்கொண்டனர் என்ற விவரங்களைத் திரட்டித் தருவதே திருப்பணிமாலை என்னும் படைப்பின் மைய நோக்கம். சைவ வைணவ தலங்களுக்கு ஏற்ப அவ்வத் தலபுராண நிகழ்வுகள் அடிப்படையில் திருப்பணிமாலை செய்தோரைப் பற்றிய குறிப்புகளையும் இந்நூல்கள் வழங்குகின்றன. சான்றாகத் திருக்கோளூர் வைத்தமாநிதி திருப்பணிமாலை அளகை புரக்கும் வேந்தனான குபேரன் அத்தலத்தின் கருவறையையும் திருமதிளையும் உருவாக்கிய செய்தியை வழங்குகிறது. (பாடல் 2) திருவாலவாயுடையார் திருப்பணி மாலையும் மதுரைக் கோவில் கருவறையை தேவேந்திரன் உண்டாக்கிய செய்தியைக் கூறுகிறது (பண்டாரம், பாடல்1). இவ்வாறு புராண கால அடியார்கள் வணங்கிய செய்தியுடன் தொடங்கும் இவ்விலக்கியம் அதன் பின் ஆலய வளர்ச்சிக்கு உதவிய அடியார்கள் பலர் பற்றிப் பேசத் தொடங்குகின்றது. ***புண்ணிய திருப்பணிகள், ஆடைஆபரணங்கள், பூமாலைநந்தவனமும் காமேவு சோலை பல, வாவி, கூபங்களும், கமல மருவிய ஓடையும் கன்னியர்கள்நடனமும், பதினெட்டு மேளமும், கானப் பிரபந்த கவியும், மாமேவு மாசி வைகாசியின் தீர்த்தமும், மா பூசையின் உபயம், மடம், அன்னசத்திரம், மறையவர் தானமும், வண்மை அர்ச்சகர் வரிசையும்*** (கோனார், பாடல் 35) பற்றிய தகவல்களை எடுத்துரைக்கிறது. திருவாலவாயுடையார் திருப்பணிமாலையின் பதிப்பாசிரியரான பாண்டித்துரைத்தேவர் அந்நூல் முன்னுரையில் அந்நூலின் பேசுபொருள்பற்றிக் கூறும்போது, ***திருவாலவாயில் உள்ள திருக்கோயில் கோபுரம் மண்டபம் பொய்கை முதலிய சிவதர்மங்கள் இன்ன இன்ன காலத்து இன்னாரால் இயற்றப்பெற்றன என்பதை முறைப் படத் தமிழ்ப் பாவில் அமைத்து பாடப் பெற்றது ஒரு நூலாகும்***(பண்டாரம், பாடல் 3-12) என்கிறார். விஜயநகர நாயக்கர் காலங்களுக்கு முன்னர் பல மன்னர் செய்த திருப்பணிகளை இம்மாலை நூல்கள் பட்டியலிடுகின்றன. உதாரணமாக, குலசேகர பாண்டியன், மலையத்துவச பாண்டியன், சுந்தரபாண்டியன், வீர பாண்டியன், பராக்கிரம பாண்டியன் போன்ற தமிழ் மன்னர்களின் திருப்பணிகளைத் திருவாலவாயுடையார் திருப்பணிமாலை பேசுகின்றது. என்றபோதும் எல்லாத் திருப்பணிமாலை நூல்களும் ஏறத்தாழ 13 ஆம் நூற்றாண்டுக்குப்பின் வந்த விஜயநகர நாயக்க மன்னர்கள் செய்த திருப்பணிகள் பற்றியும் அவர்கள் ஆட்சிக் காலங்களில் வாழ்ந்த பல்வேறு அரசு அதிகாரிகள், குறுநில மன்னர்கள், நிலவுடைமையாளர்கள், வணிகப்பெருமக்கள், தேவதாசியர் எனப் பலர் வழங்கிய கொடைகளை பற்றியே விரிவாக எடுத்துரைக்கின்றன. அந்நியப் படையெடுப்புகளிலிருந்து இவ்வாலயங்கள் மீண்டு பொலிவு பெற்ற காலமாக இக்காலம் திகழ்வதால் இம்மீட்சிக்குக் காரணமான நபர்களை அடையாளப்படுத்துவதே திருப்பணி மாலைகளின் நோக்கமாக இருத்தல் வேண்டும். இந்த அந்நியப் படையெடுப்பைப் பற்றித் திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையில் ஒரு பதிவு காணப்படுகிறது. அரவகிரி என்று அழைக்கப்படும் திருச்செங்கோட்டு ஆலயத்தைச் சிதைக்கும் வகையில் அந்நியரான துலுக்கர் படையெடுத்து வந்தபோது வீமணன், ஓவணன், ரங்கணன் என்ற மூன்று சகோதரர்களும் அத்துலுக்கருடன் அமர்(போர்) செய்து வீரசுவர்க்கம் எய்தினர் என அந்நூல் பதிவு செய்கிறது (கோனார், பாடல் 35). படையெடுப்பு நிகழ்வை விவரித்த பின்னரே விஜயநகர ராயர்கள் தொடக்கமான நபர்கள் செய்த திருப்பணிகளை இந்நூல் விவரிக்கத் தொடங்குவது கவனிக்கத்தக்கது. மேலும் திருவாலவாயுடையார் திருப்பணிமாலை நூலுடன் சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டுள்ள மற்றொரு வசன நூலான மதுரை வரலாறு என்னும் நூலும் மதுரையில் நடந்த அந்நியர் ஆட்சி குறித்துப் பல தகவல்களை வழங்கி, அவர்கள் இழைத்த தீமையால் ***மதுரைக்கு வாய்த்த பெருமாளும் நாஞ்சில்நாடு (தேசத்துக்குப்) போய் பஞ்சாக்ஷர திருமதிளும் பதினான்கு கோபுரமும் தெரு வீதிகளும் இடிபட்டன, நாயகர் கோயில் கர்ப்பக்கிருகம் அர்த்த மண்டபம் மகா மண்டபம் வரைக்கும் தப்பியிருந்தது.*** (பி. பாலசுப்ரமணியன், ப. 157.) எனத் தெரிவிக்கிறது. இச்செய்திகளைத் தெரிவித்தபின்

மதுரை ஆலயத்தை மீட்ட விஜயநகர வாரிசான கம்பணரின் வருகை முதலாகப் பல்வேறு திருப்பணிகளை நூல் விவரிக்கிறது. மேலே காட்டிய செய்திகளின்வழி அந்நியர் படையெடுப்புகளால் ஆலயங்களுக்கு நிகழ்ந்த கேடுகளிலிருந்து ஆலயங்கள் மீட்கப்பட்டுச்சிறப்புறக் காரணமானவர்களைப் பற்றிப் பேசும் போக்கிலேயே இத்திருப்பணிமாலைகள் அமைந்திருப்பதாகக் கருத முடிகிறது.

திருப்பணி மாலைகளில் முக்கியத்துவம்

19ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே தமிழில் உரைநடை வடிவிலான நூல்கள் வெளிவரத் தொடங்கின. அதற்கு முன்பாக வெளிவந்த பெரும்பான்மையான தமிழ்ப்படைப்புகள் யாவும் செய்யுள் வடிவிலேயே இருந்தமையால் திருப்பணிமாலை நூல்களும் அதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

திருவாலவாயுடையார் திருப்பணிமாலை கட்டளைக் கலித்துறை மற்றும் ஆசிரிய விருத்த யாப்பில் அமையப் பெற்றுள்ளது. திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை பெரும்பான்மை விருத்தங்களாலும் சிறுபான்மை வெண்பா, கட்டளைக் கலித்துறை, கட்டளைக் கலிப்பாக்களாலும் அமையப்பெற்றது. பிற திருப்பணி மாலைகளும் இவ்வாறு ஏதோ ஒரு யாப்புவகைக்கு உட்பட்டே இயற்றப்பட்டுள்ளன. எனினும் இவற்றைக் கவித்துவம் வாய்ந்த செய்யுள்களாகக் கொள்ள இயலுமா என்பது ஐயத்திற்கிடமாய் உள்ளது. கவிதைக்குரிய அணிநலனும் பிற இலக்கிய நயங்களும் இவற்றில் காண இயலாது. அந்தந்தத் திருக்கோயில்களில் நடைபெற்ற திருப்பணிகளைப் பற்றிய தகவல்களைத் திரட்டித் தருவது மட்டுமே இந்நூல்களின் நோக்கம் ஆதலால் கவிச்சுவை குறித்து இந்நூல் ஆசிரியர்கள் சிந்தித்திலர்எனக் கருதலாம். வேறு விதமாகச் சொன்னால் இவை ஒருவகையான ஆவணத் தன்மையுடன் செய்யப்பட்ட பிரதிகளே அன்றி இவற்றை இலக்கியப் பிரதிகளாகக் கருத இயலாது எனவே இந்நூல்களுக்கு இலக்கிய முக்கியத்துவத்தைவிட வரலாற்று முக்கியத்துவமே முதன்மையாக உள்ளது எனலாம். ***தமிழ்நாட்டில் பெரும் கோவில்களின் கல்வெட்டுகளையும் அக்கோயில்கள் குறித்த வழக்காறுகளையும் தவிர்த்துப் பார்த்தால் தமிழக வரலாற்றை முழுமையாக எழுதிவிட இயலாது*** (பரமசிவன், ப. 9.) என்கிறார் பேரா.தொ.பரமசிவன். அந்த வகையில் பல்வேறு தமிழகப் பகுதிகளில் நடைபெற்ற திருப்பணிகளைப் பற்றிய தொகுப்புகளான இந்நூல்கள் தமிழக வரலாறு எழுதுவதற்குரிய கருவிகளுள் ஒன்றாகக் கருதத்தக்கன.

இத்திருப்பணி மாலை நூல்களை ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகள், வரலாற்று நூல்கள், இலக்கிய நூல்கள், தலபுராணங்கள், செவிவழிச் செய்திகள் இவற்று டன் ஒருங்கு வைத்து நோக்கும்போது அந்தந்த வட்டாரங்களில் தனித்துவத்தைக் கண்டறியவும் தமிழக வரலாற்றில் அந்தந்த ஆலயங்களின் பங்களிப்பை மதிப்பிடவும், கட்டடம், ஓவியம், சிற்பம் போன்ற துறைகளில் ஏற்பட்டுள்ள பரிணாம வளர்ச்சி குறித்தும், ஆலய வழிபாட்டு மரபுகள் சார்ந்த தகவல்களைத் தொகுக்கவும் தமிழ்ச் சமூகங்களுக்கும் ஆலயங்களுக்குமிடையிலான தொடர்புகள் குறித்து ஆய்வு நோக்கில் சிந்திக்கவும் வழிவகை செய்யும் எனலாம். சுருக்கமாகச் சொன்னால் வழிபாடு, வரலாறு, கலை இலக்கியம், சமூகவியல் ஆகிய களங்களைப் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்படும்போது இத்திருப்பணி மாலைகளையும் இணைத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டால் பல செய்திகள் துலக்கம் பெற வாய்ப்புள்ளது.

திருப்பணி மாலை-பதிப்புகள்

தமிழகத்தின் புகழ் பெற்ற தலங்கள் பலவற்றுக்குத் திருப்பணி மாலைகள் இயற்றப்பட்டிருக்க வேண்டும். ***இதுபோன்ற திருப்பணி மாலைகள் சிறந்த ஆலயங்களுக்கு எல்லாம் பெரியோர்களால் இயற்றப்பட்டுள்ளன என்கிறார்கள்*** (கோனார், முன்னுரை.) எனத் திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையின் பதிப்பாசிரியர் தி.அ.முத்துச்சாமிக்கோனார் தெரிவிக்கிறார். மேலும் திருப்பணி மாலைகள் இறைவன் திருமுன்னர் விண்ணப்பம் செய்யப்பட்டிருக்க வேண்டும். திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரியில் நடைபெறும் திருவிழாவின் சப்தாவரணப் புறப்பாட்டின்போது திருக்குருகூர் திருப்பணிமாலை பாடப்பட்ட செய்தியைக் காண்கிறோம் (மாறனலங்காரம்). மதுரை மீனாட்சியம்மன் கோவில் சித்திரைத் திருவிழாவின் 11ஆம் நாள் சப்தாவரணத்தில் திருப்பணி மாலை ஓதுவார்கள் பாடப்படுகிறது (பி. பாலசுப்ரமணியன், ப. 28). மற்ற ஆலயங்களில் எந்தெந்தக் காலங்களில் இத்திருப்பணி மாலைகள் படிக்கப்பட்டன என்கிற குறிப்புகள் தெரியவில்லை. ஆனபோதும், ஆழ்வார் திருநகரி மற்றும் மதுரைக் கோவில் வழக்கங்களை வைத்துப் பார்க்கும்போது இத்திருப்பணி மாலைகள் பிரம்மோற்சவத்தின் நிறைவுப் புறப்பாடான சப்தாவரணப் புறப்பாட்டின்போது விண்ணப்பிக்கப்படுவதாக ஊகிக்க முடிகிறது. எனினும் விரிவான கள ஆய்வுவழி இதை உறுதி செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு திருப்பணி மாலைகள் பல திருக்கோயில்களுக்கு அமைந்திருப்பினும் அவை ஆலய வழிபாட்டில் அங்கம் பெற்றிருப்பினும் மிகச்சில திருப்பணி மாலைகள் மட்டுமே கிடைத்துள்ளன.

திருவாலவாயுடையார் திருப்பணி மாலையின் ஆசிரியர் தாண்டவமூர்த்தி பண்டாரம் என்பவர். இந்நூலின் காலம் 17ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 18ம் நூற்றாண்டின் தொடக்கமாக இருக்கலாம் இந்நூலைச் சுவடிகளிலிருந்து அச்சு நூலாகப் பதிப்பித்தவர் பாலவனத்தம் ஜமீந்தார் பாண்டித்துரைத் தேவர் ஆவார். இந்நூல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் செந்தமிழ் இதழில் 1906ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இத்திருப்பணி மாலையில் இடம் பெற்றுள்ள

பல்வேறு வரலாற்றுச் செய்திகளை நெல்சன் துரை எழுதிய மதுரை நாடு (The Madura country) என்ற நூலுடனும் மற்றும் பல தமிழ் நூல்களில் காணப் படும் செய்திகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்து பாண்டித்துரைத் தேவர் அவர்கள் வழங்கியுள்ள குறிப்புகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

- திருச்செங்கோடு திருப்பணி மாலை நூலின் ஆசிரியர் ஏழு கரை நாட்டு நம்பி என்ற நாமம் பூண்ட சதாசிவ பண்டிதர் ஆவார். 1913ஆம் ஆண்டு இந்நூலைப் பதிப்பித்தவர் தி.அ. முத்து சாமிக் கோனார் ஆவார்.
- தென் திருப்பேரை மற்றும் திருக்கோளூர் திருப் பணி மாலைகளை ஒருசேரப் பதிப்பித்தவர் பெரியன். வெ.நா. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஆவார். பதிப்பித்த ஆண்டு 1933. இவ்விரு நூல்களுள் தென்திருப்பேரை திருப்பணிமாலை நூலை இயற் றியவர் காரி இரத்தின கவிராயர் புத்திரராகிய திருமேனி கவிராயர். இவரின் காலம் 16ஆம் நூற்றாண்டு. திருக்கோளூர் திருப்பணி மாலையை இயற்றிய ஆசிரியரின் பெயரை அறிய இயல வில்லை.
- திருக்குருகூர் திருப்பணிமாலை என்றொரு நூலைச் செந்தமிழ் இதழின் பதிப்பாசிரியர் தொகுத்தளித் துள்ளார் என்றும் இதற்கு ஆழ்வார்திருநகரி ஆதி நாதப் பிள்ளை குறிப்புரை எழுதியுள்ளார் என் றும் ஆய்வாளர் பி பாலசுப்ரமணியம் குறிப்பிடு கிறார் (பி. பாலசுப்ரமணியன், ப. 28).

முடிவுரை

இவ்வாறு பதிப்பிக்கப்பட்ட திருப்பணி மாலைகளை தவிர இன்னும் பல இருக்கக்கூடும். முன்னூர் ரமேஷ் என்பவர் திருவானைக்கா தலத்துக்குரிய திருப்பணி மாலை ஒன்று இருப்பதாகவும் அது ஓலைச் சுவடி வடிவில் உ.வே.சா நூல் நிலையத்தில் பாதுகாக் கப்படுவதாகவும் தன் வலைத்தளத்தில் தெரிவித்துள் ளார். (ரமேஷ்)

அச்சில் வெளிவந்த திருப்பணிகளும்கூட மீண்டும் பதிப்பிக்கப்படாத நிலையில் உள்ளன. அவை மேல் பதிப்புகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் அவ்வாறு வெளிவரும் பதிப்புகள் விரிவான வரலாற்றுத் தரவு களுடன் ஆய்வுக்குறிப்புகள் எழுதப்பட்டு பதிப்பிக் கப்படுதல் வேண்டும். கள ஆய்வுகள்வழி மேலும் பல திருப்பணி மாலைகள் கண்டறியப்பட்டு அச்சாக் கம் பெற்றால் தமிழ்ச் சமூகவியல் ஆய்விற்கு இந் நூல்கள் பேருதவியாக இருக்கும்.

அடிக்குறிப்புகள்

கோனார், முத்துசாமி. *திருச்செங்கோடு திருப்பணிமாலை.,* சுந்தர வதனி பதிப்பகம். சேலம். 1913.

சண்முகம்பிள்ளை, மு. *சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்கு களும்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை. 2003.

செயராமன், ந.வீ., *சிற்றிலக்கியச் செல்வங்கள்.* மாணிக்க வாசகர் பதிப்பகம். சிவகங்கை. 2010.

திருக்கோளூர் சுவாமி வைத்தமாநிதி திருப்பணி மாலை. திருஞானமுத்திரை பதிப்பகம். ஆழ்வார் திருநகரி. 1933.

பரமசிவன், தொ. வாழ்த்துரை, பி. பாலசுப்பிரமணியன், *திருப்பணி மாலை இலக்கிய வரலாற்று ஆய்வு.* அழகு பிள்ளை பதிப்பகம். சிவகங்கை. 2010.

பண்டாரம், தாண்டவமூர்த்தி. *திருவாலவாயுடையார் திருப்பணி மாலை.* மதுரை தமிழ்ச் சங்கம். மதுரை. 1906.

பாலசுப்பிரமணியன், குடவாயில். *தமிழகக் கோயிற்கலை மரபு.* சரஸ்வதி மஹால் நூலகம். தஞ்சாவூர். 2000.

பாலசுப்பிரமணியன், பி., *திருப்பணி மாலை இலக்கிய வர லாற்று ஆய்வு.* அழகு பிள்ளை பதிப்பகம். சிவகங்கை. 2010.

மாறனலங்காரம். நூல் வரலாறு. மதுரை தமிழ்ச் சங்கப் பதிப்பு. மூன்றாம் பதிப்பு. 1969.

நாடன், நாஞ்சில். சிற்றிலக்கியங்கள் - மாலை - பகுதி 1. *சொல்வனம்,* 28 ஜன, 2013, https://solvanam.com/2013/01/28/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%B2%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D-%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%B2%E0%AF%88/

ரமேஷ், முன்னூர். ஆனைக்காவில் அருள்புரியும் அகிலாண் டேஸ்வரியே!' *வேர்ட்பிரஸ்,* 14 ஜன, 2021, https://munnurramesh.wordpress.com/2021/01/14/%E0%AE%86%E0%AE%A9%E0%AF%88%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D-%E0%AE%85%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AF%81/

WORKS CITED

Balasubramaniyan, Kudavayil. Tamizhaga Koyirkalai Marabu. Saraswathi Mahal Library. Thanjavur. 2000.

Balasubramaniyan, P. Thiruppanimalai Illakiya Varalatraivu. Azhagu Pillai Padhippagam. Sivagangai. 2010.

Jeyaraman, N.V. Sitrillakiya Selvangal. Manikkavasa gar Noolagam. Chidambaram. 1967.

Konar, Muthusamy. Thiruchengottu Thiruppani malai. Sundaravadhani Publishers. Salem. 1913.

Maranalangara Nool Varalaru. Third ed., Madurai Tamil Sangam. 1969.

Paramasivam, T. Appreciation Note. Thiruppanimalai Illakiya Varalatraivu. P. Balasubramanian. Azhagu Pillai Padhippagam. Sivagangai. 2010.

Pandaram, Thandavamoorthi. Thiruvalavudaiyarkoyil Thiruppanimalai. Madurai Tamil Sangam. Madurai. 1906.

Thirukoloor Swami Vaithmanidhi Thiruppanimalai. Thirunganamuthirai Publishers. Azhwar Thirunagari. 1933.

Shanmugam Pillai, M. Sangathamizharin Vazhibadum Sadangugalum. Ulagathamizh Araichi Niruvanam. Chennai. 200

Nadan, Nanjil. *Sitrillakkiyangal - Malai - Pagudhi 1 Solvanam,* 28 Jan, 2013, https://solvanam.com/ 2013/01/28/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%B2%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D-%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%B2%E0%AF%88/

Ramesh, Munnoor. Anaikavil Arulpuriyum Akilan deswariyae! *Wordpress,* 14 Jan, 2021, https://munnurramesh.wordpress.com/2021/01/14/%E0%AE%86%E0%AE%A9%E0%AF%88%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D-%E0%AE%85%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AF%81/

வாழ்நாள் உறுப்பினர்கள்

472 க. விஜி
473 ச. பிந்து
474 செ. விமலாபாய்
475 ஆர். ஜெயஶ்ரீ
476 ஆர். பத்மாவதி
477 ம. ராஜேஷ்
478 ப. நீலாவதி
479 செ. இரா. செல்வக்குமார் (கனடா)
480 டி.மை. சாகிதா பானு
481 ச. மோகனப்பிரியா
482 சித்ரா ஐசக்
483 ஆ. தீபிகா
484 ரா. சத்தியா செல்வி
485 பி. இராம்குமார்
486 ச. தென்றல் ஜான்சி
487 எஸ். ரம்யா
488 ஏ. கவிதா
489 ஜெ. கௌரி ஆனந்த்
490 டி. ஜெயலலிதா
491 செ. கிருஷ்ண நந்தினி
492 ப. சிவாஜி
493 ஜெ. அற்புதம் ரூத் பிரீதா
494 கே. வீரமணி
495 மு. ஐஸ்வர்யா
496 வி. கலாவதி
497 கே. நேசப்பிரியா
498 ஆர். கலாவதி
499 ஜி. கமலா
500 சா. புவனேஸ்வரி
501 மு. தியாகராஜன்
502 செ. ஜகந்நாத்
503 ந. லெனின்
504 சி. முடியழகி
505 ந. லலிதா
506 வே. சதீஷ்
507 கு. நிவேதா
508 து. ராஜேஷ்

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்

Arimaa Nokku UGC CARE Listed Journal

- **நமது இதழின் பெயரையும் ISSN எண்ணையும் களவாடிக்கொண்டு arimaanokku.com எனும் வலைத்தளம்வழி இப்படி ஒரு போலி இதழ் வடநாட்டுக் கும்பல் ஒன்றால் நடத்தப்படுகிறது.**
- **தமிழ் ஆய்வாளர்கள் பலரும் ரூ. 3300 செலுத்தி ஏமாந்துள்ளனர்.**

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

வண்ணமயமான ரோஜா

புதிர்களைத் தீர்ப்பதில் உள்ள சிரமங்கள் உனக்குத் தெரியாது
அழகான ரோஜாவே! உன் இதயத்தில் உன்னத உணர்வுகள் இன்மையால் அப்படி இருக்கலாம்

அவையை அலங்கரித்தாலும் அதன் போராட்டங்களில் நீ பங்கு பெறுவதில்லை
வாழ்க்கையின் அவையில் எனக்கு இந்த வசதி இல்லை

இந்தத் தோட்டத்தில் நான் ஏக்கத்தின் முழுமையான இசைக்குழு
அந்த ஏக்கத்தின் அரவணைப்பு உன் வாழ்க்கையில் இல்லை

கிளையிலிருந்து உன்னைப் பறிப்பது என் வழக்கம் அல்ல
தோற்றங்களை மட்டுமே காணும் கண் பார்வையிலிருந்து இந்தப் பார்வை வேறுபட்டதல்ல
ஆ! ஓ வண்ணமயமான ரோஜாவே, இந்தக் கை துன்புறுத்தும் ஒன்றல்ல
பூப்பறிப்பவன் அல்ல நான் என்பதை உனக்கு எப்படி விளக்க முடியும்?

தத்துவக் கண்ணின் நுணுக்கங்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை
ஒரு காதலனைப்போல நான் உன்னை நைட்டிங்கேலின் கண்வழிப் பார்க்கிறேன்

எண்ணற்ற மொழிகள் இருந்தும் மௌனத்தையே நீ தேர்ந்தெடுத்துள்ளாய்
உன் மனதில் மறைந்திருக்கும் இரகசியம் என்ன?
என்னைப்போல நீயும் ஞேர்த் தோட்டத்தின் ஓர் இலைதான்
நான் அத்தோட்டத்திலிருந்து மிகு தொலைவில் இருக்கிறேன்,
நீயும் அத்தோட்டத்திலிருந்து மிகு தொலைவில் இருக்கிறாய்

நீ மன நிறைவோடு இருக்கிறாய், நறுமணம்போல நீ சிதறிக் கிடந்தாலும்
நான் தேடும் காதல் வாளால் காயப்பட்டுக் கிடக்கிறேன்

எனது இந்த மனக்குழப்பம் நான் நிறைவு எய்துவதற்கான வழிமுறையாக இருக்கலாம்
இந்த வேதனை நான் அறிவொளி எய்த மூலமாமாக இருக்கலாம்

எனது இந்த வலுவீனமே நான் வலிமை பெறும் வழியாக இருக்கலாம்
எனது பொறாமையை தீர்க்கதரிசனக் கோப்பை கண்ணாடியாய்க் காட்டலாம்

இந்த நிலையான தேடல், உலகை ஒளிரச் செய்யும் ஒரு மெழுகுவர்த்தியும்
மனித அறிவெனும் குதிரைக்கு நடை கற்பிப்பதுமாகும்

– முகமது இக்பால் (Muhammed Iqbal)
தமிழில்: வ. ஜெயதேவன்

Regd. R. dist. No. 717/2007 RNI No. 17520/2007

நாடகம்

திரையைக்கீழே
இழுங்கள்
காட்சி முடிந்துவிட்டது
திரையைக் கீழே
இழுங்கள்

ஏனெனில்
அழகிய அவலமுகங்கள்
மறைந்துவிட்டன
ஒவ்வொரு கண்ணீர்த்துளியும்
கண்களிலிருந்து
உறிஞ்சப்பட்டுவிட்டன

ஒவ்வொரு
ஓசையும் பாடலைக்
கைவிட்டுப் போய்விட்டன

திரும்பவும்
மௌனம் மட்டுமே
ஒலிக்கிறது
இருள்மட்டுமே எரிகிறது



உடைந்த துண்டு

என் மூச்சில்
அலைகிறது உடைந்த ஒரு
கவிதையின் துண்டு
என் உதடுகள்வரை
வந்தபோது
என் நாக்கை அது வெட்டியது
என் பற்களால் நான்
அதைப்பற்றியபோது
என்உதடுகள்
குருதிகொட்டத் தொடங்கின
ஒரு
கண்ணாடித்துண்டு
என் தொண்டையில்
சிக்கியதுபோல
என்னால்
அதை வெளியே துப்பவும்
முடியவில்லை
விழுங்கவும் முடியவில்லை

அந்த
உடைந்த கவிதையின் துண்டு
அங்கும் இங்குமாய்
என் மூச்சில் இழுபட்டது
இழுபட்டுஇழுபட்டுக்கொண்டே
இருக்கிறது

– குல்சார் (1936–)
ஞானபீட விருதாளர் (2023)

இறக்குமதி

உருதுக் கவிதைகள்

ஈரோடு தமிழன்பன்